
# தேனகம் 2010





மண்முனை
வடக்கு பிரதேச
கலைஞர் விபரத் திரட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதனகம்

மண்முனை வடக்குப் பிரதேசக்

## கலைஞர் விபரத் திரட்டு

"மண்ணில் எம் கலைகளைக்
கண்ணென காப்போம்"

**வெளியீடு**

பிரதேச செயலக கலாசாரப் பேரவை

மண்முனை வடக்கு, மட்டக்களப்பு.

**2010**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தேனகம் |
| நூலின் வகை | : | மண்முனை வடக்கு பிரதேச கலைஞர் விபரத் திரட்டு |
| எழுத்தாக்கம் | : | நூலாக்கற் குழு |
| அட்டைப்படம் | : | திரு.வீ.மைக்கல் கொலின் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு டிசம்பர் - 2010 |
| பதிப்புரிமை | : | மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவை பிரதேச செயலகம் - மண்முனை வடக்கு. |
| பக்கங்கள் | : | (xii) + 182 |
| அளவு | : | A5 |
| பிரதிகள் | : | 400 |
| வெளியீடு | : | மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவை பிரதேச செயலகம், மண்முனை வடக்கு. |
| அச்சுப்பதிப்பு | : | 'சண் அச்சகம்' - இருதயபுரம். ✆ 065-2222597 |


# Biblographical Data



| | | |
|---|---|---|
| Title | : | Thenakam |
| Type by | : | Manmunai North, Division Artist Details - 2010 |
| Script | : | Writers Team |
| Cover Design | : | Mr.V.Michael Colin |
| Edition | : | First Edition December - 2010 |
| Copy right | : | Bt/Manmunai North Division Cultural Council Divisional Secretariat, Batticaloa. |
| Pages | : | (xii) + 182 |
| Size | : | A5 |
| No.of copies | : | 400 |
| Published by | : | Manmunai North Cultural Council Divisional Secretariat, Manmunai North, Batticaloa. |
| Printerd ny | : | 'Sun Printers; - Iruthayapuram, Batticaloa |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மண்முனை வடக்கு பிரதேச செயலக கலா சார பேரவை கடந்த பதினெட்டு வருட காலமாக தொடர்ச் சியாக முத்தமிழ் விழா நடாத்துவது ஆவணமாக "தேனகம்" எனும் மலரை வெளியிட்டு வருவதும் மகத்தான செயற்பாடாகும்.

கலை, பண்பாட்டு விழுமியங்களின் ஆவணமாக வெளிவரும் "தேனகம்" மலர் இவ்வருடம் பிரதேச கலைஞர்களின் விபரத் திரட்டாக வெளியிடப்படுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மண்முனை வடக்கு பிரதேசமெங்கிலும் பரந்து கிடக்கும் கலைஞர்களை ஒரு கையேட்டில் கொணரும் இம்முயற்சி பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

கலைஞர்களினதும், கலைகளினதும், அடையாளங்கள் மறைக்கப் பட்டும், மறைந்தும் வரும் இக்காலகட்டத்தில் மேற் கொள்ளப்பட்டுள்ள இம்முயற்சி ஏனைய பிரதேச பிரிவுகளுக்கும் ஒரு முன்மாதிரியான செயற்பாடு என்பதுடன் காலத்தின் தேவையை உணர்ந்து மேற்கொள்ளும் ஒரு முயற்சியுமாகும்.

இன்றைய சந்ததியினரும், எதிர்காலச் சந்ததியினரும் எமது கலை ஞர்கள் பற்றியும், அவர்களின் கலைப்பணி பற்றியும் அறிய உதவும் இவ் ஆவணப்பதிவை, தமது நிர்வாக பணிகளுக்கிடையில் சிறப்பாகச் செய்து முடித்துள்ள பிரதேச செயலாளரையும், கலாசாரப் பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரையும் மனதாரப் பாராட்டுவதோடு இவ்வருடம் முத்தமிழ் விழா சிறக்கவும் இதுபோன்ற காத்திரமான பணிக ளைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் எனது நல் வாழ்த்துக்களைத் தெரி வித்துக் கொள்கின்றேன்.

**திரு. சு.அருமைநாயகம்**
மாவட்டச் செயலாளர்.
மாவட்டச் செயலகம் - மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை



**ம**ண்முனை வடக்கு பிரதேசத்தில் வாழ்ந்த, வாழும் கலைஞர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும் பதிவு செய்து ஆவணமாக்கும் முயற்சியே இந்த அரிய நூலாகும். நான் பிரதேச செயலாளராக பணியாற்றி வரும் இக்காலத்தில் இப்பிரதேசத்தில் இலக்கியம் மற்றும் கலாசார வளர்ச்சிக்காக என்னாலான அளவு பணியாற்றி வருகின்றேன். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பதின்நான்கு பிரதேச செயலகங்களில் எமது பிரதேச செயலக கலாசாரப் பேரவை வருடந்தோறும் தொடர்ச்சியாக 'தேனகம்" என்னும் கலாசாரச் சிறப்பு மலரை வெளியிட்டு வருகின்றது. கடந்த 2000ம் ஆண்டில் இதற்கு மேலதிகமாக இதுவரை வெளியிடப்பட்ட தேனகங்கள் மற்றும் கலாசாரப் பணிகள் தொடர்பான தொகுப்பு முயற்சியாக "புத்தாயிரம்" என்னும் சிறப்புத் தொகுப்பு நூலை வெளியிட்டது. மீண்டும் "தேனகம்" தொடர்ந்து வெளியிடப்பட்ட நிலையில் இவ்வாண்டு இதற்கு ஒருபடி மேலாக புதியதோர் முயற்சியாக இந்தக் கலைஞர்கள் தொகுப்பு முயற்சியில் வெற்றிகண்டுள்ளது.

இந்நூல் ஒரு ஆவணமாக்கல் தொகுப்பு முயற்சியாகும். மண்முனை வடக்கு பிரதேச எல்லைக்குட்பட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களிடையே இதுவரை வாழ்ந்து மறைந்தவர்களையும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களையும் அடையாளம் கண்டு, அவர்களின் கலை, இலக்கிய, ஆற்றல்களையும் திறமைகளையும் அறிந்து பதிவு செய்து இன்னொரு சமுதாயத்திற்கும், இன்னொரு சந்ததிக்கும் காட்டும் முயற்சியே இதுவாகும். இந்த முயற்சி எம்மால் பலதரப்பட்ட வகையில் திட்டமிடப்பட்டு அனைவரையும் அடையாளம் காணும் வகையில் முனைப்புடன் தேடப்பட்டதாகும். கூடுமானவரையில் எல்லோரையும் பதிவுசெய்ய முனைந்துள்ளோம். சீராக்குவதற்காக மீளவும் உறுதிப்படுத்தியும் உள்ளோம். ஆயினும் சிலர் விடுபட்டிருக்கலாம். அவ்வாறெனில் தயவுடன் எமக்கு அடையாளம் காட்டுங்கள். அப்பொழுது தான் எதிர்காலத்தில் இந்நூலை இன்னொருபடி உயர்வாகப் படைக்க முடியும். ஏனெனில் எதிர்காலச் சந்ததி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினரைக் கருத்தில் கொண்டு இது ஒரு தொடர் முயற்சியாக அமைதல் வேண்டும். அதுவே காலத்தின் கட்டாயமாகவும் அமைகின்றது.

இந்நூல் இங்கு வாழ்ந்த வாழும் கலைஞர்களையும், இலக்கிய காரர்களையும் தரம்பிரித்து அவர்களது ஆற்றல்களையும், ஆக்கங்க ளையும் சாறாகவும். விளக்கமாகவும் தருகின்றது. ஆய்வாளர்கள், எழுத் தாளர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் என வகைப்படுத்தி தந்துள் ளமை தேடுவோருக்கு நேரடியாகவும் வகைவகையாகவும் கண்டு கொள்ள உதவும் என்பது உறுதி. எதிர்காலத்தில் இந்நூல் அதிகமாகப் பயன்படுத்தப்படும் என நம்புகின்றேன்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகள வான கலைஞர்களும் எழுத்தாளர்களும் வாழுகின்றனர். என்பதனை பல்வ கைப்பட்ட தரவுகள் அடையாளம் காட்டுகின்றது, இத்தகைய அதிகள வானவர்களைக் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேசங்க ளில் மண்முனை வடக்குப் பிரதேசத்தில் அதிகளவான கலைஞர்களும் எழுத்தாளர்களும் வாழுகின்றனர் என்பதனை இந்நூல் தெளிவாகக் காட் டுகின்றது.

ஒரு கூட்டுறவு முயற்சியால் உருவான இன்நூல் ஏனைய பிரதே சங்களுக்கும் முன்மாதிரியாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கின் றேன். இந்தச் சிறந்த முயற்சியில் எமது கலாசார உத்தியோகத்தர் அடங்க லாக கலாசாரப் பேரவையின் அனைத்து உத்தியோகத்தர்களும் சிறப்பா கத் தொழிற்பட்டனர். இவர்களுக்கும் அப்பால் பலர் உதவி செய்துள்ள னர். எல்லோரையும் நான் உள்ளத்தின் உண்மையான அன்போடும் நன்றியோடும் நினைவு கூருகின்றேன்.

**திருமதி. கலாமதி பத்மராஜா**
பிரதேச செயலாளரும். மண்முனை வடக்கு
கலாசார பேரவைத் தலைவரும்.
மண்முனை வடக்கு.
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை



கடந்த பதினேழு வருடங்களாக 'தேனகம்' சிறப்பு மலரினை ஆண்டுதோறும் வெளியிட்டு வருகின்ற மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவை இவ்வருடம் தனது 'தேனகம்' மலரினை பிரதேச கலைஞர்களின் விபரத் திரட்டாகத் தருவதில் பெருமை கொள்கின்றது.

ஒரு சமூகப் பண்பாட்டில் இலக்கியங்களின் பங்கு முக்கியமானதாகின்றது. அவை சமூகத்தின் அளவுகோலாகும். சிறந்த கலை, இலக்கியங்களைக் கொண்டிருக்கின்ற சமூகம் உயர்ந்த சமூகமாகக் கொள்ளப்படுகின்றன. எனவேதான் அவ்வாறான உயர்ந்த கலைகளைப் படைக்கும் கலைஞர்கள் எமது சமூகத்தின் சொத்தாகின்றனர். அவர்கள் தொடர்பான முழுமையான தகவல்களைப் பேணிப் பாதுகாப்பது எமது சமூகத்திற்கும் வருங்காலத் தலைமுறைக்கும் நாம் செய்யும் அளப்பரிய சேவையாகும். எனவேதான் இம்முறை எமது 'தேனகம்' வெளியீடு எமது பிரதேச மண்ணின் மைந்தர்களான கலைஞர்கள் தொடர்பான விபரங்களைத் தாங்கி வருகின்றன. எமது கலாசார பேரவையின் இவ்வருட ஆரம்ப கூட்டத்தில் இவ்வாறானதொரு நூல் வெளிவர வேண்டும் என முன்மொழியப்பட்ட போது நிச்சயமாக இது ஒரு தேவையான முயற்சி. சகலரும் இணைந்து இவ்வெளியீட்டினைச் சரியான முறையில் வெளிக்கொணர வேண்டும் என்பதில் பிரதேச செயலாளர் மிக ஆர்வமாகயிருந்தார்.

இது ஒரு நீண்டகால வேலைத்திட்டமாக இருந்தபோதும் மிகக் குறுகிய காலத்தில் இது செய்து முடிக்கப்பட்டுள்ளது. முதலில் கலைஞர்களின் விபரங்கள் கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்களூடாகவும் பெறப்பட்டன. பத்திரிகையிலும் இதுபற்றிய விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. அவ்வாறாக வந்துசேர்ந்த கலைஞர்களின் விபரங்களின் உண்மைத்தன்மை அறியப்பட்டது. முதற்கட்டத் தெரிவிற்குப் பின் விபரங்கள் அச்சடிக்கப்பட்டு பொது நூலகத்திலும், எமது பிரதேச செயலகத்திலுமுள்ள சகல அரச நிறுவனங்களுக்கும், கலைக் கழகங்கள் அனைத்திற்கும் பிரதிகள் அனுப்பப்பட்டன. எனினும் துரதிஷ்டவசமாக எமக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. இருந்தும் எமது பேரவை உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து செயற்பட்டார்கள். கிடைத்த விபரங்களுடன் அறிந்தவர்களின் வீடுகளுக்குச் சென்றும் விபரங்கள் பெறப்பட்டன. பல நூல்களிலிருந்தும் சிலரின் விரங்களைப் பெற்றுக்கொண்டோம். இவ்வாறாக எமது தேடலுக்கு உட்பட்ட வகையில் இந்நூலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கியுள்ளோம். இக்கலைஞர்களின் விபரங்களைத் தொகுக்கும் போது அதனை ஆய்வு, ஆக்க இலக்கியம், நாடகம், கூத்து, இசை, நடனம், வாத்தியம், சிற்பம், ஓவியம், ஊடகம், ஏனைய துறை என பிரித்தும் கொண்டோம். சில கலைஞர்கள் பல கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள். அவர்கள் மிகச் சிறப்பாக எத்துறையில் பிரகாசித்தார்களோ அத் துறையில் அவர்களை உள்ளடக்கியதுடன் அவரின் மேலதிக திறமைகளும் அதிலே சுட்டிக்காட்டப்பட்டன. ஒவ்வொரு துறையிலும் கலைஞர்கள் வயது அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டனர்.

மேலும் ஆய்வுத்துறையை எடுத்துக்கொண்டால், இதில் தொழில் சார்பாக ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர்களை இணைத்துக்கொள்ளவில்லை. படைப்பிலக்கிய ரீதியான இலக்கியவாதிகளையே நாம் இணைத்துள்ளோம். இவ்வாறாக ஒவ்வொரு துறைக்கும் சில வரையறைகளை வைத்தே கலைஞர்களைத் தெரிவு செய்தோம்.

இது ஒரு முழுமையான நூல் என எம்மால் அடித்துச் சொல்ல முடியாவிட்டாலும், இது ஒரு முதல் முயற்சி என்ற வகையில் நாம் மிகவும் பெருமைப்படுகின்றோம். கலைக் கழகங்கள், கலை இலக்கிய அமைப்புக்கள் செய்ய வேண்டிய வேலையை ஒரு திணைக்களம் சார்பாக நாம் செய்துள்ளோம் என்பதில் எமக்கு மகிழ்ச்சி.

இதில் சில கலைஞர்களின் விபரங்கள் விடுபட்டிருக்கலாம். அது நாம் தெரிந்து செய்த தவறல்ல. அது அவரைப்பற்றி அறியாததாலோ, அறியக் கூடிய ஆதாரங்கள் இன்மையாலேயே ஆகும். இருந்தும் எமது பிரதேசத்தில் நீண்டகாலம் வாழ்ந்து சேவையாற்றி வருபவர்களை நூல் முடியம் இறுதிக் கட்டம் வரை கிடைத்தவற்றைச் சேர்த்துக்கொண்டுள்ளோம். எதிர்காலத்தில் இதைவிடச் சிறப்பானதொரு நூல் வெளிவரலாம். அதற்கு இது அடிக்கல்லாக அமைந்தால் அதுவே எமது வெற்றி.

இறுதியாக இந்நூல் வெளிவருவதற்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளருக்கும், உதவிப் பிரதேச செயலாளருக்கும், கலாசார பேரவை உறுப்பினர்களுக்கும், கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் வாழ்த்துரை வழங்கிய அரசாங்க அதிபருக்கும், இந்நூலைச் சிறப்புற அச்சடித்துத் தந்த சண் அச்சக உரிமையாளருக்கும், அட்டைப்படத்தை சிறப்புற வடிவமைத்துத் தந்த திரு.வீ.மைக்கல் கொலின் அவர்களுக்கும், நிதியுதவி வழங்கிய Swiss Condect நிறுவனத்திற்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**திரு.மு.சதாகரன்**
கலாசார உத்தியோகத்தரும்.
மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவைச் செயலாளரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனகம்

"மண்ணில் எம் கலைகளைக்
கண்ணெனக் காப்போம்"

## பதினெட்டாவது ஆண்டு
# முத்தமிழ் விழா
## சிறப்பு வெளியீடு

### நூலாக்கற் குழு

திரு.க.கணேசானந்தம்
திரு.கதிர் பாரதிதாசன்
திருமதி.தி.ஹரிதாஸ்
திருமதி.ம.சிவஞானசோதிகுரு
திரு.வி.மைக்கல் கொலின்
திருமதி.சு.தேவநாயகம்
திரு.தேவ அலோசியஸ்
திரு.எஸ்.பிரியகாந்தன்
திரு.எம்.சதாகரன்
திரு.எஸ்.பாக்கியநேசன்

### வெளியீடு

**பிரதேச செயலக**
**கலாசார பேரவை**
மண்முனை வடக்கு,
மட்டக்களப்பு.

## மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவை – 2010

### தலைவர்

**திருமதி.க.பத்மராஜா**
பிரதேச செயலாளர்

### உப தலைவர்

**திரு.எஸ்.சுதாகர்**
உதவிப் பிரதேச செயலாளர்

### செயலாளர்

**திரு.மு.சதாகரன்**
கலாசார உத்தியோகத்தர்

### பேரவை உறுப்பினர்கள்

திரு.எஸ்.தங்கவேல்
திரு.க.கணேசானந்தம்
திரு.தெ.ரவீந்திரமூர்த்தி
திரு.ச.சந்திரகுமார்
திரு.கதிர் பாரதிதாசன்
திரு.வி.மைக்கல் கொலின்
திரு.இ.பாக்கியராஜா
திரு.நா.சிவலிங்கேஸ்வரன்
திருமதி.தி.ஹரிதாஸ்
திருமதி.ம.சிவஞானசோதிகுரு
திரு.தேவ அலோசியஸ்
திரு.எஸ்.பிரியகாந்தன்
திரு.அன்பழகன் குரூஸ்
திருமதி.வி.வேலாயுதபிள்ளை
திரு.எஸ்.பாக்கியநேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அமர்ந்திருப்பவர்கள் – இடமிருந்து வலம் :** திருமதி.ம.சிவஞானசோதிகுரு, திரு.ரி.ரவீந்திரமூர்த்தி, திரு.எஸ்.சுதாகர் (உதவிப் பிரதேச செயலாளர்), திருமதி.கலாமதி பத்மராசா (பிரதேச செயலாளர்), திரு.க.கணேசானந்தம் (J.P.), திரு.மு.சதாகரன் (கலாசார உத்தியோகத்தர்), திருமதி சுந்தரமதி வேதநாயகம்.

**நிற்பவர்கள் – இடமிருந்து வலம் :** திரு.கதிர்பாரதிதாஸன், திரு.தேவ அலோசியஸ், திரு.நா.சிவலிங்கேஸ்வரன், திரு.ச.சந்திரகுமார் (J.P.), திரு.வி.மைக்கல் கொலின், திரு.எஸ்.பாக்கியநேசன், திரு.எ.பிரியகாந்தன், திரு.எ.அன்பழகன் குரூஸ்.

**சமுகம் தராதோர்** – திருமதி.திலகவதி ஹரிதாஸ், திருமதி.வி.வேலாயுதம்பிள்ளை, திரு.எஸ்.தங்கவேல், திரு.இ.பாக்கியராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.......


மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி........ (iii)
அணிந்துரை........ (iv)
வெளியீட்டுரை........ (vi)
மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவை உறுப்பினர் விபரம்........ (viii)


## ஆய்வு


அமரர் வித்துவான் பூபாலப்பிள்ளை........ 01
அமரர் சைவப் புலவர் சா.அருணாசல தேசிகமணி........ 02
அமரர். செல்லப்பா பூபாலப்பிள்ளை பண்டிதர்........ 03
ஈழத்துகாளமேகம்........ 04
சிவ.விவேகானந்த முதலியார்........ 04
திரு.F.X.C.நடராசா........ 05
அமரர்.பண்டிதர் த.கிருஷ்ணபிள்ளை........ 06
அமரர் பண்டிதை திருமதி.கங்கேஸ்வரி கந்தையா........ 07
அமரர் இரா.மயில்வாகனம்........ 08
செல்வி.சிவசிதம்பரப்பிள்ளை திருமலர் பாக்கியம்........ 08
அமரர் மங்கையர்க்கரசி மயில்வாகனம்........ 09
திரு.வயிரமுத்து சிவசுப்பிரமணியம்........ 10
அமரர். பண்டிதர்.வீ.சீ.கந்தையா........ 11
வித்துவான் சா.இ.கமலநாதன்........ 12
திரு.செல்லையா இராசதுரை........ 13
திரு.எஸ்.பிரான்சிஸ்........ 14
திரு.செபஸ்தியான் கவுரியல்........ 14
திரு.செ.எதிர்மன்னசிங்கம்........ 15
திரு.சா. தில்லைநாதன்........ 16
செல்வி.தங்கேஸ்வரி கதிராமன்........ 17
திரு.சீ.கோபாலசிங்கம்........ 18
திரு.காசுபதி நடராஜா........ 19


## ஆக்க இலக்கியம்


அமரர்.பித்தன்(ஷா)........ 20
அமரர் வெற்றிவேல் விநாயகமூர்த்தி........ 21
வித்துவான் நல்லதம்பி நாகலிங்கம்........ 22
அமரர். ரீ.பாக்கியநாயகம்........ 23
மாஸ்டர் சிவலிங்கம்........ 24
கவிஞர் சின்னையா கிருஷ்ணபிள்ளை........ 25
அமரர் அருளப்பு அந்தோனிமுத்து........ 26
வல்லிபுரம் மீனாம்பிகை........ 26
அமரர் கவிஞர் சுபத்திரன்........ 27
திரு.பொன்னுச்சாமி தவநாயகம்........ 28
அமரர் கவிஞர் அற்புதராஜா குரூஸ்........ 29
கவிஞர் காசி ஆனந்தன்........ 30
அமரர் திமிலை மகாலிங்கம்........ 31
திரு.ஆறுமுகம் தங்கத்துரை........ 32
அமரர் கவிஞர் திமிலைக்கண்ணன்........ 33
திரு.ஜோர்ச் சந்திரசேகரம்........ 34
திரு.சந்தியாபிள்ளை அரியரத்தினம்........ 35
திரு.செல்லையா குணரத்தினம்........ 36
திரு.கார்த்திகேசு சிவலிங்கம்........ 37
திரு.எஸ்.எஸ். ஜேசுதாஸ்........ 38
பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு........ 39
திரு.சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம்........ 40
அமரர் கவிஞர் சாருமதி........ 41
திரு.அன்ரனி சத்தியசீலன் பாய்வா........ 42





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.அசோகாம்பிகை யோகராஜா .......... 43
அமரர்.வி.ஆனந்தன் .......... 44
திரு.செ.யோகராசா.......... 45
திரு.த.கோபாலகிருஷ்ணன் .......... 46
திரு.ஆனந்தா A.G.இராஜேந்திரம்.......... 47
திருமதி. றூபி வலன்ரினா பிரான்சிஸ்.......... 48
திரு.கணபதிப்பிள்ளை குணநாதன் .......... 49
திருமதி.சுந்தரமதி தேவநாயகம்.......... 50
கவிஞர் வாசுதேவன் .......... 51
திரு.வெ.தவராஜா.......... 52
திரு.அன்பழகன் குரூஸ் .......... 53
கவிஞர் வி.மைக்கல் கொலின்.......... 54
வாசுகி குணரத்தினம் .......... 55
திரு.த.மேகராசா (மேரா) .......... 56
தாகூர் ஆதம்பாவா .......... 57
திரு.எஸ்.பொன்னுத்துரை.......... 58

நாடகத்துறை

அமரர் வித்துவான் அருணகிரி சரவணமுத்தன்.......... 59
வயிரமுத்து சித்தி விநாயகம் .......... 60
வணபிதா ஜோன் யோசப்மேரி அடிகளார்.......... 61
திரு.றைற்ரஸ் ஹென்றிக் .......... 62
திரு.சாமித்தம்பி முத்துக்குமாரன் .......... 62
திரு.செல்லத்துரை ஜெயராசா .......... 63
அமரர் நல்லையா ராமச்சந்திரன் (மாலா) .......... 63
திரு.கந்தப்பர் கனேசானந்தன்.......... 64
திரு.குமரேசப்பிள்ளை நவரெத்தினம்.......... 65
திரு.ஆ.கி.பிரான்சிஸ்.......... 65
பேராசிரியர் சி.மௌனகுரு .......... 66
திரு.நா.ஜோதிநாயகம்.......... 67
திரு.தம்பிராசா ஜோசப்.......... 67
திரு.K.O.V.K.குருநாதன்.......... 68
திரு.அழகையா இருதயநாதன்.......... 69
திரு.ஜோசப் இராஜேந்திரன் தவராஜா .......... 70
திரு.கதிரமலை – பாரதிதாசன் .......... 71
திரு.நல்லையா கந்தசாமி .......... 72
திரு.கனகையா சிவமூர்த்தி.......... 72
திரு.எம்.பி.ரவிச்சந்திரா.......... 73
திரு.தேவநாயகம் அலோசியஸ் .......... 74

சுவத்து

அமரர் சின்னத்தம்பி சதாசிவம் .......... 75
அமரர். கதிரமலை குழந்தைவேல்.......... 76
அமரர் வித்துவான் திருமதி.திரவியம் இராமச்சந்திரன்.......... 77
வன்னமணி சிதம்பரப்பிள்ளை.......... 78
நாகமணி ஏகாம்பரம் .......... 79
செல்லத்துரை முத்துலிங்கம்.......... 79
வெலிஸ் சிங்கோ மத்தியாஸ் சிங்கோ.......... 80
தம்பிமுத்து செல்வராசா .......... 81
அமரர். பொன்னையா ஞானசிங்கம்.......... 81
பொன்னம்பலம் கந்தசாமி.......... 82
அமரர்.காளிக்குட்டி கிருஷ்ணபிள்ளை.......... 83
திரு.சரவணமுத்து செல்லையா.......... 84
அழகன் அழகரெட்ணம்.......... 85
வேல்முருகு செல்வராசா .......... 86
அமரர் தம்பிப்பிள்ளை கனகையா.......... 87



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகுப்பிள்ளை சிவஞானமூர்த்தி ........ 88
மாரிமுத்து பஞ்சாச்சரக்குருக்கள் ........ 89
செல்லையா சிவநாயகம் ........ 90
திரு.இராசையா தர்மராஜா ........ 91
திரு.சின்னையா ஞானசேகரம் ........ 92
வேலாப்போடி செல்வநாயகம் ........ 93
தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் ........ 93
அமரர் முருகுப்பிள்ளை கந்தசாமி ........ 94
அமரர் கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை ........ 95
திரு.எதிர்மன்னசிங்கம் பிரியகாந்தன் ........ 96

## இசைத்துறை

அமரர் இராசையா குழந்தைவேல் ........ 97
அமரர்.சி.முருகப்பா ........ 98
திரு.நாக இராஜ் முதலியார் ........ 99
அமரர் கணபதிப்பிள்ளை மகாலிங்கம் ........ 100
அமரர். கதிரமலை தங்கராசா ........ 101
திருமதி.சாந்தாவதி நாகையா ........ 102
திருமதி.இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி ........ 103
திருமதி.இராஜகுமாரி சோதிநாதன் ........ 104
திருமதி.வை.சியாமளாதேவி ........ 105
செல்வி.இரஜனி நடராஜா ........ 105
திருமதி.வத்சலாதேவி சங்கரநாராயணன் ........ 106
திரு.செல்லையா ஞானப்பிரகாசம் ........ 107
திருமதி.நிலாமதி ........ 108
திருமதி.பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன் ........ 109
திரு.கருணாரெட்ணம் பேனாட் மகிந்தகுமார் ........ 110
திரு.சுந்தரநாதன் தேவகுமார் ........ 111
திருமதி.சுஜீவா ........ 112
தெட்சணாமூர்த்தி பிரதீபன் ........ 113

## வாத்தியம்

அமரர். செல்லையா சிவஞானம் ........ 114
அமரர்.இராசு கதிரவேல் ........ 115
அமரர்.தில்லையம்பல சிவக்கொழுந்து ........ 116
கலாபூஷணம் ஜோசப் அருளானந்தம் ........ 117
திரு.யோசப் ஞானராசா ........ 118
கனகரெட்ணம் சடாட்சரம் ........ 119
செல்வி. சரஸ்வதி சுப்ரமணியம் ........ 120
திருமதி.ஜயந்தி திஸாநாயக்கா ........ 121
திருமதி.ஜீவா அருணாச்சலம் ........ 122
திரு.வேல்முருக ஶ்ரீதரன் ........ 123
இராசமாணிக்கம் நித்தியானந்தன் ........ 124
எபநேசர் நேசராஜ் உவோட்ஸ்வேத் ........ 125
திருமதி.கௌரிமலர் மகேந்திரன் ........ 126
திரு.நல்லலிங்கம் குகன் ........ 127

## நடனத் துறை

அமரர் நடனகலாமணி ம.கைலாயபிள்ளை ........ 128
திருமதி.கமலாதேவி ஞானதாஸ் ........ 129
திருமதி.உஷாதேவி கனகசுந்தரம் ........ 130
திருமதி. கமலேஸ்வரி தவராஜரெட்ணம் ........ 131
பரத சூடாமணி திருமதி. சுபித்ரா கிருபாகரன் ........ 132
திருமதி.நந்தினி ஜெயரட்ணம் ........ 133
திருமதி.கிறிஸ்ரீனா வசந்தி நேரு ........ 134
நாட்டிய கலைமாமணி திருமதி.மாலதி யோகேந்திரன் ........ 135
திருமதி.சிவாஜினி பகீரதன் ........ 136
திருமதி.அனுசியா சிவனேசராஜா ........ 136



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.மலர்விழி சிவஞானசோதி குரு .................................... 137
திருமதி. சசிகலாராணி ஜெயராம் (சசி) .................................... 138
திருமதி.பிறேமநந்தினி விஜயசேகரன் .................................... 139
திருமதி. ஷர்மிலதா பிரபாகரன் .................................... 140
திரு.முரளிதரன் சதீஸ்குமார் .................................... 141
திருமதி.தாக்ஷாயினி பிரபாகர் .................................... 142
திருமதி.ஷர்மிளா ரஞ்சித்குமார் .................................... 142
செல்வி. துரைசிங்கம் உஷாந்தி .................................... 143

### ஓவியத்துறை

எம்.எஸ்.ஏ.அஸீஸ் .................................... 144
திரு.கனகசிங்கம் திருச்செல்வம் .................................... 145
திரு.இராசமுத்தையா ஜெயபாலன் .................................... 146
திரு.சிவலிங்கம் கந்தசாமி .................................... 147
திரு.மு.சோமசுந்தரம் .................................... 148
டாக்டர் சின்னையா வேலாயுதம்பிள்ளை .................................... 149
திரு.சோமசுந்தரம் ஸ்ரீகமலச்சந்திரன் .................................... 150
திரு. ஈஸ்வரராஜா குலராஜ் .................................... 151
திரு.கந்தசாமி சரவணபவன் .................................... 152
திரு.சின்னத்தம்பி ரவீந்திரன் .................................... 153
திரு.இராசலிங்கம் ருசாந்தன் .................................... 154

### சிற்பத்துறை

திரு. தம்பிமுத்து பிலிப் பிலிப்லியோ .................................... 155
இளையதம்பி அல்போன்ஸ் தெய்வேந்திரன் .................................... 156
திரு.ஏரம்பமூர்த்தி சபாரெத்தினம் .................................... 157
டாக்டர் மாசிலாமணி கந்தசாமி .................................... 158
திரு.கனகரெத்தினம் தில்லைநாதன் .................................... 159
திரு.ஞானமுத்து ஆனந்தராஜா .................................... 160
திரு.கந்தையா உதயசூரியன் .................................... 161
திரு.பரமசிவம் முரளிதரன் .................................... 162

### ஊடகத்துறை

அமரர் எஸ்.டி.எஸ்.சிவநாயகம் .................................... 163
பிரின்ஸ் காசிநாதர் .................................... 163
அமரர் வீ.சு.கதிர்காமத்தம்பி .................................... 164
அமரர் செழியன் பேரின்பநாயகம் .................................... 165
ஞானசெல்வம் மகாதேவன் .................................... 166
கலாபூஷணம் இ.பாக்கியராசா .................................... 167
பெரியதம்பி ஹரிச்சந்திரன் .................................... 168
இராசநாயகம் உதயகுமார் .................................... 169
அமரர். தர்மரெத்தினம் சிவராம் .................................... 170
திரு.க.கிருபாகரன் .................................... 171
திரு.சண்முகராஜா வரதராஜன் .................................... 172
திரு.மாணிக்கப்போடி சசிகுமார் (J.P.) .................................... 173
செல்லையா நாகராஜா .................................... 174
அமரர்.ஜோசப் பரராசசிங்கம் .................................... 174
அமரர் ஐயாத்துரை நடேசன் .................................... 174

### ஏனைய துறை

சித்த வைத்திய கலாநிதி, பண்டிதர் வை.க.வினாயகமூர்த்தி .................................... 175
திரு.பாலுமகேந்திரா .................................... 176
திரு.செபஸ்தியான் மைக்கல் .................................... 177
திரு.செல்லையா துரையப்பா .................................... 178
திரு.தம்பிராசா சாம்பசிவம் .................................... 179
திரு.இளையதம்பி இராஜரெட்ணம் .................................... 180
திரு.அ.விமல்ராஜ் .................................... 181



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் வித்துவான் பூபாலப்பிள்ளை
பிறந்த ஆண்டு : 1856
துறை : ஆய்வு

மட்டக்களப்பு சிங்களவாடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் வித்துவான் பூபாலப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பு என்றொரு நாடுண்டு உணர்ச்சியும் கலைப்பண்பும் நிறைந்த தமிழ்க் குடிகள் அங்கும் உள்ளனர். மங்கி மறைந்து போகாத பெரும் புகழ் ஒளி உடையது என தமிழுலகிற்கு எடுத்துக்காட்டிய முதல் மணியாக இந்த நாட்டின் சரித்திரத்தில் இடம்பெற்றவர்.

யாழ்ப்பாணத்து பேரறிஞர்களும், இந்திய தமிழகத்தாரும் ஒரு முகமாக மதித்துப் போற்றிய மட்டக்களப்பின் முதற் புலவர் இவரே. சுவாமி விபுலானந்தர் வாழ்ந்த சமகாலத்தில் வாழ்ந்தவர். தருக்கம், நிகண்டு முதலான கருவி நூல்களையும், நன்னூல், தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களையும், புராண இதிகாசங்களையும், சித்தாந்த சாஸ்திரங்களையும் முறையே கற்ற இவரால் 1882ம் அண்டு 'திருமுகர் பதிகம்' என்ற தோத்திர நூலும் தொடர்ந்து 800 விருத்தப் பாக்களைக் கொண்ட 'சீமந்தனி புராணம்' என்ற நூலையும் 'விநாயக மாண்மியம்', 'புன்ய நகர்' ஆனைப்பந்தி விக்னேசுவரர் பதிகம் நூலையும், 'தமிழர் வரலாறு' என்ற நூலையும் இன்னும் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இவருக்கு மதுரைத் தமிழ்ச் சங்கம், வித்துவான் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. அரச சேவையில் உத்தியோகப் படிகள் பலவற்றைக் கடந்து பகிரங்க சேவைப் பகுதியில் முதல்வர் பதவி வகித்தவர். 1921ம் ஆண்டு தனது 65வது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது பெரும் பிரிவால் தமிழுலகு அடைந்த பெரும் துயரம் சொல்லவொன்னாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் சைவப் புலவர் சா.அருணாசல தேசிகமணி

பிறந்த ஆண்டு : 1888

துறை : சமய ஆய்வு

**சை**வ சமயப் போதகராகவும் பிரசாரகராகவும் பல சைவ நூல்களின் ஆசிரியராகவும் விளங்கிய சைவப் புலவர் சா.அருணாசல தேசியமணி அவர்கள் விபுலானந்த அடிகளாரோடும் வித்துவான் அ.சரவணமுத்துவோடும் சேர்ந்து பழைய மட்டக்களப்பு மாவட்டத்தில் வைசத்தையும் தமிழையும் வளர்த்த பெருமைக்குரியவர்.

ரீச்சர்ஸ் பிறிலிம் என்ற பரீட்சையில் சித்திபெற்று ஆசிரிய பணியாற்றி வந்தார். இவரை ஸ்ரீ இராமக்கிருஷ்ண மடம் ஆனைப்பந்தி பாடசாலையின் தலைமையாசிரியராக்கியது. திரு.கா.அருணாசலத்தின் சைவசமயச் சேவையைப் பாராட்டி மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றம் 'தேசிகமணி' என்ற பட்டத்தை அளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

தேசியமணி இளைப்பாறியதும் சைவசமய சாஸ்திரங்களை மீண்டும் படித்து 'சைவப்புலவர்' பரீட்சையில் சித்தியடைந்தார். அதனைத் தொடர்ந்த சைவசமய கருத்துக்களைப் பரப்ப விரும்பி 'சைவக் களஞ்சியம்' என்ற பெயரில் ஆறு நூல்களை எழுதி வெளியிட்டார். இதன் பயனாக சைவ சமய பாலர் போதினி, சைவ சமய இளைஞர் போதினி, இந்து மாணவர் பக்திப் பாடற் பாமணிமாலை, இந்து சமய மாதங்களின் மகத்துவ மான்மியம், சைவ இலக்கிய கதாமஞ்சரி, சைவ சமய சிந்தாமணி ஆகிய ஆறு நூல்கள் வெளிவந்தன.

திருப்பராய்த்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத் தலைவர் சுவாமி சித்பவாநந்தர் குன்றக்குரு அடிகளார் ஆகியோர் சைவ சமயச் சிந்தாமணி என்ற நூலை மிகத் திறம்படப் பாராட்டியுள்ளார்கள். மட்டக்களப்பு மண்ணில் சைவத்துக்கும் தமிழிற்கும் அருந் தொண்டாற்றியே சைவப்புலவரின் சைவ சமய சிந்தாமணி 1993ல் மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத்தால் மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர். செல்லப்பா பூபாலப்பிள்ளை பண்டிதர்**

**பிறந்த திகதி : 02.07.1902**

**துறை : ஆய்வு**

மட்டக்களப்பு ஆரையம்பதியைப் பிறப்பிடமாகவும் கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பண்டிதர் அவர்கள் நாடறிந்த அறிஞர்களுள் ஒருவராவார். முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளாரின் முதன்மை மாணவர்களுள் ஒருவராகவிருந்து தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவசமயம் போன்றவற்றைக் கற்றதோடு யாழ் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்று பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர் பத்திரமும் பெற்றார். பின்னர் 1927ம் ஆண்டு பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து 1934 இல் சுகாதாரக் கல்விப் பரீட்சையிலும் சித்தியடைந்தார். தான் ஆசிரியராக பல இடங்களில் பணியாற்றிய இவர் பின் அதிபராகவும் பின் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றார். தாம் வாழ்ந்த காலத்தில் அளவற்ற தமிழ், சமய சமூகப் பணிகளை இவர் ஆற்றினார். விவசாயத்துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக போதனையிலும், செய்துகாட்டலிலும் ஈடுபட்டார். இவை பற்றிய பல கட்டுரைகளை கமத்தொழில் விளக்கம் முதலிய பத்திரிகைகளில் வெளியிட்டார். பல சமய அமைப்புக்களில் தலைவராக இருந்து செயற்பட்டதோடு இந்து சமய பாட உதவிப் பரீட்சகராகவும் தொழிற்பட்டார். கிராமங்கள் தோறும் பாதயாத்திரைகள் செய்து சமய விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பல சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார். மட்டக்களப்பில் நாட்டுக் கூத்துக்களை ஆராய்ச்சி செய்து வானொலியிலும், பத்திரிகைகளிலும் இடம்பெறச் செய்தார். இவர் மண்டூர் வடிவேல் முருகன் இரட்டை மணிமாலை, கதிர்காம வடிவேலவர்., உழவர் கைநூல், திருமுருகன் விளையாடல், யாழ்நூல் தந்தோன், விபுலானந்தர் மனிமொழி நாற்பது முதலிய நூல்களையும் எழுதினார். இவரது பல கட்டுரைகள் ஆத்மஜோதி, கமத்தொழில் விளக்கம், ஆனந்த சாகரம், இந்து இளைஞன், வீரகேசரி, தினகரன், ஈழச்சுடர், கலைப் பூங்கா, சுதந்திரன், கலைச் செல்வி சிவயவசி முதலிய சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. இவ்வாறு பல தொண்டுகள் செய்து புகழுடன் வாழ்ந்த பண்டிதர் அவர்கள் 26.04.1967இல் இறைபதமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் : ஈழத்துகாளமேகம்
பிறந்த திகதி : 20.06.1907
துறை : சமய ஆய்வு

மட்டக்களப்பைச் சேர்ந்த சிவ. சோமசுந்தரம் ஒரு வைத்திய ராவார். இலங்கையில் பல பாகங்களில் வைத்தியராக கடமையாற்றி இறுதியாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் கடமை புரிந்து ஓய்வு பெற்றார். இதன் பின் இலக்கியத்தின் மேல் இவர் கொண்ட தணியாத தாகம் காரணமாக பணி விடு தூது. ஆரையூர் முருகன் திருப்பதிகம். மாரியம்மன் பதிகம், போன்ற பக்தி இலக்கியங்களை வெளியிட்டுள்ளார். இயல்பாகவே கவிபாடும் தன்மை கொண்ட சோமசுந்தரம் இதன் காரணமாக ஈழத்து காளமேகம் என அழைக்கப்பட்டார். மட்டக்களப்பின் சமய இலக்கிய வளர்ச்சிக்கு அன்னாரின் பங்கு மகத்தானதாகும்.




பெயர் : சிவ.விவேகானந்த முதலியார்
பிறந்த திகதி : 12.11.1920
துறை : சமய ஆய்வு

மட்டக்களப்பைச் சேர்ந்த சிவ.விவேகானந்த முதலியார் ஓர் பயிற்றப்பட்ட ஆசிரியராவார். தனது ஆரம்ப கல்வியை சுவாமி விபுலானந்தர், கலாசூரி F.X.C. போன்றோரிடம் பெற்று சமய இலக்கியத் துறையில் மிக முக்கிய பங்காற்றினார். இதுவரை 10க்கு மேற்பட்ட சமய நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார் இவர் தனது படைப் புக்களை 14 நூல்களாக வெளியிட்டுள்ளார். அதில் விஞ்ஞான தத்துவங்களும் இந்து சமய கோட்பாடுகளும் என்ற கட்டுரை நூல் மிக முக்கியமானதாகும். நகைச்சுவை நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் வெளியிட்ட முதலியார் மட்டக்களப்பின் பழம் பெரும் இலக்கியவாதிகளுள் ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.F.X.C.நடராசா**

**பிறந்த திகதி** : **21.07.1911**

**துறை** : **ஆய்வு**

**வ**டக்கே காரைதீவினைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வாழ்விட மாகவும் கொண்ட இவர் ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் சடையாளி அமெரிக்க மிசியோன் பாடசாலையிலும் பின் சயம்பு பாடசாலை ஆங்கில பாடசாலையான திருஞான சம்பந்தமூர்த்தி பாடசாலையிலும் அதனைத் தொடர்ந்து விக்டோறியா கல்லூரியிலும் தெல்லிப்பளை துவிபாஷா பாடசாலையில் படிப்பினைத் தொடர்ந்து ஆசிரியர் பயிற்சி பெறத் தகுதியான சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று ஆரம்பக் கல்வியை நிறைவுசெய்துகொண்ட திரு.செல்லையா நடராசா அவர்கள் 1931.09.04ம் திகதி மட்டக்களப்பு புனித அகுஸ்தினார் ஆசிரியர் பயிற்சி கலா சாலையில் தனது ஆசிரியர் பயிற்சியை ஆரம்பித்தார். அக்காலத்தில்தான் 31.01.1932 செல்லையா நடராசா அவர்களின் மதமாற்றத்தின் பின் பிரான்சிஸ் சேவியர் செல்லையா நடராசா F.X.C.நடராசா என அழைக்கப்பட்டார். சிறந்த எழுத்தாளரான இவர், இலங்கையில் மாத்திரமல்ல மலேசியா, இந்தியா போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ள இவருக்கு தமிழ்மொழி, சரித்திரம் இவர் கண்கள் போன்றவை. ஆசிரியராக, விரிவுரையாளராக, அரச மொழி ஆராய்ச்சியாள ராகக் கடமையாற்றியுள்ளார். இருபத்தைந்து நூல்களை எழுதியுள்ளார். இவரது ஆக்கங்களை சுய ஆக்கம், பதிப்பு, மொழிபெயர்ப்பு ஏனையவை என்ற அடிப்படையில் வகுக்கலாம். அவற்றுள் இலங்கைச் சரித்திரம், போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலங்கள், ஈழத்துத் தமிழ் வர லாறு மொழி பெயர்ப்பு மரபு சுய ஆக்கங்களாகவும் எண்ணெய்ச்சிந்து, மட் டக்களப்பு மான்மியம், ஈழத்து நாடோடிப் பாடல்கள், கண்ணகி வழக்குரை என்பவை பதிப்பு நூல்களாகவும், ஈழமும் தமிழும், மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க் கையும் என்பன தொகுப்பு நூல்களாகவும் ஜேர்மனி சுருக்க விளக்கம், இலங்கை அரசியலும் பொருளாதாரமும் மொழிபெயர்ப்பு நூல்க ளாகவும் நாவலர் பெருமான் வாழ்க்கைக் குறிப்புக்கள், நூலும் பதிப்பும், நன்னூல் மூலம் காண்டிகை உரை, விருத்தியுரை, பாடபேதம், சரசோதிமாலை, சுவாமி விபுலானந்தர் நினைவுப் பேருரை, இலக்கியமாகிய சிலப்பதிகாரமும் மக்கள் காவியமாகிய கண்ணகி வழக்குரையும், விபுலானந்தர் மீட்சிப்பத்து குறிப்புரை, தொன்னூல் விளக்கம் - எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மற்றும் திருகோண மலை தமிழறிஞர் தி.த.கனகசுந்தரம்பிள்ளை, ஸ்ரீமத் சுவாமி விபுலா னந்தஜீ என்பன இவரது பிரபல்யமான நூல்களாகும். மகிமை பெறு பட்டங் களாக மகாவித்துவான், வித்துவசிரோமணி, இலக்கியச் செம்மல், கலாசூரி போன்ற பட்டங்களைப் பெற்றதுடன் சாகித்தியமண்டலப் பரிசு சாகித்திய மகிமைச் சான்றிதழ் இவரது புலமைக்குச் சிறப்பித்து வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பெருமைக்குரியவராக வாழ்ந்த F.X.C.அவர்கள் மட்டக்களப்பு தமிழ் மண் ணிற்குப் பாரிய தொண்டாற்றிய ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர் : அமரர்.பண்டிதர் த.கிருஷ்ணபிள்ளை**

**பிறந்த திகதி : 27.05.1912**

**துறை : சமய ஆய்வு**

மட்டக்களப்பு நாவற்குடா கிராமத்தில் பிறந்து வாழ்ந்த இவர், மட்டக்களப்பு தமிழகத்தின் உயர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பாடுபட்ட பெரியார்களுள் ஒருவராவார். பாடசாலை ஆசிரியராகப் பணியாற்றிய இவர் தமது முயற்சியால் 1958 பாலபண்டிதர் பரீட்சையிலும், தொடர்ந்து பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றவர். சென்னை மயிலாப்பூரில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட இவர் தன்னை ஒரு சைவப் புலவராகவும், உயர்த்திக் கொண்டார்.

பண்டிதர் அவர்கள் தலைசிறந்த அறிஞர் கூட்டத்தில் ஒருவராக விளங்கினார். சுவாமி விபுலானந்த அடிகளார், மற்றும் அருணாசல தேசிகர், வித்துவான் சரவணமுத்து, பண்டிதர் பூபாலபிள்ளை வித்துவான், பண்டிதர் வீ.சி.கந்தையா முதலான பெருமக்களுடன் அவர் நெருங்கிய தொடர்பை வைத்துக்கொண்டார்.

சிறந்த ஆசிரியராகப் பணியாற்றிய பண்டிதர் அவர்கள் யாழ்/கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பண்டிதர் அவர்கள் கிராமங்கள் தோறும் சென்று சைவப் பணி செய்வதை பொழுதுபோக்காக் கொண்டு அதில் ஈடுபட்டார். கிராம மக்களிடையே சமய அறிவை ஊட்டும் வண்ணமாகச் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். மட்டக்களப்பு மக்கள் சார்பாக ஆண்டுதோறும் கதிர்காமத் திருவிழாவை முன்னின்று நடாத்திய பண்டிதர் அவர்கள் ஆலய தரிசனம் செய்வதை ஒரு பேறாகக் கருதினார். ஈழத்துத் திருத்தலங்கள் பலவற்றைத் தரிசிப்பதில் அவர் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டார். இந்திய தமிழகத்தில் அவர் அநேக ஆலயங்களைத் தரிசித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் நடாத்தும் ஞாயிறு பாடசாலைகளில் சமய பாடம் கற்பித்தார். கந்தசஷ்டி விரத காலத்தில் ஆலயங்களில் கந்தபுராணத்திற்கு பயன் சொல்லும் பணியினைச் சிறப்பாக மேற்கொண்டார். இவ்வாறு தம் வாழ்நாளெல்லாம் சமய, சமூகத் தொண்டுகள் செய்து வாழ்ந்த பண்டிதர் அவர்கள் 12.10.1987 அன்று இறைவனடி எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர் பண்டிதை திருமதி.கங்கேஸ்வரி கந்தையா**

**பிறந்த திகதி : 20.03.1917**

**துறை : ஆய்வு**

மட்டக்களப்பைச் சேர்ந்த அமரர் பண்டிதை திருமதி.கங் கேஸ்வரி கந்தையா அவர்கள் மட்டக்களப்பின் பழம்பெரும் பண்டிதை ஆவார். புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, சைவமெய்ப் போதகர். திரு.சா.அருணாசல தேசிகர், சுவாமி விபுலானந்தர் ஆகியோரிடம் கல்வி கற்ற இவர் 1939இல் ஆசிரியையாக பதவி ஏற்று 1947ல் யாழ் ஆசிரிய பாஷாவிருத்திச் சங்கம் நடாத்திய பாலபண்டித பரீட்சையில் சித்திய டைந்து பண்டிதை கங்கேஸ்வரி ஆனார். தான் ஓய்வுபெறும் வரை மட்/அரசினர் பெண்கள் ஆசிரிய கலாசாலையில் தமிழ் மொழி விரிவு ரையாளராக கடமையாற்றியுள்ளார். தமிழ் மொழி ஆய்வில் தனது கணவர் பண்டிதர் மகாவித்துவான் வீ.சீ. கந்தையாவுடன் இணைந்து பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவரது 'அரசன் ஆணையும் - ஆடகசவுந்தரியும்' எனும் நாடக நூல் இவருக்கு சாகித்திய மண்டலப் பரிசையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது. இவர் தனது கணவருடன் இணைந்து மதுரை, மலேசியா முதலிய இடங்களில் நடந்த அகில உல கத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித் துள்ளார். இவர்களது இலக்கியப் பணியைப் பாராட்டி மட்டக்களப்பு மாவட்ட கலாசார பேரவை ஒரே காலத்தில் பண்டிதர் அவர்களுக்கு மகாவித்துவான் பட்டமும், பண்டிதை அவர்களுக்கு இலக்கிய மணி பட்டமும் வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கவை. இவர் இலக்கி யப் பணியுடன் சமயப்பணியிலும் ஈடுபட்டார். இதன் காரணமாக யாழ் நல்லையாதீன பராமச்சாரிய சுவாமிகளால் 'அருள்மொழி அரசி' என்ற பட்டமும் காஞ்சி தொண்டை மண்டல ஆதினத்தலை வரால் 'பெருஞ்சொல் அமுதம்' எனும் பட்டமும் இந்துசமய கலாசார அலு வல்கள் அமைச்சினால் "சைவநன்மணி" விருதும், மட்/இந்து மகளிர் மன்றத்தினரால் 'சிவப்பணி அம்மையர்' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். மட்டக்களப்பின் தமிழ்ச்சங்கம், தமிழ் எழுத்தா ளர் கழகம், கிழக்கிழங்கை பண்டிதர் கழகம், பிரதேச கலாமன்றம், தமிழ் கலாமன்றம் முதலான சங்கங்களில் இவர் ஆற்றிய பணிகள் என்றும் மறக்க முடியாதவை. இறுதியாக தன் கணவனின் மறைவிற்கு பின்னர் அவர் வெளியிட்ட மட்டக்களப்பு சைவக் கோயில்கள் முதலாம் பாகத் தைத் தொடர்ந்து 2ம் பாகத்தை பண்டிதையே முன்னின்று தொகுத்து வெளியிட்டு வைத்தார். இந் நூலே அவர் இறுதியாக வெளியிட்ட நூலாகும். மட்டக்களப்பு ஆய்வு வரலாற்றில் பண்டிதையின் வாழ்வு ஒரு சரித்திரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் இரா.மயில்வாகனம்

பிறந்த திகதி : 25.03.1917

துறை : சமய ஆய்வு

மட்டக்களப்பு புளியந்தீவு சிங்களவாடியைச் சேர்ந்த அமரர் இரா.மயில்வாகனம் அவர்கள் மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் கல்வி கற்று பின்னர் பயிற்றப்பட்ட ஆசிரியரானார். தனது ஆசிரியப் பணியுடன் தமிழ், சைவம் தொடர்பான பல ஆய்வு களை மேற்கொண்டிருந் ததன் பயனாக சிந்தனைக் கோவை, ஒன்பதாம் திருமுறை, இரண்டாம் சிந்த னைக் கோவை, வைரவ மான்மியம், தேவி திருமுகம் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். கனடா ரொறொன்ரோ உலக சைவ மகாநாட்டிலும் இந்தி யாவில் தஞ்சாவூரில் நடைபெற்ற ஆறாவது உலக சைவ மகா நாட்டிலும் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் ஆற்றியுள்ளார். இவரது பணிகளைக் கௌரவித்து சிவநெறிச் செம்மல், சைவநன்மணி, ஞானவாரிதி, சொற் கொண்டல், சித்தாந்தமாமணி போன்ற விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பெயர் : செல்வி.சிவசிதம்பரப்பிள்ளை திருமலர் பாக்கியம்

பிறந்த திகதி : 04.05.1922

துறை : சமய ஆய்வு

மட்டக்களப்பிலே வாழ்ந்த இவர், ஆசிரியராகி பெண்கள் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றவராவார். சிறு வயதிலிருந்தே இதிகாசத் துறையில் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தமையால் பிற்காலத்தில் பல நூல்க ளையும் எழுதி வெளியிட்டு இலக்கியப் பணி செய்துள்ளார். இவர் இயற்றிய நூல்களாவன. மட்/அரசினர் வைத்தியசாலை பழனி ஆண்டவன் திருப்ப திகம், திருப்பெருந்துறை முருகன் திருப்பதிகம், மாந்தீவு முருகன் திருப்பதி கம், கல்லடித்தெரு முருகன் திருப்பதிகம், கோட்டைமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் திருப்பதிகம் போன்றவை முக்கியமானவையாகும். இவைதவிர மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். விபுலானந்தர் ஸ்ரீ முத்துமாரியம்மன் போன்ற கும்மிப் பாடல்களையும் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புச் சிங்களவாடியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் இரா.மயில்வாகனம் அவர்கள் கல்விப் பணியில் ஆசிரயராகவும் அதிபராகவும் 35 வருடங்கள் பணிபுரிந்த இவர், கல்வி சமூகத்திற்கும் சைவ உலகிற்கும் எழுத்துப் பணிக்கும் ஆற்றிய சேவை உயர்ந்தவை. மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய பிரதேசங்களைத் தளமாகக் கொண்டு பணிகளை ஆரம்பித்த இவர், கொழும்பு தமிழ்ச்சங்கம் விவேகானந்த சபை, இந்துமாமன்றம் என்பனவற்றில் உறுப்பினராகவிருந்து பணி களை முன்னெடுத்தவர். சமய நூல்கள் பலவற்றைக் கற்று சிந்தனைக் கோவை (1990), 9ம் திருமுறை - ஓர் நோக்கு (1991), சிந்தனைக் கோவை II (1993), வைரவ மான்மியம் (1997), தேவி திருமுகம் (1997), சித்தாந்தக் கைநூல் (1998), சைவ சித்தாந்த சம்புடம் (2000) போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் 1998ம் ஆண்டு உலக சைவப் பேரவையின் 6வது தஞ்சை மகாநாட்டில் சைவ சித்தாத்தம் என்ற ஆய் வுக் கட்டுரையைச் சமர்ப்பித்ததுடன் 1999ம் ஆண்டு உலக சைவ மகாநாடு 'ரொறொன்ரோ'வில் நடைபெற்றபோது 'இளை உயிர்தளை' என்ற ஆய்வுக் கட்டுரையையும் சமர்ப்பித்துள்ளார். இவரின் சேவை யைக் கௌரிவத்து இந்து சமயப் பண்பாட்டு அலுவல்கள் திணைக் களம் சமய நூல் எழுத்தாளன் என்ற பட்டத்தையும், கொழும்பு தமிழ்ச் சங்கம் சிவனெறிச்செம்மல் என்ற பட்டத்தையும், திருமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஷ்தானம் பைந்தமிழ் ஞானவாகி என்ற பட்டத்தையும் மற்றும் சொற்கொந்தன் சிந்தாமணி, சைவ நன்மணி போன்ற பட்டங்களையும் பெற்றுள்ள இவர் சமாதான நீதிபதியாகவும் பணி புரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.வயிரமுத்து சிவசுப்பிரமணியம்**

**பிறந்த திகதி** : **17.08.1918**

**துறை** : **ஆய்வு**

திரு.வயிரமுத்து சிவசுப்பிரமணியம் அவர்கள் மட்டக்களப்பு நகரில் சிங்களவாடியை பிறப்பிடமாகக் கொண்டவர். பேராதனை பல்கலைக்கழக கலைமாணி பட்டதாரி. எழுத்துத்துறையில் நீண்டகாலம் அனுபவம் உள்ளவர். மட்டக்களப்பு பிரதேச நாட்டுப் பாடல்களை முதன் முதல் தமிழுலகிற்கு அறிமுகம் செய்வித்தவர். 1945ம் ஆண்டில் இருந்து ஈழகேசரியிலும், தினகரன் பத்திரிகையிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளாா். கிழக்கிலங்கையின் முதல் சிறுகதை ஆசிரியரும் இவரே. மட்டக்களப்பில் நிறுவப்பட்டுள்ள "தரிசனம்" விழிப்புலனற்றோர் பாடசாலையின் ஆரம்பகாலத் தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக்கு வித்திட்டவர். பாடசாலை மாணவர்கள் புரிந்துகொள்ளும் முறையில் இவர் எழுதிய "மகாத்மாகாந்தி" என்ற சிறு நூல் 1989 இல் வெளிவந்தது. மட்டக்களப்பு சுவாமி நூற்றாண்டு விழாச் சபையினரால் சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் நான்கு பகுதிகளாக வெளிவந்ததில் இவர் நல்கிய உழைப்பு குறிப்பிடத்தக்கது. சுவாமி விபுலானந்தரின் வாழ்க்கை வரலாறு கூறும் "விபுலானந்த தரிசனம்" என்னும் இவரது நூலை சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டுச் சபை 1993ம் ஆண்டு வெளியிட்டது. இந்நூல் அச்சபையினதும் இலங்கை அரசின் சாஹித்திய அக்கடமியினதும் பரிசுகளை பெற்றது. மட்டக்களப்பில் கண்டெடுக்கப்பட்ட "சுருதி நூல்முறை" என்ற அத்வைத வேதாந்த நூலின் ஏட்டுப்பிரதிகளை பரிசோதித்து விளக்கக் குறிப்புகளுடன் நூலை வெளியிட்டார். அண்மையில் "மட்டக்களப்பு நாட்டாரியல்" என்ற நூலை வெளியிட்டுள்ளாா். இந்நூல் மட்டக்களப்பு பிரதேசத்தை அறிந்து கொள்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் உதவியாக விளங்குகின்றது. இது 2005 அரச இலக்கிய விருது பெற்றது. இவரது தமிழ் அறிவையும், திறமையையும் உணர்ந்த கிழக்குப் பல்கலைக்கழகம் இவருக்கு "இலக்கிய கலாநிதி" பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. 1996 மண்முனை வடக்கு கலாசாரபேரவை இவரை தேனக கலைச்சுடர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து 2004 இல் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுனர் விருது வழங்கி அவரது இலக்கிய பணிக்காக கௌரவிக்கட்டுள்ளாா்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர். பண்டிதர்.வீ.சீ.கந்தையா**

**பிறந்த திகதி : 29.07.1920**

**துறை : ஆய்வு**

மட்டக்களப்பு மண்ணின் மிக முக்கியமான பண்டிதர்களுள் ஒருவர் அமரர் வீ.சி.கந்தையா அவர்கள். இவர் சுவாமி விபுலானந்தரிடம் தமிழ் இலக்கியங்களையும், வட மொழிக்கல்வியையும் பயின்றார். இவரது தந்தை வினாசித்தம்பி மண்டூரின் மிக முக்கிய புலவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. திரு.கந்தையா யாழ்ப்பாணத்தில் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் (1943) மதுரைத் தமிழ்சங்கம் (1944) ஆகிய தமிழ்ச் சங்கங்களின் பண்டிதர். இலங்கை பல்கலைக்கழகத்தின் தமிழ் வித்துவான் (1952) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் (1962) B.O.L பட்டதாரி அண்ணாவிமாரின் வாய்மொழி இலக்கணமாக மட்டும் உலவி வந்த தாளக்கட்டுகள் எனப்படும் வடமோடி, தென்மோடி. விலாசம் என்ற நாட்டுக் கூத்துக்களுக்கு முறையே உரியனவான தாள ஒழுங்குகளை ஒலிப்பதிவு செய்து பாதுகாத்துள்ளார். மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் கட்டுரை இயல், பாரதியாரின் பாஞ்சாலி சபதம், போன்ற பலநூல்களும் கண்ணகி வழக்குரை என்ற இடைக்காலக் காப்பிய மொன்றையும் படைத்துள்ளார். தனது துணைவியரான பண்டிதை கங்கேஸ்வரியுடன் இணைந்து மதுரை. மலேசியா முதலிய இடங்களில் அகில உலக தமிழாராட்சி நிகழ்ச்சிகளில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். இவரது "மட்டக்களப்பு தமிழகம்" எனும் ஆய்வு நூல் மட்டக்களப்பு தொடர்பான மிக முக்கியமான தகவல்களை தரும் நூலாகும்.

மகா வித்துவான் பண்டிதர் வீ.சி. கந்தையா அவர்கள் தனது மறைவுக்கு முன்னர் படைத்த நூலும் அவரது பதின் மூன்றாவது நூலாகவும் அமைந்தது. மட்டக்களப்புச் சைவக் கோயில்கள் பாகம் 1 இது மட்டக்களப்பு சைவக் கோயில்கள் பற்றிய விபரங்களை சொல்லும் ஆய்வு நூலாகும். பண்டிதரின் இலக்கிய சேவையைப் பாராட்டி மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை "மகாவித்துவான்" என்ற பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : வித்துவான் சா.இ.கமலநாதன்**
**பிறந்த திகதி : 27.04.1925**
**துறை : ஆய்வு**

**ம**ட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட வித்துவான் சா.இ.கமல நாதன் மட்டக்களப்பின் முதுபெரும் எழுத்தாளர்களில் ஒருவர். பேராசி ரியர்கள் கணபதிப்பிள்ளை சு.வித்தியானந்தன், சோ.செல்வநாயகம் ஆகியோரை வழிகாட்டிகளாக கொண்டு 1945 முதல் எழுதத் தொடங் கிய கமலநாதன் காயத்திரி, மனுவேலன் போன்ற புனைப்பெயர்களிலும் எழுதியுள்ளார். பேராதனை பல்கலைக்கழக BA பட்டதாரியான இவர் தமிழ் இலக்கியத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். 26 வருடங்கள் ஆசிரியராகவும், 13 வருடங்கள் அதிபராகவும் இருந்து ஓய்வுபெற்ற வர். தமிழுக்கு என்ற கவிதை மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவரது "நினையாதது" முதல் சிறுகதை 1946 இல் ஈழகேசரியில் வெளி யானது. இதுவரை உலகத்தமிழாராய்ச்சி ஞாபகார்த்த மலர் (1967) சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு மலர் (1992) மட்/மாவட்ட சாகித்திய ஞாப கார்த்த மலர் (1993) சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள் தொகுப்பு (1993 - 2000) பாரத அம்மானை (2002) மட்டக்களப்பு பூர்வீக சரித்திரம் (2005) ஆகிய நூல்களை பதிப்பித்துள்ளார். தமிழியல் ஆய்வில் எழுத்துச்சீர் திருத்தம், இலக்கிய திறனாய்வு ஐங்குறுநூறு காட்சிகள் என பல ஆய் வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இதுவரை தேசிய தமிழ் சாகித் திய மண்டலத்தின் தமிழ் ஒளி விருது (1993) ஆராய்ச்சித் துறைக்கான வடகிழக்கு மாகாண ஆளுனர் விருது (1998) கிழக்குப் பல்கலைக்கழ கத்தின் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் (1999) மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் 2009 Best Elder விருது போன்றவற் றினை பெற்றுள்ள வித்துவான் மண்முன வடக்கு பிரதேச கலாசார பேரவையினால் "தேனகக் கலைச்சுடர்" விருது வழங்கப்பட்டும் கௌ ரவிக்கப்பட்டுள்ளார். மட்/தமிழ் கலாமன்றம் (1957) விபுலானந்தர் நூற்றாண்டு விழாவை (1992 - 2003) மட்/தமிழாராய்ச்சி மாநாட்டு குழு (1967) பேராதனை தமிழ்ச்சங்கம் (1957) வாசகர் மட்டம் (ஆரம்பம் முதல் 2009 வரை) தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றில் அங் கத்தவராக இருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.செல்லையா இராசதுரை**

**பிறந்த திகதி** : **27.07.1927**

**துறை** : **ஆய்வு**

மட்டக்களப்பு சிங்களவாடியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தற்போது தமிழ் நாட்டில் வசித்து வருகின்றார். மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் இலங்கையில் சிரேஷ்ட எழுத்தாளர்கள், மற்றும் பத்திரிகையாளர்களில் ஒருவராவார். சிறுகதை, நாவல், கட்டுரை, பேச்சு மற்றும் நாடகம் என தமிழ் இலக்கியத்துறைக்கு தனது பங்களிப்பை இன்றும் நல்கி வருகின்றார். இராசாத்தி, பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும், தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள் என்னைக் கவர்ந்த உத்தமர்கள், முத்தமிழ் வித்தகர் அருட் திரு.விபுலானந்தர், தீயிவள்தேன்மலர், உட்பட 25ற்கும் மேற்பட்ட நூல்களையும் , லங்கா முரசு, சாந்தி, தர்மோதயம், முழக்கம், தேனாடு உட்பட 10ற்கும் மேற்பட்ட பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டுள்ளார் மதுரை, சென்னை, மலேசியா ஆகிய இடங்களில் நடைபெற்ற உலக தமிழாராச்சி மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். இவரிடம் காணப்பட்ட இலக்கிய பேச்சாற்றல் பலராலும் கவரப்பட்டமையினால் "சொல்லின் செல்வர்" மற்றும் "நாவலர்" போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார், நாடகத்துறையில் சிறந்த நடிகனாகத்திகழ்ந்த இவர் பல சரித்திர சமூக நாடகங்களை நடித்துள்ளார். இவற்றுள் சங்கிலியன் நாடகம் இவரின் நடிப்புக்கு சான்றாக அமைந்து. இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினரான இவர் 1956-1989ம் ஆண்டு வரை மட்டக்களப்பு தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகவும், மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது மேயராகவும் 1979-1989 வரை. பிராந்திய அபிவிருத்தி இந்து விவகாரம் மற்றும் தமிழ் மொழி அமுலாக்கம் அமைச்சராகவும், இலங்கைக்கான மலேசியா தூதுவராகவும் பணியாற்றியுள்ளார். இவர் பணியாற்றிய காலத்தில் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசைநடனக் கல்லூரி (அழகியல் கற்கை நிறுவகம்) யை நிறுவியும், முதலாவது உலக இந்து சமய மகாநாட்டை கொழும்பில் நடத்தியமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : எஸ்.பிரான்சிஸ்

துறை : ஆய்வு

மட்டக்களப்பை வசிப்பிடமாகக் கொண்ட எஸ்.பிரான்சிஸ் பயிற்றப்பட்ட முதலாம் தர ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்றவர். ஆசிரிய திலகம் என போற்றப்படும் எஸ்.பிரான்சிஸ் அவர்கள் இதுவரை பல நூல்களை வெளியிட்டுள்ளார். அதில் ஆய்வு பற்றிய நூல்களாக "100 வருட மட்டுவின் நினைவுகள்" "வாழ்க்கைச் சுவடுகள்" "மட்டு நகரில் ஒரு மனிதப் புனிதர்" என்பவை மிக முக்கியமான நூல்களாகும். இவை ஆய்வு நோக்கில் எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்களாகும். எஸ்.பிரான்சிஸ் அவர்கள் மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவையினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டு தேனகக் கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். மேலும் மட்/ சமூகத் தொடர்பு நிலையத்தின் மூலம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



பெயர் : செபஸ்தியான் கவுரீயல்


பிறந்த திகதி : 1931.12.19

துறை : ஆய்வு

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்தியான் கவுரியல் ஓய்வுபெற்ற அரச கணக்காளராவார். மட்டக்களப்பு தமிழரின் வாழ்வுரிமை சமூகக்குழுக்களின் வரலாறும் வளர்ச்சியும் பற்றிய தகவல்களை இளைய தலைமுறைக்கு தெரியப்படுத்தும் முகமாக 2007 முதல் தனது வரலாற்று ஆய்வினை ஆரம்பித்த செபஸ்தியான் கவுரியல் மட்டக்களப்பு நகரில் நாவிதர் தொழில் புரியும் சமூகத்தின் வரலாற்றினை பதிவு செய்யும் முகமாக அச்சமூகம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு "மட்டுநகரின் மருத்துவச் சமூகம் - பேசப்படாத வரலாறு" என்ற தலைப்பில் ஆய்வு நூலை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.செ.எதிர்மன்னசிங்கம்

பிறந்த திகதி : 23.06.1941

துறை : ஆய்வு

மட்டக்களப்பு நகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செ.எதிர்மன்னசிங்கம் பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணி சிறப்புப் பட்டதாரியாவார். வடக்கு கிழக்கு மாகாண கலாசாரப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்றவர். கலை, இலக்கிய, நாடகம், கூத்து, ஆய்வு என பல துறைகளிலும் முத்திரை பதித்தவர். இவரது தந்தை செல்லத்தம்பி ஒரு திறமையான கூத்துக் கலஞர். இதன் காரணமாக இவருக்கு கூத்தில் அதிக ஈடுபாடு உண்டு. 1965ம் ஆண்டில் இலக்கிய உலகில் காலடிவைத்த எதிர்மன்னசிங்கம் 'நொண்டி நாடகம்', 'இராவணேசன்', 'யார் இந்த விஜயன்' போன்ற நாடகங்களையும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, எதிர்மன்னசிங்கனின் வாழ்வும் இலக்கியமும் இவர் எழுதிய படைப்புக்களாகும்.

இவர் பல பத்திரிகை, புத்தகங்கள், சஞ்சிகைகளில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழகத்தில் அண்மையில் நடைபெற்ற உலக தமிழ் செம்மொழி மகாநாட்டில் மட்டக்களப்பிலிருந்து கலந்து கொண்டு "கிழக்கிலங்கை மக்களின் பண்பாட்டுப் பாரம்பரிய சடங்கு முறை பற்றிய தேடல்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையொன்றை வாசித்துள்ளார். அமரர்.நல்லையா மாஸ்டர் நினைவுப்பணி மன்றம், புலவர்மணி நினைவுப் பணிமன்றம் போன்ற அமைப்புக்களில் ஈடுபாட்டுடன் செயல்பட்டுவரும் இவர், இலக்கியத் தொண்டர், கலாசார காவலன், ஆன்மீகக் கலைச் செம்மல், முதலமைச்சர் கலை இலக்கிய விருது போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார். மட்டக்களப்பு மண்முனை வடக்கு கலாசார பேரவையில் 2010ம் ஆண்டுக்கான முத்தமிழ் விழாவில் 'தேனகக் கலைச்சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்படும் எஸ்.எதிர்மன்னசிங்கம் நாடறிந்த ஓர் இலக்கியவாதி என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.சா. தில்லைநாதன்
பிறந்த திகதி : 23.03.1948
துறை : ஆய்வு

மட்டக்களப்பு துறைநீலாவணையை பிறப்பிடமாகவும் கல்லடி மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சா.தில்லைநாதன் பேராதனை பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரி. 1974ம் ஆண்டு முதல் சமய பணியிலும் அதனூடாக இலக்கிய வாழ்விலும் ஈடுபாடு கொண்ட இவரின் முதற் படைப்பு கலைச் செல்வியில் வெளிவந்தது. கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற இவர் தற்போது தனது கலாநிதி பட்டத்திற்காக 19ம் நூற்றாண்டு வரையிலான தமிழர்சார்பு பற்றி ஆய்வு செய்து வருகின்றார். இவர் இதுவரை சைவமும் நாமும் (1991) (இந்துசமய ஆய்வுநூல்) கல்வி அமைச்சினால் துணைப்பாட நூலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி இலக்கியமும் இலக்கணமும் (1997) (மொழி இலக்கிய ஆய்வு நூல்) கல்வி அமைச்சினால் துணைப்பாட நூலாக அங்கீகரிக்கப்பட்டது. மண்டூர் முருகன் திருவிருத்தமாலை (2001) (செய்யுள்நூல்) தமிழ் மொழியில் இலக்கியச் சிறப்பு (2005) (மொழி இலக்கிய ஆய்வு நூல்) தமிழ் மொழியில் இலக்கணச் சிறப்பு (2005) (மொழி இலக்கண ஆய்வு நூல்) மட்டக்களப்பில் இந்து சமய கலாசாரம் (2006) (ஆய்வுநூல்) சைவசித்தாந்த விரதங்கள் (2007) (ஆய்வு நூல்) மட்டக்களப்புக் கோயில்களும் தமிழர் பண்பாடும் (2008) (ஆய்வு நூல்) என எட்டு நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் இதுவரை பல விருதுகளையும் பெற்றுள்ளார். அவற்றுள் சைவப்புலவர் விருது (1973). வித்தியகலாமணி விருது (1995) இலக்கியமணி விருது (2006) சமய எழுத்தாளர் விருது (1995) கலைஞர் கௌரவிப்பு (2008) அரச இலக்கிய விருது (2008) கிழக்கு மாகாண சிறந்த நூல் தெரிவுக்கான விருது (2005) தமிழியல் விருது (2005) என பல விருதுகளைப் பெற்றுள்ளார். சைவப் புலவர் சா. தில்லைநாதன் என்றால் அறியாதவர் இல்லை. இவர் பல கவியரங்குகளில் கவிதை பாடியும், உரைச் சித்திரங்கள் நாடத்தியும் உள்ளார் பல உரைச் சித்திரங்களும் இலக்கிய சொற்பொழிவுகளும் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : செல்வி.தங்கேஸ்வரி கதிராமன்

பிறந்த திகதி : 26.02.1952

துறை : ஆய்வு

மட்டக்களப்பு கன்னங்குடாவைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு நகரை வதிவிடமாகவும் கொண்ட செல்வி.தங்கேஸ்வரி கதிராமன் ஒரு தொல்லியல் சிறப்புப் பட்டதாரியாவார். மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார். இவர் இதுவரை தொல்லியல் துறையில் விபுலானந்தர் தொல்லியல் ஆய்வு, குளக்கோட்டன் தரிசனம், மாகோன் வரலாறு ஆகிய ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளார்.

மட்டக்களப்பு கலைப் பராம்பரியப் பொருட்களின் ஆவணப்படுத்தலில் முக்கியமானவர். கூத்துக்கலை தொடர்பான விபரங்களையும், கூத்துக்களையும் தொகுத்து பேழைகளாக (1998) வெளியிட்டுள்ளார். மட்/கச்சேரி அரும்பொருட் காட்சியகம் உருவாக்கம் (1999) மட்டக்களப்புக் கிராமியக் கலைகள் ஒளிப்பேழைகள் 4 (1999) போன்ற ஆவணப்படுத்தல்களில் முன்னின்று உழைத்தவர்.

இவர் இலக்கியப் பணியுடன் சமயப்பணி, சமயக்கல்வி, சமூகப் பணி, நூல்பதிப்பு என்பவற்றில் ஈடுபட்டு வருகின்றார். தொல்லியல் தாரகை, தொல்லியல் சுடர், யாழ் இலக்கிய வட்டம் அளித்த பரிசு, வடக்கு கிழக்கு மாகாண சாகித்தியப் பரிசு போன்ற விருதுகளையும் கௌரவங்களையும் பெற்ற இவர், வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் ஆய்வு மாநாடுகளிலும் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் மண்முனை வடக்கு கலாசார பேரவையால் பொன்னாடை போர்த்தி 'தேனக கலைச்சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.சீ.கோபாலசிங்கம்**

**பிறந்த திகதி : 07.11.1965**

**துறை : ஆய்வு**

இந்தியாவில் 'ஈழக்கவி' என்ற புனைப்பெயரிலும், இலங்கையில் வெல்லவூர்க்கோபால் என்ற பெயரிலும் அறியப்பட்ட சீனித்தம்பி கோபாலசிங்கம் வெல்லாவெளியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு நகரை வசிப்பிடமாகவும் கொண்டவர். 1959ல் 'எனது கிராமம்' என்ற தலைப்பில் வீரகேசரியில் கவிதை எழுதியதன் மூலம் இலக்கிய உலகில் அறிமுகமான வெல்லவூர்க்கோபால் தனது பதினெட்டாவது வயதில் 'கன்னிமலர்' கவிதை நூலை வெளியிட்டார். இதுவரை 300க்கு மேற்பட்ட கவிதைகள், 37 கட்டுரைகள், 6 சிறுகதைகள் எழுதியுள்ளார். இதுவரை 13 நூல்களை பல்துறைகளிலும் வெளியிட்டுள்ளார். அவற்றுள் பல பரிசில்களும் பெற்றுள்ளன. 'கன்னிமலர்' (கவிதைத் தொகுதி - 1964 சாகித்திய மண்டலச் சிறப்பு விருது (மாணவர் பிரிவு), 'முல்லை' (குறுங்காவியம் - 1968), 'ஒரு கண்ணீர்க்காவியம்' (1972), 'கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம்' (வலவரலாறு 1992 - கலாசார அமைச்சின் விருது), 'முற்றுப்பெறாத காவியம்' (1995 - வடகிழக்கு சாகித்திய விருது), 'இதய சங்கமம்' (கவிதைகள் - 1998 இந்தியா), 'நெஞ்சக்கனல்' (காவியம் - 2002 இந்தியா), 'தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும் - ஒப்பீட்டு ஆய்வு 2003), 'சுனாமி' - ஓர் மீள்பார்வை 2005, 'மட்டக்களப்பு வரலாறு' - ஓர் அறிமுகம் (ஆய்வு 2005 வடகிழக்கு சாகித்திய விருது, யாழ் இலக்கியவட்ட விருது), 'மலையாள நாடும் மட்டக்களப்பும்' (ஒப்பீட்டு ஆய்வு - 2007), 'வெல்லவூர்க்கோபால் கவிதைகள்' ((2009), 'முழுமை பற்றிய சிந்தனைகள்' (2009). தற்போது மட்டக்களப்பு வரலாறும் பண்பாடும் தொடர்பாக ஒரு ஆய்வு நூலை வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ள வெல்லவூர்க்கோபால் தமிழ்நாடு கொங்கு மண்டல இலக்கிய அமைப்புக்களின் விருதும் பாராட்டும் - 2002, திருச்சி நுண்கலைக் கல்லூரி சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு - 2002, உட்பட பல பாராட்டுக்களைப் பெற்றவர். மண்முனை வடக்கு கலாசார பேரவை 2006ல் இவரை ஆய்வுத் துறைக்காகப் பாராட்டி தேனகக் கலைச்சுடர் விருது வழங்கி கௌரவித்துள்ளது. இதே காலகட்டத்தில் யாழ் - இலக்கிய வட்டமும் சிறந்த ஆய்வு நூல் விருது வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.காசுபதி நடராஜா
பிறந்த திகதி : 10.04.1941
துறை : ஆய்வு

ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கல்லடியில் வசித்து வருகின்றார். காசுபதி நடராஜா சமூக சேவகனாக, பத்திரிகை யாளராக, சிறுசஞ்சிகை ஆசிரியராக, ஆய்வாளராகப் பன்முகத் தன்மை கொண்டவர். இவரது 50க்கு மேற்பட்ட கட்டுரைகள் நினைவு மலர் கட்டுரைகளாகவும், தனிநபர் கட்டுரைகளாகவும், பல பத்திரிகை களில் வெளிவந்துள்ளன. பதினைந்துக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டு ரைகளை பல தளங்களிலும் எழுதியுள்ளார். மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 25க்கு மேற்பட்ட சஞ்சிகைகள், வெளியீடுகளில் வெளி யீட்டு ஆசிரியராகவும், ஆசிரியர் குழு உறுப்பினராகவும் சேவையாற் றியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரியான இவர், ஓய்வுபெறும் போது பிரதேச சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையில் இருந்தார். 75க்கு மேற்பட்ட சங்கங்கள், கழகங்களில் பல பதவி நிலை களிலிருந்து சமூக சேவையும் ஆற்றி வருகின்றார். 1961 காலப்பகுதி யில் ஈழநாடு பத்திரிகையின் காத்தான்குடி நிருபராகவும் கடமையாற்றி யுள்ளார்.

மட்டக்களப்பு கலை, இலக்கியப் பேரவையால் 'சேவையின் நாயகன்' (2002) மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை வைர விழா நிகழ்வில் 'சமூகநலன்', 'தன்பொழில்' (2007) போன்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சி பல வழிகளில் பணியாற்றிவரும் காசுபதி நடராஜா மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையில் நீண்டகால உறுப்பினராக இருந்து 'தேனகம்' மலர் வெளியீட்டிற்குப் பங்காற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர்.பித்தன்(ஷா)

பிறந்த திகதி : 1920

துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பின் மிக மூத்த எழுத்தாள்களில் கே.எம்.ஷா.வும் ஒருவர். புதுமைப்பித்தன் அவர்களின் எழுத்துக்களில் அடங்காத வெறி கொண்டு பின்னர் தமது பெயரையும் பித்தன் எனச் சூட்டிக் கொண்டார். பதினைந்து வயதிலேயே வாசிக்கும் பழக்கத்தை வாலாய மாக்கிக் கொண்டு 1930களில் நவீன தமிழ் இலக்கியங்களான நாவல், சிறுகதை, புதுக்கவிதைகள் பெருமளவில் தோற்றம் தராத அந்த நாட்க ளில் வங்கமராட்டிய மொழிகளில் வெளிந்த இலக்கியப் படைப்புக் களே பித்தனின் இலக்கியப் பசிக்கு பெரும் படையல்களாக அமைந்தது. 1940களில் வீட்டைவிட்டு இந்தியாவுக்கு சென்றவர். கையிலுள்ள, பணம் தீரும்வரை தமிழகத்தை ஒரு சுற்றறு சுற்றினார். சென்னையில் சென்.ஜோர்ஜ்கோட்டை அருகில் இடம்பெற்ற இராணுவ அணிவ குப்பை வேடிக்கை பார்த்து நின்றவர்பின்னர் தானும் இந்திய இரா ணுவத்தில் சிப்பாயாக இணைந்த கொண்டது அவரது வாழ்வில் மிக முக்கிய அனுபவங்ளை அவருக்கு பெற்றுக் கொடுத்தது. எகிப்து, பலஸ்தீன், ஈரான், ஈராக், பாக்கிஸ்தான் என்று உலகை வலம் வந்த வர்க்கு, வறுமைதான் கடைசிவரை துணையாக வந்தது. 1948 இல் தினகரனில் 'கலைஞனின் தியாகம்' எனும் கதை மூலம் சிறுகதை உலகிற்கு காலடி எடுத்து வைத்தவர். முப்பது வருடங்கள் மொத்தம் முப்பது கதைகள். (1948 - 1978) இவரது ஊர்வலை, தாம்பத்யம், முதலிரவு, பாதிக்குழந்தை, பிரேதநாய், ஊதுகுழல் என்பன காலத்தை வென்ற கதைகள்.

1991 காலப்பகுதியில் முஸ்லிம் கலாசார அமைச்சு "எழுத்து வேந்தன்" பட்டம் கொடுத்தது. தனது இறுதிக் காலம் வரை தனது சிறுகதைகளை புத்தகமாக்க முடியாத வறுமையில் வாடிய பித்தன் மட்டக்களப்பின் தமிழ் இலக்கிய உலகின் மிக முக்கிய பாடைப்பாளி என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **அமரர் வெற்றிவேல் விநாயகமூர்த்தி**

**பிறந்த திகதி** : **15.09.1924**

**துறை** : **ஆக்க இலக்கியம்**

**வெ**ற்றிமகன், பன்குடாவெளி மூர்த்தி, வேவி, வள்ளி, விநாயகி போன்ற புனைப்பெயர்களில் எழுதிவந்த அமரர் வெற்றிவேல் விநாயக மூர்த்தி சிறந்த ஆசிரியராக, அதிபராக, மாவட்டத்தின் பல பகுதிகளி லும் பணியாற்றியவர். பழந்தமிழ் இலக்கியங்கள், சமயம், அரசியல் எனப் பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்ட பன்முக ஆய்வாளர். எழுத்தாளராக, கவிஞராக, நாடக ஆசிரியராக, ஆய்வாளராக, பேச்சா ளராக, வானொலிக் கலைஞராகத் தம்மை இனங்காட்டி அதன் மூலம் மட்டக்களப்பு மாண்பை வெளியுலகுக்கு வெளிக்காட்டியவர். கவிதை, கட்டுரை, இலக்கிய இதிகாச ஆய்வுகள், குடியியல், குடும்பவியல், சிறுவர் சித்திரம் எனப் பல்வேறு துறைகளிலும் இவரின் புலைமை பரந்து விரிந்தது. பாலர் பாமாலை (கவிதை), பொதுப்பாமாலை (கவிதை), பாட்டும் விளையாட்டும் (சிறுவர்), கண்ணகையும் தன்னகையும் (இதிகாச ஆய்வு), கடவுள் எங்கே (தத்துவ ஆய்வு), மாறிவரும் மட்டக்களப்புத் தமிழகம் (ஆய்வு), பொன்னாச்சி பிறந்த மண் (சிறுகதை) என்பவற் றோடு கையெழுத்துப் பிரதிகள் பலவும் இவரால் வெளியிடப்பட்டு பலரது பாராட்டையும் பெற்றுள்ளன. இவைதவிர சஞ்சிகைகள், பத்திரி கைகளில் பாலர் சிறுகதைகள், கவிதை, கட்டுரைகளும் எழுதியுள்ளார். 1951ம் ஆண்டு 'ஆசையின் வேகம்' என்னும் பேச்சோடு இலங்கை வானொலியில் வானொலிக் கலைஞராக இடம்பிடித்துக் கொண்டதோடு தொலைக்காட்சியிலும் பல நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளார். இலக்கியத் துறையோடு மாத்திரமல்ல, சமூகப் பணியிலும் அயராது உழைத்தார். 'பகுத்தறிவுச் சிந்தனை வட்டம்' என்ற அமைப்பின் தலைவராகப் பணி புரிந்துள்ளார். பஞ்சவர் முத்தமிழ்ப்பண்ணை, சைவ சமய முத்தமிழ்ப் பண்ணை, பாலகி வாலிபர் சபா என்ற அமைப்புக்களின் முன்னோடி யாகவும், முற்போக்குச் சிந்தனாவாதியாகவும், செயல் வீரராகவும் சமூக முன்னேற்றத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். தம்மை இணைத்துக்கொண்ட சமூகநலன் விரும்பியுமாவார். மாண்புமிகு ஜனாதி பதியவர்களால் 'கலாசூரி' பட்டம்பெற்ற இவர், மட்டக்களப்பு மண் ணின் சொத்தாகக் கருதப்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : வித்துவான் நல்லதம்பி நாகலிங்கம்

பிறந்த திகதி : 06.01.1928

துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பு தாமரைக்கேணி வீதியை வசிப்பிடமாகக் கொண்ட வித்துவான் நல்லதம்பி நாகலிங்கம் அவர்கள் ஓய்வுபெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியராவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ள இவர் அமரர்களான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் ஆ.சபாபதி ஆகியோரின் வழிகாட்டலில் இலக்கிய, சமூக, சமயப்பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். சிறுகதைத் துறையில் 1950ம் ஆண்டு தனது முதலாவது சிறுகதையான 'மானம் பெரிது' சிறுகதை ஈழகேசரி பத்திரிகையில் வெளிவந்தது. தொடர்ந்து பல சிறுகதைகளை எழுதியுள்ள இவரின் சிறுகதைகள் சமுகங்களை விழிப்பூட்டுவதாக அமைந்திருந்தமை ஒரு சிறப்பம்சமாகும். இவரால் எழுதப்பட்ட 'வேதனை' சிறுகதை வாசகர்களின் இதயங்களில் பெரிதும் இடம்பிடித்துக் கொண்டது. சமயத் துறையில் மட்டக்களப்பு ஜீ.வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் நீண்டகாலமாக தர்மகத்தாவாக பல பதவிகளை வகித்துப் பணிபுரிந்துள்ளார். புலவர்மணி நினைவுப் பணிமன்றம், இந்து இளைஞர் மன்றத்தின் உறுப்பினராகவும் இருந்த இவரின் சேவையைப் பாராட்டி அகில இலங்கை இந்து தர்மோதயம் மட்டக்களப்பு, தாமரைக்கேணி ஸ்ரீ மாரியம்மன் போதனா பீடம் என்பன பொன்னாடை போர்த்திப் பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர். ரீ.பாக்கியநாயகம்**

**பிறந்த திகதி : 04.02.1931**

**துறை : ஆக்க இலக்கியம்**

**ம**ட்டக்களப்பைச் சேர்ந்த அமரர் ரீ.பாக்கியநாயகம் மட்டக்களப்பின் முன்னோடி நகைச்சுவை எழுத்தாளராவார். நூற்றுக்கணக்கான நகைச்சுவை கட்டுரைகள் எழுதியபோதும் அவரது ஓர் தொகுப்பும் வெளிவராதது கவலைக்குரியதே. ரீ.பா. மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் பற்றி தமிழகத்தின் கலைமகள், ஆனந்தவிகடன் பத்திரிகைகளில் எழுதிய கட்டுரைகள் பலரது பாராட்டையும் பெற்றது. தமிழ் எழுத்தைப் போலவே ஆங்கிலத்திலும் மிகச் சரளமாக எழுதுபவர். ரீ.பா. ஒரு Free Lance எழுத்தாளராக இலங்கையின் சகல ஆங்கில பத்திரிகைகளிலும் எழுதியுள்ளார். கொழும்பில் தற்காலிகமாக வசித்த காலங்களில் "வீரகேசரி"யில் சொல்லத்தான் நினைக்கிறேன் என்ற தலைப்பில் வாரம்தோறும் பல நகைச்சுவைக் கட்டுரைகளை எழுதி வந்தார்.

அமரர் ரீ.பாக்கியநாயகம் தனது சொந்த முயற்சியால் "சுமைதாங்கி" என்ற பெயரில் ஒரு கிறிஸ்தவ இலக்கிய சஞ்சிகையை மாத வெளியீடாக இரண்டு வருடங்களுக்கு மேல் வெளியிட்டுள்ளார். மேலும் மட்டக்களப்பில் உள்ள கலை, இலக்கிய அமைப்புகளை முன் நின்று நடாத்திய பெருமை அவரைச் சாரும். மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்க தலைவர் (1960) மட்டக்களப்பு பிரதேச கலாமன்றச் செயலாளர் (1970 - 1980) மட்/தமிழாராய்ச்சி மாநாட்டுச் செயலாளர். என பல அமைப்புக்களில் இணைந்து இலக்கியப் பணி புரிந்துள்ளார். இந்து சமய கலாசார அமைச்சின் தமிழ்மணி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட அமரர். ரீ. பாக்கியநாயகம் மட்டக்களப்பின் மிக முக்கிய படைப்பாளிகளில் ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : மாஸ்டர் சிவலிங்கம்

பிறந்த திகதி : 28.03.1933

துறை : சிறுவர் இலக்கியம்

மட்டக்களப்பைச் சேர்ந்த மாஸ்டர் சிவலிங்கத்தை அறியாத வர்கள் எவரும் இல்லை. மட்டக்களப்பின் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக் கும் உயர்ச்சிக்கும் முன்னின்று உழைத்தவர் , உழைத்து வருபவர். பலகுரல் பேசுதல் , சித்திரம் , நடிப்பு , நகைச்சுவை , வில்லிசை , பத்திரிகைத் துறை என பல துறைகளில் பிரகாசிக்கும் மாஸ்டர் சிவ லிங்கம் தினபதி , சிந்தாமணிப் பத்திரிகைகளின் துணை ஆசிரியராக 17 வருடங்கள் பணியாற்றியவர். தற்போது மட்டக்களப்பு மாநகர சபை யின் பொது நூலகத்தில் கதை சொல்லும் கலைஞராக (Story Narrator) பணியாற்றி வருகின்றார்.

மாஸ்டரின் கலை , இலக்கியப் பணி மகத்தானது. மட்டக்களப்பு பகுதிக்கு 1960களில் வில்லிசையை முதலில் அறிமுகப்படுத்தி இற்றை வரை 125க்கு மேற்பட்ட வில்லிசை, நிகழ்வுகளையும் , வானொலி, தொலைக்காட்சிகளில் சிறுவர்க்கு கதை சொல்லும் பல நிகழ்ச்சி களையும் செய்து வருகின்றார். மேலும் , பல பத்திரிகைகளில் சிறுவர் களுக்கான சிறுவர் கதைகளை எழுதியுள்ளார். சிந்தாமணி காலத்தில் பல ஆங்கில சிறுவர் நாவல்களை தமிழில் மொழிபெயர்த்து தொடர் கதையாக எழுதியுள்ளார். இவர் எழுதிய சிறுவர்களுக்கான 'மகாபா ரதம்', 'இராமாயணம்' போன்ற இதிகாச கதைகள் பல பத்திரிகைகளில் தொடராக வெளிவந்துள்ளன. 1993ல் உதயம் வெளியீடாக வெளிவந்த 'பயங்கர இரவு ,' என்னும் சிறுவர் நூல் சிறுவர்களுக்கான தரமான படைப்பாகும்.

மாஸ்டர் சிவலிங்கம் இதுவரை பல பட்டங்களையும் , விருதுக ளையும் பெற்றுள்ளார். நகைச்சுவைக் குமரன், நகைச்சுவை மன்னன் ,, வில்லிசை வேந்தன் எனப் பல பட்டங்கள் , இலண்டனில் உள்ள (BUDS) பட்ஸ் கழகம் மாஸ்டரை அழைத்துக் 'கதைமாமணி' என்ற பட்டத்தை வழங்கியுள்ளது. எழுத்துத் துறையில் மணிவிழாக் கண்ட மாஸ்டரை மண்முனை வடக்கு கலாசார பேரவை 'தேனகக் கலைச் சுடர் ' விருது வழங்கிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : கவிஞர் சின்னையா கிருஷ்ணபிள்ளை
பிறந்த திகதி : 25.09.1933
துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஒரு நாடறிந்த இலக்கியவாதியாவார். திலைத்துமிலன், கிருஷ்ணபாரதி, மாலதி ஆலையடிச் சோலையான், பேய்மகன், இளமாலதி கிருஷ்ணா ஆகிய புனைப்பெயர் களில் எழுதிவரும் இவர், கலைமானி (B.A), பேராதனைப் பல்கலைக்கழக பயிற்றப்பட்ட முதலாம்தர ஆசிரியர் (TTI), கல்வி டிப்ளோமா - கல்வி நிருவாகசபை (SLEAS) பட்டதாரியாவார். 1948ம் ஆண்டிலிருந்து எழுத் துத்துறையில் ஈடுபட்டவர். இது வரை 3000க்கும் மேற்பட்ட கவிதைகள், நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகள், இருநூற்றுக்க மேற்பட்ட கட்டுரைகள் என்பன வெளியிட் டுள்ளார். இவை ஈழத்துப் பத்திரிகைகளில் மாத்திரமல்ல, தமிழகத்தின் பல்வேறு சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. 1953லிருந்து புனித மிக்கேல் கல்லூரியில் இசை ஆசிரியராகவும், மட்டக்களப்பு இசைக்கலை யின் ஆசிரிய ஆலோசகராவும், மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமை புரிந்தவர். 15க்கு மேற்பட்ட மேடை நாடகங்களும், வானொலி தொடர் நாடகங்கள் பலவும் ஒலிபரப்பாகியுள்ளன. வானொலிச் சித்திரங்கள், வானொலிக் கருத்தரங்குகள், வானொலிப் பேச சுக்கள் பலவும் ஒலிபரப்பப்பட் டுள்ளன. வீரகேசரியில் சித்திரக் காவியத் தொடர்கள் பல பிரசுரமாகியுள்ளன. நாவல்கள் நான்கு எழுதியுள்ளார். இவ ருடைய 'வழி தவறிய வண்டு' என்ற கவிதைக்கு சென்னை எழுத்தாளர் சங்கம் 1961லும் 'இழப்பு' என்ற கவிதை ஆனந்த விகடன் போட்டிக் கவி தையில் பரிசுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'கதம்பம்' பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியிலும் பரிசினை வென்றுள்ளார். நாடகங்கள் பலவும் பரிசு பெற்றுள்ளன. 'சிவசக்தி நர்த்தனம்' என்ற கண்ணாடி ஓவியமும் பரிசு பெற்றள்ளது. 'அணில் வால்' என்ற சிறுவர் கதை, கலாசார அமைச்சின் பரிசினைப் பெற்றுள்ளது. இதுவரை வெளிவந்த நூல்களாக 'நீரேர மகளீர்', 'கொய்யாக்கனிகள்', 'எல்லாம் எங்கள் தாயகம்' எனும் காவியங்களும், 'நெஞ்சம் மலராதே' (இசைப்பா), 'அழகு முல்லை' (குழந்தைக் கவிதை), 'மஞ்சு நீ மழைமுகில் அல்ல' (நாவல்), 'முத்தொழாயிரம்' (இலக்கிய நாடகம்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். மொழிபெயர்ப்புக் காவிய ஆக்கமாக 'கலே வலா' பின்லாந்தின் தேசியக் கருவூலம் சுமார் 23,000 அடிகள் கொண்டது. (கெல்சிய்கி பல்கலைக்கழகத்தில் 1994ல் வெளிவந்தது) இவைகள் உலகளா விய இலக்கிய ஆக்கங்களாகக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் அருளப்பு அந்தோனிமுத்து (கவிஞர் முத்தழகு)

பிறந்த திகதி : 20.11.1933

துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பைச் சேர்ந்த கவிஞர் அமரர் மட்டுநகர் முத்தழகு ஓர் பன்முகப்பட்ட இலக்கியவாதியாவார். பல வருட காலமாக இலக்கிய உலகில் முத்திரை பதித்து வந்தவர். கவிஞர் மட்டுநகர் முத்தழகு சிறந்த கவிஞர், பேச்சாளர், கட்டுரையாளர், நாடக நடிகர், சிறுகதை எழுத்தாளர், சமூக சேவையாளர், சித்த வைத்தியர். இவர் உலக கவிஞர்கள் மகாநாட்டில் (தமிழ்நாடு) 'தமிழ் அருவி'ப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலாபூசணம் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மட்/மண்முனை வடக்கு கலாசார பேரவையின் முன்னாள் நிர்வாக உறுப்பினராகவும், பல்வேறு சமூக அமைப்புக்களின் உறுப்பினராகவும் இருந்துள்ளார். இவரது 'தாகமாய் இருக்கிறேன்' என்ற சிறுகதைத் தொகுதி இலக்கிய உலகில் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.



பெயர் : வல்லிபுரம் மீனாம்பிகை

பிறந்த திகதி : 12.03.1947

துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பு மண்டூரைப் பிறப்பிடமாகவும், இல.24/4, புளியடிலேன் மூன்றாம் குறுக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மீனாம்பிகை 'மண்டூர் மீனா' என்ற பெயரில் இலக்கிய உலகில இயங்கி வருகின்றார். ஓய்வுபெற்ற ஆசிரியையான இவர் இதுவரை 35க்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சிறுகதை, கவிதை, நாடகம் போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்ட இவரது சிறுகதைகளின் தொகுப்பு 'திருப்பம்' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. இவரது முதல் படைப்பு வேலனை வீரசிங்கத்தால் வெளியிடப்பட்ட 'தாய்நாடு' பத்திரிகையில் வெளிவந்த 'புதுமை' என்ற கவிதையாகும். தொடர்ந்து 'ஜோதி', 'தினகரன்' போன்ற பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. 1965லிருந்து இன்றுவரை எழுத்துத் துறையில் ஈடுபட்டுவரும் மண்டூர் மீனா தனது ஆசிரியர் தொழிலின் போது பல மாணவர்கள் இலக்கியப் போட்டிகளில் பரிசுகள் பெற வழிகாட்டியாக இருந்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர் கவிஞர் சுபத்திரன்**

**பிறந்த திகதி : 16.04.1935**

**துறை : ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பு நல்லையா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர் க.தங்கவடிவேல் கவிஞர் சுபத்திரன் என அறியப்பட்டவர். 1960களின் முற்பகுதியில் தன்னை ஓர் முற்போக்கு கவிஞராக அடையாளப்படுத்திய சுபத்திரன் 1979ல் அகாலமரணம் அடையும் வரை தான் ஏற்றுக்கொண்ட கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்தார். இன்றைய இலக்கிய வகைகளுக்குள் 'தலித் இலக்கியம்' மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் கவிஞர் சுபத்திரன் 1960களிலேயே சாதிய எதிர்ப்புக் கவிதைகள் எழுதிய ஈழத்தின் முன்னோடி தலித் இலக்கியவாதி எனலாம்.

1960களின் பிற்பகுதியில் வடக்கு மாகாணத்தில் (யாழ்ப்பாணத்தில்) சாதிக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் தீவிரமடைந்தது. 1969ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மாநாட்டில்" வைத்து அவரது "இரத்தக்கடன்" எனும் கவிதைத் தொகுதி வெளியிடப்பெற்றது. சுபத்திரன் உயர் வேளாளர் குடியைச் சேர்ந்தவர். அவர் தான் சார்ந்த கம்யூனிஸ்ட் கட்சியில் தான் ஏற்றுக்கொண்ட கொள்கைகளுக்கும் தனது ஆத்ம திருப்திக்குமாக அவர் தாழ்த்தப்பட்ட மக்களில் ஒருவனாக நின்று கவனித்தார். இதற்கு சுபத்திரன் ஏற்றுக்கொண்ட மாக்ஸிச லெனினிச சித்தாந்தமே காரணமாகும்.

இலங்கை சிரேஷ்ட கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்து பயிற்றப்பட்ட ஆசிரியராக தொழில்புரிந்த கவிஞர் சுபத்திரன் நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகள் எழுதியிருந்தாலும், இதுவரை அவரது முழுமையான தொகுப்பு வராதது மட்டக்களப்பு கவிதை உலகிற்கு பெரும் இழப்பே. அவரது மறைவிற்குப் பின்னர் பூவரசுகள் வெளியிட்ட 'சுபத்திரன் கவிதைகள்' ஓரளவிற்கு அவரது கவிதைகளைத் தாங்கி வந்தது. பேராசிரியர் சி.மௌனகுரு வெளியிட்ட சுபத்திரன் கவிதைத் தொகுதியுமாக இதுவரை இவரது மூன்று தொகுதிகள் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. க.பொ.த.உயர்தர தமிழ் புதிய பாடத்திட்டத்தில் இவரது கவிதை இடம்பிடித்திருப்பதும் சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.பொன்னுச்சாமி தவநாயகம்
பிறந்த திகதி : 28.11.1935
துறை : ஆக்க இலக்கியம்

சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி தவநாயகம் 1950களில் இருந்து எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றார். இவர் கவிதை, கட்டுரை, இசை, நூலாய்வு, நாட்டார் இலக்கியம், நாட்டுக்கூத்து ஆகிய துறைகளில் மிகவும் ஈடுபாடுடையவர்.


பொன்.தவநாயகம், பொன்-தவம், பிரபாதரன், நாக பொன்தவம் போன்ற புனைப் பெயர்களில் எழுதிவரும் பொ.தவநாயகம் இலங்கை அதிபர் சேவையின் முதலாந்தர அதிபராவார். ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக கடமையாற்றியுள்ள இவர், பழகுதமிழ்பாவலர், நகைச்சுவை நாவலர், தத்துவக் கவிஞர் போன்ற பட்டங்களைப் பெற்றுள்ளார்.

சுதந்திரன், வீரகேசரி, தினபதி போன்ற பத்திரிகைகளில் இவரது ஆரம்பகால கவிதைகள் பிரசுரமாகியுள்ளன. அதேபோன்று பல சமய விழாக்களில் இவர் எழுதி இசையமைத்த பல பாடல்கள் பாடப்பட்டுள்ளன. 2009ம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் விக்டோரிய மாநிலத்து தமிழ்ச் சங்கம் நடாத்திய முத்தமிழ் விழாவின் உலகளாவிய ரீதியிலான கவிதைப் போட்டியில் இவரது கவிதை சான்றிதழும் பணப்பரிசும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

கவிஞர் கண்ணதாசனின் தத்துவக் கருத்துக்களும், கவிஞர் காசி ஆனந்தனின் உணர்ச்சிப் பிரவாகமும், கவிஞர் பாண்டியூரானின் மண்வளப் பாடல்களும் தன்னை ஒரு கவிஞனாக மாற்றியது எனக் குறிப்பிடும் தவநாயகத்தின் கவிதைத் தொகுதி விரைவில் வெளிவரவுள்ளது. இவரது பொன்மொழித் திரட்டு, பக்திப் பாடல் திரட்டு என்பன அச்சிலே உள்ள இவரது மற்றுமிரு நூல்களாகும். இவர் கவிதைத் துறைக்கு ஆற்றிய சேவைக்காக மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையால் தேனகக் கலைச்சுடர் விருது 2010 இல் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : அமரர் கவிஞர் அற்புதராஜா குரூஸ்

**பிறந்த திகதி** : 14.06.1936

**துறை** : ஆக்க இலக்கியம்

ஊர்காவற்துறையில் பிறந்த இவர், சிறு வயது முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழ்ந்து கலைஞராகவும், எழுத்தாளராகவும், மேடைப் பேச்சாளராகவும் பரிண மித்து ஒரு காலத்தில் அனைவராலும் அறியப்பட்டு கடந்த 08.09.1996 காலமா னார். இளவயது முதல் இவர் சிறப்பாகக் கவிதை எழுதியுள்ளார். சமூக அவ லங்களையும், மானிட உணர்வுகளையும் எடுத்த மாத்திரத்தில் கவிதையாக ஆக்கு வதில் இவர் தனிச் சிறப்பு வாய்ந்தவர். காகிதாலையில் பணிபுரிந்த காலத்தில் காகிதாலையின் "எமது செய்திகள்" என்னும் சஞ்சிகையிலும் மற்றும் பிற தினசரிப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பல கவிதைகளையும் கட்டுரை களையும் எழுதியுள்ளார். பல கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார். பல கவிதைகளை இவர் எழுதியுள்ள போதிலும் நூலாக வெளிவராமை குறை யாகவுள்ளது.

பாடல்கள் இயற்றுவதும் இவரது தனித்திறமையாகும். பல சமூக சீர்தி ருத்தப் பாடல்களை எழுதியுள்ளார். மட்டக்களப்புப் பற்றிப் பல சிறந்த பாடல் கள் எழுதியுள்ளார். குறிப்பாக "மட்டுநகர் எங்கள் தாயகமே" எனும் பாடல் குறிப் பிடத்தக்கதாகும். இலக்கியச் சுவை ததும்பம் மேடைகளில் பேசுவதில் இவர் சிறப்புத் திறமை கொண்டவர். இலக்கியங்களை விரிவாகவும் சுவை சொட்டவும் பேசும் இவர், ஒவ்வொரு சொற்பொழிவிலும் கேட்போர் பயன்பெறுமாறு நீதி உரைத்துச் சொல்வார். தான் பேசும் போதிலெல்லாம் சிறிய கதை ஒன்றைக் கூறிப் பேசுவது இவரது தனித்துவமாகும். இதனால் இவர் "குட்டிக்கதை குரூஸ்" எனப் பலராலும் அழைக்கப்பட்டார். இதுவே இவரது புனைப்பெயராகவும் அமைந்தது. "திரைப்படப் பாடல்களின் திருப்புமுனை" என்னும் தலைப்பில் கவியரசு கண்ணதாசனை மையப்படுத்தி இவர் பேசிய மேடைப் பேச்சு மட்டக் களப்பு வாசகர் வட்டத்தினரால் புத்தகமாகப் பதிப்பிக்கப்பட்டது இவரது திறமைக்குக் குறிப்பிடத்தக்கதாகும். நகைச்சுவையாகவும், சிந்திக்கத் தூண்டு மாறும் சிறுகதை எழுதுவது இவரது தனிச் சிறப்பு. பல சிறுகதைகளை இவர் எழுதியுள்ளார். சிறுவயது முதல் ஒரு சிறந்த நாடகக் கலைஞராகத் திகழ்ந்துள் ளார். பல சமூக நாடகங்களில் நடித்துள்ளார். பல நாடகங்களை எழுதி இயக்கி யுமுள்ளார். இவர் எழுதிய "எங்கடா பாப்பம்!" எனும் சமூக நாடகம் குறிப்பிடத் தக்கதாகும். இலக்கியம், சமூகம் மற்றும் அரசியல் சார்ந்த விடயங்களைக் கட் டுரைகளாக எழுதுவதில் கைதேர்ந்தவராக வாழ்ந்து வந்த இவர், தாம் வாழ்ந்த காலத்தில் பல கட்டுரைகளை எழுதி முக்கிய பல விடயங்களை வெளிக் கொணர்ந்துள்ளார். விமர்சன ரீதியாக எழுதுவது இவரது தனிச் சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : கவிஞர் காசி ஆனந்தன்
பிறந்த திகதி : 04.04.1938
துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பின் மிக முக்கிய கவிஞர்களில் ஒருவர். கவிஞர் காசி ஆனந்தன். தனது பத்து வயதில் மகாத்மா காந்தியைப் பற்றிய கவிதை பாடியதைத் தொடர்ந்து இற்றைவரை அவர் இலக்கிய உலகில் தனது இருப்பை பேணிவருகின்றார். அக்கால கட்டத்தில் தமிழரசுக் கட்சியில் இணைந்து அவர் மேடையில் பேசிய பேச்சுக்களும், முழங்கிய கவிதைகளும் இன்னும் தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதனைத் தொடர்ந்து தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் கூர்ப்படைந்திருந்த வேளை அவர் தன்னையும் போராட்ட வரலாற்றில் இணைத்துக் கொண்டிருந்தார். அவரது உணர்ச்சிகரமான கவிதைகளைப் பார்த்த தமிழறிஞர் ஆதித்தனார் வழங்கிய. "உணர்ச்சிக் கவிஞர்" விருது அவருக்கு மிகப் பொருத்தமாகவே அமைந்தது. தற்போது தமிழ் நாட்டில் வசித்துவரும் கவிஞரின் பல நூல்கள் வெளிவந்துள்ளன. 'காசி ஆனந்தன் கவிதைகள் தொகுப்பு 1, தொகுப்பு 2', 'காசி ஆனந்தன் நறுக்குகள்', 'படகோட்டியின் பாடல் (கவிதை)', 'தமிழா உன்னைத்தான்', 'தமிழன் கனவு', 'காசி ஆனந்தன் கதைகள்', 'தம்பி ஜெயத்திற்கு', 'தமிழனா தமிங்கிலனா?' என்பன தமிழிலும் Kasiananthan Fables, Kasiananthan Point Black போன்ற புத்தகங்கள் ஆங்கிலத் திலும் வெளிவந்துள்ளது. கவிஞரின் கவியாளுமையைப் பாராட்டி உலகத் தமிழர் பேரவை வழங்கிய விருதும் "உலகப் பெரும் தலைவர்" என்ற விருது அவருக்கு கிடைத்திருந்தாலும் "உணர்ச்சி கவிஞர்" என்ற விருதே அவருக்கு நிலைத்து நிற்பதாய் அமைந்துள்ளது. தமிழ கத்தில் தற்போது வாழ்ந்துவரும் உணர்ச்சிக் கவிஞர் இன்னும் எழுதிக் கொண்டு தான் இருக்கின்றார். அவர் அண்மையில் வெளியிட்ட காசி ஆனந்தன் கதைகள் பல அற்புதமான கருத்துக்களைத் தாங்கிய குட்டிக்கதைகள் அடங்கிய தொகுப்பாகும். மட்டக்களப்பின் தமிழ்க் கவிதை வரலாற்றில் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுக்கும் ஒரு முக்கிய இடம் உண்டு என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர் திமிலை மகாலிங்கம்**
**பிறந்த திகதி : 29.04.1938**
**துறை : ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பு திமிலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் திமிலை மகாலிங்கம் ஓய்வுபெற்ற ஒரு கிராம உத்தியோகத்தராவார். கதை, கவிதை, கட்டுரை, நாடகம் ஆகிய துறைகளில் பொன்விழா கொண்டாடும் அளவிற்கு அனுபவம் கொண்டவர். இதுவரை கனிய முது (சிறுவர் கவித்தொகுதி), மோதல் (சிறுகதைத் தொகுதி), பாதை மாறுகிறது (நாவல்), புள்ளிப் புள்ளிமானே (குழந்தை இலக்கியம்), சிறுவருக்கு விபுலானந்தர், அவனுக்குத்தான் தெரியும் (நாவல்), சிறு வருக்கு நாவலர், குருவிக்குஞ்சுகள், குழந்தையின் குரல், நம்நாட்டுப் பழமொழிகள் என 10 புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இதனைவிட தினக்கதிர் வாரமலரில் வெளிவந்த "காதலேன் காதலா!", வீரகேசரி தினசரியில் வந்த "நிலவுக்கு ஒருநாள் ஓய்வுண்டு", மித்திரன் தின சரியில் வந்த "ஊஞ்சல்" போன்ற தொடர் கதைகளும் எழுதியுள்ளார்.

ஐம்பது ஆண்டுகாலம் எழுத்தையே சுவாசமாகக் கொண்ட கவி ஞர். திமிலை மகாலிங்கம் இதுவரை கலாநிதி தேவநேசன் நேசையா அவர்களின் நற்சான்றிதழ் மற்றும் இந்து கலாசார அமைச்சின் "தமிழ்ப்பணி", "கலாபூஷணம்" ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையின் நீண்டகால உறுப்பினராக இருந்து பேரவையின் "தேனகம்" மலர் வெளியீட்டுக்குப் பெரிதும் பங்காற்றியுள்ளார். கவிதைத் துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப் புக்காக கலாசாரப் பேரவையினால் பொன்னாடை போர்த்தி தேனக கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் கவிஞர் திமிலைத்துமிலன், கவிஞர் திமிலைக்கண்ணன் ஆகியோரின் சகோ தரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.ஆறுமுகம் தங்கத்துரை
பிறந்த திகதி : 10.08.1938
துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பைச் சேர்ந்த மூத்த படைப்பாளியான இவர், 'தங்கன்' என்ற புனைப்பெயரில் பல படைப்புக்களைத் தந்துள்ளார்.

- மாணவப் பருவத்திலே கலை, இலக்கியத்தில் ஆர்வமான இவர், 1954ம் ஆண்டிலேயே கல்லூரிப் பத்திரிகையான 'மழலை'யை ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்தியவர். பின்னர் நெடுங்காலம் 'ஈழச்சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடாத்தியதும் குறிப்பிடத்தக்கது.
- மாணவப் பருவத்திலிருந்து அகில இலங்கை ரீதியாகவும் பிரதேச ரீதியாகவும் பரிசுகளைப் பெற்ற இவர், 1963ம் ஆண்டு 'கல்கி' பத்திரிகை ஈழத்தவர்களுக்காக நடாத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசையும் 1979ல் களனிப் பல்கலைக்கழகம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசும் பெற்றுள்ளார்.
- கலை இலக்கியத்துறையில் 42 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த இவர், இதுவரை 75க்கு மேற்பட்ட சிறுகதைகளுக்கும் மூன்று நாவல்களுக்கும் பல ஆய்வுக் கட்டுரைகளுக்கும் சொந்தக்காரர்.
- இவர் வணிக சிறப்புப் பட்டதாரி. கூட்டுறவுப் பரிசோதகராகவும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர், 1983-90 காலகட்டத்தில் பிரசைகள் குழுச் செயலாளராகவும் 'சுத்தானந்தா' இந்துக் கலை கலாசார அபிவிருத்திக் கழகத்தின் தலைவராகவும் செயலாற்றி பல சமூகப் பணியாற்றியதுடன் இன்றும் 'கலைக்கழக'த் தலைவராகவும் விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **பெயர்** | **: அமரர் கவிஞர் திமிலைக்கண்ணன்** |
| **பிறந்த திகதி** | **: 20.12.1939** |
| **துறை** | **: ஆக்க இலக்கியம்** |

மட்டக்களப்பு திமிலைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட மும்மூர்த்திகள் திமிலைத்துமிலன், திமிலைமகாலிங்கம் வரிசையில் அவர்களது மூன்றாவது சகோதரரே கவிஞர் திமிலைக் கண்ணன். இவர்களை மட்டக்களப்பு கவிதை உலகு திமிலைச் சகோ தரர்கள் என்றே அழைக்கும். ஏரம்பமூர்த்தி என்ற இயற்பெயர் கொண்ட கவிஞர் திமிலைக்கண்ணன் சிறுவயதிலிருந்தே கவிதை பாடும் ஆற்ற லுமுடையவர்.

உழவுத் தொழிலை சிறுபராயம் முதல் மேற்கொண்ட இவர் ஏர் பூட்டி உழும் காலங்களில் இயற்கையாகவே கவிபாடி வந்தார். அவரது மூத்த சகோதரர் திமிலைத்துமிலனின் கவிதைகள் பத்திரிகைகளில் பிரசுரமானதைக் கண்டு தானும் கவிதைகளை பத்திரிகைகளுக்கு அனுப்பி வைத்தார். அவை பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கவே தொடர்ந்து எழுதினார்.

அவரது இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. 'நெஞ்சம் கனிந்தது (1971)' ஈழத்து திருச்செந்தூர் திருப்பதிகம் (1984). கவிதைத் துறையுடன் வைத்தியத் தொழிலையும் மேற்கொண்டு வந்த கவிஞர், யோகாசனப் பயிற்சிகளிலும் சிறந்து விளங்கினார். ஆயிரக்கணக்கான கவிதைகள், சித்த மருத்துவம் சார்ந்த கட்டுரைகள், சிறுகதைகள் என எழுதித் தள்ளினாலும் வறுமை காரணமாக அவை புத்தகமாக்கப்பட வில்லை. திமிலைதீவு ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயத்தில் பூசாரியாக இருந்த கவிஞர் 1990 காலப்பகுதியில் ஏற்பட்ட கலவரத்தில் காணாமல் போனது கவலைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.ஜோர்ச் சந்திரசேகரம்
பிறந்த திகதி : 1940
துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பைச் சேர்ந்த அமரர். ஜோர்ஜ் சந்திரசேகரம் ஓர் பன்முக ஆளுமை கொண்ட படைப்பாளி. 1968 இல் இருந்து 1997 வரை இலங்கை வானொலியின் ஒலிபரப்பாளராகக் கடமையாற்றி யுள்ளார். செய்தி வாசிப்பாளராக, நேர்முக வர்ணனையாளராக, அறி விப்பாளராக பல்வேறு வகைகளில் தனது திறமையை ஒலிபரப்புத் துறையில் வெளிக்காட்டியவர்.

இதனைவிட சிறந்த எழுத்துக்களால் சிறந்த நாடக ஆசிரியராக, நடிகராக, நூலாசிரியராக, சிறுகதை எழுத்தாளராக, ஓவியராக என்று பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர் 'ஜோர்ஜ் சந்திரசேகரன் சிறு கதைகள்' என்ற நூலுக்கு 1995ம் ஆண்டுக்கான சாகித்திய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

ஒலிபரப்புத்துறை, இலக்கியம், உலக நாடகம். என பரந்த அழ மான தேடல் நிறைந்தவராக காணப்பட்டார். ஒலிபரப்பாக இருந்தாலும், எழுத்தாக இருந்தாலும் இரண்டிலும் வார்த்தைகளை விரையம் செய் யக் கூடாது என்ற நோக்குடையவர்.

வானொலி அனுபங்களை சுவையுடனும், எளிமையாகவும் தனது நடையில் எடுத்துச் சொல்லும் "வானொலியும் நானும்" என்ற நூல் ஒன்றை வெளியிட்டு பலரது அபிமானத்தைப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.சந்தியாபிள்ளை அரியரத்தினம்
பிறந்த திகதி : 22.12.1941
துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பு வாகரையைப் பிறப்பிடமாகக் கொண்டதனால் 'வாகரைவாணன்' என்ற புனைப்பெயரைத் தாங்கியே அழைத்தனர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவர். வாகரைவாணன் பள்ளிப் பருவத்திலேயேயிருந்து எழுத் துத்துறையில் காலடி வைத்தவர். 'பற்றீசியின்' சஞ்சிகையின் ஆசிரிய ராகவும், 'சுதந்திரன்' பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், 'உதய சூரியனின்' ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.

1968ல் மட்டக்களப்பு வீரமாமுனிவர் முத்தமிழ் மன்ற நிறுவனக் காப்பாளராகவும், 1963ல் சிவானந்த வித்தியாலயத்தில் வெளியிடப்ப ட்ட கையெழுத்துப் பிரதியான அருவியின் ஆசிரியராகவும், புளியடிக் குடாப் பங்கிலிருந்து வெளியான 'அன்னையின் குரல்' ஆசிரியராக வும் கடமையாற்றி, 'போது' சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றி யுள்ளார். இதுவரை பல்துறைசார்ந்த இவரின் 28 நூல்கள் வெளிவந் துள்ளன. இவரது 'சின்னச்சின்ன பூக்கள்' இலங்கை அரசின் சாகித்திய விருது பெற்றதுடன் (1998ல்) 'பாலர் தமிழ்ப்பாட்டு', 'அருளாளர் அந் தோனியார்', 'கிறிஸ்து காவியம்' என்பன யாழ் இலக்கிய வட்ட முதற் பரிசையும் பெற்றுள்ளன. (94, 98களில்).

தமிழ்மொழியில் மாத்திரமல்லாமல் ஆங்கில மொழியிலும் பல ஆக்கங்களை வெளியிட்டுள்ளார். கவிதை, நாவல், சிறுகதை, ஆய்வு, நாடகம், விமர்சனம் எனப் பல்வேறு துறைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. மொழிபெயர்ப்புத் துறையிலும் இவர் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளதோடு, இலங்கை, இந்திய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.செல்லையா குணரத்தினம்**

**பிறந்த திகதி : 15.06.1942**

**துறை : ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பு மட்டிக்கழி என்னும் கிராமத்தினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பத்தில் கவிதைகளை எழுதினார். காலப்போக்கில் கவிதையோடு சேர்த்து சிறுகதைகள், நாவல்கள், நகைச்சுவைத் துணுக்கு கள், கட்டுரைகள் என்று நிறையவே எழுதி இளமைக் காலத்திலேயே நல்ல புகழையும், செல்வாக்கையும் குணரத்தினம் அவர்கள் பெற்றுக் கொண்டார். உள்நாட்டில் எழுதிப் புகழ்பெற்ற இவர், வெளிநாட்டுப் பத்திரி கைகளுக்கும் எழுத வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அந்த நாட் களில் மிகவும் பிரபல்யம் பெற்று வெளிவந்த 'ராணி' சஞ்சிகைக்குச் சில குழந்தைக் கவிதைகளை எழுதி அனுப்பினார். இவைதவிர இலங்கை வானொலி, ரூபவாஹினி போன்றவற்றிலும் மெல்லிசைப் பாடல்கள், நாடகங்கள், உரைச் சித்திரங்கள் என்று எழுதியது மட்டுமல்லாமல் 'போட்டி நிகழ்ச்சிகள்' கவியரங்குகள் போன்றவற்றிலும் பங்கேற்று சிறப்பான இடத் தைப் பெற்றுக்கொண்டார். முஸ்லிம் காங்கிரஸ் மாத்தளை மாநாட்டில் இவ ரது கவிதைக்காகத் தங்கப்பதக்கம் முதற்பரிசாகக் கிடைத்தது. தமிழ்நாடு 'சுபமங்களா' சஞ்சிகையும் இலங்கைத் தேசிய கலையிலக்கியப் பேரவை யும் இணைந்து அகில இலங்கை ரீதியில் நடாத்திய குறுநாவல் போட்டி யில் ரூபா 10,000/- முதற் பரிசாகக் கிடைத்தது. பரிசுபெற்ற இவரது 'துன்ப அலைகள்' என்னும் குறுநாவல் சுபமங்களாவில் தொடர்ச்சியாக வெளி வந்தது குறிப்பிடத்தக்கது. இவைதவிர இந்திய இலங்கைக் கலைஞர்கள் சேர்ந்து நடித்து வெளிவந்த 'பாதை மாறிய பருவங்கள்' எனும் தமிழ்த் திரைப்படத்திலும் இவர் எழுதிய இரு பாடல்கள் வெளிவந்துள்ளன. இவரது ஆக்கங்கள் 'தெய்வ தரிசனம்' (நாவல்), 'நெஞ்சில் ஒரு மலர்' (கவிதை), 'இதயப்பூக்கள்' (கவிதை), 'விடிவுகள் அடிவானில்' (சிறுகதை), 'துன்ப அலைகள்' (குறுநாவல்), 'சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்' (குறுநாவல்), 'ஏழை நிலா' (குறுங்காவியம்), 'பக்திப்பாமாலை' (திருத்தலங்கள் பற்றிய சிந்துகள்), 'சுவாமி விபுலானந்தர் பாவியம்' (குறுங்காவியம்), 'ஒரு கிராமம் தலைநிமிர்கிறது' (நாவல்) மேற்படி தலைப்புக்களில் நூலாக வெளிவந்திருக் கின்றன. இவர் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'தினக்கதிர்', 'ஈழநாதம்' பத்திரிக்கைகளில் உதவி ஆசிரியர்களில் ஒருவராகக் கடமை புரிந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.கார்த்திகேசு சிவலிங்கம்

பிறந்த திகதி : 31.08.1943

துறை : ஆக்க இலக்கியம்

**த**னது 15 வயதிலிருந்தே கவிதைகள் எழுதத் தொடங்கிய இவர், மாணவனாக இருந்தபோது சிவானந்த வித்தியாலய கலைக்கழகத்தால் 1962 இல் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் 3ம் இடத்தைப் பெற்றார். இவர் எழுதிய பல கவிதைகள் இலங்கையில் வெளிவரும் பல நாளேடுகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இவர் இக்கவிதைகளைத் தொகுத்து 'முகம் காட்டும் முழுநிலா' என்னும் தொகுப்பினையும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

இவர் 07 நாடகங்களில் நடித்தும், 08 நாடகங்கள் எழுதியும், 03 நாடகங்களை நெறிப்படுத்தியும் மேடையேற்றியுமுள்ளார். பாடுதல், வரைதல் முதலிய கலைத் துறையிலும் கட்டுரை, சிறுகதை முதலிய எழுத்துத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர்.

இவரது கவிதை வெளியீட்டு விழாவில் சிறந்த கவிஞன் எனப் பாராட்டப்பட்டு பாலநதிக் கலாமன்றத்தினராலும், வாழைச்சேனை காகித ஆலை முன்னாள் ஊழியர் சங்கத்தினராலும் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் சிறந்த நாடக ஆசிரியர் எனப் பாராட்டப்பட்டு பழுகாமம் மக்களால் 1970ல் கௌரவிக்கப்பட்டார்.

மேலும் மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையினால் 2008ம் ஆண்டிற்கான கலைஞர் கௌரவிப்பில் கவிதைத் துறைக்கு இவர் ஆற்றிய பங்களிப்புக்காகப் பொன்னாடை போர்த்தி 'தேனகக் கலைச்சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.எஸ்.எஸ். ஜேசுதாஸ்**

**பிறந்த திகதி : 22.03.1945**

**துறை : ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பைச் சேர்ந்த எஸ்.எஸ். ஜேசுதாஸ் (மலர்வேந்தன்) கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இலக்கியத்துறையிலும், இசைத் துறையிலும் ஈடுபாடு கொண்டவராக சேவையாற்றி வருகின்றார். இலக் கியத்தின் மேல் இவர் கொண்ட அலாதி நேசிப்பு காரணமாக இலக்கிய முயற்சிகளையே தனது தொழிலாகக் கொண்டவர். மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் சமூகத் தொடர்பு துறையில் பணிபுரியும் இவர் ஆயர் இல்ல வெளியீடான 'தொண்டன்' கலை இலக்கிய கத்தோலிக்க சஞ்சி கையின் இணை ஆசிரியராக கடந்த 20 வருடங்களுக்கு மேல் செயற் பட்டு வருகின்றார். அண்மையில் தொண்டன் 40வது ஆண்டு மலரை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. இவர் வெகுஜனத் தொடர்புத்துறை யில் டிப்ளோமாப் பட்டமும் வானொலி நிகழ்ச்சித்துறையில் ஓராண்டு பயிற்சியும், கர்நாடக இசையில் ஐந்து ஆண்டுகள் பயிற்சியும் தேர்ச்சி யும் பெற்றுள்ளார். நூற்றுக்கணக்கான வானொலி பேச்சுக்கள், சித்தி ரங்கள், பாடல்கள் தயாரித்து ஒலிபரப்பியுள்ளார்.

'வெரித்தாஸ்" வானொலி சேவையில் பங்களிப்புச் செய்துவரும் இவர் "ரத்தத்தின் ரத்தமே" என்ற சினிமாப் படத்தில் பின்னணிப் பாட லும் பாடியுள்ளார். சர்வதேச உண்டா (Under விருது 1996) அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீட கலைமாமணிப் பட்டம் முதலிய விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றுள்ளார்.

மேலும் மண்முனை வடக்கு பிரதேச கலாசார பேரவையினால் பொன்னாடை போர்த்தி தேனகக் கலைச்சுடர் விருது வழங்கி கௌர விக்கப்பட்டுள்ளார். 2010ம் ஆண்டுக்கான கத்தோலிக்க எழுத்தாளர்க ளுக்கான சாகித்திய மண்டல பரிசையும் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு
பிறந்த ஆண்டு : 1947
துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பைச் சேர்ந்த சித்திரலேகா மௌனகுரு ஓர் பெண்ணியவாதியாவார். கொழும்புப் பல்கலைக்கழகப் பட்டதாரியான இவர், தனது பின்பட்டப்படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், சமூகக் கற்கை நிறுவகம் நெதர்லாந்திலும் நிறைவுசெய்தவர். தொடர்ந்து 1992 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை விரிவுரையாளராகவிருந்து தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகக் கடமைபுரியும் பேராசிரியை சித்திரலேகா அவர்கள், கவிதை கலை இலக்கிய விமர்சனம், மொழி பெயர்ப்பு போன்ற துறைகளில் ஆர்வமுடையவர். இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் இதுவரை பல நூல்களை வெளியிட்டுள்ளார். அதில் இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம் (இணையாசிரியர்) பாரதி - பெண்கள், காலம் கருத்து நிலை சொல்லாத சேதிகள் - பெண்களின் கவிதைகள் தொகுப்பு (பதிப்பாசிரியர்) உயிர்வெளி பெண்களின் காதல் கவிதைகள் (பதிப்பாசிரியர்), கவிதைகள் பேசட்டும் (பதிப்பாசிரியர்) பேரழிவுகளுக்கு பெண்கள் முகங்கொடுத்தல் - தென்னிந்திய அனுபவங்களும் சவால்களும் - தொகுப்பாசிரியர்.

மட்டக்களப்பு சூரியா பெண்கள் ஆய்வு வட்டத்தின் இயக்குனராகவும் பணிபுரியும் சித்திரலேகா மட்டக்கப்பின் புகழ்பெற்ற இலக்கிய விமர்சகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம்**

**பிறந்த திகதி : 13.09.1947**

**துறை : ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பைச் சேர்ந்த கொழும்பு பல்கலைக்கழக BA பட்டதாரியான இவர், ஓர் ஆக்க இலக்கியவாதியாவார். இவர் 1967ம் ஆண்டில் இலக்கிய எழுத்துக்களைத் தொடங்கி, 1967 இல் 'சிரித்திரன்' என்ற நகைச் சுவை ஏட்டில் 23 வருடகாலம் தொடர்ந்து எழுதினார். 'திக்கவயல்' என்ற புனைப்பெயரில் எழுதத் தொடங்கிய இவர் 'சிரித்திரன்' சஞ்சிகையில் மாத்திரம் ஐம்பதுக்கு மேற்பட்ட தத்துவக் கட்டுரைகளையும் சிரிகதைகளையும் எழுதியுள்ளார். 1984ம் ஆண்டில் 'வீரகேசரி' பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து ஒரு வருட காலமாக மக்கள் பிரச்சினை பற்றி நிறையவே எழுதியுள்ளார்.

1987ம் ஆண்டு ஒரு வருடம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு' புதினப் பத்திரிகையில் கடமையாற்றியுள்ளார். 1995ம் ஆண்டில் 'தினகரன்' பத்திரிகையில் இவரால் தொடராக எழுதப்பட்ட 'இலக்கியத்தில் சிரித்திரன் காலம்' இலக்கியவாதிகளிடையே ஓர் ஆய்வுக் கட்டுரையாக இன்றும் நோக்கப்படுகின்றது. 1993ம் ஆண்டில் மட்டக்களப்பில் இவரால் வெளியிடப்பட்ட 'சுவைத்திரள்' என்ற சஞ்சிகை இன்று வரை வெளிவருகின்றது. இவரால் எழுதப்பட்ட சில நூல்கள் வருமாறு:

1. தத்துவப்படகு (1984ம் ஆண்டில் திருச்சியில் வெளியிடப்பட்டது)
2. வரலாற்றில் தமிழும் தமிழனும்
3. சிந்தனைப் போராளி சிவஞானசுந்தரம்
4. தமிழன் நினைவு கவிதைத் தொகுதி
5. மட்டக்களப்பில் கண்ணதாசன்
6. நாட்டுக்கருடன் பதில்கள்
7. மார்க்சீயம் வரலாறு கண்ணோட்டம்
8. சிந்தனையைக் கிளறிய சிரித்திரன் மகுடி

இவரது கலை, இலக்கிய சேவையினைப் பாராட்டி ஏற்கனவே 'இலக்கியச் சுடர்' என்ற பட்டம் மத்திய மாகாண சபைக் கல்வி அமைச்சரால் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **அமரர் கவிஞர் சாருமதி**

**பிறந்த திகதி** : **26.10.1947**

**துறை** : **ஆக்க இலக்கியம்**

**க.**யோகநாதன் எனும் இயற்பெயரைக் கொண்ட கவிஞர் சாருமதி, யாழ்ப்பாணம் கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பை தனது நிரந்தரமான வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து இங்கேயே 28.09.1998 இல் காலமானார்.

நா.சண்முகதாசனின் கம்யூனிச இயக்க அணியினரோடு இணைந்து தனது அரசியல் செயற்பாட்டை கிழக்கில் மேற்கொண்ட ஒருவர். வடக்கிலிருந்து வெளிவரத்தொடங்கிய 'வசந்தம்' எனும் சஞ்சிகை யோடு சாருமதியின் இலக்கியப் பிரவேசம் ஆரம்பித்தது. 1960களின் இறுதிப் பகுதியில் கீழைக்காற்று இயக்கத்துடன் சாருமதி இணைந்து கொள்கிறார்.

உழைக்கும் மக்களின் அடிப்படைகளைப் பண்பாட்டுத் தளத்தில் முன்னெடுக்கும் மேலும் ஒரு முயற்சியாய் 1975ல் ஓட்டமாவடி அஹமட்போன்றோரோடு இணைந்து 'பாட்டாளிப் பாவலர்' எனும் அமைப்பைத் தோற்றுவித்துச் செயற்பட்டார். 90களுக்குப் பிறகு 'பூவர சுகள்' இலக்கிய அமைப்பைத் தாபித்து பல்வேறு இலக்கிய நிகழ்வு களை நடாத்தியதுடன் 'பூவரசு' எனும் சஞ்சிகையையும் சிலகாலம் நடாத்தினார். இதற்கு முன்னர், 'வயல்' எனும் சஞ்சிகையையும் அவர் பல இதழ்கள் வரை வெளியிட்டார். மேலும் பூவரசு வெளியீடாக சுபத்திரன் கவிதையையும் இவர் வெளியிட்டார்.

பல நூற்றுக்கணக்கான கவிதைகளைப் பத்திரிகை, சஞ்சிகை களிலும், கையெழுத்துப் பிரதி வடிவிலும் எழுதிய சாருமதியின் 100 கவிதைகளை உள்ளடக்கிய கவிதைத் தொகுப்பு 'அறியப்படாத மூங்கில் சோலை' எனும் பெயரில் நந்தலாலா வெளியீடாக வெளி வந்துள்ளது. ஈழத்தின் இடதுசாரிக் கவிஞர்களுள் ஒருவராக சாருமதி அடையாளங்காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.அன்ரனி சத்தியசீலன் பாய்வா
பிறந்த திகதி : 27.10.1948
துறை : ஆக்க இலக்கியம்

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மூதூர் பிரதேசத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.அ.ச.பாய்வா மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ளார். இவர் கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்புத் துறைகளில் ஈடுபாடு கொண்டுள்ளதுடன் சாஸ்திரிய, மேற்கத்திய இசையிலும் புலமைபெற்றவர். 1996ம் ஆண்டில் கவிதைக்கான 'சாஹித்திய கலாபரிசாதினி' விருது பெற்றுள்ள இவர் தேசிய மரபுரிமைகள் கலாசார அமைச்சு அரச ஊழியர்களுக்கிடையே நடாத்திய போட்டிகளில் 2005ம், 2008ம் ஆண்டுகளில் சிறுகதைப் பிரிவில் முறையே இரண்டாம், முதலாம் இடங்களையும் 2007, 2008ம் ஆண்டுகளில் கவிதை ஆக்கத்திற்காக ஆறுதற் பரிசையும் பெற்றுள்ளார்.

2005ம் ஆண்டு வீரகேசரி வாரவெளியீடு தனது பவளவிழாவினையொட்டி நடாத்திய சிறுகதைப் போட்டியில் 2ம் இடத்தைப் பெற்றுள்ள இவர், தனது 'ஆத்ம விசாரம்' என்ற சிறுகதைத் தொகுப்புக்காக 2008ம் ஆண்டில் சாகித்திய விருது பெற்றதும், மட்டக்களப்பு எழுத்தாளர் மையத்தின் 'தமிழியல் சிறப்பு விருது' பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை பல இலக்கியப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றுள்ள அ.ச.பாய்வா இசைத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். பல இசை நிகழ்வுகளில் இசை வழங்கியுள்ள இவர், ஒரு சிறந்த இசையமைப்பாளரும், பாடலாசிரியருமாவார். எழுத்தில் புதிய எல்லைகளைத் தொடும் இவர் தனது படைப்புக்களை அ.ச.பாய்வா 'செண்பகக் குழல் வாய் மொழி' போன்ற புனைப் பெயர்களில் எழுதி வருகின்றார். மண்முனை வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையின் 'தேனகம்' கலாசார கீதத்தை எழுதி இசையமைத்தவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.அசோகாம்பிகை யோகராஜா
பிறந்த திகதி : 02.03.1949
துறை : ஆக்க இலக்கியம்

கல்லடியில் வதியும் இவர், மட்/சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார்.

1966ம் ஆண்டிலிருந்து சிறுகதையிலேயே கூடிய ஆர்வம் செலுத்துபவர்.

இவரது சிறுகதைகளில் பெண் விடுதலையும், மண் வாசனையும் இழையோடுவது சிறப்பம்சமாகும்.

1976ம் ஆண்டில் வெளிவந்த 'கொன்றைப் பூக்கள்' சிறுகதைத் தொகுதி சாகித்திய விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

'பயணங்கள் தொடரும்' நாவல் வடக்குக் கிழக்கு மாகாண சாகித்திய விருதினைப் பெற்றது. 'சிறகொடிந்த பறவைகள்' சிறுகதைத் தொகுப்பு இவரது மூன்றாவது நூலாகும்.

இவை தவிர கவிதைகள், மெல்லிசைப் பாடல்கள், நாடகம், வில்லுப்பாட்டு ஆகியவற்றையும் படைத்துள்ளார்.

பல இலக்கியப் படைப்புக்களுக்கு பரிசில்கள் பெற்றுள்ள இவர் ஆக்க இலக்கியத்திற்காக மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசார பேரவையினால் பொன்னாடை போர்த்தி 'தேனகம் கலைச் சுடர்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர்.வி.ஆனந்தன்

பிறந்த திகதி : 08.04.1949

துறை : ஆக்க இலக்கியம்

தன் எழுத்துக்கும், வாழ்வுக்குமிடையே போலித்தன்மைகளை இழந்து உண்மையாக வாழ்ந்த ஒரு மனிதன் அமரர் வீ.ஆனந்தன். சம்மாந்துறையை பிறப்பிடமாகவும். மட்டக்களப்பு பார் வீதி, சீலாமுனையை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்தவர். தனது இறுதிக் காலத்தில் தபால் தரப்பகுப்பு உத்தியோகத்தராக கடமைபுரிந்த அமரர். ஆனந்தன் மட்டக்களப்பு இலக்கியத்துடன் பின்னிப் பிணைந்தவர். மலையாள மொழியில் அவருக்கிருந்த புலமை காரணமாக அவர் படித்த தரமான மலையாள இலக்கியங்களை தமிழிற்கு மொழிமாற்றம் செய்து வைத்தார். தமிழில் பேசக்கூடிய பத்தி எழுத்தாளராகவும் ஆனந்தன் திகழ்ந்தார். ஆரம்பத்தில் கவிதைகள் மூலம் இலக்கிய உலகில் காலடியெடுத்து வைத்த ஆனந்தன், மொழிபெயர்ப்பு, பத்தி முத்துக்கள் என தனது இலக்கியப் பணியை தொடர்ந்தார். மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராக திகழ்ந்தார். மேலும் மட்டக்களப்பு "தரிசனம்" விழிப்புலனற்ற பாடசாலையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக திகழ்ந்தவர். விருப்புவெறுப்பற்ற முறையில் இலக்கிய உலகில் இவர் கையாண்ட விமர்சனங்கள் இவருக்கு அமோக ஆதரவையும் அதேவேளை எதிர்ப்புக்களையும் சம்பாதித்துக் கொடுத்தது. ஆனாலும் அவர் இறுதிவரை தனது கொள்கையில் தளராத நம்பிக்கை வைத்திருந்தார். மட்டக்களப்பின் பல இலக்கிய ஜாம்பவான்கள் என சொல்லிக் கொள்பவர்களின் ஆளுமைகள் பற்றி விமர்சன நோக்கு ஆனந்தனிடம் இருந்தது. ஓர் உண்மையான மனிதனாக வாழ்ந்த ஆனந்தன். தனது மரணத்தின் மூலமும் அதனை நிருபித்தார். மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த "படி", "களம்" போன்ற சிற்றிலக்கிய இதழ்களில் மோசேயின் டயரி, என்னும் பகுதியில் ஆனந்தன் "மோசே" என்ற புனை பெயரிலும், களம் இதழில் "பெட்டகம்" எனும் பெயரில் மகாதேவனுடன் இணைந்து 'ராகுகேது' எனும் புனை பெயரிலும் பல பத்தி எழுத்துக்களை எழுதியுள்ளார். ஆனந்தனின் மறைவிற்கு பின்னர் அவரது மூன்று நூல்கள் வெளியிடப்பட்டது. மட்டக்களப்பு வாசகர் வட்டம் "ஆனந்தன் கவிதை" என அவரது கவிதைகளையும் கல்முனை வியூகம் வெளியீட்டதும் "துளிர்" எனும் பெயரில் அவரது பத்தி எழுத்துக்களையும் மட்டக்களப்பு 'மறுகா வெளியீட்டகம்' அவரது மொழிபெயர்ப்பு சிறுகதைகளையும் (அலிபாபாவின் மரணம்) வெளியிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.செ.யோகராசா

பிறந்த திகதி : 17.12.1949

துறை : ஆக்க இலக்கியம்

யாழகத்தைப் பிறப்பிடமாகவும், மலையகத்தை புகுந்தகமாகவும் தேனகமாம் மட்டக்களப்பை வாழ்விடமாகவும் கொண்ட கலாநிதி. செ.யோகராசா தனது உயர்தர வகுப்பில் இருந்தே கவிதை, சிறுகதை என எழுதி வருபவர். தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் துறைப் பேராசிரியராக கடமைபுரியும் செ.யோ. இதுவரை 200க்கு மேற்பட்ட கட்டுரை எழுதியுள்ளார். கருணையோகன் என்ற புனை பெயரில் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவரது பல நூல்கள் அரச விருதுகள் பெற்றுள்ளன. அவற்றுள்

1. ஈழத்து நவீனகவிதை புதிய உள்ளடக்கங்கள் புதிய தரவுகள், புதிய போக்குகள் (அரச இலக்கிய விருது - 2007)
2. ஈழத்து ஆளுமைகள் வாழ்வும் வகிபாகமும் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (மாகாணசபை இலக்கிய விருது - 2007, இலக்கிய பேரவை விருது - 2007)
3. ஈழத்து தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும் (மாகாண சபை இலக்கிய விருது - 2008)

இதனைவிட இவரது இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் - பாத்திரங்கள் - 2000) ஈழத்து இலக்கிய தோட்டம் ஈழத்து நவீன இலக்கியம் (2002) ஈழத்து இலக்கியமும் இதழியலும் (2007) என்பன அச்சில் வெளிவந்த நூல்களாகும். இவர் பதிப்பித்த நூல்களில் "மாற்று நோக்கில் சிலகருத்துக்களும் நிகழ்வுகளும் (2004) அசன்பே சரித்திரம் (2008) என்பனவும் தொகுப்பு நூல்களான தமிழாராய்ச்சியின் வளர்ச்சியும் வரலாறும் (1996) இலங்கை வாய்மொழிப் பாடல்மரபு (2002) சிறுகதைப் பயிற்சிப் பட்டறைக்காக தேர்ந்தெடுத்த சிறுகதைகள் (2002) அறிவியல் சிறுவர் பாடல்கள் (2003) ஈழத்து சிறுவர் பாடல் களஞ்சியம் (2007) சிறுவர் இசைக் களஞ்சியம் (2009) புதுத்தளிர் நூறு (2004) என்பனவும் இதனைவிட பல சிறு பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளார். அதில் சுவாமி விபுலானந்தரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும் (1992) ஈழத்து தமிழ் பாடல்கள் ஆய்வுகள் ஒரு கண்ணோட்டம் (2000) என்பன முக்கியமான படைப்பாகும். மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சிப் போக்குடன் ஒன்றித்திருத்தம் செ. யோகராசாவின் மூச்சே. இலக்கியமாகும் என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.த.கோபாலகிருஷ்ணன்

பிறந்த திகதி : 13.12.1950

துறை : ஆக்க இலக்கியம்

கல்முனையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வதிவிடமாக வும் கொண்ட த.கோபாலகிருஷ்ணன் தற்போது கிழக்கு மாகாண சபை பாலர் பாடசாலைப் பணியகத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாற்றுப் பணிப்பாளராகப் பணிபுரிகின்றார். 1969 இல் 'நற்கவிதை வேண்டும்' என்ற தலைப்பில் கவிதை எழுதியதன் மூலம் கவிதையுலகில் இன்றுவரை பல கவிதைகளை எழுதி வருகின்றார். 'செங்கதிரோன்' என்ற புனை பெயரில் 'சுதந்திரன், 'வீரகேசரி', 'தினகரன்', 'தினக்குரல்' போன்ற பத்திரிகைகளிலும் 'மல்லிகை', 'ஞானம்', 'கலைமுகம்', 'ஓலை' ஆகிய சிறு சஞ்சிகைகளிலும் இவரது படைப்புக்கள் வெளிவந்துள்ளன. 1987ல் மலேசிய நாட்டுத் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற அனைத் துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்டு "தமிழும் விஞ்ஞான மும்" என்ற ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். 1987ல் மலேசியாவில் தமிழ்நாட்டுக் கவிஞர் 'சுரதா' தலைமையில் உலகத் தமிழர் கவிஞர் பேரவை உருவாவதற்குக் காரணமாயிருந்தவர். அதன் இலங்கைக் கிளை இணைப்பாளராகவும் செயற்பட்டார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் நீண்ட கால உறுப்பினர் அதன் பல பதவி நிலைகளில் பணிபுரிந்தவர். தமிழ்ச்சங்க வெளியீடான "ஓலை"யின் ஸ்தாபக ஆசிரியர். 'தாயகம்' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலுமுள்ளார். 2008 ஜனவரி முதல் இன்றுவரை தொடர்ந்து மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் 'செங்கதிர்' எனும் மாதாந்த சஞ்சி கையை நடாத்தி வருகிறார். உலக சிற்றிதழ்கள் சங்க மாநாட்டில் பங்குபற்றி 'செங்கதிர்' இதழிற்கு 'அய்யன் திருவள்ளுவர் இலக்கியப் பேரவை விருதை'ப் பெற்றார். இலங்கை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இலக்கிய அதிதியாகவும் 2006ல் லண்டன் தொலைக்காட்சியான 'தீபம்' தொலைக் காட்சியிலும் பேட்டி காணப்பட்டார். கவிஞர் நீலாவணன் எழுதி முற்றுப் பெறாத காவியமான 'வேளாண்மை'யின் தொடர்ச்சியாக 'விளைச்சல்' எனும் காவியத்தை எழுதி வருகின்றார். இக்காவியம் விரைவில் நூலாக வெளிவர வுள்ளது. இவர் மட்டக்களப்பு புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை நினை வுப் பணிமன்றம், மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர் பேரவை அமரர் வி.நல்லையா நினைவுப்பணி மன்றம் சிங்கள தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் தேசிய கலை இலக்கியப் பேரவை, மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம் போன்ற பல அமைப்புக்களில் இணைந்து இலக்கிய சேவை புரிந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.ஆனந்தா A.G.இராஜேந்திரம்**
**பிறந்த திகதி** : **02.05.1952**
**துறை** : **ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆனந்தா A.G.இராஜேந்திரம் 1970களிலிருந்து எழுதி வருகிறார். சோழன், செங்கோல், பாடுமூர்வேந்தன் போன்ற புனைப்பெயர்களில் எழுதிவரும் ஆனந்தா கவிதை, சிறுகதை, நாடகம், தொடர்கதை, நாவல் போன்ற ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடு கொண்டவர். இவரது 'உயிரே நீ சொல்' என்ற கதை (1975)ல் தொண்டன் சஞ்சிகையில் தொடர்கதையாக வெளிவந்தது. சுபமங்களா (தமிழகம்) சஞ்சிகை இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து நடாத்திய குறுநாவல் போட்டியிலும் 'தாளம் தேடும் ராகங்கள்' (1995) அவுஸ்திரேலியா தமிழ்ச்சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியிலும் 'இன்றைக்காவது-2ம் பரிசு' (1996) பங்குபற்றி பரிசில்கள் பெற்றுள்ளார். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த இவர் தவக்காலச் சிந்தனையோடு தொடர்புடையதாக இயேசுகிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை மையமாக வைத்து எழுதிய 'தியாகத்தின் பாதையில்' என்ற நூல் 1997ல் வெளிவந்தது. இசைத்துறையிலும், ஓவியத் துறையிலும் கூட இவருக்கு அபரிமிதமான ஈடுபாடு உண்டு. "முள்ளால் மகுடம்" என்னும் சிலுவைப்பாதை ஒலிப்பதிவு நாடாவினையும் (1998) இவர் வெளியிட்டுள்ளார். வங்கி ஒன்றில் முகாமையாளராகக் கடமைபுரியும் இவர் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண காலங்களில் பல வருடகாலம் சிறைவாசம் அனுபவித்தவர். அக்காலங்களில் சிறைவாழ்க்கையின் போது 'ஒளி' கையெழுத்துப் பிரதியை இருபது மாதகாலம் தொடர்ந்து வெளியிட்டுள்ளார். அக்காலப்பகுதியில் எழுதிய அவரது 'மாலையில் ஓர் உதயம்' எனும் நாவல் (2002)ல் ஈழத்து இலக்கியச்சோலை (திருகோணமலை) வெளியீடாக வெளிவந்தது. அதிகம் எழுதினாலும் அதிகம் பேசப்படாத எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். விளம்பரத்திற்காகவன்றி தனது சுய தேடலுக்கும், திருப்திக்குமாக இலக்கியம் படைக்கும் இவர் பத்திரிகைத் துறையிலும் முத்திரை பதித்தவர். திருமலை-மட்டுநகர் மறைமாநில வெளியீடான தொண்டன் (1969) சஞ்சிகையின் ஆரம்பகால ஆசிரியர் குழு உறுப்பினராகவும், 'சுடர் ஒளி' (1978) எனும் மும்மாத சஞ்சிகையின் ஆசிரியராகவும், 'இலக்கிய இளைஞன்' சஞ்சிகையில் ஆசிரியராக (1978-1980) இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **பெயர்** | **: திருமதி. றூபி வலன்ரினா பிரான்சிஸ்** |
| **பிறந்த திகதி** | **: 26.08.1959** |
| **துறை** | **: ஆக்க இலக்கியம்** |

மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி. றூபி வலன்ரினா பிரான்சிஸ் யாழ்ப்பாண பல்கலைக்கழக முதலாம் வகுப்பு தமிழ் சிறப்பு கலை மாணி பட்டதாரியாவார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் (2006) தனது முது தத்துவமாணியை நிறைவு செய்துள்ளார். 1996 தொடக்கம் இற்றைவரை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தமிழ் துறை சிரேஸ்ட விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார்.

தனது தொழில்சார் தேவைப்பாடுகளுக்கு அப்பால் கலை இலக்கியத் துறையிலும் காலடியெடுத்துவைத்து இன்றுவரை பல ஆக்க இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். 1986 தொடக்கம் இற்றை வரை பதினொன்றுக்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இதில் தமிழ் நாடு திருச்செங்கோடு அறிவியல் கல்லூரியில் சமர்ப்பிக்கப்பட்ட "ஈழத்தில் தமிழ் இலக்கண முயற்சிகள்" (2009) என்ற கட்டுரையும் 2010 கோவையில் நடைபெற்ற உலகச் செம்மொழி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஈழத்தின் முதல் அம்மானை அர்ச்-யாகப்பர் அம்மானை குறித்த நோக்கு என்பனவும் மிக முக்கியமான தாகும். இதுவரை 25 க்கு மேற்பட்ட கலை இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். றூபி வலன்ரினா பல சிறுகதைகளையும் கவிதைகளையும் எழுதி உள்ளார். ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர்க் கழகம் (2008) இவருக்கு செம்மொழிப் புலமையாளர் என்ற சிறப்பு விருது வழங்கி கௌரவித்துள்ளது.

40க்கு மேற்பட்ட கருத்தரங்குகளில் கலந்து கொண்டு பல சிறப்புரைகளையும், புத்தக ஆய்வுகளையும் ஆற்றியுள்ளார். மட்டக்களப்பின் இலக்கிய வளர்ச்சிக்கும் ஆய்வு முயற்சிக்கும் இவர் ஆற்றி வரும் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.கணபதிப்பிள்ளை குணநாதன்**

**பிறந்த திகதி : 14.11.1960**

**துறை : சிறுவர் இலக்கியம்**

**ம**ட்டக்களப்பு அமிர்தகழியைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை குணநாதன் ஓ.கே.குணநாதன் என்ற பெயரில் எழுதி வருகின்றவர். இளைஞர் சேவை அதிகாரியாகப் பணிபுரிகின்றார். இவர் சிறுவர் இலக்கியத்துடன் மாத்திரம் நில்லாது நாவல், சிறு கதை, நகைச்சுவை போன்ற துறைகளிலும் சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளார். இவரது ஆக்கங்கள் பல நூல் வடிவம் பெற்றுள்ளன. 'வீர ஆனந்தன்', 'சுதந்திரம்', 'மாயக்கிழவி' போன்ற சிறுவர் குறு நாவல்களையும், 'விடிவைத் தேடி', 'ஊமைநெஞ்சின் சொந்தம்' போன்ற நாவல்களையும், 'வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்' போன்ற இலக்கிய ஆய்வுகளையும் மற்றும் நகைச்சுவைக் கதைகள் போன்றவற்றையும் இவர் படைத்துள்ளார். இவரது ஆக்கங்கள் பல தேசிய விருதினைப் பெற்றுள்ளது. 1990ல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சிறுவர் இலக்கியத்துக்கான ஜனாதிபதியின் இளைஞர் விருதினைப் பெற்றார். 1994ல் கனேடியக் கிறிஸ்தவ குழந்தைகள் நிதியமும் சர்வோதயமும் இணைந்து நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதலாமிடத்தினையும் சிறுவர் நூல்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண சிறுவர் இலக்கியத்துக்கான சாகித்திய மண்டலப் பரிசும், 1991 மித்திரன் வாரமலர் சிறுகதைப் போட்டிச் சிறப்புப் பரிசும், 1989ல் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாமிடத்தையும், 1988ல் தொடுவானம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாமிடத்தையும், 1996ல் கலாசார அமைச்சு நடாத்தி சிறுகதைப் போட்டியில் இரண்டாமிடத்தையும், இந்தியாவில் தேவியின் கண்மணி சஞ்சிகை சர்வதேச ரீதியில் நடாத்திய நாவல் போட்டியில் 'ஒரு துளி என்ற நாவலுக்குச் சிறப்புப் பரிசும், 1995 மக்கள் சமாதான சாகித்திய அமைப்பு நடாத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் இலக்கிய உலகில் இவர் தனது தமிழ் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் சார்பாக தமிழியல் விருதினை அறிமுகப்படுத்தி பல கலைஞர்களுக்கு தமிழியல் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திருமதி.சுந்தரமதி தேவநாயகம்**

**பிறந்த திகதி : 01.08.1962**

**துறை : ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கல்லடி நொச்சிமுனையை வாழ்விடமாகக் கொண்டவர். கலை, இலக்கியத்துறையில் மிகுந்த ஈடுபாடுடையவர். புனைப்பெயர் நிலா. சுந்தரமதி வேதநாயகம் என்ற பெயரிலும் பல ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. கவிதை, சிறுவர் இலக்கியம், சிறுகதை, நடனம், நாடகம், ஆலய வரலாற்று நூல் ஆய்வு, ஈடுபாடுடைய துறை களாகும். கவியரங்கு, விவாத அரங்கு, வில்லுப்பாட்டு போன்ற வற்றிலும் ஈடுபாடுடையவர். சிறு வயதிலிருந்தே தாயின் வழிகாட்டலில் நடனம், நாடகம் ஆகிய கலைத்துறைகளில் ஈடுபட்டவர். 3 வயதில் கண்ணன் நடனத்திற்காக பரிசுக் கிண்ணமும், தங்க மோதிரமும் கிடைத்துள்ளது. தமிழ்தின பாடசாலைமட்டப் போட்டிகளில் 'வருமுன் காப்போம்', 'நாங்கள் இலங்கை மக்கள்' என்ற நாடகங்களில் 1ம் இடம்பெற்றுள்ளார். பின் 'நல்லதொரு குடும்பம்' நாடகத்தில் 1ம் இடமும், சிறந்த நடிகையாகவும் கௌரவிக்கப்பட்டுள்ளார். எழுத்துத்துறையில் சிறுகதை 'விடியலை நோக்கி' தினக் கதிரில் 1ம் படைப்பாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. கனடா ஈழநாதம் பத்திரிகையில் கவிதை, சிறுகதை பிரசுரிக்கப்பட்டுள்ளது. (2001) வானொலி வர்த்தக சேவையில் 2001ம் ஆண்டு கவிதைக் கலவம் திரு.அகளங்கள் அவர்களின் தலைமையின் கீழ் ஒருமாதம் இவர் குரலிலேயே ஒலிபரப்புச் செய்யப்பட்டது. 2005ல் சுவிஸ் சிவாஞ்சலி சிறப்பு மலரில் 'நினைத்துப் பார்க்கிறேன் நெஞ்சம் வலிக்கிறது' என்ற சுனாமிக் கவிதையும், மன்னார் திருமறைக் கலாமன்ற 'தாளம்' சஞ்சிகையில் 'உள்ளம்', 'மனிதம்' சிறுகதையும் பிரசுரிக்கப்பட்டது. முத்தமிழ் விழாவில் தேனக மலரில் 'துயரெழுதும் பாடல்' சிறுவர் கட்டுரையும் பிரசுரிக்கப்பட்டது. 2008, 2009 அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் சிறுவர் கதை, பாடலாக்கம் பரிசில்களைப் பெற்றது. 2010ல் வில்லுப்பாட்டு உள்ளூராட்சித் திணைக்களம் நடாத்திய போட்டியில் 1ம் இடம்பெற்றது. 21.06.2010 அருள்மிகு ஸ்ரீ கடலாட்சியம்மன் ஆலய வரலாறு வெளியிடப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. இவர் பாடசாலை இலக்கியமன்ற தலைவி, செயலாளராகவும், மட்/தமிழ் எழுத்தாளர் பேரவை செயலாளராகவும், மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நிர்வாகக் குழு உறுப்பினராகவும், திருமறைக் கலாமன்ற நிருவாக உறுப்பினர், உள்ளூராட்சித் திணைக்கள வடகிழக்கு முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியத் தலைவி, கல்லடி நூலக வாசகர்வட்ட நிருவாக உறுப்பினராகவும், விழுது ஆற்றல் மேம்பாட்டு நிருவாக உறுப்பினராகவும் அங்கம் வகித்துபல இலக்கியத்துறைப் பங்களிப்புக்களை ஆற்றி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : கவிஞர் வாசுதேவன்**

**பிறந்த திகதி : 01.01.1964**

**துறை : ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டு கவிதைத் துறையில் செயற்பட்டுவரும் வாசுதேவன் இரு கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். 'என்னில் விழும் நான்' எனும் பெயரில் முதல் தொகுப்பு மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்தது (1987). இரண்டாவது தொகுப்பு 1993ல் 'வாழ்ந்து வருதல்' எனும் பெயரில் வெளிவந்தது. நூலாகாத பல கவிதைகள், பல்வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.

பாடசாலை மட்டத்தில் பத்திற்கும் மேற்பட்ட மேடை நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்துள்ளார்.

ஆரம்பக் காலத்தில் ஓரிரு சிறுகதைகளை எழுதியுள்ள இவர், பத்திரிகைகளில் அவ்வப்போது பத்தி எழுத்துக்களையும் எழுதியுள்ளார். தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு கலை, இலக்கியப் பேரவையின் ஊடாக பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி வந்தார்.

பின்னர் 'பூவரசுகள்' அமைப்பினூடாக பல்வேறு இலக்கியக் கருத்தரங்குகளைக் கவிஞர் சாருமதியுடன் இணைந்து நடாத்திய இவர், 'பூவரசு' சஞ்சிகையையும் அவருடன் இணைந்து வெளியிட்டார்.

பின்னர் 'மனத்துளிர்' அமைப்பை நிறுவி, தொடர்ச்சியாக பல்வேறு இலக்கியக் கருத்தரங்குகளை நடாத்தி வந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகவியல் பட்டதாரியான இவர், மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை நல்கிவரும் கவிஞர் வாசுதேவன் ஒரு பிரபல்யமான கவிஞராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.வெ.தவராஜா
பிறந்த திகதி : 27.06.1964
துறை : ஆக்க இலக்கியம்

களுதாவளையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு நொச்சிமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட வெ.தவராஜா பொருளியல் துறை பட்டதாரி. இவர் பட்டதாரி ஆசிரியர். உதவி திட்டமிடல் பணிப்பாளர், உதவி பிரதேச செயலாளர் போன்ற தொழில்சார் அனுபவங்களுடன் தற்போது கிரான் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகக் கடமை புரிகின்றார். பல வேலைப்பழுக்களுக்கு மத்தியிலும் இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாட்டுடன் ஈடுபட்டுவரும் இவர் நாடகம் (நடிப்பு, பிரதியாக்கம், நெறியாள்கை) சிறுகதை, கவிதை போன்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்றார். மனோ, இனியவள், ராஜாத்தி போன்ற புனைப் பெயர்களில் எழுதி வரும் தவராஜா இதுவரை மங்கையராய் பிறப்பதற்கே (நாடகங்களின் தொகுப்பு), 'தனித்திருத்தல்' (கவிதைத் தொகுப்பு), 'அனர்த்த முகாமைத்துவம்' (ஆய்வு நூல்) பேன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். விரைவில் இவரது சிறுகதைத் தொகுப்பு வெளிவரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு கலை, இலக்கிய பேரவையின் உபதலைவராகவும் பொது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் உருவாக்கப்பட்ட இலங்கை எழுத்தாளர் பேரவையின் உப செயலாளராகவும் இருக்கும் இவரது நாடக நூல் வடக்கு கிழக்கு மாகாண சபையின் சாகித்தியப் பரிசையும் (1994) ஆய்வுநூல் கிழக்கு மாகாண சபையின் சாகித்திய பரிசையும் (2007) பெற்றுள்ளது.

1993 காலப்பகுதியில் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'படி' இலக்கிய இதழின் ஆசிரியர் இவரே. மட்டக்களப்பு இலக்கிய வளர்ச்சியில் 'படி'யின் வருகை மிக முக்கியமான தாக்கத்தினை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. ஐந்து இதழ்களே வெளிவந்த 'படி'யை மீண்டும் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியுள்ள தவராஜா மிக அண்மைக் காலத்தில் மேடையேற்றப்பட்ட மௌனகுருவின் 'இராவணேசன்' நாட்டுக் கூத்தில் இந்திரஜித் பாத்திரத்தில் நடித்து பலரின் பாராட்டையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : திரு.அன்பழகன் குரூஸ்
**பிறந்த திகதி** : 01.07.1965
**துறை** : ஆக்க இலக்கியம்

கவிஞர் அற்புதராஜா குரூஸ் அவர்களின் மகனான இவர், சின்ன ஊறணியில் வசித்து வருகின்றார். சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணி புரியும் இவர், மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசார பேரவையின் நீண்டகால உறுப்பினராவார். அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராக இருந்து தொடர்ந்து அப்பேரவையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டதோடு, தற்போது கடந்த இரு ஆண்டுகளாக தலைவராகப் பொறுப்பேற்று கணிசமான வகையில் கலை, இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி வருகின்றார். அத்துடன் மட்டக்களப்பு வாசகர் வட்டத்திலும், மட்டக்களப்பு மாவட்ட கலைஞர் பேரவையிலும் உறுப்பினராகயிருந்து பணியாற்றி வருகின் றார். கவிதை, நாடகம், சிறுகதை, பாட்டு, கூத்து, சஞ்சிகையாக்கம் என்பன இவரது எழுத்துத் துறைகளாகும். அத்துடன் கூத்து, நாடகம், நாட்டிய நாடகம், சித்திரம் என்பன இவரது கலைத்துறைகளாகும். மரபுக்கவிதை, புதுக்கவிதை மற்றும் கைக்கூ கவிதை எனப் பலதரப்பட்ட கவிதைகளை எழுதுவது இவரது தனித்திறமையாகும். இவரது பல கவிதைகள் வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. இவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடும் முயற்சியில் இவர் ஈடுபட்டுள்ளார். கவிதைப் பயிற்சிப் பட்டறைகளை நடாத்தி இளம் கவிஞர்களை உருவாக்குவதும் இவரது தனித்துவமாகும். ஹைக்கூ கவிதைகளை எழுதுவதில் ஆர்வமுள்ள இவர், சிறிய ஹைக்கூ கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். பாடல்கள் பல எழுதியுள்ளார். இவ்வாண்டு ஏறாவூர் காளிகாம்பாளின் புகழ்பாடி இவர் எழுதிய பாடல் இறுவெட்டாக்கப்பட்டதும் இவர் ஆலய நிர்வாகத்தினரால் பாராட்டப் பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். நாடகங்கள் பல எழுதியுள்ளார். வரலாற்று நாடகம், நாட்டிய நாடகம் என்பன இவரது சிறப்பான நாடகப் பகுதிகளாகும். பல சிறுகதைகளை எழுதியுள்ளார். இவரது சிறுகதைகள் தேசிய நாளேடுகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. தனது சிறுகதைகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார். "செங்கதிர்" எனும் தேசிய கலை இலக்கியச் சஞ்சிகையின் துணை ஆசிரிய ராகப் பணிபுரிந்து கலை, இலக்கிய வளர்ச்சிக்கு தக்கமுறையில் பணியாற்றி வருகின்றார். அத்துடன் அவர் பணி புரியும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் "செய்திமடலுக்கு" பிரதம ஆசிரிய ராகவும் பணிபுரிந்து ஒரு சிறந்த சஞ்சிகையாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். பல கூத்துக்களில் நடித்து பலரது பாராட்டையும் பெற்றுள்ளார். அண்மையில் அரங்கேறிய "முடிவில்லா மனமாற்றம்" எனும் நாட்டிய நாடகம் மிகுந்த வரவேற்பைப் பெற்றதோடு, இவரது நாடக ஆக்கத்திற்கும் வடிவமைப்பிற்கும் நெறியாள்கைக்கும் தக்கசான்றாகும். மட்டக்களப்பின் நாட்டாரியல் கூறுகளை இவர் ஆய்வுசெய்து வருகின்றார். இது விடயம் தொடர்பாக பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **கவிஞர் வி.மைக்கல் கொலின்**

**பிறந்த திகதி** : **23.02.1970**

**துறை** : **ஆக்க இலக்கியம்**

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கல் கொலின், மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணிபுரிகிறார். சிறுவயதில் இருந்தே இலக்கியத் துறையில் மிகவும் ஈடுபாட்டுடன் ஈடுபட்ட இவர், 1985ல் ஆரம்பித்து தொடர்ந்து 13 வருடங்களாக 'தாகம்' எனும் கலை இலக்கியச் சஞ்சிகையை நடாத்தி வந்துள்ளார். கிழக்குப் பல்கலைக்கழக வியாபார நிர்வாகத்துறை பட்டதாரியான இவர், பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் செயலாளராகவும், தமிழ்ச்சங்க வெளியீடான 'தழல்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியராகவும், பல்கலைக்கழக கத்தோலிக்க சங்கத்தின் வெளியீடான 'தூதன்' சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். நவீன கவிதையின் மீது தீராத மோகம் கொண்ட இவர், மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'ஃபீனிக்ஸ்' நவீன தமிழ் கவிதா இதழின் ஆசிரியருமாவார். 1990ல் தனது முதல் கவிதைத் தொகுதியான 'என் பிரிய ராஜகுமாரிக்கு' என்ற புதுக் கவிதைத் தொகுதியைத் தந்த இவர், 1990, 1992, 1993 மற்றும் 1995 காலப்பகுதிகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய கவிதை, பாடல் இயற்றுதல், தொலைக்காட்சி நாடகப் பிரதி ஆக்கம் ஆகிய போட்டிகளில் அகில இலங்கை ரீதியாக 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்றுள்ளார். மற்றும் பொது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு 2006ல் அரச ஊழியர்களுக்கிடையே நடாத்திய ஆக்க இலக்கியப் போட்டியில் கவிதை, சிறுகதை என்பவற்றில் அகில இலங்கை ரீதியாக 1ம், 2ம் இடங்களையும் அதே ஆண்டில் கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசும் பெற்றுள்ளார். தொலைத்தொடர்புத் துறையிலும், குறுந்திரைப்படத் துறையிலும் 'டிப்ளோமா' பட்டம் பெற்றுள்ள இவர், 'மரபை மீறும் மானுடம்' எனும் பெயரில் தொலைக்காட்சி நாடகம் ஒன்றினையும் இயக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பின் முதல் வாரவெளியீடான 'தினக்கதிர்' (1998) பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவிருந்து செயற்பட்டுள்ளார். மேலும் 'தினக்கதிர்' தினசரியாக மாற்றம் பெற்ற வேளை (2000) தினசரிப் பதிப்பின் இணை ஆசிரியராகவும் வாரவெளியீட்டின் பிரதம ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். 2008ல் கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதல் பரிசு பெற்றுள்ளார். கடந்த நான்கு வருடங்களாக மட்/மண்முனை வடக்கு கலாசார பேரவையின் அங்கத்தவராகவிருக்கும் கவிஞர் மைக்கல் கொலின், பேரவையின் வெளியீடான 'தேனகம்' மலர் வெளியீட்டிற்கு முக்கிய பங்காற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : வாசுகி குணரத்தினம்

பிறந்த ஆண்டு : 05.05.1970

துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பு அமிர்தகழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்டவர். எழுத்தின் ஆரம்பம் 12 வயதில் ஆரம்பமாகியது. இவரது முதல் ஆக்கம் இலங்கை வானொலி சிறுவர் மலரில் ஒலிபரப் பானது. இவர் பிரபல எழுத்தாளர் கவிஞர் செ.குணரத்தினம் அவர்க ளது புதல்வியாவார். கவிஞரின் மகளாக இருந்தாலும் தனது தந்தை யின் நிழலில் நிற்க முற்படாதவர். இவரது எழுத்துக்கள் தந்தையின் எழுத்துக்களிலிருந்து மாறுபட்டவை. கவிதை, கட்டுரை, சிறுகதை எனப் பல துறைகளிலும் இவர் கைவைத்துள்ளார். போட்டிகளில் பல பரிசுகளையும் பெற்றுள்ளார். பெண்ணியம் தொடர்பான நடவடிக் கைகளிலும் ஈடுபாடு காட்டுபவர். இவரது ஆக்கங்களில் பெரும்பாலா னவை பெண்ணியம் சார்ந்ததாகவே காணப்படுகின்றது. பெண்ணு ரிமை என்பது பெண்களின் கலாசார மரபுகளுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும் என்பது இவரது கருத்தாகும். மட்/முறக்கொட்டான்சேனை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் முகாமைத்துவ உதவியாள ராகப் பணிபுரிந்து தற்போது ஆசிரியராக சேவை மாற்றம் பெற்று, மட்/அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்தில் கடமை புரிந்து வருகின்றார். வீரகேசரி, தினக்கதிர், பெண் (சஞ்சிகை), கிழக்கொளி (கி.ப.க. சஞ்சிகை), உதயம் (சஞ்சிகை), பேழை என்பன வற்றில் இவரது கவிதை, கட்டுரை, சிறுகதை முதலியன அவ்வப்போது வெளிவந்துள்ளன. இதுவரை 30 கவிதைகள், 10 சிறுகதைகள், 15 கட்டு ரைகளை எழுதியுள்ளார். இவைதவிர அவ்வப்போது சில இலக்கிய மன்றங்களின் பாராட்டுதல்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் மீது தென்னிந்தியக் கலைஞர்களால் பாடப்பட்டு வெளியிடப்பட்ட இசைத் தொகுப்பில் பாடகர் உன்னிக்கிருஷ்ணன் பாடிய 'சந்தனச் சேற்றின் மகிமை கண்டாயா?' எனும் பாடல் இவருடையதாகும். இவரது சிறுகதை களைப் பொறுத்தவரை பெரும்பாலான கதைகளின் கருப்பொருள்கள் அவர் வாழ்க்கையில் சந்தித்த பிரச்சினைகளையே மையமாகக் கொண் டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : த.மேகராசா (மேரா)**
**பிறந்த திகதி : 04.11.1980**
**துறை : ஆக்க இலக்கியம்**

மட்டக்களப்பு பட்டிப்பளைப் பிரதேசத்தைப் பிறப்பிடமாகவும், மண்முனை வடக்குப் பிரதேசத்தின் கல்லடி வேலூர் பகுதினை வசிப்பிடமாகவும் கொண்ட த.மேகராசா கிழக்குப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டதாரியாவார்.

இவர் த.மேரா என்ற புனைப்பெயரிலும் ஈழப்பித்தன், மாரிமகன் போன்ற புனைப் பெயர்களிலும் எழுதி வருகின்றனர்.

2004ம் ஆண்டு தனது பாடசாலை காலத்தில் மட்/அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 'ஏணி' கவிதைத் தொகுப்பின் தொகுப்பாளராக இருந்துள்ளார். தொடர்ந்து இவரது 'கலங்கிய வானம்' (கவிதைத் தொகுப்பு) கிழக்குப் பல்கலைக் கழக தமிழியற் கழக வெளியீடாக வந்துள்ளது. (2005) 2007ம் ஆண்டு 'காலத்தின் காயங்கள்' (கவிதைத் தொகுப்பு) அதே வெளியீடாக வெளி வந்துள்ளது.

இவர் இலக்கிய ஆய்வு முயற்சிகளிலும் மிகுந்த ஆர்வம் கொண் டவர். தனது கலைமாணி ஆய்வுக்காக 'சிலப்பதிகாரத்திலும் கண்ணகி வழக்குரையிலும் கண்ணகி' ஓர் ஒப்பியல் ஆய்வு நூலாக வெளிவர வுள்ளது.

மேலும் இவரது மூன்றாவத கவிதைத் தொகுதியான 'கிராமத்து முகம்' அச்சில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவரது பல படைப்புக்கள் பிரதேச பத்திரிகைகளான ஈழநாதம், தமிழலை, தினமுரசு போன்றவற்றில் வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : தாகூர் ஆதம்பாவா
துறை : ஆக்க இலக்கியம்

மட்டக்களப்பு நொச்சிமுனையை வாழ்விடமாகக் கொண்டுள்ள இவர் 1995ம் ஆண்டிலிருந்து கவிதைத்துறையில் காலடியெடுத்து வைத்தார். இவரது கவிதைகள், இலங்கை - இந்தியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. இவரது முதலாவது மேடைப் பாடல் 1961ல் குழந்தை கவிஞர் அழ.வள்ளியப்பா தலைமையில் அரங்கேறியது.

பல தமிழ் விழாக்கள் - மீலாத் விழாக்கள் பலவற்றிலும் இவரது அரங்கப் பாடல்கள் இடம்பெற்றன. இவரது கவிதைகள் தினகரன், வீரகேசரி, சுதந்திரன், புதினம், தேசிய முரசு, தேனருவி, சங்கப் பலகை, தி.மு.க. - கலைமுரசு, கலைச்செல்வி, இளம்பிறை, அல்லி, பாவை, தேனோசை, தேனமுதம் முதலிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

கவிஞராக மாத்திரமன்றி தேசிய முரசு வார இதழ், தேனமுதம் ஆகியவற்றின் உதவி ஆசிரியராகவும் கலைத்துறைக்குக் கனிசமான பங்களிப்புச் செய்துள்ளார்.

நபிகள் தாஸன் என்ற பெயரில் நகைச்சுவைக் கட்டுரைகள் பல எழுதி எழுத்திலக்கியங்களின் பல்வேறு துறைகளிலும் தமது கலைப்பணிக்கான கரங்களை நீட்டியுள்ளார். 1971ல் காத்தான்குடி தினபதி வாசகர் மன்றமும், காத்தான்குடி முஸ்லிம் வாலிபர் இயக்கமும் இணைந்து நடத்திய விழாவில் சிறந்த குழந்தைக் கவிஞர் என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார்.

'நமது செல்வம்' என்ற குழந்தை இலக்கிய நூலை வெளியிட்டு குழந்தை இலக்கியத்துறையில் நிரந்தர இடத்தைத் தேடிக்கொண்டார். கலை, இலக்கிய, சமூக விவகாரங்களில் அக்கறையும், ஈடுபாடுமுள்ள இவர், பல்வேறு அமைப்புக்களிலும், சமூகநல நிறுவனங்களிலும் உறுப்பினராக இணைந்து பணியாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **எஸ்.பொன்னுத்துரை**

**துறை** : **ஆக்க இலக்கியம்**

ஈழத்து இலக்கிய உலகிலே "நற்போக்கு" என்ற இலக்கிய இயக்கத்தை முன்னின்று தாபித்த பெருமை எஸ்.பொ. என அழைக்கப்படும் எஸ்.பொன் னுத்துரைக்குரியது. யாழ்ப்பாணத்தில் பிறந்து மட்டக்களப்பிலே வாழ்ந்து தொழில் நிமித்தம் நைஜீரியா, அவுஸ்திரேலியா எனச் சென்று தற்போது அவுஸ்திரேலிய குடிமகன் ஆகிவிட்ட எஸ்.பொ.வின் இலக்கியப்பணி புலம்பெயர் நாடுகளிலும் பரவலாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. எஸ்.பொ.வின் படைப்புத் தன்மை நமக்குத் தெரிந்தது என்றாலும் அதை அவர் எழுதிய தால் புதிதானது. இவரது தீ, சடங்கு போன்ற நாவல்களில் இவர் கையாண்ட உட்பொருள் ஈழத்திலும், தமிழகத்திலும் ஒரு பரந்த வாதத்திற்கு வழிவகுத் தது. கரு, நடை, உத்தி என்கிற அம்சங்களின் தனித்துவத்தை தன் படைப்பின் மூலம் வெளிப்படுத்தினார். குறிப்பாகச் சொல்லவேண்டுமா னால் ஈழத்து புனைகதை வரலாற்றில் அவரது பங்கு முக்கியமானது. சிறுகதை மன்னன், ஈழத்து ஜெயகாந்தன், நவச்சிற்பி என்றெல்லாம் பாராட்டப்பட்டவர். புரட்சிப்பித்தன் பழமைதாசன், அபிமன்யு, அபியுக்தன், கொண்டோடிசுப்பர், கெப்டன் கணபதி, மாரிசன், ராஜ்மித்ரா, ராஜபுத்திரா என பல புனை பெயர்களில் எழுதியுள்ளார்.

இவரது கேள்விக்குறி அடையாளமிடப்பட்ட நூல் தமிழில் யாரும் முயற் சிக்காத ஓர் அம்சத்தைக் கொண்டது. மித்ர பதிப்பகம் என்ற பதிப்பகத்தை உருவாக்கி அதன் மூலம் இவர் வெளியிட்ட வீ. நனவிடை தோய்தல் என்பன தமிழ் இலக்கிய உலகில் மிக முக்கியமான நூல்களாகும். "தீ" நாவல் மட்டக்களப்பு, சூழலை வைத்து எழுதப்பட்ட நூலாகும். ஈழத்தில் அதிக விற்பனையான நாவல். "தீயை தீயிலிட்டு கொழுத்துங்கள்" என அதிகம் விமர்சிக்கப்பட்ட நாவலும் இதுவாகும். எஸ்.பொ. 1964ம் ஆண்டு தமிழ் பாடநூல் குழுவில் சரித்திர பாடநூல் குழுவிலும், 1971ம் ஆண்டு தமிழ் மொழிக் குழுவிலும் பணியாற்றியுள்ளார். தீ. சடங்கு,. வீ, ?, நனவிடை தோய்தல் என்பன இவரது மிக முக்கிய படைப்புகளாகும். இலக்கிய விமர்சனத்துறையிலும் கால் பதித்து நின்ற எஸ்.பொ. தமிழ் இலக்கிய உலகின் மிக முக்கிய எழுத்தாளர் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர் வித்துவான் அருணகிரி சரவணமுத்தன்**

**பிறந்த திகதி : 27.03.1890**

**துறை : நாடகம்**

மட்டக்களப்பு தாண்டவன்வெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் வித்துவான் சரவணமுத்தன் அவர்கள் சிறந்த கட்டுரையாளர், கவிஞர், நாடக ஆசிரியர், நடிகர், சொற்பொழிவாளர் என அக்கால கட்டத்தில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டதுடன் இயல், இசை, நாடகம் மூன்றையும் கற்று அவற்றை வளர்த்தவர்.

மட்டக்களப்பு சுகிர்தவிலாச நாடக சபையின் நாடகங்களுக்கு கதை வசனம் எழுதியும், பாடல்கள் யாத்தும், நடித்த இவர் அச்சபை யின் தலைவர் பதவியையும் வகித்துள்ளார்.

பாதுகா பட்டாபிஷேகம், இராமர் வனவாசம், இலங்கா தகனம் போன்றவை முற்றுமுழுதாக எழுத்தப்பட்டவையாகும். உவேல்ஸ் இளவரசர் கொழும்புக்கு வந்த வேளை "இராமர் கதை"யில் ஒரு பகு தியை நடித்துக் காட்டிப் புகழ்பெற்றதுடன் பரிசையும் பெற்றார். இராவ ணன் வேடத்திற்கு சகல அம்சங்களும் இவரிடம் காணப்பட்டமை இவரின் நடிப்புக்கு தனிச் சிறப்பாக அமைந்தது. தமிழகத்தில் அல்லி அருச்சுனா நாடகத்தில் நடித்த இவர், கண்டிராசன், சீதா கல்யாணம் போன்ற நாடகங்களில் கதாநாயகனாக நடித்து கலாரசிகர்களின் அமோக பாராட்டை அக்காலத்தில் பெற்ற இவரை மதுரை தமிழ்ச் சங்கம் சங்க ஆண்டு விழாக்களின் போது பிரதம சொற்பொழிவாளராக அழைத்த துடன் வித்துவான் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

கதிர்காம வேலர் தோத்திர, மஞ்சரி என்ற இவரின் நூலுக்கு சுவாமி விபுலானந்த அடிகளார் புகழுரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. மேலும் கனிவெண்பா என்ற நூலையும் ஆக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : வயிரமுத்து சித்தி விநாயகம்

பிறந்த திகதி : 27.10.1922

துறை : நாடகம்

மட்டக்களப்பு புளியந்தீவு சிங்களவாடியைச் சேர்ந்த சைவப் புலவர் அமரர் வயிரமுத்து சித்திவினாயகம் அவர்கள் மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் ஆனைப்பந்தி ஆண்கள் பாடசாலையில் கல்வி கற்று 1950ம் ஆண்டில் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியரானார். தமிழ்க் கல்வியைப் பொறுத்தவரை ஏனைய இலக்கியங்களிலும் சமய இலக்கியங்களே இவரது கருத்தைக் கவர்ந்தன. இதன் பயனாகப் பாடசாலை மட்டத்திலும், பொது நிகழ்வுகளின் கலை விழாக்களின் போதும் பல இதிகாச, சரித்திர, சமூக நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியுள்ளார். இவற்றுள் 'போலி உலகம்' சமூக விழிப்புணர்வு நாடகம் கலாரசிகர்களின் அமோகப் பாராட்டைப் பெற்றது.

நாடகத் துறையில் சிறந்த நாடக ஆசிரியரும் தயாரிப்பாளரும், சைவசமய சொற்பொழிவாளரும், பிரபல கைரேகை சோதிட நிபுணருமான இவரை ஆலயங்கள், பாடசாலைகள், கலைக் கழகங்கள் பாராட்டிக் கௌரவித்துள்ளது. இவர் ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயப் பரிபாலன சபையின் பொதுச் செயலாளராகவும், மட்டக்களப்பு நகரசபையின் உறுப்பினராகவும், மட்டக்களப்பு சைவப் புலவர் சங்கத்தின் செயலாளராகவும், புளியந்தீவு இந்து சமய விருத்திச் சங்கத்தின் செயலாளராகவும், கிழக்கிலங்கை சோதிட கலாமன்றத்தின் செயலாளராகவும் இன்றும் பல பதவிகளை வகித்துள்ளார். இவர் ஒரு நைஷ்டிகப் பிரமச்சாரி என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **வணபிதா ஜோன் யோசப்மேரி அடிகளார்**

**பிறந்த திகதி** : **04.01.1936**

**துறை** : **நாடகம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகார் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மாணவராக இருந்த காலத்திலிருந்தே கலை இலக்கிய ஈடுபாடு கொண்டவர். மாணவரிடையே தமிழ்ச் சங்கம் அமைத்து சங்கத்தின் தலைவராக இருந்து கலை முயற்சிகளில் ஈடுபட்ட இவரால் 1961ம் ஆண்டு "பாவ மன்னிப்பு" நாடகம் முதல் தடவையாக மேடையேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து 1973ம் ஆண்டு மிகப் பிரமாண்டமான தயாரிப்பான "நீ எதிர்கொண்டதேன்" மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் மேடையேற்றப்பட்டதுடன் தொடர்ந்து முல்லைத்தீவு, திருமலை, மலை நாடுகளில் மேடையேற்றப்பட்டது. நாடகம் தயாரிப்பதிலும், நெறிப்படுத்தலிலும் அடி களார் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளார். யேசுநாதரின் திருப்பாடுகளை சித்தரிக்கும் 'முத்தமிட்டோ காட்டிக்கொடுத்தாய்' நாடகமும் குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்கத் திருப்பபையின் குருவான இவர், கடந்த 35 ஆண்டு காலத்துக்கு மேலாக பணியாற்றி வருவதுடன் "படுவான் வாழ்வோதயம்" என்னும் சிறுவர் இல்லங்களை அமைத்து சேவையாற்றி வரும் இவர், 2004 ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட டச்பார் பகுதி மக்களுக்கு யேசு சபையின் அனுசரணையுடன் 100 வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு முன்னின்று உழைத்தவர். இலங்கை சமாதானப் பேரவையின் உறுப்பினராகவும், மட்டக்களப்பு பல்சமய ஒன்றியத்தின் உறுப்பினராகவும், கிறிஸ்தவ ஒன்றியத்தின் உறுப்பினராகவும் அங்கம் வகிக்கின்ற இவரை மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை நாடகத் துறைக்கு இவர் ஆற்றிய சேவைக்காக விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : றைற்றஸ் ஹென்றிக்

பிறந்த திகதி : 24.09.1936

துறை : நாடகம்

மட்டக்களப்பு, சின்ன உப்போடையைச் சேர்ந்த றைற்றஸ் ஹென்றிக் அவர்கள் சிறந்த நாடக நடிகரும், கிராம சேவை உத்தியோகஸ்தருமாவார். குழந்தை நாடக நடிகராக "திருஞானதீபம்" நாடகத்தின் மூலம் நாடக உலகில் பிரவேசித்து பல நாடகங்களை தயாரித்து மேடையேற்றியுள்ளார். இவர் நடித்த நாடகங்களில் "சிங்களத்து சிங்காரி" என்னும் நாடகம் மிக வர வேற்பை பெற்றது. மேடை நாடகங்களில் எத்தகைய கதாபாத்திரங்களிலும் நடிக்கக்கூடிய இவரை சிறந்த நடிகராகக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத தக்கது. கிராம சேவை உத்தியோகத்தராகப் பணிபுரிந்த காலகட்டத்தில் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக் காகவும் பின்தங்கிய மக்களின் முன்னேற்றத் திற்காகவும் சேவையாற் றிய ஒரு கிராம சேவை உத்தியோகஸ்தருமாவார்.



பெயர் : சாமித்தம்பி முத்துக்குமாரன்

பிறந்த திகதி : 01.03.1938

துறை : நாடகம்

மட்டக்களப்பின் தென்பகுதி துறைநீலாவணையைப் பிறப்பிடமாகவும், கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர் நாயகமாவார். 1961 இல் கலைத்துறையில் பிரவேசித்த இவர் இலக்கிய வானொலி நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் எனப் பல்வேறு வகைகளிலும் தன்னை அடையாளப்படுத்தியவர். இவரை, எழுத்தாளர் இலங்கையர்கோனின் சகவா சமும், ஊக்குவிப்பும், இலக்கிய ஆர்வமும், முன்னோர்களின் ஏட்டுப் படிப் பும் கலைத்துறையில் பிரவேசிக்க வைத்திருக்கின்றது. வானொலி இலக்கிய நாடகங்களிலே தன்னை முதன்மைப்படுத்தி நின்ற இவர், பல்வேறு வானொலி நாடகங்களை எழுதியிருந்தார். அந் நாடகங்களின் தொகுதி அண்மையில் வெளியிடப்பட்டது. 'வீர வில்லாளி' (வானொலி நாடகத் தொகுப்பு) நூல் 2008 இல் வெளியீடு செய்து வைக்கப்பட்டு, தமிழியல் விருது-2008னையும், அரச இலக்கிய விருது - 2009 இனையும் வென்றுள்ளது. 1961 இல் கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் உறுப்பினராகவும் அங்கம் வகித்துள்ள இவரது சிறு கதைத் தொகுப்பு நூல் விரைவில் வெளிவரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : செல்லத்துரை ஜெயராசா

பிறந்த திகதி : 30.04.1939

துறை : நாடகம்

மட்டக்களப்பு. பாரதி வீதியைச் சேர்ந்த செல்லத்துரை ஜெயராசா அவர்கள் மேடை வானொலி கலைஞராகவும், பத்திரிகை இணை ஆசிரியராகவும் திகழ்ந்துள்ளார். 1949ம் ஆண்டு முதல் மேடை நாடகங்களை தயாரித்தும், நடித்தும் மேடையேற்றியுள்ளதுடன் 1965ம் ஆண்டு முதல் வானொலி நாடகக் கலைஞராகவும் 'புதிய உலகம்' கத்தோலிக்க நிகழ்ச்சியை நடாத்தியுள்ளதுடன் 'தலையழி' பத்திரிகையின் இணை ஆசிரியராகவும் 'இளைய விழிகள்' செய்தி மடலின் இணை ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளதுடன் 'மீண்டும் பிறந்தால் மலரும் வாழ்வு' நாடகத் தொகுப்பு, விருட்சம் இளைஞர் பணி விவரணத் தொகுப்பு என்பனவற்றையும் வெளியிட்டுள்ளார்.



பெயர் : அமரர் நல்லையா ராமச்சந்திரன் (மாலா)

பிறந்த திகதி : 16.10.1939

துறை : நாடகம்

மட்டக்களப்பு தாமரைக்கேணி வீதியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறந்த நகைச்சுவை நாடக நடிகரும் இயக்குனரும் ஆவார். மட்டக்களப்பு தமிழ் கலாமன்றத்தினால் மேடையேற்றப்பட்ட பல நாடகங்களில் நண்டு நவரத்தினம் , மாலா ரமச்சந்திரன் இருவரும் இணைந்து நடித்து மண்டபம் சிரிப்பொலியால் நிரம்பி வழிவதை கலா ரசிகர்கள் இன்னும் மறக்க மாட்டார்கள். இவர் இயல்பாகவே நகைச்சுவையாக பேசுவதில் வல்லவராவார். இவர் நடித்த "Cant' Help" "கடவுள் சித்தம்", "சோத்துப்பானை", "காரிக்கனாம் காஞ்சிபுரமாம்" போன்ற நாடகங்கள் குறிப்பிடதக்கது. மட்டக்களப்பு தமிழ் கலாமன்றத்தின் ஆரம்ப கால உறுப்பினராகவும், தாமரைக்கேனி இளைஞர் கழகத்தில் போஷகராகவும், மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். நாடக துறைக்கு இவர் ஆற்றிய சேவையை கௌரவித்து பல கழகங்கள் பாராட்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.கந்தப்பர் கனேசானந்தன்

பிறந்த திகதி : 15.08.1940

துறை : நாடகம்

மட்டக்களப்பு நொச்சிமுனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர், 1955ம் ஆண்டு முதல் இன்றுவரை பத்து சரித்திர நாடகமும், எட்டு வரலாற்று நாடகமும், இரண்டு சமூக நாடகமும் நடித்துள்ளார். 1969ம் ஆண்டு மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத்தினர் நடாத்திய நாடகப் போட்டிகளில் இவர் நடித்த 'ஆரையூர் இளவலின்' "சிங்களத்துச் சிங்காரி" என்ற வரலாற்று நாடகமும், 1970ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் இவர் நடித்த "தர்மம் காத்த தலைவன்" என்ற வரலாற்று நாடகமும் முதலாவது இடங்களைப் பெற்றது. இதுதவிர ஆரையூர் இளவலின் "நீறுபூத்த நெருப்பு" துரோணச்சாரி துருபத மன்னன் ஆகியோரின் கதையைத் தழுவியது. இதில் இவர் துரோணச் சாரியார் பாத்திரத்தில் நடித்தார். மேலும் இவர் நடித்த "சிங்கமலை வேந்தன்", "மானம் காத்த மாவீரன்", "துரோணர் சபதம்", "நிலவறையிலே", "வெற்றித்திருமகன்" என்பவை மக்களினதும் பத்திரிகைகளினதும் பாராட்டைப் பெற்றன.

இவர் வளர்மதி இலக்கிய மன்றத்தின் தலைவராகவும், இளங்கதிர் நாடக மன்றத்தின் செயலாளராகவும், மண்முனை வடக்கு கலாசார பேரவையில் 1993ம் ஆண்டுமுதல் ஓர் உறுப்பினராகவும் கலைப்பணியாற்றியுள்ளார். இப்போது ஒப்பனையாளராகவும், இயக்குனராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் பொதுப்பணியில் அகில இலங்கை தேசிய செஞ்சிலுவைச் சங்கத்தின் உபசெயலாளராகவும், சிவானந்த வித்தியாலய தேசிய பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளராகவும், பழைய மாணவர் மன்றத்தின் செயலாளராகவும், இந்துக் கல்லூரியின் பழைய மாணவ மன்றத்தின் தலைவராகவும், மட்டக்களப்பு மாவட்டப் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சபையின் உறுப்பினராகவும், கல்லடி உப்போடை நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர், பேச்சியம்மன் ஆலய பரிபாலன சபையின் தலைவராகவும், சமூக அபிவிருத்தி மேம்பாட்டுச் சங்கத்தின் தலைவராகவும், பணியாற்றி வருகின்றார். இவர் அகில இலங்கை சமாதான நீதிபதியாகவும் பணியாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.குமரேசப்பிள்ளை நவரெத்தினம்**
**பிறந்த திகதி : 08.02.1943**
**துறை : நாடகம்**

மட்டக்களப்பில் சிறந்த நகைச்சுவை நடிகர்களில் ஒருவரான இவர், மாணவப் பராயத்தில் இருந்தே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக நாடகத்துறைக்குப் பணியாற்றியுள்ளார். 1963ம் ஆண்டு மட்டக்களப்பு தமிழ்க்கலாமன்றம் என்ற அமைப்பை நிறுவுவதில் முன்னின்றுழைத்தவர். இதுவரை 100க்கும் மேற்பட்ட நாடகங்களில் நடித்துள்ளார். மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவனாக இருந்த காலகட்டத்தில் "முதல் முழக்கம்" என்ற நாடகம் மூலம் அறிமுகமானார். தொடர்ந்து "குவேனி", "சாணக்கியன்", "Can't Help", "கடவுள் சித்தம்", "சோத்துப்பானை" போன்ற நாடகங்கள் குறிப்பிடத்தக்கது. இவர் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் தனது நடிப் பாற்றலை வெளிப்படுத்தி வரவேற்பைப் பெற்றதுடன் "வெத மாத்தயா" என்ற நாடகம் தமிழ் - சிங்களப் பிரதேசங்களில் மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது. நாட்டுக்கூத்துத் துறையிலும் இவர் சளைத்தவரல்லர். பல நவீன நாட்டுக் கூத்துக்களையும் நடித்துள்ளார். 1980ம் ஆண்டு கமலாலயம் கலைக்கழகத்தின் மட்டுநகர் கிளை "நடிகர் நவமணி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. ............ம் ஆண்டு மண்முனை வடக்கு கலாசார பேரவை நாடகத்துறைக்கு இவர் ஆற்றிய சேவைக்காகக விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.



**பெயர் : திரு.ஆ.கி.பிரான்சிஸ்**
**பிறந்த திகதி : 12.09.1955**
**துறை : நாடகம்**

மட்டக்களப்பு வாகரையைப் பிறப்பிடாகவும், மட்டக்களப்பு இருதயபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆ.கி.பிரான்சிஸ் பயிற்றப்பட்ட ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது இலண்டனில் வசித்து வருகின்றார். கத்தோலிக்க சமய எழுத்தாளரான இவர் பல கவிதைகளை எழுதியுள்ளாா. நாடகத் துறையில் அதீத செயற்பாட்டுடன் இயங்கி வந்த இவர் பல நாடகங்களைப் பாடசாலை ரீதியாகவும் வெளியிலும் மேடையேற்றியுள்ளார். பல கூத்துக்களையும் தயாரித்து அளிக்கை செய்துள்ளார். பாஸ்கா காலங்களில் இவர் தாயரித்த பல நாடகங்கள் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. இவரது 'உடைபடும் வேலகன்' என்ற நாவல் மட்டக்களப்பில் 1998 காலப்பகுதியில் ஒருமுறை மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | | |
|---|---|---|
| **பெயர்** | : | **பேராசிரியர் சி.மௌனகுரு** |
| **பிறந்த திகதி** | : | **09.06.1943** |
| **துறை** | : | **நாடகம்** |

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் 45/19, 2ம் குறுக்கு, சின்ன உப்போடை வீதியை முகவரியாகவும் கொண்ட பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் ஆசிரியராகவும் (1965-1971), பாடவிதான அபிவிருத்தி நிலையத்தில் பாடநூல் எழுத்தாளராகவும் (1972-1975), பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும் (1981-1982), யாழ்ப்பாணப் பல்கலைக்கழக (நுண்கலைத்துறை) விரிவுரையாளராகவும் (1983-1991), கிழக்குப் பல்கலைக்கழக கலை-கலாசார பீடாதிபதியாகவும் (1993-1998) பணிபுரிந்தவர். 1991 தொடக்கம் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று இன்றுவரை கடமையாற்றுகின்றார். சமூகவியல் நோக்கில் ஈழத்து மரபுவழி நாடகங்களை கலாநிதிப் பட்டத்திற்காக முதன்முதலில் ஆய்வுசெய்தவர். இந்த ஆய்வு 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' என்ற தலைப்பில் 1998ல் நூலாக வெளிவந்தது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தயாரிக்கப்பட்ட கூத்துக்களில் பிரதான பாகமேற்று நடித்ததுடன் பேராசிரியரின் தயாரிப்புக்களுக்கு மிகுந்த துணையாகவும் இருந்தார். 'சடங்கிலிருந்து நாடகம் வரை' (1985), 'தப்பி வந்த தாடி ஆடு' (நாடகம்-1987), 'மௌனகுருவின் மூன்று நாடகங்கள் (1987), 'பழையதும் புதியதும்' (1992), 'சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும்' (1992), 'சங்காரம் ஆற்றுகையும் தாக்கமும்" (1993), 'ஈழத்தில் தமிழ் நாடக அரங்கு' (1993), 'கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன்' நீலாவணன் (1994), 'சக்தி பிறக்குது' (நாடகம் 1997), 'இராவணேசன்' (நாடகம் 1998) ஈழத்து நாடக மரபும் சரத்சந்திராவும் (1999) என்னும் நூல்களை எழுதியதுடன் பேராசிரியர் சிவத்தம்பியுடன். இணைந்து 'அரங்கு ஓர் அறிமுகம்' எனும் நூலையும் எழுதியுள்ளார். அத்தோடு சுபத்திரன் கவிதை நூலையும் பதிப்பித்துள்ளார். அத்துடன் இவர் 20ம் நூற்றாண்டு ஈழத்தமிழ் இலக்கியம் (1984) என்னும் நூலின் இணையாசிரியருமாவார். இவற்றுள் 'தப்பி வந்த தாடி ஆடு', 'பழையதும் புதியதும்', 'ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு', 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' ஆகியன சாகித்திய மண்டலப் பரிசுபெற்றவை. சிறந்த நடிகரும் நாடகாசிரியரும், தயாரிப்பாளரும் நாட்டுக்கூத்துக் கலைஞரும், சிறந்த ஆய்வாளருமான இவர் நாடகப் பயிற்சிப் பட்டறைகளை ஈழத்தின் பல பாகங்களிலும் நடாத்தி அத்துறை வல்லுநர்களை உருவாக்கி வருகின்றார். சிறுவர் நாடகத்துறையில் இவரது பங்களிப்பு கணிசமானது. அண்மைக் காலமாக ஈழத்தில் பாரம்பரிய இசைமரபு குறித்த தேடல்களில் ஈடுபட்டு நாட்டார் இசை பற்றிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். தமிழுக்கான 'இன்னிய அணி' ஒன்றினையும் கி.பல்கலைக்கழகத்தில் உருவாக்கியுள்ளார். அத்துடன் உலக நாடக தின விழாவினைக் கடந்த பல வருடங்களாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடாத்திவந்துள்ளார். தமிழ் அரங்கியல் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய பணிக்காக இலங்கை கலாசார அமைச்சு 1994ல் கலைச்செம்மல் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.நா.ஜோதிநாயகம்**

**பிறந்த திகதி : 29.01.1945**

**துறை : நாடகம்**

மட்டக்களப்பு பெரிய உப்போடையைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட இவர், மட்டக்களப்பு தமிழ்க் கலாமன்றத்தினால் மேடையேற்றப்பட்ட பல நாடகங்களில் பெண் வேடம் ஏற்று நடித்துப் பாராட்டுப் பெற்றவர். குறிப்பாக "பதினாறு பிள்ளைகள்" நாடகத்தில் நடித்தமைக்காக பிரதேச மட்டத்தில் சிறந்த நடிகராகப் பாராட்டுப் பெற்றதுடன் பேராசிரியர் மௌனகுரு அவர்களின் சீலாமுனைக் கலைக்கழகம், மட்டக்களப்பு கலை வட்டம் போன்ற நாடக மன்றங்களிலும் இணைந்து நடித்துள்ளார். 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் "என்னடி ராக்கம்மா" என்ற நாடகத்தில் நடித்து அனைவரின் பாராட்டைப் பெற்றவர். .........ம் ஆண்டு மண்முனை வடக்கு கலாசார பேரவை நாடகத் துறைக்கு இவர் ஆற்றிய சேவைக்காக விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.



**பெயர் : திரு.தம்பிராசா ஜோசப்**

**பிறந்த திகதி : 04.12.1949**

**துறை : நாடகம்**

மட்டக்களப்பு மோசாப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட இவர் ஒரு கிராமசேவை உத்தியோத்தராவார். சிறு வயதிலிருந்தே கலைகளின் ஈடுபாடு கொண்ட இவர், நாடகம் நடித்தல், இயக்குனர், பாடகர் போன்ற துறைகளில் திறமையை வெளிப்படுத்தியுள்ளதுடன் இசையுடன் கூடிய நாடகங்களான "விதியின் விளையாட்டு", "மகளுக்கேற்ற மாப்பிள்ளை", "ஐயோ அத்தான்", "பிசினி", "பறவாதி", "புட்டு மாமி", "நீற்றா உன் விளையாட்டா", "நான் எடுத்த சிலுவை", "எல்லாம் உனக்காக", நைட் வாச்சர்", "பப்பியா பறவாதியா", "தங்கராசா ஓடா வியார்" போன்ற நாடகங்களில் நடித்துள்ளார். 1974ம் ஆண்டு மட்டக்களப்பு திறந்தவெளி அரங்கில் 100வது தடவையாக "பப்பியா பறவாதியா" நாடகம் மேடையேற்றப்பட்ட போது பண்டிதர் வி.சி.கந்தையா அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். .........ம் ஆண்டு மண்முனை வடக்கு கலாசார பேரவையினால் நாடகத் துறைக்கு இவர் ஆற்றிய சேவைக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : K.OV.K.குருநாதன்


பிறந்த திகதி : 25.06.1948

துறை : நாடகம்

ஓய்வுபெற்ற உதவிக் காணி ஆணையாளரான இவர், சிறுவயதிலிருந்தே நாடகத்தில் ஆர்வம் கொண்டு பாடசாலையில் படிக்கும் போதே நடிக்கத் தொடங்கிவிட்டார். மட்/மாநகர சபை மண்டபத்தில் இவர் 1984ல் "ஓர் மலர் உருகியது" என்ற நாடகத்தை அரங்கேற்றினார். கொழும்பு "லயணல் வென்" இந்நாடகத்தில் சிறந்த நடிகருக்கான ஜனாதிபதி பரிசைப் பெற்றுக் கொண்டார். இவரின் பிரமாண்டமான தயாரிப்பான "கறுப்பு ராஜா சிவப்பு ரோஜா" என்ற நாடகம் 1970ல் குண்டகசாலையிலும் 1978ல் மட்/மாநகர சபை மண்டபத்திலும் அரங்கேறியது. இதில் இவரே கதாநாயகனாகவும் தயாரிப்பாளர், இயக்குனராகவும் பணிபுரிந்தார். இந்நாடகத்தைப் பற்றி இலங்கை வானொலி பேட்டி கண்டு ஒலிபரப்பியது. கலைஞர் அன்புமணி அவர்கள் மட்டு நகரில் மேடையேற்றப்பட்ட பிரமாண்டமான மூன்று நாடகங்களில் இதுவும் ஒன்று என வீரகேசரிப் பத்திரிகையில் எழுதினார். மிகவும பிரமாண்டமான மேடைக் காட்சிகள் அமையப்பெற்ற இந்நாடகத்தைப் பற்றி புத்தளத்தைச் சேர்ந்த எழுத்தாளர் S.M.J.பைஸ்தீன் BA வீரகேசரியில் 30.04.1978ல் பாராட்டிக் கட்டுரை ஒன்றை எழுதினார். தொண்டன் பத்திரிகை எழுத்தாளர் அந்தனிஜான் அழகரசன் பாராட்டுக் கட்டுரை ஒன்றை எழுதினார். தினபதி பத்திரிகையும் 22.02.1978ல் மிகுந்த பாராட்டைத் தெரிவித்தது. மற்றுமொரு பிரமாண்டமான தயாரிப்பில் உருவான ஆரையூர் இளவலின் "நீறுபூத்த நெருப்பு" என்ற துரோணரின் வரலாற்று நாடகத்தில் அர்ச்சுணன் பாத்திரமேற்று நடித்துப் பாராட்டைப். பெற்றார். இதுதவிர 'மானங்காத்த மாவீரன்", "சாம்ராட் அசோகன்" என்ற நாடகத்தை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தொலைக்காட்சி நாடகமாகக் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். "மனக்கோலம்" என்ற நகைச்சுவை நாடகத்திலும் நடித்துள்ளார். இந்நாடகம் மட்/மாநகர மண்டபம் வாகரை, கல்லடி ஈச்சிலம்பற்றை முதலிய இடங்களில் மேடையேற்றப்பட்டது. இவர் பெற்ற சாதனைகள் தொலைக்காட்சி நடிகர் பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றி நற்சான்றிதழ் பெற்றமை. வானொலி நடிகராகத் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அழகையா இருதயநாதன்

பிறந்த திகதி : 03.05.1949

துறை : நாடகம், கூத்து

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாலமீன்மடுவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற அதிபரான இவர் ஓர் சிறந்த மேடை, வானொலி, தொலைக்காட்சி நாடகக் கலைஞராவார். ஐந்திற்கும் மேற்பட்ட சமூக நாடகங்களையும் ஆறிற்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங் களையும், பத்திற்கும் மேற்பட்ட புராண இலக்கிய, வரலாற்று நாடகங்க ளையும் இவர் தயாரித்துள்ளார். கூத்துத் துறையிலும் ஈடுபட்டுள்ள இவர் ஆறு வடமோடிக் கூத்துக்களையும் தயாரித்துள்ளார். இலங்கை ரூபவாஹி னியில் 'கரையரங்கம்' எனும் நாட்டுக் கூத்தினையும் அறிக்கை செய்துள்ளார்.

இவரது வடமோடி நாட்டுக்கூத்து 1993ல் அகில இலங்கை தமிழ் மொழித் தினத்தில் 1ம் இடம் பெற்றுள்ளது. அத்துடன் மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை 1997ல் நடாத்திய வடமோடி நாட்டுக்கூத்துப் போட்டி யில் இவரது கூத்து 1ம் இடத்தினையும், 1998 இல் மாவட்ட கலாசாரப் பேரவை நடாத்திய கூத்துப் போட்டியில் 1ம் இடத்தினையும் பெற்றுள்ளது.

இலக்கியத் துறையில் ஈடுபாடு கொண்ட இவர், மண்முனை மேற்கு கல்விப் பிரதேச கீதத்தினையும், 'கவிமாலை' எனும் கவிதைத் தொகுப் பையும் வெளியிட்டுள்ளார். இலங்கை வானொலியில் 'சொட்டும் சுவடு கள்' எனும் வரைச் சித்திர நிகழ்வினையும் இலங்கை ரூபவாஹினியில் 'உதயகீதம்' நிகழ்ச்சிக்காக மெல்லிசைப் பாடல் பலவற்றையும் எழுதியுள்ளார். பல்வேறு சமூக அமைப்புக்கள் கலை இலக்கிய மன்றங்களில் உறுப்பின ராகவுள்ள இவர் 25 வருடங்களுக்கு மேலாக சாரணியத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். சிறந்த சாரணிய சேவைக்காக ஜனாதிபதியால் Award Merit பெற்றுக் கொண்டார். மட்டக்களப்பு மாவட்டத்தில் சமாதான நீதிவானாகவும் விளங்குகின்றார். திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஜேசு சபை இவருக்கு 'கலைஞானி' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. அத்துடன் பாலமீன்மடு - திராய்மடு இந்துமாமன்றம், நாவற்குடா தியாகு கலைக்கழகம் விளாவட்டவான் ஸ்ரீ கணேசா கலை மன்றம் போன்றவையும் இவரது கலைச் சேவையைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.ஜோசப் இராஜேந்திரன் தவராஜா**
**பிறந்த திகதி : 17.04.1953**
**துறை : நாடகம்**

மீன்பாடும் தேனாட்டின் எழுத்தாளர் பேரவையின் உறுப்பினரான இவர், தொழிலிருந்து முற்றிலும் வேறுபட்ட எழுத்தாளராக, கலைஞராக இருப்பதே இவருக்குச் சிறப்பு. மட்டக்களப்பை பிறப்பு, வளர்ப்பு இடமாகக் கொண்ட இவர் 1970களில் இருந்து கலைத்துறைக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இவரது முதல் நாடகம் 'திடீர் கலியாணம்' ஆகும். அதனைத் தொடர்ந்து 23 நாடகங்களை எழுதி, இயக்கி நடித்திருக்கின்றார். நாடகத்துறை தவிர, 'நாளைய நாம்', 'தொலைந்து போன சுதந்திரங்கள்' ஆகிய கவிதைத் தொகுதிகளையும் வெளியிட்டதோடு, 'அரங்கம்' சஞ்சிகைகள் 17ஐ வெளிக்கொணர்ந்திருக்கின்றார். அத்தோடு நின்றுவிடாமல், கதை, கவிதை, கட்டுரைகளைத் தேசிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளுக்கும் இன்னும் எழுதிக்கொண்டிருக்கிறார்.

பல கலைக்கழகங்களில் உறுப்பினரான இவர், 'காஸ்ய கலைஞர்', 'எழுச்சிக் கவிஞர்' எனும் பட்டங்களையும் பெற்றிருக்கின்றார். மாருதம் FM இவரைப் பாராட்டி 'சாதனைச் சிகரம்' எனும் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. மட்டக்களப்பு பிரதேச சபை இவரை சிறந்த நடிகராகப் பாராட்டி கௌரவித்துள்ளது. அத்தோடு இவரது எழுத்துத் துறைக்காக தினச்சுடர் பத்திரிகை இவருக்கு 2004ம் ஆண்டிற்கான சிறந்த செய்தியாளர், சிறந்த தேசியப் பத்திரிகையாளராகவும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்துள்ளது.

கலைத்துறையும், எழுத்துத் துறையும் இவருக்கு ஆத்ம திருப்தியைத் தருவதாகக் குறிப்பிடும் இவர், வெண்ணிலா கலைக்கழகம், கலைநிலாக் கலைக்கழகம் என்பவற்றின் ஸ்தாபகராகவும், மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையின் உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.கதிரமலை – பாரதிதாசன்**

**பிறந்த திகதி** : **24.10.1952**

**துறை** : **நாடகம்**

மட்டக்களப்பு அதிகார் வீதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாக வும் கொண்டுள்ள இவர், அகில இந்திய முகாமைத்துவ உயர் கற்கை நிறுவகத்தில் உளவியல் டிப்ளோமா பட்டத்தினையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் கற்கையையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞானம் கற்கையையும், கிழக்கு பல்கலைக் கழகத்தில் உளநல - ஆற்றுப்படுத்தல் கற்கையையும் கற்றுத் தேறியுள்ளார். நாடகத்தினை தனது கலைத்துறையாகக் கல்வி கற்கும் காலத்திலேயே தெரிவு செய்துகொண்ட இவர், மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியில் தனது நாடகச் செயற்பாட்டை ஆரம்பித்தார். இதுவரை 50ற்கும் மேற்பட்ட மேடை நாடகங்களில் நடித்துள்ள இவர் முப்பது சரித்திர, சமூக, இதிகாச, விழிப்பு ணர்வு, நகைச்சுவை நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியுள்ளார். 'இதய தீபம்' சமூக நாடகத்தின் இரு பிரதான கதாபாத்திரங்களில் நடித்துப் பாராட்டைப் பெற்றவர். இவரது "ஒருநகரம் நரகமாகிறது" மேடை நாடக தொகுப்பு நூல் விரைவில் வெளிவரவிருப்பது குறிப்பிடத்தக்கது. நாடகத் தின் தயாரிப்பு, நெறியாள்கை, கதை, வசனம், நடிப்பு, ஒப்பனை, நடனம் போன்ற பல்வேறு பிரிவுகளிலும் தன்னை அடையாளம் காட்டி நின்ற இவரை பல்வேறு அமைப்புக்களும் பாராட்டி கௌரவித்துள்ளது. மட்டக்க ளப்பு மாவட்ட கலாசார பேரவை, மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை, மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவை, இந்த சமய அபிவிருத்திச் சபை போன்றவை பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவித்துள் ளன. 35 வருடத்திற்கும் மேற்பட்ட பொதுச் சேவையில் தன்னை இணைத் துக்கொண்டுள்ள இவர், மட்டக்களப்பின் பல்வேறு அமைப்புக்களான "காந்தி சேவா சங்க பொதுச் செயலாளராகவும், மட்-அம்பாறை முன்னாள் பிரஜைகள் குழு பொதுச் செயலாளராகவும், அரசசார்பற்ற நிறுவனங்க ளின் (இணையம்) முன்னாள் பொதுச் செயலாளராகவும், மட்டக்களப்பு தமிழ் நாடகமன்றத்தின் தலைவராகவும், மட்/சமூகப் பாதுகாப்பு வலயமைப் பின் சிரேஷ்ட ஆலோசகராகவும், மட்/இந்து நலன்புரிச்சங்கத்தின் தலைவராகவும், மாவட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட ஆலோச னைக்குழு உறுப்பினராகவும், கிழக்கு இந்து ஒன்றியத்தின் பொதுச் செயலா ளராகவும் மனித உரிமை ஆர்வலராகவும் பல்வேறுபட்ட அமைப்புக்களில் பணியாற்றி வருகின்ற இவர், இன்றும் நாடகத்துறையில் தன்னை ஈடுபடுத் திக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.நல்லையா கந்தசாமி**
**பிறந்த திகதி** : **12.11.1944**
**துறை** : **நாடகம்**

**ம**ட்டக்களப்பு பாலமீன்மடுவைப் பிறப்பிமாகக் கொண்ட இவர், ஆரம்பக் கல்வியை மட்/பாலமீன்மடு தமிழ் கலவன் பாடசாலையி லும், உயர் கல்வியை மட்/அரசினர் பாடசாலையிலும் கல்விகற்ற இவர் 1961ம் ஆண்டு முதல் நாடகத் துறையில் தன்னை இணைத்துக் கொண்டு 10 நாட கங்களுக்கு மேல் எழுதி இயக்கி நடித்துள்ளார். 'பாவை என் நெஞ்சில்' நாடகம் இவரின் திறமையை வெளிக்காட்டிய நாடகமாகும். பாலமீன்மடு விநாயகர் பிலிம் சாரின் 'அந்த இரவு ஓர் உறவு சொன்னது' என்ற முதலாவது வீடியோ படத்திலும் நடித்துள் ளார். பல்வேறு மன்றங்கள், கலைக்கழகங் களில் அங்கத்தவராகவும், ஸ்தாப கராகவுமுள்ளார். இவரைப் பாராட்டி பல கழகங்கள் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்துள்ளது. நாட கத்துறை தவிர இவர் கதை ஆசிரியராகவும், ஓவியராகவும் தன்னை வெளிக் காட்டியுள்ளார்.



**பெயர்** : **திரு.கனகையா சிவமூர்த்தி**
**பிறந்த திகதி** : **10.02.1948**
**துறை** : **நாடகம்**

**1965**ல் நாடகத் துறையில் தன்னை இணைத்துக்கொண்ட இவரது குரு, பேராசிரியர் சி.மௌனகுரு எனக் குறிப்பிடுகின்றார். 'இன்பம்' எனும் புனைப்பெயரில் கவிதை, எழுத்துத்துறைகளில் ஈடுபட்டாலும் கூட, நாட கமே இவரது பிரதான கலைத் துறையாக முன்னெடுத்துச் சென்றுள்ளார். தொழிலாளர் வர்க்கத்தினரின் பிரச்சினைகளை முன்னெடுத்தே இவரது நாட கங்கள் அமைந்திருந்தன. 1965 இல் மாநகர மண்டபத்தில் இலவசமாகவே நாடகங்களை நடாத்தியுள்ளார். புதூர் இலக்கிய மன்றம், வாழைச்சேனை ஜன சக்தி நாடக மன்றம் போன்றவற்றை அமைத்து அதனுள் அங்கம் வகித்து அதன் மூலம் தனது நாடகப் பணியை முன்னெடுத்துச் சென்றுள்ளார். அத் தோடு பிரதேச சபை கலாசாரப் பேரவையில் அங்கம் வகித்தவர். இடதுசாரி கருத்துக்கொண்ட இவரது சிந்தனைகள், இவரது எழுத்து மூலம் வெளிப்படுத் தப்பட்டுள்ளது. வாழைச்சேனை ஜனசக்தி நாடக மன்றம் இவருக்கு 'கவிஞர்' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.எம்.பி.ரவிச்சந்திரா
பிறந்த திகதி : 02.12.1966
துறை : நாடகம்

மட்டக்களப்பைச் சேர்ந்த எம்.பி.ரவிச்சந்திரா ஒரு பல்துறைக் கலை
ஞராவார். ஆசிரியராக பண்பாட்டு அலுவலராக விரிவுரையாளராக பல்வேறு
பதவி நிலைகளை வகித்து வந்த ரவிச்சந்திரா அவர்கள் கலை, இலக்கிய
ஆய்வாளராக விமர்சகராக, பத்திரிகை எழுத்தாளராக, கலைஞராக, அரங்
கச் செயலாளியாக பண்முக ஆற்றலுடன் இயங்கி வருபவர். எனினும்
அவர் தன்னை அதிகம் அரங்கவியலாளராகவே கலை உலகில் அடை
யாளப்படுத்திக் கொண்டவர். அந்த வகையில் மாற்றுப் பார்வையுடன்
புதிய கருத்துருவாக்கங்களில் அமைந்த பல அரங்க ஆற்றுகைகளை
தயாரித்து அளிக்கை செய்தவர். அதிதி, தடகை வதம், நெருப்புக்குள்
வாழ்வு... தகணம், மொக்குமரங்கள் போன்ற ஆற்றுகைகள் மட்டக்களப்
பிலும் அதற்கு வெளியிலும் அதிகமான கணிப்புக்குரியவையாகும். கலை,
இலக்கிய சமூக மறுமலர்ச்சி தொடர்பாகத் தெளிவான அரசியல் புரித
லுடைய ரவி அவர்கள் சமூக மாற்றத்திற்கான பன்முக அரங்கச் செயற்
பாடுகளை முன்னெடுத்து வரும் அரங்காலாயாவின் காப்பாளராக என்றும்
செயற்றிதிறனுடன் இயங்கி வருபவர். அரங்காலாயாவின் "ஆற்றுகைக்
கான ஆற்றுகை" அரங்கச் செயற்றிட்டத்தின் பிரகாரம் கல்வி மற்றும்
சமுதாய அபிவிருத்திக்கான பிரயோக அரங்கச் செயற்பாடுகளை ஒருங்கி
ணைத்து வழிபடுத்தி வருகின்றார். அண்மைக்காலமாக மக்கள் பங்கேற்புக்
கான அரங்க ஆற்றுகைகளை ஊக்குவித்தும் விவாத அரங்க ஆற்றுகைக
ளில் ஆளுமையுடன் செயற்பட்டு நாம் புதிய அனுபவங்களைத் தரிசிக்க
வழிசமைத்து வருகிறார். இன்று எமது பாரம்பரிய தேசியக் கலைவடிவான
கூத்தை ஆய்வு செய்து நூலுருவாக்கம் செய்துள்ளார். இதுதவிர இருபத்
தைந்திற்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து மேடை
யேற்றியுள்ளார். இவரது நாடகங்கள் பல மாவட்ட, மாகாண, தேசிய
மட்ட விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவரின் கூத்து
முறைமையும் கூத்து வழிவந்த அரங்க வளர்ச்சிகளும் என்ற நூல் 2009ம்
ஆண்டின் கிழக்கு மாகாண இலக்கிய நூல் என்ற விருதையும் பெற்றமை
யும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மட்டக்களப்பின் நாடக வரலாற்றில்
தவிர்க்கமுடியாத வகையில் தன்னையும் இனைத்துக்கொண்ட எம்.பி.
ரவிச்ந்திர தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகம் தொடர்பாக
தனது கலாநிதிப் பட்ட ஆய்வை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.தேவநாயகம் அலோசியஸ்**

**பிறந்த திகதி : 13.03.1970**

**துறை : நாடகம்**

**வா**கரையில் பிறந்து, மட்டக்களப்பு கதிர்காமர் வீதி, மட்டிக்களியில் வசித்துவரும் இவர், கடந்த 20 ஆண்டு காலத்திற்கு மேலாக நாடகத் துறைக்கு அரும்பணியாற்றி வருகின்றார். கலைமாணிப் பட்டதாரி ஆசிரியரான இவர் நாடகத்துறையில் தனது 10 வயதில் அறிமுகமானார். இதுவரை 80க்கு மேற்பட்ட வானொலி நாடகங்களையும், 34 மேடை நாடகங்களையும் எழுதித் தயாரித்து நடித்துள்ளதுடன் 'பிளவுகள்' தொலைக்காட்சி குறும்படம், 'கிழக்கு வானம்' குறும்படம், 'நிவாரணம்' நாடகத் தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளார். நாடகத்துறையில் நடிப்பு நெறியாள்கை, தயாரிப்பு, வானொலி நாடகம், குறுந்திரைப்படம், தாள வாத்தியம் போன்றவற்றோடு தன்னைப் பின்னணிப் பாடகராகவும் அடையாளப்படுத்தியுள்ளார். இவர் இது வரை 14 தேசிய விருதுகளை (சிறந்த நடிகர், சிறந்த நெறியாள்கை, சிறந்த தயாரிப்புக்கள், சிறந்த துணை நடிகர், சிறந்த ஒப்பனை, சிறந்த காட்சியமைப்பு, சிறந்த கதை வசனம், சிறந்த இசையமைப்பு, சிறந்த ஒளியமைப்பு போன்ற துறைகளில்) நாடகத் துறையில் பெற்றுக்கொண்டுள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஒரு நாடகத்திற்கு 07 தேசிய விருதுகள் கிடைத்தது இவருக்கு என்பது சிறப்பு. சிறுகதை, புதுக்கவிதையிலும் பிரகாசிக்கும் இவரது படைப்புக்கள், வெட்டாப்பு, தொண்டன் சஞ்சிகைகள், வீரகேசரி (வார வெளியீடு), வர்த்தக சேவை (FM), சக்தி (FM) போன்றவற்றிலும் வெளிவந்துள்ளன.

- இவரது விருதுகளைக் கௌரவிப்பதற்காக நேத்ரா TV இருமுறை இவரை நேர்காணல் செய்துள்ளது.
- இந்திய திரைப்படமான 'மச்சி' திரைப்படத்திலும் இவருக்கு நடிப்புக்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.
- அரங்கவியல், பயிற்றுவிப்பாளர், தலைமைத்துவப் பயிற்றுவிப் பாளர், சாரணியத் தலைவர் என்பவற்றோடு பல்வேறு கழகங்களில் அங்கம் வகிக்கின்றார்.
- மனித உரிமைகள் (கொழும்பு பல்கலைக்கழகம்) இளைஞர் ஊக்குவிப்பு போன்றவற்றில் டிப் ளோமா பட்டம் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு (F)பைன் ஆர்ட்ஸ் கழக ஸ்தாபித்து செயலாளராகப் பணிபுரிவதுடன் மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை, கொழும்பு தமிழ்ச்சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகவும், மட்டக்களப்பு மாவட்ட கலைஞர் பேரவையின் உப தலைவராகவும் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர்** : **அமரர் சின்னத்தம்பி சதாசிவம்**

**பிறந்த திகதி** : **05.10.1905**

**துறை** : **கூத்து**

மட்டக்களப்பு பாலமீன்மடு, தண்ணீர் கிணற்றடி வீதியில் இவர் வசித்துள்ளார். 'கங்காணியார்' எனப் புனைப் பெயர் கொண்டழைக்கப்படும் தன்னா முனையைச் சேர்ந்த சதாசிவம் அண்ணாவியார் அக்கிராமத்தில் கூத்துக் கலையில் மிக முக்கிய கர்த்தாவாக விளங்கியவராவார்.

ஐம்பது வருடங்கள் நாட்டுக்கூத்தில் ஈடுபட்டு அனுபவம் பெற்ற இவர், 16ம் போர், வில் வளைவு, அரசிளங்குமரி, வள்ளியம்மன் நாடகம், குருக்கேத்திரம் போர் ஆகிய கூத்துக்களை ஆடியதோடு இக்கூத்துக்களனைத்தையும் பழக்கி அரங்கேற்றிப் பெரும் புகழ்பெற்றார். அக்கிராமத்தில் நாட்டுக்கூத்துக் கலையை வளர்த்து இத்துறையில் பலரை உருவாக்கிய இவர் திறமைகளை அறிந்த இந்து கலாசார தமிழ் அமுலாக்க அமைச்சர் திருவாளர் செ.இராசதுரை அவர்கள் பாராட்டி சான்றிதழ் வழங்கியதோடு மட்டக்களப்பு மாநகர சபையினராலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் தனக்குப்பின் இக்கலை உயிர்வாழவேண்டுமென்ற ஆர்வத்திலும் அக்கறையிலுல் நல்லெண்ணத்திலும் வேல்முருகு செல்வராசா, திரு.ச.செல்லையா என்ற இரு மாணவர்களை உருவாக்கினார். இன்று இவர்கள் இவர் பெயரைத் தக்கவைத்துக் கொண்டிருப்பது பெரும் பாக்கியம் என்றே கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர்** : **அமரர். கதிரமலை குழந்தைவேல்**

**பிறந்த திகதி** : **05.06.1911**

**துறை** : **கூத்து**

மட்டக்களப்பு மட்டிக்களி எனும் கிராமத்தில் பிறந்த இவர் குழந்தைவேல் என்று அழைக்கப்பட்டார். மிகவும் சிறப்பான அண்ணாவியாராக விளங்கிய இவர் பல கூத்துக்களை ஆடியவராகவும், இரு மோடிக் கூத்துக்களையும் பழக்கும் ஆற்றல் உள்ளவராகவும் இருந்தார். பத்துவயதிலிருந்தே கூத்துக்கள் ஆடிய இவர் பங்குடாவெளி போன்ற இடங்களிலும் போய் ஆடியுள்ளார். குழந்தைவேல் அண்ணாவியார் பழக்கிய கூத்துக்களில், தர்மபுத்திரன், இராமநாடகம், கண்ணகி அம்மன் சரித்திரம், ஆகியவற்றைக் குறிப்பிடலாம். புன்னைச்சோலை, பாலமீன்மடு, திராய்மடு, போன்ற இடங்களில் சென்று கூத்துப்பழக்கியுள்ளார். தங்கப்பொன்னு என்பவரை மணம்முடித்து நான்கு ஆண் பிள்ளைகளையும், ஒரு பெண் பிள்ளையையும் பெற்றெடுத்துள்ளார். மட்டிக்களியைப் பிறப்பிடமாக கொண்ட காரணத்தில் கூடுதலான கூத்துக்களை இக் கிராமத்தினருக்கே பழக்கியுள்ளார். இவரிடம் கூத்துப் பழகிய பலர் பின்னர் அண்ணாவிமாராக வளர்ந்துள்ளனர்.

பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் கூத்துப் பற்றிய தமது ஆய்வு நூலுக்கு அண்ணாவியார் குழந்தைவேல் அவர்களிடமிருந்து பல தகவல்களை அறிந்து கொண்டதாக தெரிய வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர் வித்துவான் திருமதி.திரவியம் இராமச்சந்திரன்**
**பிறந்த திகதி : 03.10.1919**
**துறை : கூத்து / நாடகம்**

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டு மட்டக்களப்பு டயஸ் லேனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரவியம் இராமச்சந்திரன் அவர்கள் வின்சன்ற் பாடசாலையில் ஆசிரியராகவும், தாண்டவன் வெளி பெண்கள் பாடசாலையின் அதிபராகவும், பணியாற்றி ஓய்வு பெற்றார். நாடகத்துறைக்கும், நாட்டுக்கூத்துக்கும் அளப்பரிய சேவையை மேற்கொண்டார். 1941ல் 'மனோன்மணி நாடகம்' 1956ல் 'பாண்டியன் பரிசு', 1958ல் 'கடல் கண்ட கனவு', 1959ல் 'பார்த்திபன் கனவு', 1969ல் 'அம்பை வென்ற அப்பு' ஆகிய நாடகங்களை இவர் மேடையேற்றி யிருந்தார். 1948ல் ஒரு நாடகத்தை யாழ்ப்பாணத்திற்கும் கொண்டு சென்றார். பின்னர் 1968ம் ஆண்டு 'உத்தமன் பரதன்' எனும் கூத்தை யாழ்ப்பாணம் கொண்டு சென்றார்.

அமரர் திரவியம் அவர்கள் வின்சன்ட் மகளிர் பாடசாலை மாண விகளைக் கொண்டு 'கும்பகர்ணன்', 'கர்ணன் போர்', 'பாலன் பிறந்த நாள்', 'சோவித்தை வென்ற குமரன்' போன்ற கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றம் செய்துள்ளார். மட்டக்களப்பு கச்சேரியில் இயங்கிய பிரதேச கலாமன்றத்திலும், பின்னர் மாவட்ட கலாசார பேரவையிலும் உறுப்பினராகப் பணியாற்றினார். பிரதேச கலாமன்றம் இயங்கிய காலத்தில் அரசாங்க அதிபர் வேதநேசன் நேசையா, பேராசிரியர் வித்தியானந்தன், பண்டிதர் வீ.சி.கந்தையா அவர்களுடன் இணைந்து அண்ணாவிமார் மகா நாட்டை மட்டக்களப்பில் நடாத்துவதற்கு உறுது ணையாகவிருந்தார். இவ் அண்ணாவிமார் மகாநாட்டில் வெளியி டப்பட்ட 'இராம நாடகம்', அனுருத்திர நாடகம்' ஆகிய கூத்து நூல்கள் வெளியிடுவதற்கும் உறுதுணையாகச் செயற்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் : வன்னமணி சிதம்பரப்பிள்ளை

துறை : கூத்து

மட்டக்களப்பு திராய்மடுவை பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை அவர்கள் பூசகராகவும், அண்ணாவியராகவும் விளங்கியவர். கந்தையா என்பவரை தனது குருவாகக் கொண்ட இவர் இந்து சமயம் சார்ந்த கூத்துக்களைப் பழக்க வேண்டும் என்னும் விருப்பம் கொண்டவராக விளங்கினார். இந்து கலாசார மன்றத்தின் சான்றிதழையும் தம் திறமையினால் பெற்றுக் கொண்டார். கடந்த நாற்பது வருடங்களாக இத்துறையில் ஈடுபட்டு வருகின்றார். கூடுதலாகப் படிப்பறிவற்றார்களைக் கொண்டே நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார். பாலமீன்மடு மெ.மி.தமிழ் கலவன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி அறிவைப் பெற்றுக் கொண்டார்.

இவர் பழக்கிய கூத்துக்கள்.

1. வள்ளியம்மன் நாட்டுக் கூத்து 1990 முகத்துவாரம்
2. ஸ்ரீராம ஆஞ்சநேயர் யுத்தம் 1992 திராய்மடு
3. பவளக்கொடி நாட்டுக்கூத்து 1996 ஊறணி
4. வீரகுமாரன் நாட்டுக்கூத்து 1997 கருவேப்பங்கேணி

தனது அயராத முயற்சியின் காரணமாக இக் கூத்துக் கலையை வளர்த்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : நாகமணி ஏகாம்பரம்

பிறந்த திகதி : 05.11.1921

துறை : கூத்து

திருப்பெருந்துறைக் கிராமத்தில் பிறந்த இவர் சிறுவயது முதலே நாட்டுக்கூத்தில் ஆர்வமுள்ளவராகக் காணப்பட்டார். தர்மபுத்திர நாடகம். சுபத்திரை கல்யாணம், வாளவீமன் நாடகம், குருச்சோத்திரன் போர், 17ம், 18ம் யுத்த காண்டம், அருச்சுனன் பாசுபதம், துரோணாச் சாரியார் யுத்தம் ஆகிய கூத்துக்கள் ஆடியுள்ளார். பல கூத்துக்களை ஆடி அனுபவம் பெற்ற ஏகாம்பரம் அவர்கள் இருபத்தைந்து (25) இற்கு மேற்பட்ட கூத்துக்களைப் பழக்கியுள்ளார். அவற்றுள் தர்மபுத்திர நாடகம், துரோணாச்சாரியார் யுத்தம், சுபத்திரை கல்யாணம், குருசோத்திரன் போர், 17ம். 18ம் போர், நாரதர் கலகம், கடோக்கஜன் வரை, அருச்சுனன் பாசுபதம், ஞான சௌந்தரி போன்றவை குறிப்பிடத்தக்கவை. இக்கூத்துக்கள் எல்லாம் பல அனுபவங்களில் கோயில் திருவிழாக் காலங்களில் அரங்கேற்றப்பட்டன. இதனால் சகல பொதுமக்களும் கண்டுகளிக்கும் வண்ணம் பொது மேடையில் கூத்துக்கள் நடைபெற்றன. இதனைக் கண்டுகளித்த பொதுமக்களின் பாராட்டுக்களை அண்ணாவியார் பெற்றுள்ளார். இவர் கூத்துத்துறைக்கு பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளார்.



பெயர் : செல்லத்துரை முத்துலிங்கம்

பிறந்த திகதி : 25.12.1932

துறை : கூத்து

மட்டக்களப்பு புதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நாட்டுக் கூத்து அண்ணாவியாராக விளங்குகின்றார். சிறு வயதிலிருந்தே நாட்டுக் கூத்து துறையில் ஆர்வம் கொண்ட இவர் பின்வரும் கூத்துக்களை ஆடியுள்ளார். வாளவீமன் நாடகம், 16ம் போர், 17, 18ம் போர், அல்லி அருச்சுனன். இவ் அண்ணாவியார் பழக்கிய கூத்துக்களுள் குருச்சோத்திரன் போர் (1960), குசலவன் (1962), நாரதர் கலகம் (1963), பகத்தன் போர், 16ம் போர் ஆகிய கூத்துக்கள் அடங்கும். இவை பல இடங்களில் மேடையேற்றப்பட்டன. தனது முதுமைப் பருவத்திலும் நாட்டுக் கூத்துக் கலையைப் வளர்ப்பதில் ஆர்வமுள்ளவராகக் காணப்படுகின்றார். இவரது கூத்துக்கள், திமிலைதீவு, புதூர், வலையிறவு ஆகிய கிராமங்களில் மேடையேற்றம் செய்யப்பட்டு பலரதும் பாராட்டுக்களைப் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : வெஸிஸ் சிங்கோ மத்தியாஸ் சிங்கோ

பிறந்த திகதி : 22.08.1923


துறை : கூத்து

மட்டக்களப்பு தாண்டவன்வெளியில் பிறந்த இவர் மத்தியஸ் சிங்கோ மாஸ்ரர் என எல்லோராலும் அழைக்கப்பட்டார். சிங்கள மொழியில் எஸ்.எஸ்.சி. சித்தியடைந்த இவர் ஆசிரியராகவும் இறுதியில் அதிபராகவும் இருந்துள்ளார். 1968ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து நாட்டுக்கூத்துத் துறையில் ஈடுபட்டுள்ள இவர் அரசடி மகா வித்தியாயலத்தில் ஆசிரியராக இருந்த காலத்தில் மாணவர்களைக் கொண்டு பழக்கிய நாட்டுக்கூத்து 1968ம் ஆண்டு மாவட்டப் போட்டியிலும், அகில இலங்கைப் போட்டியிலும் முதலிடம் பெற்றது.

மத்தியஸ் சிங்கோ ஆசிரியர் மோர்சாப்பிட்டி Y.M.C.A விளையாட்டுக் கழகத்தில் இணைந்து கரப்பந்தாட்ட விளையாட்டிலும் ஈடுபட்டார். நாட்டுக்கூத்திற்கு இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி 1998 இல் மண்முனை வடக்குப் பிரதேச செயலகம் பாராட்டிச் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளது. இருபத்தைந்திற்கு மேற்பட்ட நாட்டுக் கூத்துக்களைத் தயாரித்து மேடையேற்றியுள்ளார். இவரால் தயாரிக்கப்பட்ட ராம் ராச்சியம், சுபத்திரா கல்யாணம், அனுமார் கண்ட சீதை, சீதா கல்யாணம், துரியோதனன் போர் பலரதும் பாராட்டுக்களைப் பெற்று பத்திற்கு மேற்பட்ட தடவைகள் அரங்கேற்றம் செய்யப்பட்டன. கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்ற தமிழ் மொழித்தினப் போட்டிகளில் நாட்டுக்கூத்து நடுவராகப் பணியாற்றியுள்ளார். இவரது திறமையை அறிந்த இலங்கை வானொலியினர் (Radio Ceylon) மட்டக்களப்பிற்கு வந்து அவரால் பழக்கப்பட்ட கூத்து ஒன்றினை ஒலிப்பதிவு செய்து சென்றனர். தனது தந்தை வழியில் நாட்டுக் கூத்துப் பிரதிகளை தயாரித்தும் ஆலோசனைகள் வழங்கியும் வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : தம்பிமுத்து செல்வராசா

பிறந்த திகதி : 1923

துறை : கூத்து

இருதயபுரத்தைச் சேர்ந்த தம்பிமுத்து செல்வராசா அண்ணாவியார் காவடி செல்வராசா என்ற புனைப்பெயரில் கூத்துக்களைப் பழக்கும் அண்ணாவியராக. செயற்பட்டு வருகின்றார். இவர் 1965ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை 35இற்கு மேற்பட்ட வடமோடி, நவீன நாட்டுக் கூத்துக்களை பழக்கி மேடையேற்றியுள்ளார். பெண் பாத்திரங்களுக்கு பெண்களையே நடிக்க வைத்த செயல் இவரையே சாரும். தமிழர்கள் மட்டுமே கூத்துக்களை ஆடுவித்த செயலை மாற்றி பறங்கியர் சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் கூத்தில் ஆடவைத்தமையும் பாராட்டத்தக்கது. திரு.செல்வராசா அண்ணாவியாரால் பழக்கப்பட்ட நாட்டுக் கூத்துக்கள் பல கிராமங்கள் தோறும் கோயிற் சடங்குகளின் போதும் கலை நிகழ்ச்சிகளின் போதும் (மேடை) அரங்கேற்றப்பட்டும் பலரதும் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. எழுபத்திரண்டு வயதினைத் தாண்டியுள்ள போதும் கூத்துப் பாடல்களை பாடுவதில் சளைக்காதவராகக் காணப்படுகின்றார்.



பெயர் : அமரர். பொன்னையா ஞானசிங்கம்

துறை : கூத்து

மணல் மட்டிக்களியில் பிறந்த இவர் சின்ன ஊறணியில் வந்துறைந்தார். கனகம்மா என்பவரை மனைவியாகவும், ஏழு பிள்ளைகளின் தந்தையாகவும் விளங்கிய இவர் பிரபல்யமான குழந்தைவேல் அண்ணாவியாரின் கூத்துக்களில் கொப்பி பார்ப்பவராக (ஏடு) இருந்து பின்னர் தானே கூத்துக்களை எழுதத் தொடங்கினார். இவரினால் எழுதப்பட்ட கூத்துக்களும் பழக்கிய கூத்துக்களுமாக பாஞ்சாலி சரிதம், சின்னமுத்துப் போடி, பார்வதி திருமணம், காலமோ கலிகாலம், பக்த அனுமான் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. கோவில் திருவிழாக்களின் போது அங்கு கூத்துக்களை மேடை ஏற்றுவார். திறமை மிக்கவரான குழந்தைவேல் அண்ணாவியாருடன் கூத்துக்களில் ஈடுபட்ட காரணத்தால் இவரிடமும் பல சிறப்புக்கள் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : பொன்னம்பலம் கந்தசாமி

பிறந்த திகதி : 15.07.1929

துறை : கூத்து

புதுமுகத்துவாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் நாட்டுக் கூத்து வாழ்வியலில் அரும் பங்காற்றியுள்ளார். சிறுவயது முதலே கூத்து ஆடுவதில் ஆர்வம் கொண்ட இவர் அருச்சுனன், துரியோதனன், நரகாசூரன், காளி, இலக்குமணன் ஆகிய பாத்திரங்கள் ஏற்று மிகச் சிறப்பாக ஆடியுள்ளார். இவ்வாறு பல்வேறு கூத்துக்களை ஆடியதன் ஊடாகப் பெற்ற அனுபவங்களைக் கொண்டு பிற்காலத்தில் பல கூத்துக் களைப் பழக்கி அரங்கேற்றியுள்ளார். அவ்வாறு கந்தசாமி அவர்கள் பழக்கிய கூத்துக்களுக்கு 'அரசிளங்குமாரி நாடகம்', 'குருசோத்திரன் போர்', 'வாளவீமன்', 'விலாட பர்வம்', 'குசல நாடகம்' ஆகியவை குறிப் பிடக்கூடியவையாகும். மேலும் இவர் பல்வேறு கூத்துக்களையும் இயற்றியுள்ளார். இவர் இயற்றி ஆடிய கூத்துக்களாக 'அரசிளங் குமாரி', 'பப்ரவாகு நாடகம்', 'குருச்வேந்தன் போர்', 'வாளவீமன்', என்பன விளங்குகின்றன. இவரது திறமையைப் பாராட்டி 1987ம் ஆண்டு இந்து கலாசார அமைச்சால் வெள்ளவத்தை புதிய கதிரேசன் மண்ட பத்தில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் மக்கள் கலைமணி என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். நாட்டுக்கூத்துத் துறைக்கே இவர் தமது வாழ் நாளில் பெரும் பகுதியைச் செலவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர்.காளிக்குட்டி கிருஷ்ணபிள்ளை**

**பிறந்த திகதி : 06.03.1932**

**துறை : நாட்டுக்கூத்து, நாட்டாரிலக்கியம்**

**17/13**, காளிகோயில் வீதி, 2ம் குறுக்குப் புன்னைச்சோலையை வதிவிடமாகவும், சித்தாண்டியைப் பிறப்பிடமாகவும் கொண்ட இவர், வடமோடி நாட்டுக்கூத்துக் கலைஞர். அத்துடன் நாட்டாரிலக்கியத்திற் கும் பெரும் பங்காற்றி வருபவராவார்.

தனது தனி முயற்சியினால் தமது இருபத்தேழாவது வயதில் கலையுலகில் காலடியெடுத்து வைத்தவர். தற்போது நம்மத்தியில் இல் லாது இறைபதமடைந்தாலும் இவரது கலைவாழ்க்கையில் விட்டுச் சென்ற எச்சங்கள் இன்றும் இவர் பெயரை நிலைநாட்டிக்கொண்டே யிருக்கிறது. இவர் சிறந்த வடமோடி நாட்டுக்கூத்து அண்ணாவியாவார். இவரால் 'அரசன் ஆணை', 'கழுவரக்கன்வதை', 'அனுருத்திரன்', 'அதி மேதை', 'சசிகலை சுயம்பரம்' போன்ற வடமோடி நாட்டுக்கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. இவற்றைவிட 'வள்ளி திருமணம்', 'வள்ளி அவதாரம்', 'பாக்கியசாலி', 'பவள ரதம்', 'கடலையால் வந்த கலகம்' போன்ற புராண, சமூக நாடகங்களையும் பழக்கி நடித்து நாடகத் துறை யிலும் தனக்கென ஓர் தனி இடத்தினைப் பிடித்தவர்.

அத்தோடு இன்றும் புன்னைச்சோலைக் காளிகோயிலில் இவரின் நாட்டாரிலக்கியப் படைப்புக்களான காவடிப் பாடல்கள், கும்மி, காவி யப்பாடல்கள் பாடப்பட்டுவருவதும், சரஸ்வதி தோத்திரப் பாடல்கள், மாண்டாரைப் பாடிடும் இரங்கற் பாக்களும் இவரின் கவித்துவத்திற்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.சரவணமுத்து செல்லையா
பிறந்த திகதி : 12.03.1932
துறை : கூத்து

மட்டக்களப்பு திராய்மடு 5ம் குறுக்கில் வசித்துவரும் இவர், கூத்துக்கலைக்கு அதிக வரவேற்பு இருந்த காலத்தில் இவர் தனது 15, 16வது வயதிலேயே இக்கலையில் ஈடுகாட்டத் தொடங்கினார். இவர் தம்பிப்பிள்ளை, சதாசிவம், குழந்தைவேல் பழக்கிய கூத்துக் களில் ஆடி அனுபவம் பெற்றார். செல்லையா அவர்கள் குசலவ நாட கம், 17ம் போர், 18ம் போர், தர்மபுத்திரன், 14ம் போர், 13ம் போர், சரர சந்தன் போர், அர்ச்சுணன் பாசுபதம், துரோணர் யுத்தம், குருக்கேத்திரன் போர், அரசிளங்குமாரி ஆகிய கூத்துக்களை ஆடி அனுபவம் பெற்றுள்ளார். பெற்ற அனுபவத்தை வைத்து கூத்துக்களைப் பழக்கவும், செய்து பெயர் பெற்ற அண்ணாவியாரானார். இவரால் இயக்கம் பெற்று பொதுமக்க ளின் மத்தியில் பெரும் ஆதரவு பெற்ற கூத்துக்களில் குறிப்பிடத்தக்கவை. குசலவ நாடகம், நச்சுப் பொதிகை, கோவலன் சரித்திரம், பரிமிள தாசன், சிவன் அருள், மயில்ராவணன், அருச்சுணன் பாசுவதம், 14ம் போர் என்ற கூத்துக்களாகும். நடித்து, ஆடி, இயக்கி, பழக்கி ஆட வைத்த அனுபவத்தை வைத்து 'மின்னொளிபுறம்' என்ற கூத்தினை இயற்றி அரங்கேற்றிப் பாராட்டைப் பெற்றார். குசலவன் நாடகத்தை யும், கோவலன் கண்ணகி சரித்திரம், நச்சுப்பொய்கை ஆகிய மூன்று கூத்துக்களையும், புன்னைச் சோலையில் அரங்கேற்றி பொதுமக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அர்ச்சுணன் தவசு, சிவனருள் மல்யுத்தம் ஆகிய கூத்துக்களை பாலமீன்மடு கிராமத்தில் அரங்கேற்றிப் பாராட்டுப் பெற்றார். திரு.செல்லையா அவர்களின் கலைப் பணியையும், கூத்துக்கலை அழிந்துவிடாமலும், மறைந்துவிடாமலும் தனக்குப் பின் ஒரு பரம்பரையை இருக்க வேண்டுமென பெருமுயற்சி யுடன் மக்களை உருவாக்கும் இவரின் கலைப்பணியைக் கௌரவிக்கு முகமாக மண்முனை கலாசாரப் பேரவையினர் 2004ம் ஆண்டு இவ ருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அழகன் அழகரெட்ணம்
பிறந்த திகதி : 27.09.1932
துறை : கூத்து, கிராமியக் கலை

**போ**ரைதீவைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு புன்னைச் சோலை, காளி கோயில் வீதி, இல.14/2ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இவர், சிறு வயதிலிருந்தே கிராமியக் கலைகளில் ஈடுபாடுடைய இவர் நாட்டுக்கூத்து, நாடகம், கரகம், கும்மி, நாட்டு வைத்தியம், மந்திரம் என்பவற்றில் விற்பன்னராக இயங்கி வருகிறார். மட்/விபுலாந்தா இசை நடனக் கல்லூரி திறப்பு விழாவில் கூத்துக்கு (அண்ணாவியராக) அரும் பணியாற்றுவதைக் கருத்திற்கொண்டு இந்து கலாசார அமைச்சினால் இவர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை பல கூத்துக்கள் ஆடினாலும் அருந்தவராணி, குருகேத்திரம் நாடகம், சித்திரலேகா, அரசன் ஆணை, புலேந்திரன் கனவு மாலை என்ற கூத்துக்களுக்கு அண்ணாவியராகவும் விளங்கி யுள்ளார். வள்ளி திருமணம், திருவிளையாடல், ஆயிரம் தலைவாங் கிய அபூர்வ சிந்தாமணி நாடகங்கள் காத்தவராயன் கரகாட்டம், மாரியம்மன் கோலாட்டம், மாரியம்மன் கும்மியென இவரின் இயங்கு தளம் நீளுகிறது. நாட்டு வைத்தியத்துறையிலும் இவரின் ஈடுபாடு அதிகமாகவுள்ளது. பரம்பரை பரம்பரையாக இவரது குடும்பத்தினர் விசக்கடி, குடலேற்றம், உடல் கோளாறு, சுளுக்குப் போன்றவற்றிற்கு உன்னத சேவையாற்றி வந்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாகவே இவரது சேவை மிளர்கிறது.

தற்போது புன்னைச்சோலைக் காளிகோயிலின் பிரதம பூசகராகப் பணியாற்றும் இவர் அருகிப் போகும் மந்திரக் கலைக்கு புத்துயிரளித்து வருகின்றார். குறிபார்த்தல், அஞ்சனம் பார்த்தல், பில்லிசூனியம் நீக் கல், நீர்மந்திரித்தல் என்பவற்றின் மூலம் தீர்க்க முடியாத பல நோய் களுக்கும் வாழ்வியல் துன்பங்களுக்கும் நிவாரணமளித்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர் : வேல்முருகு செல்வராசா**
**பிறந்த திகதி : 02.10.1932**
**துறை : கூத்து**

மட்டக்களப்பு பாலமீன்மடுவைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட இவர் கூத்துக் கலையிலிருந்த ஆர்வத்தினால் தனது பன்னிரண்டாவது வயதிலேயே கூத்து ஆடத் தொடங்கினார். இவருக்கு திரு. சதாசிவம் என்ற அண்ணாவியார் ஆரம்பத்தில் பெண் பாத்திரத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் வழங்கியதுடன் அவரே இவரது குருவாகவும் விளங்கினார். கிராமப்புறங்களில் நாட்டுக் கூத்திற்கு மிகவும் வரவேற்பும், கிராக்கியுமிருந்தமையினால் கிராமப் புறங்களிலேயே அதிக கூத்தினை ஆடினார். ஆண் பாத்திரத்தில் இவர் ஆடிய கூத்துக்கள் 16ம் போரில் கிருஸ்ணருக்கு வேடமேறினார். அர்ச்சுணன் வீமன், சகாதேவன் போன்ற பாத்திரங்களிலும் ஆடினார்.

ஐம்பது வருடம் இத்துறையில் தான் அனுபவம் பெற்று கூத்து நுணுக்கங்களையும் கற்றுத் தேறிய பின்னர் இவர் பிற்காலத்தில் அண்ணாவியாராக பல கூத்துக்களைப் பழக்கினார். அவர் பழக்கி அரங்கேற்றிய கூத்துக்களில் 'குசல நாடகம்', 'வீர அனுமன்', 'மயில் இராமன்' ஆகியவை முக்கியமானவையாக விளங்குகின்றது. இக்கதைகள் புத்தகவடிவிலிருந்ததை கூத்தாக வடிவமைத்து (பாடல்களால்) அரங்கேற்றி இவர் புகழ்பெற்றார்.

இவர் இக் கூத்துக்கலைக்கு ஆற்றிய அரும் பணிக்காகவும், வெளிக்காட்டிய திறமைக்காகவும் இந்து கலாசார அமைச்சு இவரைப் பாராட்டி கௌரவித்து சான்றிதழும் வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் தம்பிப்பிள்ளை கனகையா

பிறந்த திகதி : 01.01.1933

துறை : கூத்து

மட்டக்களப்பு புதூரைப் பிறப்பிடமாகவும், திசவீரசிங்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், கூத்து ஆடுவதிலும், கூத்துப் பழக்குவதிலும், ஒப்பனை செய்வதிலும் சிறந்து விளங்கியவர். இவரின் தந்தையார் தம்பிப்பிள்ளை அவர்கள் கூத்து ஆடுவதில் வல்லவராக இருந்ததால் இவருக்கும் கூத்து ஆடுவதில் ஆர்வம் உண்டாயிற்று. வடமோடி நாட்டுக்கூத்தில் சிறந்தவர் என்பதற்கு மட்/வின்சன்ட் மகளீர் உயர்தரப் பாடசாலை, மட்/புனித சிசிலியா மகா வித்தியாலயம், மட்/வந்தாறு மூலை மகா வித்தியாலயம் தமிழ்த் தினப் போட்டியில் முதலாம் இடம்பெற்றமை சான்று பகிரும். இவர் பழக்கிய நாட்டுக் கூத்துக்களாவன; 'இராவணேசன்', 'தாட்சாயினி கல்யாணம்', 'காத்தவராயன்' என்பன வாகும். மேலும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலும் இவரது நாட்டுக் கூத்து மேடையேற்றப்பட்டு ஒலிபரப்பானது.

இவருக்கு வடமோடி நாட்டுக்கூத்தில் சிறந்த அண்ணாவியார் என்ற கௌரவப் பட்டமும், சான்றிதழும், கேடயமும் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். மேலும் இவருக்கு அரசாங்கத்தினால் மாதாந்த ஓய்வூதியப் பணமும் வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கதாகும். இவர் இறக்கும் வரைக்கும் கூத்துப் பழக்குவதிலும் ஆர்வமாக இருந்தார். இவரது ஒப்பனைப் பொருட்கள் அனைத்தும் இவரது மாணவர்கள் மூலம் இன்று பயன்படுத்தப்பட்டு உயிர்பெற்று இருக்கிறது. இவர் 11.06.2004ல் இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : முருகுப்பிள்ளை சிவஞானமூர்த்தி

பிறந்த திகதி : 06.10.1935

துறை : கூத்து

இலக்கம் 19, இருதயபுரம், மட்டக்களப்பைச் சேர்ந்த இவர், தனது 21 வயதிலிருந்தே இக்கூத்துத் துறையில் தடம்பதித்தவர். தற்போது (2010) இறையடி சேர்ந்தாலும், அவரது கம்பீரமான இனிமையான குரலொலியாலும், மத்தளத்தைப் பேசவைக்கும் கைவண்ண வித்தகத்தாலும் கூத்துப் பிரியர்களின் மத்தியில் பூத்துக்குலுங்கிக் கொண்டேயிருக்கின்றார். 1958 இல் மட்/அரசடி மகாஜனக் கல்லூரியிலும் நாட்டுக்கூத்து, கரகம், கும்மி ஆகியவற்றிற்கு மத்தளம் வாசித்து ஆரம்பமாகிய கலைப் பயணத்தில் ஈடுபட்டவர். வேலுப்பிள்ளை முத்துவேல் என்பவரைத் தன் வழிகாட்டியென்று கூறுவார். இவர் தனது ஊரில் 25ற்கு மேற்பட்ட கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றியுள்ளார். அவற்றில் 'பவளக்கொடி', 'சுபத்திரை திருமணம்', 'அகலிகை', 'வீரகுமாரன்', 'தக்கன்யாகம்', 'கீசகன் மரணம்', 'ஞானக்கொழுந்து', 'சராசந்தன் போர்', 'கலியானை வென்ற காவலர்கள்' என்பனவாகும். அத்தோடு நாடகக் கலையிலும் ஈடுபாடுடையவர். கூடுதலாக வடமோடி நாட்டுக்கூத்தின் பிரபல மத்தள விற்பண்ணராகவே விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர், மட்/செங்கலடி மத்திய கல்லூரியி னால் கடந்த (2009) வரை தமிழ்மொழித் தினப் போட்டிகளில் பத்து வருடங்களாக மாகாண மட்டத்தில் தொடர்ந்து முதலிடம் பெற்றுவந்த வடமோடிக் கூத்திற்கும், எட்டு வருடங்களாக முதலிடம் பெற்றுவரும் விசேட கூத்திற்கும் மத்தாள அண்ணாவியாராகக் கடமைபுரிந்து தன் திறமையை நடுவர்கள் முதல் பார்வையாளர் வரை வியப்பில் ஆழ்த்தியவர். இவர் பல நற்சான்றிதழ்களைப் பெற்று பொன்னாடைகளும் போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பது இவர் கலையுலகிற்கு ஆற்றிய அளப்பரிய சேவையினைக் கட்டியும் கூறி நிற்கின்றதென்பது மிகவும் தெட்டத்தெளிவாகின்றது. இவர் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் இவரின் கூத்துக்கலையை மட்/செங்கலடி மத்திய கல்லூரி ஆசிரியரான திரு.நா.சிவலிங்கேஸ்வரன் அழியாது முன்னெடுக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : மாரிமுத்து பஞ்சாச்சரக்குருக்கள்

பிறந்த திகதி : 21.07.1946

துறை : கூத்து

மட்டக்களப்பில் இல.40/38, எதிர்மன்னசிங்கம் வீதி, அமிர்தகழியைப் பிறப்பிடமாகவும், தற்போதைய வசிப்பிடமாவும் கொண்டு வாழும் சிறந்த நாட்டுக்கூத்துத் தயாரித்து நெறியாள்கை செய்யும் அண்ணாவியாராகிய இவரை, காசிமா பஞ்சாட்சரக்குருக்கள் என்றே அனைவரும் செல்லமாக அழைப்பர். இவர் நாட்டுக்கூத்துக் கலையில் தமக்கென ஓர் இடத்தினைப் பிடித்துள்ளார் என்பது ஊர்மக்கள் அவர் மேல் வைத்திருக்கும் மதிப்பும், மரியாதையும் எடுத்துக் காட்டுகின்றது.

1986 இல் கலை வாழ்க்கையில் காலடியெடுத்து வைத்த இவர், ஆலய பூசகராவார். இவர் கலையுலகில் காலடி எடுத்து வைக்க வழிகாட்டியாக இருந்தவர் தமது மதிப்புக்குரிய உயர்திரு ஆசிரிய திலகம் மத்தியூஸ் சிங்கோ ஆவார். இராமநாடகம், பதினெட்டாம் போர் என முப்பதிற்கும் மேற்பட்ட வடமோடிக் கூத்துக்களைத் தயாரித்து ஆலய உற்சவங்களிலும், பொது மேடைகளிலும் மேடையேற்றி பாராட்டுக்களைப் பெற்றவர்.

காமதகணம், மார்க்கண்டேயர், சத்தியவான் சாவித்திரியாகிய வடமோடிக் கூத்துக்களுக்கான பரிசில்களையும், பாராட்டுக்களையும் பொன்னாடை போர்த்திக் கௌரவங்களையும் பெற்றவர். 1996 இல் முத்தமிழ் விழாவில் இரண்டாம் இடத்தையும், 1999 இல் முத்தமிழ் விழாவில் நாட்டுக்கூத்துக்களுக்கான போட்டிகளில் பரிசுகளையும் தயாரிப்பாளர் என்பதற்காகப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : செல்லையா சிவநாயகம்**

**பிறந்த திகதி : 14.10.1948**

**துறை : கூத்து**


இலக்கம் 17/23, ஜேம்ஸ் வீதி, சீலாமுனை, மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இவர், கூத்துருவாக்கத்தில் பூத்துக் குலுங்கும் வளமிக்க மலரிவரெனக் கூறுதல் சாலவும் பொருந்தும். வடமோடியில் பல புராண, இதிகாசக் கதைகளை வைத்தும் அவ்வப்போதைய சூழலுக்கேற்ப சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் சம்பவங்களை நவீனத்துவப்படுத்தும் நவீன, விசேட கூத்துக்களாக வடமோடியில் ஆக்கியளிப்பதில் கைவந்த கலைஞராக இவர் மிளிர்கின்றார்.

1965 முதல் இன்றுவரை கூத்து மீளுருவாக்கப்பணியில் ஈடுபட்டுள்ள இவர், தமது வழிகாட்டிகளாக மு.அ.கிருஷ்ணபிள்ளை அண்ணாவியார், திரு.சி.ஜெயசங்கர் (கூத்து மீளுருவாக்க வழிகாட்டி, கிழக்குப் பல்கலைக்கழகம்) கூறுவதுடன் அருச்சுணன் பெற்ற பாசுபதம் என்பதை தமது கன்னிப் படைப்பாக ஆரம்பித்து, பதினைந்து படைப்புக்களைப் படைத்துள்ளதுள்ளது. ஒருசில படைப்புக்கள் தவிர ஏனையவை அரங்கேற்றப்பட்ட கூத்துக்களாக விளங்குவதை மன மகிழ்வுடன் கூறுகின்றார்.

சிம்மாசனப் போர், அபிமன்யு இலக்கணன் வதை, சீதை சூர்ப்பனகை வதை, அல்லி, சீதையின் துயரம் ஆகிய இதிகாசக் கதைகளைக் கொண்ட கூத்துக்களை உருவாக்கியுள்ளார். இவை அனைத்தும் ஸ்ரீ நர சிம்மர் ஆலயத்தில் அரங்கேற்றி வைக்கப்பட்ட பெருமைக்குரியவராவதோடு, நரகாசூரன்கதை, மழைப்பழம், சதிவதனன் மீட்ட சமூக மேம் பாடு போன்றவைகள் மீளுருவாக்கங்கள் பெற்றபோதும் அரங்கேற்றப்படவில்லையென ஆதங்கம் உள்ளவராகவே இருக்கின்றார். ஏட்டு அண்ணாவியராகயிருந்து கூத்தர்களுக்கு பாடவெடுத்துக் கொடுத்து நாடகத்தை நடத்திச் செல்வதில் இவர் கைவந்த கலைஞராவார் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. இவரது ஏனைய படைப்புக்களும் எதிர் காலத்தில் அரங்கேற்றப்பட ஆண்டவன் ஆவன செய்ய வேண்டுமென நாமும் பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.இராசையா தர்மராஜா
பிறந்த திகதி : 13.09.1953
துறை : கூத்து

மட்டக்களப்பு புதுமுகத்தவாரத்தைச் சேர்ந்த இவர், தனது இளம் பிராயத்திலே இக்கலையில் ஆர்வம்கொண்டு பல நாட்டுக்கூத்துக்களில் ஆடினார். இவர் ஆடிய கூத்துக்களைவிட அண்ணாவியராகக் பழக்கிய கூத்துக்கள் அதிகம். இவரது கணீரென்ற குரல் இவர் புகழ்பெறுவதற்கு மிகவும் உறுதுணையாய் அமைந்திருந்தது. அண்ணாவியராகப் பழக்கிய நாடகங்கள் அருச்சுணன் பாசுபதம், பாதுகா பட்டாபிஷேகம், சுபத்திரா கல்யாணம், அபிமன்னனன், பப்பிரவாகன், அரசிளங்குமரி, சராசந்தன் போர் போன்றவையாகும். 1997ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிக்கு மட்/விவேகானந்தா மகளீர் மகா வித்தி யாலய மாணவரைக் கொண்டு 'பாதுகா பட்டாபிஷேகம்' என்னும் வடமோடிக் கூத்து மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது. இதன் பொருட்டு இப்பாடசாலை அதிபர் திரு.இ.தருமராசாவும் ஆசிரியைகளும் பொன்னாடை போர்த்திப் பாராட்டி பொற்கிளியும் கொடுத்து சான்றிதழும் வழங்கினார்கள்.

1999ம், 2000ம் ஆண்டுகளில் மட்/செங்கலடி மகா வித்தியாலய மாணவர்களைக் கொண்டு தயாரித்த 'அர்ச்சுணன் பாசுபதம்' என்னும் கூத்து மட்டக்களப்பு மாவட்ட ரீதியிலும், மாகாணமட்டத்திலும் முதலாம் இடங்களைப் பெற்றது சிறப்பம்சமாகும். இதன் நிமித்தம் இப்பாடசாலையின் அதிபர் திரு.வீ.கந்தசாமி அவர்களது ஆசிரியர்களாலும் பொற்கிளி கொடுத்துப் பாராட்டிச் சான்றிதழ்களும் வழங்கினார்கள்.

திரு.தர்மராசா அவர்கள் பல்வேறு தோல் வைத்தியங்களையும் இலகுவாகக் கையாளும் ஒரு சிறந்த மரபுவழி அண்ணாவியாராவார். தற்கால இளம் கலைஞர்களுக்கு கூத்துக் கலையில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்திவரும் இவர் நல் அடக்கமும் பணிவுமுள்ளவராவார். இவரின் திறமையைக் கண்ணுற்ற பேராசிரியர் மௌனகுரு அவர்கள் 2000ம் ஆண்டு இவர் திறமையைப் பாராட்டிச் சான்றிதழ் வழங்கியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| பெயர் | : திரு.சின்னையா ஞானசேகரம் |
| பிறந்த திகதி | : 10.10.1956 |
| துறை | : கூத்து |

மட்டக்களப்பு சீலாமுனையைப் பிறப்பிடாகக் கொண்ட இக்கலைஞர் தற்பொழுது இல.460/5, வாவிக்கரை வீதியில் வாழ்ந்து வருகின்றார். நாட்டுக் கூத்துத் துறையில் ஆர்வமிக்க இவர் நடித்துப் பழக்குதல், மத்தளம் வாசித் தல், உடுக்கடித்தல், பறைமேளம் வாசித்தல், கூத்து பழக்குதல் போன்ற செயற்பாடுகளில் முன்னிலை வகித்து வருகிறார். பரம்பரையாக நாட்டுக்கூத் துக் கலையில் ஈடுபாடுகொண்ட இவரின் தந்தையார் பாரம்பரிய நாட்டுக்கூத் தின் அண்ணாவியார் ஆவார். மு.அ.பூ. கிருஷ்ணப்பிள்ளை அண்ணாவியா ரை யும் தனது தந்தையாகிய பொ.சின்னையாவையும் தனது குருவாகக் கொண்ட இவர் தனது 10 வயதில் இருந்தே கூத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இளமைக் காலத்தில் தனது ஆற்றலை வெளிக்காட்டும் முகமாக பத் மாவதி நாடகத்தில் பத்மாவதியாகவும், இராவனேசனின் இலட்சுமணனாக வும், பிரமராட்சத யுத்தத்தில் வினோதவல்லி, கோமதவஞ்சி ஆகிய வேடங் களிலும் தர்மபுத்திர நாடகத்தில் துரோபதியாகவும் அருச்சுணன் பாசுபதத்தில் ஏலகன்னி, பேரண்டரக்கி போன்ற ஆண், பெண் இரு வேடங்களை ஏற்று நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். 1990 வரை உதவியண்ணா வியராகச் செயற்பட்டு 1991ற்குப் பின் பாண்டித்தியம் பெற்ற இவர், அண் ணாவியராக குருக்கேத்திரன் போர், தாட்சாயினி கல்யாணம், சங்காரம், இராவணேசன், இராம நாடகம், பிரமராட்சத யுத்தம், தர்மபுத்திர நாடகம், அருச்சுணன் பாசுபதம், சிம்மாசன யுத்தம் போன்ற வடமோடிக் கூத்துக்களை மேடையேற்றி அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

தனது திறமைக்குப் பேராசிரியர் மௌனகுரு, இங்கிலாந்து பல்கலைக் கழக பேராசிரியர் ஜேம்ஸ் தோம்சனாலும் பொன்னாடை போர்த்திக் கௌர விக்கப்பட்ட இவர், 2003 பிரதேச செயலக முத்தமிழ் விழாவில் அண்ணாவி யாருக்கான விருதும் கௌரவமும் கிடைக்கப் பெற்றதுடன், மூன்றாவது கண் உள்ளூர் அறிவுதிறன் செயற்பாட்டக்குழு 2003 இல் நிகழ்த்திய அண்ணாவியார் கௌரவிப்பையும், சிறப்பு நூல் வெளியீட்டையும் வழங்கி இவரின் கலைப்பணியைக் கௌரவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : வேலாப்போடி செல்வநாயகம்
பிறந்த திகதி : 27.08.1950
துறை : கூத்து, நாடகம்

இல.29/9, தும்புத் தொழில் நிலைய வீதி, சேற்றுக்குடா, மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், நாட்டுக்கூத்து, நாடகத்துறைகளில் நகைச் சுவைப் பாத்திரங்கள் ஏற்றுத் திறம்பட நடித்து மக்கள் மனதில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்தவர். நாட்டுக்கூத்து, நாடகங்களைத் தயாரித்து நெறியாள்கை செய்யும் மிகத் திறனுள்ள தயாரிப்பாளர். சுயமாகவே நாட்டுக்கூத்துக் கலையில் ஈடுபாடு கொண்டவர். 1996 முத்தமிழ் விழாவில் வள்ளி திருமண வடமோடிக் கூத்தில் பங்குபற்றியமைக்கான சான்றிதழும் பாராட்டும் பெற்றவர். 1997 முத்தமிழ் விழாவில் மார்க்கண்டேயர் வடமோடி நாட்டுக்கூத்துத் தயாரிப்புக்கான இரண்டாமிடத்தைப் பெற்று சான்றிதழும் பாராட்டும் பெற்ற வர். இவர் நகைச்சுவைப் பாத்திரங்கள் ஏற்று நடித்து தயாரித்த நாடகங்கள் பல. அவற்றுள் மக்கள் மனதில் தடம்பதித்த, மறக்கமுடியாத நாடகங்கள் 'மாண்டவன் மீண்ட மாயம்', 'குரு', 'மட்டி மடையன்', 'மிலேச்சன்', 'மேதை' இந் நாடகங்களில் நடித்தமைக்காகப் பொன்னாடைகள் போர்த்திக் கௌரவிக்கப்பட்டுப் பாராட்டுக்களையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



பெயர் : தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம்
பிறந்த திகதி : 17.07.1959
துறை : நாட்டுக்கூத்து (நாடகம்)

சின்ன ஊறணியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இவர், நாட்டுக்கூத்து, நாடகத்துறையில் ஈடுபட்டு, இப்பொழுது செயற்பட்டுக் கொண்டு வரும் கலைஞராவார். தனது தந்தை ஓர் அண்ணாவியாராகையால் இளமையிலிருந்தே அதாவது பதினைந்தாவது வயது முதல் இத்துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். ஞானசிங்கம் அண்ணாவியாருடன் சேர்ந்து கூத்துக்களைப் பழக்கிய இவர், தனியா இந்திரசித், சிவனருள் போன்றவைகளைப் பழக்கியுள்ளார் (அண்ணாவியார்) என்பதும் குறிப்பிடத்தக்கது. 'பார்வதி திருமணம்' இதில் பார்வதியாகவும், 'இராவணேசன்' இல் (தசரதன், விபுசனன்) ஆகிய இரு வேடங்களிலும் நடித்து மக்கள் மனதில் மறக்கமுடியாத இடம் பிடித்ததோடு, 'கன்னமுத்துப் போடி' இல் பெண் பாத்திரமும், 'காலமோ கலிகாலம்' இதில் குடிகாரனாக நடித்து நிலையான ஓர் இடத்தை தனக்கென வகித்துக்கொண்டவர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் முருகுப்பிள்ளை கந்தசாமி

துறை : கூத்து

மட்டக்களப்பு பாலமீன்மடுவைப்பிறப்பிடமாகவும் நாவலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இக்கூத்துக் கலைஞர் தற்போது இவ்வுல கைவிட்டு நீங்கி சென்றிருந்தா லும் அவரது கலைப்பணி மூலமாக எம்மோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நாட்டுக்கூத்துப் பணியில் வடமோடியை தனது கைவந்த கலையாகக் கொண்டிருந்த இவர், பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். 1953 ஆம் ஆண்டிலிருந்தே நாட்டுக்கூத்தினில் நடிக்கத் தொடங்கிய இவர், குருக்கேத்திரன் போரில் பெருந்திருவாள், பதினான்காம் போரில் அருச்சுனன், வாளவீமன் சண்டையில் சுந்தரியாகவும் பாத்திரமேற்று மேடையேறி நடித்து தனது நடிப்பாற்றலால் பலரது பாராட்டுக்களை யும் பெற்றுக்கொண்டார். தனது இளமைக் காலத்தில் இக்கூத்துக் கலையை ஆர்வத்துடன் பின்பற்றிய இவர் தொடர்ந்தும் கர்ணன் சண் டையில் கர்ணன், துச்சாதனன் போன்ற வேடங்களையும், அருச்சுனன் (பாசுபதம்) கூத்தில் வேடனாகவும், காளியாகவும் இரட்டை வேடங்க ளில் நடித்து மக்கள் பாராட்டைப் பெற்றுள்ளார். இவர் மட்/நாவலடி நாமகள் வித்தியாலய மாணவர்களுக்கு 'பாசுபதம்' என்னும் வடமோ டிக் கூத்தைத் தமிழ்தினப் போட்டிக்கு பழக்கி வெற்றிபெற வழிவகுத்தார்.

கூத்துக்கலையில் வடமோடி நுணுக்கங்களை அறிந்து, அதில் பாண்டித்தியம் பெற்று அண்ணாவியார் என்ற நிலைக்குத் தன்னை வளர்த்த இவர், 13ம் போர், சராசந்தன் போர், சுந்தரி கல்யாணம், பாசு பதம், 14ம் போர் ஆகிய கூத்துக்களைப் பழக்கி பாலமீன்மடு, மோசாப் பிட்டி, புன்னைச்சோலை, நாவலடி போன்ற இடங்களில் மேடையேற்றி பாராட்டுக்களைப் பெற்ற இவர் வடமோடிக் கூத்தில் நாற்பத்தைந்து வருடகால அனுபவத்தைக் கொண்டு 1965ல் அருச்சுணன் (பாசுபதம், நாட்டுக்கூத்தை பாடி முடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

துறை : கூத்து

அமிர்தகழியைப் பிறப்பிடமாகவும், சின்ன ஊறணியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், தற்பொழுது நம் மத்தியில் இல்லாவிட்டாலும் நாட்டுக்கூத்துக்கு இவர் ஆற்றிய அளப்பரிய சேவை நாட்டுக்கூத்துப் பிரியர்கள் மனதில் என்றும் அழியாத கோலமாக மிளிரும் என்பது இவரது கூத்தின் ஆடல், பாடல், இவர் அண்ணாவியராகப் பழக்கிய கூத்துக்களும் மறக்க முடியாதவை. இவரால் உருவாக்கப்பட்ட கூத்துக்கள் உருவாக்கிய அண்ணாவிமார்கள் எம்மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றனர். இவர்களின் இதயத்தில் என்றும் இவர் ஏற்றிய தீபமாக ஒளிர்வார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சிறு வயதிலிருந்தே கூத்துக் கலையை இரசிக்கத் தொடங்கிய இவர், தனது பதினாறாவது வயதில் இத்துறைக்கு 'அரிச்சந்திரமதி' கூத்தில் 'சந்திரமதி' பாத்திரத்தில் தனது பாத்திரத்தைப் பதித்தவர். ஆடல், பாடல் அமைப்பில் சந்திரமதியைத் தத்துருவமாக கண்முன் நிறுத்திய கலைஞர் என்றால் மிகையாகாது. அடுத்து 'ஆரவல்லி, சூரவல்லி'யில் ஆரவல்லிக்கு நடித்து அக்கால ஆடவர்களின் அகத்தில் அழியாத இடம்பிடித்தவராவார். பின்னர் அரிச்சந்திர நாடகம், பப்பிரவாகன், பாஞ்சாலி சபதம், ஆரவல்லி சூரவல்லி, ஆதி நாடகம், குருக்கேத்திரன் போர், வாள அபிமன்யூ போன்ற வட தென் மோடி நாட்டுக் கூத்துக்களைப் பழக்கி (அண்ணாவியார்) அரங்கேற்றிய அழியாப் புகழ்படைத்த அண்ணாவியாராவார். அத்துடன் இவர் பல அண்ணாவிமார்களை உருவாக்கியவர் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.எதிர்மன்னசிங்கம் பிரியகாந்தன்**

**பிறந்த திகதி : 18.021973**

**துறை : கூத்து**

**ஆ**சிரியரான இக்கலைஞர், திசவீரசிங்கம் சதுக்கத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர். வில்லிசை, கதாபிரசங்கம், வடமோடி கூத்து, சிந்துநடை, விசேட கூத்து மற்றும் நாடகம் ஆகிய கலைத்துறையில் ஈடுபாடு கொண்டவர். பரம்பரையாகக் கூத்துக் கலையில் ஈடுபாடு கொண்ட இவரின் தந்தையார் முன்னாள் கலாசாரப் பணிப்பாளர் என்.எதிர் மன்னசிங்கம் அவர்கள் ஆவார். கூத்துக் கலையையும் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் ஆய்வுசெய்து வரும் தந்தையின் வழியில் இன்றுவரை பாரம்பரியத்தைக் கட்டிக் காத்து வருகின்றார். தனது 10 வயது முதல் பாடசாலையில் வில்லுப்பாட்டுப் போட்டிகளில் மேடையேறிய இவர், "சிறுவர் நளின கலாமன்றத்தின்" ஊடாக பல வில்லுப்பாட்டுப் போட்டியில் வெற்றியீட்டி சாதனைகளையும் பாராட்டுக்களையும் பெற்றார். மாஸ்டர் சிவலிங்கம், திருமலை சாம்பசிவம் ஐயர் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் தனக்கென ஒரு வில்லிசைப் பாணியைக் கொடையாகக் கொண்டு 1991, 1992ம் ஆண்டுகளில் தமிழ்மொழித் தினப் போட்டியில் "தேசிய மட்டத்தில்" 1ம் இடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்று தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்துள்ளார். இதுவரை இவரால் மேடையேறிய வில்லிசைகளான, 'கைகேயி பெற்ற வரம்', 'ஒற்றுமையே உயர்வு தரும்', 'சீதா சுயம்பரம்', 'திருநீல கண்ட நாயனார்', 'கண்ணகி சிலம்பு', 'பாஞ்சாலி சபதம்', 'தாட்சாயினி கல்யாணம்', 'செஞ்சோற்றுக்கடன்' போன்றவை இலங்கையின் பல பாகங்களிலும் மற்றும் முத்துமாரியம்மன் கோயில், திருமலை திருக்கோணேஸ்வரர் ஆலயம், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் போன்ற ஆலயங்களிலும் மேடையேறி பாராட்டுக்களையும், கௌரவங்களையும் பெற்றுள்ளன. இதில் சீதாசுயம்பரம் 1992ம் ஆண்டு இலங்கை ரூபவாகினியில் 'குருகெதர' நிகழ்ச்சியில் ஒளிபரப்பப்பட்டது. ஏறக்குறைய 100க்கு மேற்பட்ட வில்லிசைக் கச்சேரியை நடாத்தி பாராட்டுப் பெற்றமையால் இவருக்கு 'வில்லிசைவாணர்' என்ற பட்டம் கௌரவ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி.தங்கேஸ்வரியினால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. வில்லிசை ஆக்கம், விசேட கூத்து ஆக்கம், சிந்துநடை கூத்து ஆக்கம் போன்ற பல துறைகளிலும் ஆற்றல்மிக்க இவர், நாட்டுக் கூத்து சிறந்தநெறியாள்கைக்கான 2000ம் ஆண்டு தேசிய இளைஞர் விருதினை தன்வசமாக்கி இன்றும் தொடர்ந்து பல சாதனைகள் புரிந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் இராசையா குழந்தைவேல்

துறை : இசை

கம்பீரமான குரலில் பாடி அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய இசைக் கலைஞர் அமரர்.இராசையா குழந்தைவேல் அவர்கள் மட்டக்களப்பு புளியந்தீவிலே வசித்துவந்தவராவார்.

இவர் சிறுபராயத்திலிருந்தே இசைத் துறையில் ஈடுபாடு கொண்டவராகக் காணப்பட்டார். அதனால் இசை ஆசிரியர்களிடம் சங்கீதக் கலையை முறையாகக் கற்றுக்கொண்டார். 1946ம் ஆண்டு அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சங்கீத விரிவுரையாளராகயிருந்து பல மாணவர்களுக்கு சங்கீதத்தைக் கற்பித்தார். 1943ம் ஆண்டிலிருந்து ஆலயந்தோறும் பண்ணிசை பாடி வந்தார். அதுமட்டுமல்லாது ஆலயங்களிலும் சமய நிறுவனங்களிலும் தனது வீட்டிலும் மாணவர்களுக்கு பண்ணிசை வகுப்புக்களையும் நடாத்தி வந்தார். இவருக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் சுவாமி விபுலானந்தரிடம் கல்வி கற்றமையாகும். வண்ணாப் பண்ணையிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்திலிருந்து அழைத்துவரப்பட்டு சிவானந்த வித்தியாலயத்தில் கல்வி பயின்றார். 1936ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் அவர்கள் தமிழ்ச் சொல்லாக்கல் மகா நாட்டிற்கு இவரையும் அழைத்துச் சென்றார்.

காஞ்சிபுரம் மெய்கண்டான் ஆதீனம், நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் போன்றவையும் சுவாமி சுத்தானந்தர் போன்ற பெரியவர்களும் இவருக்குப் பல பாராட்டுக்களை வழங்கிக் கௌரவித்தனர். 1993ம் ஆண்டு இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு இவருக்கு 'அருட் கலைத்திலகம்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. அத்தோடு 'பண்ணிசை வேந்தர்', 'திருமறை இசைமணி', 'தேவகானசிரோமணி' என்னும் பட்டங்களையும் பெற்றார். இவரின் புத்திரி நகுலேஸ்வரி அவர்களும் ஒரு சிறந்த பாடகியாக மிளிர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **அமரர்.சி.முருகப்பா**

**துறை** : **இசை**

சிறந்த இசைக்கலைஞரான சி.முருகப்பா அவர்கள் 'முழக்கம் முருகப்பா' என்ற புனைப்பெயரிலேயே எல்லோராலும் அழைக்கப் பட்டவராவார். இவர் மட்டக்களப்பு கோட்டைமுனையிலே வாழ்ந் துள்ளார்.

150க்கும் மேற்பட்ட இன்னிசைக் கச்சேரிகளை நடாத்தி இரசிகர் களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுள்ள இவர். வில்லுப்பாட் டுக்கள் பலவற்றைத் தானே இயற்றிப் பாடியுள்ளார். சிவபுராணம், திருப்பள்ளியெழுச்சி, தேவாரப் பதிகங்கள் அடங்கிய ஒலிநாடா ஒன்று இவரால் வெளியிடப்பட்டது. அது மிகவும் பயன் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாது இவரே இயற்றி இவரே இசையமைத்த "கீர்த்தனை மாலை" என்னும் நூல் ஒன்றையும் வெளி யிட்டுள்ளார். அது பல இசைப்பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கு மிகுந்த பயனளித்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

கம்பீரம் மிக்க உன்னதமான மதுரக் குரலும், தெய்வீகம் மிளிரும் அருமையான உச்சரிப்பும் கலைமகள் இவருக்களித்த வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது.

இவர் தனது இசைப்பயிற்சியை ராஜூ மாஸ்டரிடமும் ஆரம்பித் துக் கற்றதோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முறையாகக் கற்று 'சங்கீதபூஷணம்' என்ற பட்டத்தைப் பெற்றார். இவருடைய பூதவுடல் அழிந்தாலும் புகழுடல் இன்னும் அழியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.நாகு இராஜ் முதலியார்

பிறந்த திகதி : 26.03.1924

துறை : இசை

தமிழ்நாடு அபிராம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகு இராஜு முதலியார் மட்டக்களப்பு தாமரைக்கேணியை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். சிறந்த இசை ஞானம், பாடும் திறனும் கொண்டு மட்டக்களப்பின் இசைவாணராகத் திகழ்ந்த இவர், இளவயதில் இசைத்துறையில் ஈடுபட்டாலும் சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் ஆரம்பக் குருவாகவும், வழிகாட்டியாகவும் விளங்கினார். இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முறையாக இசைப் பயிற்சியைப் பெற்று 'சங்கீத பூஷணம்' ஆக 1948ம் ஆண்டு மாத்தளை பாக்கியம் வித்தியாலயத்தில் தனது இசைத் தொண்டை ஆரம்பித்தார். மலைநாட்டில் குன்றில் தீபமாக ஆரம்பித்த இவரது சேவை கிழக்குக் கரையிலே கலங்கரை விளக்காகப் பிரகாசித்தது. புனித மிக்கேல் கல்லூரியில் இசை ஆசிரியராகப் பணிபுரிந்தார். அதன் பின்னர் மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திலே சங்கீத ஆசிரிய ஆலோசகராகக் கடமைபுரிந்தார். அதன் பின்னர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையிலும் சங்கீத விரிவுரையாளராக (பகுதிநேர) பணியாற்றி ஓய்வுபெற்றார். இவரைப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பாராட்டியுள்ளார். தமிழ்நாடு மதுரைமாவட்ட செங்குந்தர் மகாசங்கத்தினர் "ஏழிசைச்செல்வன்" என்னும் பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தனர். மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றமானது 'இசை அரசு' என்னும் பட்டம் சூட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. மட்டக்களப்பு மாவட்ட கலாலயம் 'இசைக்கலைவாணர்' என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தது. மணிமேகலைப் பிரசுர நூல் வெளியீட்டு விழாவில் பிரபல பாடகர் டாக்டர் கே.ஜே.ஜேசுதாஸ் அவர்கள் 'இசைப் பேரரசு' என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார். மட்டக்களப்பு பிரதேச தமிழ்ச் சாகித்திய விழாவிலும் கௌரவிக்கப்பட்டார். கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் இடம்பெற்ற பாரதி விழாவிலும் பொன்னாடை போர்த்தி பாராட்டுப் பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் : அமரர் கணபதிப்பிள்ளை மகாலிங்கம்

பிறந்த திகதி : 12.09.1924

துறை : இசை

**யா**ழ்ப்பாணம் ஊர்காவல்துறையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு பொற்கொல்லர் இல.46 ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர்.க.மகாலிங்கம் அவர்கள் சங்கீத ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவராவார். சிறுவயதிலேயே இசைமீது கொண்டிருந்த ஆர்வம் காரணமாக இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று குரு குலவாசமிருந்து முத்தப்பா அவர்களிடம் முறையாகச் சங்கீதம் கற்றுத் தேறி இசைமானிப் பட்டம்பெற்ற இவர், பின் யாழ்ப்பாணம் வந்து அங்குள்ள ஆலயங்கள் பலவற்றிலும் சங்கீதக் கச்சேரிகள் நிகழ்த்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்புக்கு வந்த இவர் சாய்ந்தமருது பாடசாலையில் சங்கீத ஆசிரியராக நியமனம் பெற்று அப்பிரதேசத்தில் இசைக்கலை வளர்ச்சிக்குப் பங்காற்றினார். அங்கு பல இசை மாணவர்களை உருவாக்கிய பின்னர் மட்டக்களப்பின் பல பாடசாலைகளிலும் சங்கீதம் கற்பித்தார். இங்கு பல மாணவர்களை உருவாக்கியதுடன் பிரத்தியேக வகுப்புக்கள் மூலமும் பல சங்கீத மாணவர்கள் உருவாக வழிசமைத்தார். இக்காலத்தில் பாடசாலை மட்டத்தில் பல்வேறு இசைக் கச்சேரிகளை நடாத்தியுள்ளார். மேலும் ஆலய நிகழ்வுகளிலும் பல விழாக்களிலும் கச்சேரிகள் நிகழ்த்தியதுடன் திருகோணமலை, யாழ்ப்பாணம் முதலிய பல இடங்களுக்கும் சென்று கச்சேரிகள் நிகழ்த்தி சங்கீதக் கலை வளர்ச்சிக்குப் பங்காற்றினார். இவர் இலங்கைத் தேசிய வானொலியிலும் இசைக் கச்சேரிகள் நிகழ்த்தி மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்தவராவார். மட்டக்களப்பில் சங்கீதக் கலை வளர்த்த முன்னோடி என்ற வகையிலும், ஒரு பரம்பரை உருவாக வழிசமைத்தவர் என்ற வகையிலும் முதன்மை பெறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர் : அமரர். கதிரமலை தங்கராசா**

**பிறந்த திகதி : 27.05.1927**

**துறை : இசை**

இவர் தனது இறுதிக் கல்வியை (எஸ்.எஸ்.சி.) இ.கி.மி. விவேகா னந்தா பாடசாலை முடித்த பின்னர் இசைத்துறையில் இவருக்கு இருந்த ஆர்வத்தால் கர்நாடக சங்கீதம் பயின்று பட்டம் பெறும் பொருட்டு 14.10.1954 இல் அண்ணாமலை பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றுத் தாயகம் திரும்பினார். இவர் 05.01.1954 அரசாங்க நியமனம் பெற்றார். இவர் மட்/ஆரையம்பதி சிரேஷ்ட பாடசாலை, மட்/நாவற்குடா அ.த.க. பாட சாலை, மட்/அரசடி மெ.மி.த.க. பாடாசலை, மட்/வின்சன் மகளிர் ம.வி., மட்/அரசடி மெ.மி.த.க. பாடசாலை, மட்/ஆரையம்பதி சிரேஷ்ட பாடசாலை, மட்/சிவானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் சங்கீத ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

அமரர் தங்கராசா அவர்கள் வாய்ப்பாட்டு மட்டுமின்றி வீணை, புல்லாங் குழல், வயலின் முதலிய இசைக் கருவிகளையும் திறமையாக வாசிப்பார். இவர் இலங்கை வானொலி, கல்லடி உப்போடை விநாயகர் ஆலயம், கல்லடி வேலாயுத சுவாமி ஆலயம், திருப்பெரும்துறை முரு கன் ஆலயம், மட்/மாமாங்கேஸ்வரர் ஆலயம், மட்/இசை நடனக்கல் லூரி ஆகிய அரங்குகளில் கச்சேரி நடாத்திப் பாராட்டுப் பெற்றார். இவரிடம் இசை முறைப்படி பயின்று ஆசிரியர் ஆனவர்கள் திருமதி. பாஸ்கரி சரவணமுத்து, திருமதி. பத்மாசினி தேவசுந்தரம், செல்வி. ரஜனி நடராசா ADE சங்கீதம் மட்டக்களப்பு திரு.செல்வநாயகம் பஞ்கஜ செல்வன் ஆகியோராவார். இவர் இலங்கை வானொலிக் கூட்டுத்தா பனம், மட்டுநகர் சங்கீத சபா, மட்டுநகர் இசைக்கலா மன்றம், தியாகராச சுவாமிகள் ஆராதனைக்குழு, மட்/மாமாங்க ஆலய பரிபாலனசபை, மட்/திருப் பெருந்துறை ஆலய பரிபாலன சபை, மட்/ஆனைப்பந்தி ஆலய பரிபா லன சபை, மட்/சித்தாண்டி முருகன் ஆலய பரிபாலன சபை, மன்/திருக் கேதீஸ்வரம் ஆ.ப.சபை, மட்/இசை நடனக்கல்லூரி, மட்/சிவானந்தா பழைய மாணவர் மன்றம், மட்/கச்சேரி (கலாசாரப் பிரிவு) ஆகியவற்றால் பாராட்டுப் பெற்ற இவர் 2000.03.13ந் திகதி இறைவனடி எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திருமதி.சாந்தாவதி நாகையா**

**பிறந்த திகதி : 25.08.1935**

**துறை : இசை**

மட்டக்களப்பு திசவீரசிங்கம் சதுக்கதைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டுள்ள திருமதி.சாந்தாவதி நாகையா அவர்கள் 'ஔவையார்' எனும் புனைப்பெயருடன் சகலராலும் அறியப்பட்ட ஓர் இசைக் கலைஞராவார். இவர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இசைத்துறையில் விசேட பயிற்சி பெற்றதோடு 1957-1960 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப்பயிற்சியும் பெற்றவராவார். இவர் 1972ல் இசை ஆசிரியராக நியமிக்கப்பட்டு, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பாடசாலைகளிலும் பணியாற்றி பல்வேறு இசைக் கலைஞர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவராவார். அத்துடன் 1992ல் மட்டக்களப்பு ஆசிரிய ஆலோசகராகவும், கல்வியியற் கல்லூரி, தொலைக்காட்சி நிறுவனம் ஆகியவற்றில் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணிபுரிந்து இசைப் பணியாற்றியவராவார். இவர் இஸ்லாமிய இசை நிகழ்ச்சிகளிலும் கலந்து இசை நிகழ்ச்சிகளை வழங்கியதுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தொலைக்காட்சி ஆகியவற்றில் பாடி சிறப்புப் பெற்றவராகவும் விளங்குகிறார். மேலும் மட்டக்களப்பில் ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனைகள், பொது நிறுவனங்களில் பண்ணிசை, கவிப் பிரசங்கங்கள், கச்சேரிகள் முதலியவற்றையும் நடாத்தி இசையுடன் சமயப் பணியையும் ஆற்றி வரும் இவரை இந்து கலாசாரத் திணைக்களம் 'கலைமணி' விருது வழங்கிக் கௌரவித்தது. மட்/கலாலயத்தினால் இவருக்கு கலாபூஷணம் விருது வழங்கப்பட்டது. இவருக்கு வாழைச்சேனை பொலிஸ் பிரிவு 'இசைக்குயில்' என்ற பட்டத்தையும் தங்கப்பதக்கமும் வழங்கிக் கௌரவித்தது. மேலும் இவருக்கு 'இசைச்செல்வி', 'ஈழத்து ரமணியம்மாள்', 'ஈழத்து சுந்தராம்பாள்' என்ற பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளமை இவரின் பாடும் திறமைக்குக் கிடைத்த கௌரவங்களாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திருமதி.இராஜேஸ்வரி தெட்சனாமூர்த்தி.**

**பிறந்த திகதி** : **19.07.1937**

**துறை** : **இசை**

**யா**ழ்ப்பாணம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் தற்போது மட்டக்களப்பு கல்லடி, புதிய கல்முனை வீதி, இல.14/6யை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தற்போதைய கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் கல்லூரியாக இருந்த காலத்தில் 1986 ஆண்டுவரை கல்லூரி அதிபராகயிருந்து பணியாற்றி ஓய்வு பெற்றவராவர். இவர் இக்காலப்பகுதியில் மட்டக்களப்பு இசை நடன வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார். இசைத் துறையில் சிறந்த விளங்கிய இவர் இளம் வயதிலேயே செல்வி.பா.இராஜ சிராஜேஸ்வரியிடம் சங்கீதம் கற்று பின்னர் இசைபயில 1958இல் இந்தியா சென்று சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்க ளிடம் பயின்று டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். பின்னர் வீணைத் துறையிலும் டிப்ளோமாப் பட்டம் பெற்றார். பின்னர் 1966ல் ஆசிரியர் சேவையில் இணைந்து கொண்ட இவர், தொடர்ந்து வட இலங்கை சங்கீத சபையில் பரீட்சகராக கடமையாற்றி பின் O/L, A/L பரீட்சகராகவும் வினாத்தாள் தயா ரிப்பாளராகவும் நியமனம் பெற்று 1986 இல் மட்டக்களப்பு அப்போதைய சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரிக்கு அதிபராக நியமனம் பெற்றார். இவர் தமது பதவிக்காலத்தில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற் றினார். சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழா நடாத்தியது அவரின் யாழ் வகைகளில் ஏழு வகையினை உருவமைத்து காட்சிப்படுத்தியது. இவ் யாழ் பற்றிய கட்டுரைகளை தொகுத்து காட்சிப்படுத்தியது என்பதுடன் மாணவ. அதிபர் விடுதி வசதிகள் உருவாக்கப்பட்டமை, கலாசார மண்டபம் நிறுவப்பட்டமை, கல்லூரியின் இராசதுரை அரங்கிற்கு ஒலி, ஒளி வடிவ மைக்கப்பட்டமை பல கலை நிகழ்ச்சிகளைத் தயாரித்த ரூபவாஹினியில் ஒலிபரப்பியது கொழும்பு சாகித்திய விழாக்களில் மாணவர்களை பங்குகொள் ளச் செய்தமை, கல்லூரியை பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் முயற்சிகளை மேற்கொண்டமை போன்றவற்றையும் குறிப்பிடலாம். இத்தனைக்கும் மேலாக மட்டக்களப்பு மற்றும் ஏனைய மாவட்ட மாணவர்களும் இசை, நடனம், வாத்தியங்கள் பயின்று ஓர் சிறந்த இசைப் பாரம்பரியம் உருவாக இவர் அரும்பணியாற்றினார். தான் ஓய்வுபெற்ற பின்னும் நின்றுவிடாது தனது வீட்டில் பல மாணவர்களுக்கு இசை, வீணை வகுப்புக்களை நடாத்தி இசைப் பணிபுரிந்தார். இவர் 1999ம் ஆண்டு கலாபூஷன விருதையும், 2000ம் ஆண்டு இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ருதியையின் கலாரத்னா விருதையும் பெற்றுக்கொண் டார். மேலும் மானுடவியல் அமைப்பு இவரக்கு முது கலைஞர் விருதையும் மாகாண சபை 2006 ஆம் ஆண்டு ஆளுனர் விருதையும் வழங்கி கௌரவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.இராஜகுமாரி சோதிநாதன்
பிறந்த திகதி : 17.04.1944
துறை : இசை

மட்டக்களப்பு வண்டிங்ஸ் லேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராஜகுமாரி சோதிநாதன் அவர்கள் வாய்ப்பாட்டிலும், வயலினிலும் சங்கீத கலாவித்தகர் பட்டம் பெற்றதுடன் இலங்கையில் முதல் முதலில் சித்தார் வாத்தியத்தில் சங்கீத கலாவித்தகர் பட்டமும் பெற்றுள்ள இவர் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் சங்கீத ஆசிரியராகக் கடமையாற்றி சேவைக்கால ஆசிரியராகவும், மட்/கல்விக் கல்லூரி பகுதிநேர ஆசிரியராகவும், மட்/தொலைக் கல்வி போதனா ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

க.பொ.த.(சா/த) மாணவர்கள் சித்தியெய்தும் நோக்கத்தில் வினா விடை 1ம், 2ம் (பகுதிப்) புத்தகமாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அத்தோடு தேசிய கல்வி நிறுவனத்தில் 3ம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரையான ஆசிரியர் கைநூல் தயாரிப்பதில் ஓர் அங்கத்தவராய் பணியாற்றியுள்ளார்.

ஆயிரத்திற்கு மேற்பட்ட இவரது மாணவர்கள் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்குத் தோற்றி அதி உச்ச சித்தியடைந்துள்ளதோடு சங்கீத ஆசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், சங்கீத சேவைக்கால ஆலோசகர்களாகவும் திகழ்வது இவரது பணிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இவரது சேவை திருகோணமலையில் 'தட்ஷணகான' சபையில் ஆரம்பித்து இன்றுவரை சங்கீதக் கலைக்குத் தனது வாழ்வை அர்ப்பணித்துச் செயற்பட்டு வருவதற்கு இவர் சங்கீதக் கலையில் வைத்துள்ள அதிமிகு பற்றுதலே காரணமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திருமதி.வை.சியாமளாதேவி**

**பிறந்த திகதி** : **26.12.1948**

**துறை** : **இசை**

தந்தையார் கணபதிப்பிள்ளையிடம் தபேலா இசைப்பதைக் கற்றுக் கொண்ட இவர் பின்னையை காலங்களில் தன் சுய முயற்சி மூலமே இசைத் துறையில் முன்னுக்கு வந்துள்ளார். கடந்த 40 வருடங்களாக தபேலா வாத்தியக் கலைஞராகப் பணியாற்றி வரும் இவர் பல இசை நிகழ்வுகளில் திறமையை வெளிக்காட்டியுள்ளார். வின்சன்ட் பாடசாலை, சிசிலியா மகளிர் பாடசாலை, சூரியா பெண்கள் நிலையம் போன்றவற்றிலும் இவரின் இசை நிகழ்வுகள் இடம்பெற்றுப் பாராட்டப்பட்டுள்ளார்.



**பெயர்** : **செல்வி.இரஜனி நடராஜா**


**பிறந்த திகதி** : **22.10.1953**

**துறை** : **இசை**

இவர் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் 'சங்கீதரெத்தினம்' என்னும் டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்றார். 1978-1979ம் ஆண்டுகளில் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சங்கீதப் பாடத்தில் விசேட பயிற்சி பெற்றார். அதன் பின்னர் 1976ம் ஆண்டு ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார். .....ம் ஆண்டு பின் நுண்கலைக்கான உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி உணர்வு பெற்று மட்டக்களப்பு கல்வி வலயத்திலே கடமைபுரிந்தார். இக்காலகட்டத்தில் இவரினால் மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள சங்கீத ஆசிரியர்கள் மிகுந்த பலனடைந்தனர். அத்தோடு மாணவர்களுக்கும் இசைப் பயிற்சியை மிகச் சிறப்பான முறையில் அளித்து வந்தார். கர்நாடக சங்கீதத்தை மிகச் சிறப்பாக இசைப்பதோடு பல நடன நிகழ்ச்சிகளிலும் பாடி வந்தார். அத்தோடு தனி நிகழ்வுகளையும் நிகழ்த்தியுள்ளார். 1975ம் ஆண்டு மட்டக்களப்பு சங்கீத சபா நடாத்திய மேடை நிகழ்வுகளி லும், 1972ம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டிலும் இவரின் நிகழ்வுகள் அரங்கேறின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.வத்சலாதேவி சங்கரநாராயணன்
பிறந்த திகதி : 10.01.1949
துறை : இசை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு பயனியர் வீதி, இல.32/4 ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ள இவர், தற்போது கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தில் இசை விரிவுரையாளராகக் கடமைபுரிந்து வருகின்றார். சிறு வயதிலிருந்தே இசைத்துறையில் ஆர்வம் உள்ளவராகத் திகழ்ந்த இவர் தனது ஆரம்பக் குருவாக மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வி.பராசக்தி விநாயகமூர்த்தி அவர்களிடம் சங்கீதத்தைக் கற்றார். பின்னர் வட இந்திய சங்கீதச் சபையினரால் நடாத்தப்பட்ட இசைப் பரீட்சையில் ஆசிரியர் தராதரம் வரை சித்தியடைந்து பின்னர் கொழும்பு தியாகராஜ கானசமாசம் இலங்கைச் சங்கீத சபை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்றவை நடாத்திய அகில இலங்கைச் சங்கீதப் போட்டிகளிலும் கலந்து தங்கப்பதக்கம் பெற்றுக்கொண்டார்.

இசைக் கலைமானிப் பட்டப்படிப்பை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் படித்த இவர் தற்போது இந்தியாவின் மதராஸ் பல்கலைக் கழகத்தில் M.A(Music) இல் 2ம் வருடம் படிப்பை தொடர்ந்துகொண்டிருக்கின்றார்.

1986 முதல் தற்போதைய சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவத்தில் இசை விரிவுரையாளராகச் சேர்ந்துகொண்டதன் பின் நிறுவகத்தின் பல்வேறு நிகழ்வுகளிலும் இசைக்கச்சேரிகள் நடாத்துவதுடன் மேலும் பல்வேறு இடங்களுக்கும் சென்று மேடைக் கக்சேரிகள் பலவற்றையும் செய்து வருவதனூடாக இசைப் பணி புரிந்து வருகின்றார். சங்கீதக் கலாவித்தகர், இசைக்கலைமாமணி, இசைக்கலைமணி போன்ற பட்டங்களை இவர் பெற்றுள்ளார். இவர் தமது விரிவுரைகள் மூலமும் பிரத்தியேக வகுப்புக்கள் மூலமும் பல இசை மாணவர்களை உருவாக்கி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.செல்லையா ஞானப்பிரகாசம்

பிறந்த திகதி : 22.06.1950

துறை : இசை

மட்டக்களப்பு மாமாங்கம் கூளாவடி 8ம் குறுக்கு, இல.1/27ல் வசித்துவரும் இவர் ஓர் நாடறிந்த பாடகராவார். இளமையில் பாடசாலைப் பருவத்திலிருந்தே இசைத்துறையில் நாட்டங்கொண்டிருந்த இவர் பல வில்லிசை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பாராட்டுப் பெற்றிருந்தார். 1965ம் ஆண்டு பாரதி இளைஞர் மன்றத்தின் மூலம் வில்லிசை நிகழ்வுகள், நாடகங்கள் போன்றவற்றில் ஈடுபட்டுவந்த இவர், 1970களில் 'மாநகராம் மட்டு மாநகராம்' எனும் பாடலைத் தானே இயற்றி இசை வழங்கி பாடி பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைக் கவர்ந்துகொண்டார். இதுபோன்று பல்வேறு பாடல்களையும் அவர் இயற்றியிருக்கின்றார். இவர் கதிரவன், ஆதவன், திருமலை பரமேஸ்கோணேஸ், இதயம் போன்ற பல்வேறு இசைக்குழுக்களின் பாடகராக விருந்து வடகிழக்கு மாகாணத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் இசைப் பயணம் செய்துள்ளதோடு, நீர்கொழும்பு, சிலாபம் முதலிய இடங்களுக்கும் சென்று பாடிப் புகழ்பெற்றிருக்கின்றார். அதுமட்டுமன்றி இலங்கை வானொலியின் 'அரங்கேற்றம்' நிகழ்ச்சி மூலம் அகில இலங்கைப் புகழையும் பெற்றுள்ளார். இவர் 'மாநகராம்' எனும் இசைத் தொகுப்பில், தான் இயற்றிப் பாடிய ஆறு பாடல்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். மேலும் சிங்கள இதிகாசக் காவியங்களான 'பட்டாச்சார, அஜபாசத, கும்பகோச' முதலியவற்றைத் தமிழாக்கம் செய்தும் பாடியுள்ளார். இதயம் இசைக்குழுவில் தற்போதும் ஒரு பாடகராக இருந்துகொண்டிருக்கிறார்.

இவரது இசைத் திறனையும், பாடும் ஆற்றலையும் பாராட்டி பல்வேறு மன்றங்களும் அமைப்புக்களும் 'இசையரசு', 'மெல்லிசைத் தென்றல்' போன்ற பல்வேறுபட்ட பட்டங்களை வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவித்துள்ளன. மண்முனை வடக்குக் கலாசாரப் பேரவை 2002ம் ஆண்டு கலைஞர் கௌரவிப்பிலும் இவரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளது இவர் ஓர் சிறந்த பாடகர் மட்டுமன்றி ஒரு மரபுக் கவிஞரும், நாடக நடிகரும், மேடை அறிவிப்பாளருமாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.நிலாமதி

பிறந்த திகதி : 01.05.1963

துறை : இசை

மட்டக்களப்பு பாலமீன்மடு என்னும் ஊரிலே பிறந்து தற்போது கொழும்பில் வசித்துவரும் இவர் இலங்கையின் புகழ்பூத்த பாடகியா வார். ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர் சிறந்த பாடகியா கவும், சிறந்த நடிகையாகவும், அழகுக்கலை நிபுணராகவும் திகழ்ந்தார். இவர் இசைத்துறை வளர்ச்சிக்கு திரு.ஜீவம் ஜோசப், திரு.ஞானம் ஜோசப், பெற்றோர் போன்றோர் உறுதுணையாக இருந்தனர். இவரின் இசைக்குரு சங்கீத பூஷணம் ராஜு ஆவார். அத்தோடு திரு.ஞானம் ஜோசப், திரு.ஜீவம் ஜோசப் ஆகியோரிடமும் இசை நுணுக்கங்களைக் கற்றார். இசைத்துறையில் 1973ம் ஆண்டு முதல் ஈடுபடத் தொடங்கினார்.

பாடசாலையில் கல்விகற்ற காலத்தில் அகில இலங்கை ரீதியில் நடை பெற்ற சங்கீதப் போட்டியில் பங்குபற்றி முதலிடம் பெற்றார். மகாபொல போட்டியில் பங்குபற்றி முதற்பரிசு 5000/- ரூபா பணப் பரிசினைப் பெற்றார். சிங்களத்திலே 'கமுநொவன்னமா' என்னும் இசைப்பேழையை வெளியிட்டுப் பாராட்டைப் பெற்றார். இதற்காகப் பல விருதுகள் இவருக்குக் கிடைத்தன. இலங்கையில் பல பாகங்களி லும் இசை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியுள்ளார். தொலைக்காட்சியிலும் வானொலியிலும் இவர் பல இசைப் பாடல்களைப் பாடி அனைத்து இரசிகர்களினதும் சிறந்த பாராட்டைப் பெற்றுள்ளார். இந்திய இசைக் கலைஞர் திரு.T.M.சவுந்தரராஜன் முதல் பல பின்னணிப் பாடகர்க ளுடன் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

உலகில் பல நாடுகளுக்குச் சென்று பல பாடல்களை இசைத்து நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார். உதாரணமாக பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, டென்மார்க், கனடா, லண்டன் ஆகிய நாடுகளுக்குச் சென்று பாடியுள்ளார். தற்போது இந்திய திரைப்படத்தில் பாடுவதற்கு குரல் பரீட்சை செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன்

பிறந்த திகதி : 16.02.1966

துறை : இசை

திருமதி.பிரியதர்ஷினி ஜெதீஸ்வரன் அவர்கள் மட்டக்களப்பு கொம்மாதுறை கிராமத்திலே பிறந்து நாவற்குடாவிலே வாழ்ந்து வருகின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே இசை டிப்ளோமா நுண் கலைமாணி அகிய பட்டங்களைப் பெற்றவராவார். இவர் இசைத் துறையில் முதுமாணிப் பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு வருகிறார். இவர் வட இலங்கை சங்கீத சபையின் 'சங்கீத கலாவித்தகர்' பட்டத்தைப் பெற்றுள்ளார். 1992ம் ஆண்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்பட்டு வந்த சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் போதனாசிரியராக நியமனம் பெற்றார். 2005ம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தால் உத்தியோக பூர்வமாக உள்வாங்கப்பட்டபோது விரிவுரையாளராக நியமனம் பெற்றார். மேலும் 2006ம் ஆண்டிலிருந்து மூன்றாண்டுகள் இசைத்துறையின் இணைப்பாளராகப் பணிபுரிந்தார். இவர் ஒரு வெளிநிலை அவைக்காற்றுக் கலைஞர். இலங்கையின் பல பாகங்களிலும் இசைக் கச்சேரிகள், நடன நிகழ்ச்சிகள் பலவற்றிற்கு இசையமைத்துப் பாடியுமுள்ளார். இரு வானொலி நாடகங்களுக்கும், ஒரு வீதி நாடகத்திற்கும் இசையமைத்துள்ளார். பல இசை சம்பந்தமான கட்டுரைகளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பல இசைப் போட்டிகளுக்கு நடுவராகவும், தேசிய கல்வி நிறுவகத்தின் இசைப்பாட விதானத்தின் நிபுணத்துவக் குழுவில் அங்கத்தவராகவும் இருப்பதுடன் சக்தி TV இல் இளைய கானப் போட்டி நிகழ்வுகளில் நடுவராகவும் கலந்துகொண்டுள்ளார். 2007ம் ஆண்டு ஐரோப்பாவில் I.I.T.A.நிறுவனத்தின் அழைப்பின் பேரில் ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இரு மாதங்கள் தங்கியிருந்து அங்கு நடைபெற்ற இசைப் பரீட்சைக்கு பரீட்சகராகப் பணியாற்றியுள்ளார். அண்மையில் உலக வங்கியால் திட்டமிடப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கான IRQUE (Batch 3) திட்டத்தின் அனுசரணையுடன் இந்தியா சென்று இளைப்பாறிய சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.இராமநாதன், முனைவர் ரித்தா ராஜன் என்பவர்களிடம் இசையில் மேலதிக பயிற்சிகளைப் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.கருணாரெட்ணம் பேனாட் மகிந்தகுமார்**


**பிறந்த திகதி : 06.06.1964**

**துறை : இசை**

மட்டக்களப்பு பாலமீன்மடு கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது கொழும்பில் வசித்துவரும் பேனாட் மகிந்தகுமார் அவர்கள் இலங்கை வானொலி, ரூபவாஹினியின் புகழ்பெற்ற பாடகராவார். பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி மூலம் தன் ஆற்றலை வெளிப்படுத்திய மகிந்த குமார் 1972ம் ஆண்டு ஒரு மெல்லிசைப் பாடலோடு மேடையேறி அறிமுகமானார். அதன்பின்னர் சினிமாப் பாடல்கள், பொப்பிசைப் பாடல்கள் போன்றவற்றையும் பாடி ஆயிரக்கணக்கான இளைஞர்களைத் தம்பக்கம் ஈர்த்துக்கொண்டார். இவர் ஆரம்பக் காலத்தில் ஜீவன் ஜோசப், ஞானம் ஜோசப் ஆகியோரிடம் இசைப் பயிற்சி பெற்றதுடன் கொழும்பில் அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களிடமும் பயிற்சி பெற்றுள்ளார். தனக்கென தனிப்பாணியுடன் பல்வேறு இசைக் குழுக்களுடன் பாடிவரும் இவர், விளம்பரத்துறை மூலம் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளார். விளம்பரத் துறையில் ஈடுபடுவதற்கு அப்துல் ஹமீட் அவர்களும் காலாக இருந்ததாகக் குறிப்பிடும் இவர், சிங்கள மொழியிலும் பல பாடல்களைப் பாடியுள்ளார். இலங்கை மட்டுமன்றி பல்வேறு உலக நாடுகளிலும் இசை நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ள இவர், ஒரு முழுநேர இசைக் கலைஞராகத் திகழ்கின்றார். இசைப் பணிக்காக தன்னை அர்ப்பணித்துள்ள மகிந்தகுமார் அவர்கள் இதற்காகப் பல விருதுகளையும், பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். 'இசை இளவல்', 'கலாவித்தகர்' என்னும் பட்டங்களையும் பெற்றார். உள்நாட்டில் மட்டும் அல்லாது வெளிநாட்டிலும் பாடல்கள் பாடி பாராட்டுப் பெற்றதோடு கௌரவிப்பும் பெற்றுள்ளார். இவர் *'Tamil Pops of USA'*, 'நிலாக்காற்று', 'இதமான இராகங்கள்' ஆகிய இறுவட்டுக்களை வெளியிட்டுள்ளார். இவ் இறுவட்டிலுள்ள பாடல்களுக்கு இவர் தானே இசையமைத்துப் பாடிய பெருமைக்குரியவராவார். இலங்கையில் முதன்முதலில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழில் பாடல் எழுதிப் பாடிய தமிழன் என்னும் பெருமையையும் பெற்றார். இவரின் மனைவியான பாடகி நித்தியா அவர்களும் இவரின் இசைத்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கினார்கள். அவரின் புத்திரரான கௌதம் அவர்களும் எதிர்காலத்தில் இசைக்கலைஞராகத் திகழ்வார் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : திரு.சுந்தரநாதன் தேவகுமார்

**பிறந்த திகதி** : 17.09.1970

**துறை** : இசை

மட்டக்களப்பு இருதயபுரத்தைச் சேர்ந்த தேவகுமார் அவர்கள் சிறந்த தோர் இசைக்கலைஞராவார். இவரின் இசைக்கு மயங்காதோர் இல்லை. சங்கீத ஞானம் கைவரப் பெற்ற இவர், சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவராவார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்திலே பயின்று B.FA.in Music பட்டமும் பெற்றார். இவரது முதல் குரு இவரின் தந்தையாரே ஆவார். ஆறு வயதிலிருந்தே பாடல் பாடுவதில் ஈடுபடத் தொடங்கிவிட்டார். இவரு டைய முதலாவது இசை அரங்கேற்றம் 1995ம் ஆண்டு சுவாமி விபுலா னந்தர் இசைநடனக் கல்லூரியில் அரங்கேறியது.

இவருக்கு 'ஈழத்து ஜேசுதாஸ்', 'இசைக்குமரன்', 'இசைக்கலைமா மணி' ஆகிய பட்டங்கள் சூட்டப்பட்டு கௌரவிப்புக்களும் நடைபெற் றது. இவர் அநேக பல இசை நிகழ்வுகளில் பாடி பலரதும் பாராட்டைப் பெற்றதோடு இசைக்கலைஞர்களாலும் பாராட்டுப் பெற்றுள்ளார்.

ஆலயங்களிலே பல இசை நிகழ்வுகளை நடாத்தியுள்ளார். பக்திப் பாடல்களை மெய்சிலிர்க்க வைக்கும் அளவிற்கு இசைப்பார். இவரது இசையைக் கேட்டு உருகாதாரில்லை என்று கூறக்கூடிய அளவுக்கு சிறந்த குரல் வளமும் மொழி வளமும் உள்ள கலைஞராக விளங்கி வருகின்றார்.

இவர் இசைத்துறையில் மட்டுமல்லாது கூத்து, நாடகம், நடனம் முதலியவற்றிலும் சிறந்த கலைஞராக விளங்குவது தனிச்சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.சுஜீவா
பிறந்த திகதி : 24.06.1972
துறை : இசை

மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரில் பாலமீன்மடு கிராமத்தில் பிறந்து, தற்போது கொழும்பில் வசித்துவரும் சுஜீவா அவர்கள் ஓர் சிறந்த பாடகியும், நல்லதோர் அறிவிப்பாளருமாக விளங்குகின்றார். சங்கீதபூஷணம் ராஜு அவர்களிடம் இசைப் பயிற்சி பெற்ற இவரின் இசைத்துறை வளர்ச்சிக்குப் பெற்றோர் உறுதுணையாக இருந்தனர். தற்போது சுஜீவா அவர்கள் சிறந்த தமிழ்ப் பாடகி மட்டுமல்லாமல் சிறந்ததோர் சிங்களப் பாடகியாகவும் விளங்குகின்றார். இதனால் இலங்கையில் வாழும் பெரும்பான்மை மக்களாலும் விரும்பப்பட்ட இசைக் கலைஞராகத் திகழ்கின்றார். இது இவருக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். இதனால் இவர் ஜனாதிபதியாலும் அமைச்சர்களாலும் பாராட்டப்பட்டுள்ளார்.

இவர் 67 சிங்களப் பாடல்களைப் பாடி இறுவெட்டிலும் வெளியிட்டுள்ளார். அவ் இறுவெட்டை ஜனாதிபதிக்குக் கையளித்து அவரது பாராட்டையும் பெற்றார். சிங்களப் பாடல்களைத் தொலைக்காட்சியில் பாடிய முதல் தமிழ்ப் பெண் பாடகி இவரேயாவார். "ரெட்அரோஸ்" என்னும் இசைக்குழு வைத்து தனித்துவமாக மேடை நிகழ்ச்சிகள் நடாத்தி வரும் இவர், வானொலியிலும் பல பாடல்களை இசைத்துள்ளார். தொலைக்காட்சி விளம்பரங்கள் பலவற்றில் நடித்ததோடு தற்போதும் குரல் கொடுத்தும் வருகின்றார். இவர் சிங்கள தமிழ்க் கலைஞர்களுக்கிடையில் உறவுப் பாலமாக இருந்து செயற்பட்டு வருகின்றார் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : தெட்சனாமூர்த்தி பிரதீபன்
பிறந்த திகதி : 25.10.1973
துறை : இசை

திருகோணமலையை பிறப்பிடமாகவும் கல்லடியை வசிப்பிடமாக வும் கொண்ட இவர் முன்னாள் கல்லடி சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியின் அதிபரான திருமதி.இராஜேஸ்வரி தெட்சனா மூர்த்தி அவர்களின் புதல்வராவர். சிறு வயதிலிருந்தே இசையில் நாட் டம் கொண்டிருந்த இவர் சுவாமி விபுலானந்தா இசை நடனக்கல்லூரி யில் டிப்ளோமாப் பட்டமும், 2001 இல் இந்தியா சென்று அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டமும், முதுதத்துவமா ணிப் பட்டமும் பெற்றவராவர். தொடர்ந்து யாழ் இராமநாதன் நுண்க லைக் கல்லூரியில் உதவி விரிவுரையாளராகவும் சில காலம் தென்கிழக் குப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றி தற்போது கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தில் நிரந்தர விரிவுரையாளராகக் கடமை புரிகின் றார். இந்தியாவில் O.S.தியாகராஜன் அவர்களின் மாணவராகிய இவர் இந்தியாவில் இசைக் கச்சேரிகளையும் நடாத்தியுள்ளார். இலங்கையி லும் பல கச்சேகரிகள் நடாத்தியதோடு பலரின் நடன அரங்கேற்ற நிகழ்வுகளுக்கும் பாடல்கள் பாடி வருகின்றார்.. கலாசூரி வாசுகி ஜெக தீஸ்வரன், கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் பிரதீஸ் போன்றோரின் நடன அரங்கேற்றங்களுக்கும் பாடியுள்ளார். இந்தியாவிலும், சிதம்பரம், திருவாரூர், கும்பகோணம், காரைக்கால் போன்ற இடங்களிலும் நாட்டி யாஞ்சலியில் பாடக்கூடிய வாய்ப்பு இவருக்குக் கிடைத்திருக்கின்றது. இவர் பாடிய பக்திப்பாடல்கள் இறுவெட்டுக்களாகவும் வெளிவந்துள் ளன. இவர் கர்நாடக இசையில் மாத்திரமின்றி மெல்லிசைத்துறையிலும் தாள வாத்தியம் இசைப்பதிலும் தேர்ச்சி பெற்றுள்ளார். 2003 இல் ஜெயாஞ்சலி நாட்டியாவினால் சிறந்த பாடகருக்கான விருது இவருக் குக் கிடைக்கப் பெற்றுள்ளது.. 2006 இல் இந்தியா திருவையாறு தமிழையா கல்விக் கழகத்தினால் 'தமிழ் சுடர்' விருது கொடுத்து கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர். செல்லையா சிவஞானம்


துறை : வாத்தியம்

இவர் யாழ்பாணக் குடாநாட்டில் பிறந்து, யாழ் நகரைச் சேர்ந்த பிரபல வயலின் வித்துவான் வீரமணி ஐயர், காஞ்சுபுரம் சமஸ்தான வித்துவான் T.A.ராஜசேகரன் நல்லூர் ஆதீனம் ஞானசம்பந்த பரமச் சாரியர் சுவாமிகள். திருப்புலக்குடி ஆறுமுகம் கணக்கால் H.M.தாவீது ஆகியோர் குழுவிலிருந்து பல கச்சேரிகளில் வாசித்து நல்ல அனுபவம் பெற்றார். இவர் 1953 இல் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கடமை பார்க்கத் தொடங்கி, இருபது வருடங்கள் சேவையாற்றி 1973இல் ஓய்வுபெற்றார். சிவஞானம் அவர்கள் அட்டாளைச் சேனையில் நியமனம் கிடைத்த ஆண்டே தனது குடும் பத்துடன் மட்டக்களப்பிற்கு இடம்பெயர்ந்தார். இவர் உள்ளூர் கலைஞர் களான சங்கிதபூஷணம் என்.ராஜு, பண்ணிசை வேந்தர் திரு.குழந்தை வேல் பண்டிதர் வடிவேல் சாம்பசிவம் ஆகியோரின் கச்சேரிகளில் வயலின் இசை வழங்கினார். அத்துடன் பல நாடக மன்றங்களுக்குப் பின்னணி வழங்கி மன்றங்களின் பாராட்டைப் பெற்றார்.

இவர் திரு.கணகரெத்தினம் அவர்கள் பொத்துவில் பாராளுமன்ற உறுப்பின ராக இருந்தபோது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டார். அக்கரைப்பற்று விபுலானந்த சபையினாலும் கௌரவிக்கப் பட்டார். 1993 இல் மட்டக்களப்பில் நடந்த சாகித்திய விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் கடைசிக் காலங்களில் இறை வனடி சேரும் வரையில் திருமதி. சாந்தாவதி நாகையா அவர்களின் கச்சேரிகளில் வயலின் வாசித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர்.இராசு கதிரவேல்**

**பிறந்த திகதி : 07.05.1929**

**துறை : வாத்தியம்**

**யா**ழ்ப்பாணம் இனுவிலைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு. பாலமீன்மடு வீதி, இல. 2/2 ஐ வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்து தற்போது இறைபதமடைந்துவிட்ட இராசு கதிரவேல் அவர்கள் மட்டக் களப்பு புகழ்பூத்த நாதஸ்வர வித்துவானாக வாழ்ந்தவராவார். இவரது தந்தை இராசு அவர்களும் ஓர் நாதஸ்வர வித்துவானாகும். அதனால் இவரும் தனது தந்தையைப்போல் இத்துறையில் ஆர்வம் கொண்டு இளமையிலேயே கல்வி கற்றுக்கொண்டே நாதஸ்வர இசையினையும் நன்கு பயின்றார். அதன் பின்னர் நாதஸ்வரம் பயில்வதற்காக இந்தியாக சென்று பட்டுக்கோட்டை எனும் இடத்தில் பிரபல வித்துவானிடம் முறை யாகப் பயின்றார். பின்னர் யாழ்ப்பாணம் வந்து அங்கு பல கோயில் களில் தனது சேவையினை ஆற்றி பின்பு மட்டக்களப்பு மண்ணில் தனது சேவையினை ஆற்றுவதற்காக வந்தவேளை யில் இங்கேயே தனது குடும்ப வாழ்வினையும் அமைத்துக் கொண்டார். இவர் தனது இறுதிக்காலம் வரை தனது கலைப் பணியினை ஆற்றினார். மட்டக்க ளப்பில் கோட்டைமுனை மகமாரியம்மன் கோயில், மாமாங்கேஸ்வரர் ஆலயம், ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயம் என இங் குள்ள பல முக்கிய ஆலயங்கள் பலவற்றிலும் தனது பணியினைச் சிறப்பாக ஆற்றி புகழ்பெற்றார். இவர் மட்டக்களப்பில் மட்டுமன்றி திருக்கோயில், ஹட்டன், நுவரெலியா, பதுளை போன்ற பல இடங்க ளுக்கும் சென்று அங்குள்ள கோயில்களிலும் தனது நாதஸ்வர இசை மழை பொழிந்துள்ளார். இவ்வாறாக நாதஸ்வரக் கலையை தனது உயிர் மூச்சாகக்கொண்டு வாழ்ந்த இவர் கடந்த 2010.10.14ல் இறைபதம் அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர்.தில்லையம்பல சிவக்கொழுந்து**
**பிறந்த திகதி : 22.04.1922**
**துறை : வாத்தியம்**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு அமிர்தகழி எதிர்மன்னசிங்கம் வீதி, 40/40ஐ வசிப்பிடமாகவும் கொண்டிருந்த இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வயலின் வாத்தியத்தை முறையாகக் கற்று சங்கீத பூசணம் பட்டம் பெற்றவராவார். இவரது தந்தை சங்கீத வித்துவானாக இருந்தமையினால் இவரையும் இசைத் துறையில் ஈடுபடுத்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று வந்தவுடன் ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் காரை தீவு மகா வித்தியாலயத்திலும், பின் நிந்தவூர் மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்து மட்/சிவானந்தா வித்தியாலயத்திலும், மட்/ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையிலும் கற்பித்து ஓய்வுபெற்றார். இவர் சங்கீத ஆசிரியராக இருந்த காலங்களில் பல பாடசாலை நிகழ்வுகளிலும் ஏனைய கலை நிகழ்ச்சிகளுக்கும் பக்கவாத்தியமாக வயலின் இசைத்து வந்தார். மட்டக்களப்பின் பிரபல சங்கீத வித்துவான்கள் சகலருக்கும் இவர் வயலின் வாசித்துள்ளார். மேலும் அமைச்சர் செ.இராதுரை அவர்கள் காலத்தில் சங்கீத ராஜ் மாஸ்டர் முதலியோருடன் இணைந்து கிழக்கிலங்கை சங்கீத சபை ஒன்றை உருவாக்கி அதில் இவர் செயலா ளராகப் பணிபுரிந்துள்ளார். மேலும் மட்/மாநகர சபை மண்டபங்க ளிலும், ஆலயங்களிலும் நடைபெற்ற பல இசைக் கச்சேரிகளுக்கு இவர் வயலின் வாசித்துள்ளார். பல மாணவர்களையும் இவர் உருவாக் கியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : கலாபூஷணம் ஜோசப் அருளானந்தம்

பிறந்த திகதி : 30.07.1939

துறை : வாத்தியம்

அமிர்தகழியைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட இவர் ஓர் தலைசிறந்த இசைக் கலைஞராவார். இசை ஆர்வமுள்ள குடும்பத்தில் பிறந்த இவர், தமது ஆரம்ப குருவாக சங்கீதபூஷணம் M.நவச்சிவாயம் அவர்களிடம் கற்றதுடன் தொடர்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சென்று வயலினை முக்கிய பாடமாகக் கொண்டு கற்று சங்கீதபூஷணம் 1ம் வகுப்புப் பட்டமும் பெற்று தமது தகுதியை வளர்த்துக்கொண்டார். சிறந்த இசை ஞானமுள்ள இவர் சாஸ்திரிய சங்கீதம், மெல்லிசை மேற்கத்தைய சங்கீதம் ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்றவராகவும் 25 வாத்தியங்களுக்கு மேல் வாசிக்கக்கூடிய திறமையுடையவராகவும் ஒரே மேடையில் 16 வாத்தியங்களை இசைத்துப் 'பல்லிசைச் சூரிசில்' என்ற பட்டத்தைப் பெற்றவராகவும் விளங்குகின்றார். சங்கீத ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், ஆரம்பகாலத்தில் 'ஜீவம் இசைக்குழு' என்ற இசைக் குழுவை தமது சகோதர்களுடன் இணைந்து உருவாக்கி இசைப்பணியாற்றியதுடன் பல இளம் கலைஞர்களை உருவாக்கி மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார். வானொலி, தொலைக்காட்சிகளில் தற்போது பிரபல்யமாகவுள்ள கலைஞர்கள் பலர் இவரால் உருவாக்கப்பட்டவர்களேயாவார். தாம் கற்பித்த மட்/புனித மிக்கேல் கல்லூரியில் 'பாண்ட்' இசைக்குழுவை உருவாக்கி சர்வதேச மகாநாடு, இலங்கைக் குடியரசின் நிகழ்வு, எஸ்லோ கண்காட்சி ஆகியவற்றில் பங்குகொள்ளச் செய்த இவர், மாவட்டத்தின் நகர்ப்புற கிராமியப் பாடசாலைகள் பலவற்றில் 'பாண்ட்' இசைக்குழுக்களை உருவாக்கியும் சேவை புரிந்துள்ளார். ஜீவம் ஜோசப் அவர்கள் 1960ம் ஆண்டுமுதல் பிரபலமான பல மேடை நாடகங்களுக்கு இசை வழங்கியிருந்தார். பல மேடைப் பாடல்களை உருவாக்கியவராகவுமுள்ளார். தொடர்ந்து வானொலி நிகழ்ச்சிகள் பலவற்றைத் தயாரித்துள்ளதோடு இன்றும் கூட மட்டுநகரில் நடைபெறும் பிரபலமான கலை நிகழ்ச்சிகள் பலவற்றிற்கும் இசையமைப்பவர் இவரேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.யோசப் ஞானராசா

பிறந்த திகதி : 25.09.1943

துறை : வாத்தியம்

மட்டக்களப்பு அமிர்தகழி கதிர்காமர் வீதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டுள்ள இவர், ஓர் இசைக் குடும்பத்தில் பிறந்தவராவார். பிரபல இசைக்கலைஞர் 'ஜீவம் யோசப்' அவர்களின் சகோதரரான இவர் ஜீவம் யோசப், திருமதி திருநாவுக்கரசு, வணபிதா யோசப் மேரி, சகோதரி டிலக்ரா போன்றோர்களின் வழிகாட்டலில் இசைத்துறையில் பிரகாசித்தார். பாடல்கள் பாடுதல், இசைக் கருவி களை இசைத்தல் என இசைப் பணியாற்றிய இவர் கிளாரினட், சக்ச போன், றம்பட், புல்லாங்குழல் போன்ற இசைக் கருவிகளைக் கச்சித மாக வாசிக்கும் திறன் கொண்டவராவார். பாடசாலை அதிபராகவி ருந்து ஓய்வுபெற்றுள்ள இவர், தமையனின் 'ஜீவம் சகோதரர்கள்' இசைக்குழவின் முக்கிய பாடகராக, இசைக்கருவிகள் மீட்டும் வாத் தியக் கலைஞராகத் தொழிற்பட்டு இசைக்குழுவின் வெற்றிக்குப் பங்க ளித்தார். குழல் வாத்தியக் கருவிகளை இசைப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்த இவர், மாவட்டத்தில் பல இடங்களுக்கும் இசைக் குழு வுடன் சென்று இசைப்பணியாற்றி புகழ்பெற்றதோடு மாவட்டத்தின் அநேக இந்துக் கோயில்களில் தனத கிளரினட் இசைக் கச்சேரியையும் நிகழ்த்தி இசைப்பணி புரிந்துள்ளார். ஞானம் ஜோசப் எனும் புனைப் பெயரில் அனைவராலும் அறியப்பட்ட ஓகன் இசை வாத்தியக் கலை ஞராக இவர் விளங்குகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : கனகரெட்ணம் சடாட்சரம்
பிறந்த திகதி : 14.06.1947
துறை : வாத்தியம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு வன்னியார் வீதி, இல.34/6 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 'ஹவாயன் கிற்றார்' எனும் வாத்தியத்தை இசைப்பதில் மிகவும் வல்லவராவார். தனது 18வது வயதிலிருந்து தனது சொந்த முயற்சியினால் வாத்தியக் கருவிகளை இயக்க முயற்சி செய்து வெற்றியும் கண்டுள்ள இவர், தாள வாத்தியத்தை வித்துவான் ஆறுமுகப்பிள்ளை அவர்களிடமும், ஏனைய வாத்தியங்களை சொந்த முயற்சியினாலும் கற்றுத் தேறினார். இவர் பல வாத்தியக் கருவிகளையும் இசைக்கவல்லவராவார். 1965 ஆம் ஆண்டிலிருந்து இத்துறையில் பிரகாசித்த இவர் தனது முதல் நிகழ்ச்சியினைக் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் 'தேன்' எனும் பெயரில் நிகழ்த்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து பல இசைக் குழுக்களில் இணைந்து தனது வாத்தியத் திறமையை வெளிக்காட்டி வருகின்றார்.

திருகோணமலை நீரோ இசைக்குழு, கலைவாணி இசைக்குழு, மட்டக்களப்பில் ஆதவன், சுப்பர் ரிதம்ஸ், இதயம், அக்கினி, சாகரி, வெண்ணிலா போன்ற பல இசைக்குழுக்களில் வாத்தியக் கலைஞராகத் தொழிற்பட்டுள்ளார். ஹவாயன் கிற்றார் மூலம் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் நிகழ்ச்சி செய்து பாராட்டுப் பெற்றுள்ள இவர், விரைவில் ஹவாயன் கிற்றார் மூலம் பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா அவர்களின் பஜனைப் பாடல்கள் அடங்கிய CDஐ வெளியிடவுள்ளார். இவர் திருகோணமலை நகரசபையால் நடாத்தப்பட்ட நவராத்திரி விழாவில் சிறந்த கலைஞர் என்ற சான்றிதழையும் கௌரவத்தையும் பெற்றுள்ளார். மேலும் கிறிஸ்தவ பாடல்கள் CD வெளியீட்டமைக்காகவும் கௌரவம் பெற்றுள்ளார். மேலும் 'அன்புக்கு ஒருவன்', 'நாலுக்கு இரண்டு நயம்' போன்ற டெலி நாடகங்களையும் நெறிப்படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **செல்வி. சரஸ்வதி சுப்ரமணியம்**

**பிறந்த திகதி** : **29.12.1948**

**துறை** : **வாத்தியம்**

**யா**ழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கல்லடியில் வசித்து வருகின்றார். கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தில் கடந்த 25 வருடங்களாக வயலின் இசைத்துறை விரிவுரையாளராக கடமையாற்றிவரும் இவர் யாழ் இராமநாதன் நுன்க லைக் கல்லூரியில் இசைத்துறையில் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளதுடன் இந்திய மெற்றாஸ் பல்கலைக்கழகத்தில் M.A.முதுமாணிப் பட்டப்படிப்பை யும் முடித்துள்ளார். வட இலங்கை சங்கீத சபையினால் இசைக் கலாவித் தகர் பட்டமும் 1997 இல் கல்லாறு சத்திய சாயி சமிர்த்தியினால் நாதகலா பூசினி பட்டமும் பெற்றுள்ளார். மட்டக்களப்பில் கடந்த 25 வருட காலமாக வாழ்ந்துவரும் இவர் இப்பிரதேச இசைத்துறை வளர்ச்சிக்கு மிகவும் பங்களிப்புச் செய்தவராவார். பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களினால் மேடையேற்றப்பட்ட நாட்டுக்கூத்து. கண்ணகி அம்மன் குளிர்த்தி, இராவ ணேசன் மற்றும் சகல மேடை நாடகங்களிலும் வயலின் இசைக் கலைஞ ராக பணிபுரிந்துள்ளார். 1997இல் இளம் கலைஞர் மன்றத்தில் வயலின் தனிக் கச்சேரியை நடத்தியுள்ளார். அத்துடன் 1990ம் ஆண்டு தொடக்கம் 1996ஆம் ஆண்டுவரை மட்டக்களப்பு மாவட்ட கலாலயம் இணைச் செய லாளராக இருந்து பல இசைக்கச்சேரிகளை நிகழ்த்தியதுடன் தனிக்கச்சேரி களையும் செய்துள்ளார். விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நவராத்திரி விழா இசைக் கச்சேரியை தொடர்ந்து நடாத்திவருகின்றார். பிரபல்யமான இசைக் கலைஞர் பலருக்கு வயலின் வாசித்துள்ளார். கடந்த 2002 வரை இந்து கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இசை நடன நகிழ்வுகளில் கொழும்பு. கண்டி ஆகிய இடங்களில் வாசித்துள்ளார். கலைஞர் வேலானந்தன் அவர்களில் நடன நிகழ்வுக்கு தேசிய மட்டத்தில் பக்கவாத்தியம் வாசித்துள்ளார். நடன அரங்கேற்றங்களுக்கு 25 மாணவிக ளுக்கும், வெளி அரங்கேற்ற 3 மாணவிகளுக்கும் பக்க வாத்தியம் வாசித் துள்ளார். அதுமட்டுமன்றி வயலின், வீணை வாத்திய நிகழ்வுகளைத் தயாரித்து வாசித்துள்ளார். வட இலங்கை சங்கீத சபை தரம் 4 இல் 50 மாணவர்களைச் சித்தியடையச் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.ஜயந்தி திஸாநாயக்கா

பிறந்த திகதி : 05.02.1953

துறை : வாத்தியம்

**யா**ழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு, இல.35/3, நிரஞ்சன் லேன், சின்ன உப்போடை மட்டக்களப்பை வாழ்விடமாகக் கொண் டுள்ள இவர், கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்த அழகியற் கற்கை கள் நிறுவனத்தில் வயலின் விரிவுரையாளராகப் பணியாற்றி வரு கின்றார். இளமையிலேயே இசையில் ஆர்வம் கொண்டிருந்த இவர், யாழ் இனுவையூர் கலாபூஷணம் உ.ராதாகிருஷ்ணன் அவர்களிடம் முறைப்படி வயலின் கற்று தேர்ச்சி பெற்றார். தொடர்ந்து யாழ், இளங் கலைஞர் மன்றத்தின் இசை ஆசிரியராகப் பணியாற்றிய இவர், 1985ல் யாழ், வீரசிங்க மண்டபத்தில் தனது முதல் கச்சேரியை நடாத்தினார். தொடர்ந்து 1986ல் நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் கந்தபுராணப் படிப்பு நிகழ்வில் இசைக் கச்சேரி நிகழ்த்திப் பாராட்டுப் பெற்றார். இக்காலத்தில் யாழ், நல்லூரில் வயலின் இசைத்துறையில் பணியாற்றி பல மாணவர்களை உருவாக்கினார். பின் 1989 முதல் கல்லடி சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் விரிவுரையாராக இணைந்து மட்டக்களப்பில் தனது இசைப்பணியைத் தொடர்ந்து கொண்டிருக் கின்றார். கல்லூரியிலும் ஏனைய நிகழ்வுகளிலும் பக்கவாத்தியமாக வயலின் இசைத்துவரும் இவர் விரிவுரைகள் மூலமும், பிரத்தியேக வகுப்புக்கள் மூலமும் பல மாணவர்களை உருவாக்கிக் கொண்டிருக் கின்றார். மட்டக்களப்பில் **இசை (வயலின்) துறை மன்றம்** ஸ்தாபித்து இளந் தலைமுறையினரை ஊக்கப்படுத்த வேண்டும் என ஆர்வம் கொண்டிருக்கும் இவர், டிப்ளோமா, பொதுக் கலைமானி, இசைக் கலைமானி, வட இலங்கை சங்கீத சபை டிப்ளோமா முதலிய பட்டங்க ளையும் பெற்றவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.ஜீவா அருணாச்சலம்
பிறந்த திகதி : 22.05.1955
துறை : வாத்தியம்

மட்டக்களப்பு வன்னியனார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.ஜீவா அருணாச்சலம் அவர்கள் இளம் பராயத்தில் பாடசாலைக் கல்வியுடன் இசை, நடனம், விளையாட்டு ஆகிய துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். திருமதி.பத்மாசனி அருணாசலம், திருமதி.சகுந்தலா அருமைநாயகம் ஆகியோரை தமது குருவாகக் கொண்டு இசைப்பயிற்சி பெற்ற இவர் வயலின், ஓகண் ஆகிய இசைக் கருவிகளை உரிய முறையில் கற்றுத் தேர்ந்தார்.

தனது இருபத்துமூன்றாவது வயதில் அப்போதைய அரசாங்க அதிபர் திரு.டிக்ஸன் நிலவீர அவர்களின் தலைமையில் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற தியாகராச சுவாமிகளின் ஜெயந்தி விழாவில் வயலின் இசை தனிக் கச்சேரியை முதன் முதலாக நடாத்திப் பாராட்டுப் பெற்றதைத் தொடர்ந்து பல்வேறு இசை, நடன நிகழ்ச்சிகளுக்கு பக்க வாத்தியமாக வயலின் இசையை வழங்கி வருகின்றார். திருமதி.மலர்விழி சிவஞான சோதிகுரு அவர்களின் நாட்டிய வித்தியா நடன கலையகத்தின் பல நாட்டிய அரங்கேற்றங்கள், தனி நிகழ்ச்சிகள், புதுவருட நிகழ்ச்சிகள் என பல்வேறு நாட்டிய நிகழ்ச்சிகளுக்குப் பக்கவாத்தியமாக வயலின் இசையை வழங்கி வரும் இவர், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தின் பல இசை நிகழ்ச்சிகளுக்கும் வயலின் இசைக் கலைஞராகத் தொழிற் பட்டிருந்தார்.

தற்போது 'லிற்றில் ஏஞ்சல்' பாலர் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றும் இவர் ..........தேவாலயத்தில் பிரதம வயலின் இசைக்கலைஞராகவும், பாடகர் குழுவில் முக்கிய பாடகியாகவும் தொழிற்பட்டு வருகின்றார். மேலும் இவர் ஓர் சிறந்த பாடகியும் ஆவார். சுப்ப சித்திரா இசைக் குழுவின் பல இசை நிகழ்ச்சிகளில் பல பாடல்களைப் பாடியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 45 வருட காலமாக கர்நாடக இசைத் துறையில் பங்களிப்புச் செய்துவரும் இவருக்கு பல நடன அமைப்புக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.வேல்முருக ஸ்ரீதரன்


பிறந்த திகதி : 21.03.1958

துறை : வாத்தியம்

சம்மாந்துறையைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு லேக் வீதி, இல.33ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ள ஸ்ரீதரன் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் மிருதங்க விரிவுரையாளராகப் பணிபுரிந்து வருகின்றார். இவர் சிறுவயதில் தனது தந்தை யாரிடம் மிருதங்க ஆரம்பப் பயிற்சியைப் பெற்றதன் பின்னர் தொடர்ந்து யாழ்.இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் மிருதங்க விரிவுரையாளர் சிதம்பரம் A.S.இராமநாதன் அவர்களிடம் 15 வருடம் குருகுல வாசமிருந்து மிருதங்க வாத்தியத்தை முறைப்படி கற்றுக்கொண்டார். பின்னர் 1972ம் ஆண்டு மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் தனது மிருதங்க அரங்கேற்றத்தை நிகழ்த்திப் பலரது பாராட்டைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து இன்றுவரை மாவட்டத்தின் மிருதங்க கலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிக்கொண்டிருக்கின்றார். இவர் சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் மிருதங்க விரிவுரையாளராகக் கடமையேற்றதைத் தொடர்ந்து கல்லூரி நிகழ்வுகளுக்கும், வெளியில் பாடசாலை, பல்கலைக் கழக நிகழ்வுகளுக்கும் பக்கவாத்தியம் இசைத்துக்கொண்டு வருகின்றார். விரிவுரைகள் மூலமும் பிரத்தியேக வகுப்புக்கள் மூலமும் பல மாணவர்களை உருவாக்கியிருக்கும் இவர் 10க்கும் மேற்பட்ட மாணவர்களை அரங்கேற்றம் செய்திருக்கிறார்கள். பல மாணவர்கள் மேடை நிகழ்வுகளுக்கு வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர் இலங்கை, இந்திய பிரபல்ய இசை பரதக் கலைஞர் பலருக்கும் மிருதங்கம் வாசித்திருக்கும் பெருமைக்குரியவர். சகல தோல் வாத்தியங்களையும் வாசிக்கும் திறன் கொண்ட இவர் பல தோல் வாத்தியக் கருவிகளையும் வைத்து லய, லயபிருந்தா, பிருந்தாகாணம் முதலிய நிகழ்வுகளைச் செய்திருக்கின்றார். சில பாடசாலைகளில் தாள வாத்தியக் குழுக்களையும் உருவாக்கியிருக்கிறார். அதுமட்டுமன்றி மிருதங்க தாள வாத்தியம் சம்பந்தமான பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியிருக்கின்றார். இவரது திறமையைப் பாராட்டி இந்து கலாசார அமைச்சு 1987ல் லய இசைச் செல்வன் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. மேலும் மிருதங்க சாகரம், சர்ம வாத்திய கலாபதி, கலைமாமணி, மிருதங்க கலாவித்தகர் போன்ற பல பட்டங்களும் இவருக்குக் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **இராசமாணிக்கம் நித்தியானந்தன்**

**பிறந்த திகதி** : **29.12.1956**

**துறை** : **வாத்தியம்**

மட்டக்களப்பு கல்லடி பிள்ளையார் கோயில் வீதி, இல.23/2 இல் வசித்துவரும் இவர், ஓர் வணிகமானி பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். அதேவேளையில் இசை வாத்தியத் துறைக்கும் அரும்பணியாற்றிவரும் ஒருவராகக் காணப்படுகின்றார். மிருதங்க வாத்தியக் கலைஞராகவும், ஏனைய தோல் வாத்தியக் கலைஞராகவும் விளங்கும் இவர், சிறுவயது முதல் இத்துறையில் நாட்டம் உடையவராகக் காணப்பட்டார். தொடர்ந்து அமரர் மயில்வாகனம் கந்தசாமி, அமரர்.T.இரட்ணம் (யாழ்ப்பாணம்) ஆகியோரைக் குருவாகக் கொண்டு மிருதங்க வாத்தியத்தைக் கற்றுத் தேறியதுடன் 1976ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மட்/மாநகர மண்டபத்தில் தனது மிருதங்க அரங்கேற்றத்தை நிகழ்த்தி பலரது பாராட்டையும் பெற்றிருந்தார்.

மிருதங்கம் மட்டுமன்றி, தபேலா, டோல்கி, உடுக்கை, தவில் முதலிய பல்வேறு வாத்தியங்களையும் துல்லியமாக இசைக்கும் திறன் இவருக்குண்டு. மட்டக்களப்பில் இசை, நடன நிகழ்ச்சிகளுக்குப் பக்க வாத்தியக் கலைஞராகத் தொழிற்படும் இவர், வெளி மாவட்டங்களான கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், அப்புத்தளை, நாவலப்பிட்டி போன்ற இடங்களுக்கும் சென்று இசைப்பணியாற்றி பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். மட்டக்களப்பில் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் நிகழ்வுகளிலும், கல்லூரி, பல்கலைக் கழக மட்டங்களில் நடைபெறும் நிகழ்வுகளிலும் மிருதங்க வாத்தியக் கலைஞராகக் கூடுதல் பங்களிப்பை நல்கிவரும் இவர், நாட்டுக்கூத்துத் துறையிலும் நாட்டமுடையவராவார். பாடசாலை காலத்தில் மகாபாரதக் கதையில் தர்மபாத்திரமேற்று கூத்தாடிப் புகழ்பெற்றவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : எபநேசர் நேசராஜ் உவோட்ஸ்வேத்

**பிறந்த திகதி** : 06.01.1961

**துறை** : வாத்தியம்

**யா**ழ்ப்பாணம் இனுவிலைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு செல்வநாயகம் வீதி 1ம் குறுக்கு இல.12/18ஐ வசிப்பிடமாகவும் கொண்டுள்ள இவர், ஓர் மிருதங்க விரிவுரையாளராக கிழக்குப் பல்கலைக் கழக விபுலானந்த அழகியற் கற்கை நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்றார். இவரது பெற்றோர்கள் இசைத்துறையில் ஈடுபாடுடையவராக இருந்தமையால் இவரும் சிறுவயதிலேயே ஹார்மோனியம், எக்கோடியன் போன்ற வாத்தியங்களை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தார், பின்னர் பியானோ, ஓர்கன் போன்ற வாத்தியங்களையும் கற்றுக்கொண்டார். அதன் பின்னர் 13வது வயதில் மிருதங்கக் கலையில் ஆர்வம் கொண்டு மிருதங்க வித்துவான் திரு.ப.சின்னராசா அவர்களிடம் மிருதங்கத்தை முறைப்படி பயில ஆரம்பித்து பின்னர் யாழ்.இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் இணைந்து பேராசிரியர் A.S.இராமநாதன் அவர்களிடம் 4 வருடம் முறைப்படி மிருதங்கம் கற்று மிருதங்க டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். பின்னர் வட இந்திய சங்கீத சபையில் கலாவித்தகர் பட்டத்தையும் பெற்றுக்கொண்டதுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மிருதங்க கலைஞராகவும் இணைந்து பணிபுரிந்தார். இக்காலத்தில் 40க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மிருதங்கம் போதித்திருந்தார். இவற்றின் பின்னர் 1988ல் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்துகொண்ட இவர் அங்கு பல மிருதங்க மாணவர்களை உருவாக்கி வருகின்றார். இவரது மாணவர்கள் தற்போது ஆசிரியர்களாக கடமையாற்றுகின்றனர். கல்லூரியில் நடைபெறும் பல இசை நடன நிகழ்ச்சிகளுக்கும் பாடசாலை நிகழ்வுகளுக்கும் பக்க வாத்தியம் வாசித்துள்ளார். சிறந்த மிருதங்க ஞானமும் திறனும் கொண்ட இவர் கொழும்பில் நடைபெறும் பல முக்கிய நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இலங்கை, இந்திய பிரபல கலைஞர்கள் பலருக்கும் பக்கவாத்தியம் வாசித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திருமதி.கௌரிமலர் மகேந்திரன்**

**பிறந்த திகதி : 02.04.1963**

**துறை : வாத்தியம்**

மட்டக்களப்பில் பாடும்மீன் வீதி, இல.08A இல் வசித்துவரும் இவர் கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தில் வீணை விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். சிறுவயதிலிருந்தே இத்துறையில் நாட்டம் கொண்டிருந்த இவர் திருமதி. அனுசியா பிறைட், திருமதி.சா.ரவீந்திரகுமாரி ஆகியோரை தமது குருவாகக் கொண்டு கற்றதோடு வாய்ப்பாட்டினை முழக்கம் சி.முருகப்பா அவர்களிடம் கற்றிருந்தார். 1982ல் தனது இசைப்பணியைத் தொடங்கிய இவர், தமது முதல் வீணைக் கச்சேரியை கோட்டைமுனை மகமாரி அம்மன் ஆலயத்தில் நிகழ்த்திய அதனைத் தொடர்ந்து கல் லூரியில் வீணைக் கச்சேரிகள் நிகழ்த்துவதுடன் மாணவர்களைக் கொண்டும் நிகழ்ச்சிகள் தயாரித்து வருகிறார். அத்துடன் பல பாடசா லைகளிலும் நிகழ்ச்சிகள் செய்துள்ளதோடு விபுலா னந்த மணிமண்டப சமாதான நிகழ்வில் வீணை இசை வழங்கியும், மட்/தேவநாயக மண்டபத்தில் நீலாம்பரி கலை நிகழ்ச்சிகளில் வீணை வாசித்தமையும் முக்கியமானதாகும். அதுமட்டுமன்றி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தா பனத்தில் வீணை இசை நிகழ்ச்சி வழங்கியமையும் 2009ல் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் வீணை இசை நிகழ்ச்சி நடாத்திய மையும் இவருக்குப் புகழ்சேர்த்தாகும். கடந்த 15 வருடங்களாக கோட்டை முனை மகமாரி அம்மன் ஆலயத்தில் வீணை இசை நிகழ்ச்சி நடாத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். வீணை இசையை பல வரு டங்களாக டிப்ளோமா பட்டப்படிப்பு மாணவர்களுக்குக் கற்பித்து வரும் இவர் பல மாணவர்களை இத்துறையில் உருவாக்கியுள்ளார். கடந்த 20 வருடங்களாக இசைப் பணியாற்றி வரும் இவர் இந்தியா சென்று திருமதி.R.ஜயலக்ஷ்மி எனும் சிரேஸ்ட விரிவுரையாளரிடம் கற்று தனது திறனை வளர்த்துக் கொண்டும் வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.நல்லலிங்கம் குகன்**

**பிறந்த திகதி : 02.10.1969**

**துறை : வாத்தியம்**

ஆரையம்பதியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு பிள்ளையாரடியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர், பிரபல அண்ணாவியார் நல்லலிங்கம் அவர்களின் புதல்வராவார். இளமையில் தந்தையின் கலை ஈடுபாட்டில் ஊறி இருந்த இவர், கல்லடி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் கற்கும் வேளையில் விரிவுரையாளர்களான திரு.வேல்முருகு ஸ்ரீதரன், E.N.வோட் வேர்த் ஆகியோரிடம் மிருதங்கம், தபேலா ஆகியவற்றை முறைப்படி வாசிக்கக் கற்றுக் கொண்டதுடன் 1992ம் ஆண்டு தனது மிருதங்க அரங்கேற்றத்தையும் நிகழ்த்தி, பலரது பாராட்டையும் பெற்றிருந்தார். தாள வாத்தியங்களை மிகத் துல்லியமாகவும், திறமையாகவும் கையாளும் திறன் கொண்ட இவர், தாள வாத்தியத்தில் இசைக்கலைமாமணிப் பட்டம் பெற்றுள்ளார். இவர் பல்கலைக்கழகம், கல்லூரி, பாடசாலைகள் போன்றவற்றில் நடைபெறும் பல்வேறு விழாக்களிலும் இசை, நடன நிகழ்ச்சிகள் பலவற்றுக்குப் பக்கவாத்தியமாக மிருதங்கம், தபேலா கலைஞராகப் பணிபுரிந்து வருகின்ற இவர், பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் நிகழ்ச்சிகள் பலவற்றுக்கு வாத்தியக் கலைஞராகத் தொழிற்பட்டமைக்காக அவரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமையைப் பெருமையாகக் கருதுகிறார். இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடாத்திய மிருதங்கப் போட்டியில் கலந்துகொண்டு அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்றுள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பகுதிநேர மிருதங்க வாத்தியக் கலைஞராகவும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நடனம், இசை, இசைக்கச்சேரி என்பவற்றில் தனது இசைத் துறைசார் பங்களிப்பைச் செய்துகொண்டிருக்கும் இவர், இங்குள்ள முன்னணி இசைக் குழுக்களான இதயம் இசைக்குழு, ரிதம், அமோப் ஆகிய இசைக் குழுக்களிலும் அங்கத்துவராக உள்ளார். தொழில் வகையில் இசை ஆசிரியராகப் பணிபுரியும் இவர், ஓர் சிறந்த பாடகருமாவார். பல இறுவட்டுக்களில் பாடியுள்ள இவர், மாகாணக் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட நாட்டார் பாடல்கள் தொகுப்பில் பாடகராகவும், பல்வாத்தியக் கலைஞராகவும் தொழிற்பட்டமைக்காக பாராட்டுப் பெற்றுள்ளார். தற்போதும் "கடலலையோடு" எனும் பாடல் தொகுப்பு இறுவெட்டு, திருகோணமலை பாலையூற்று தேவாலயத்தில் வெளியிடப்பட்ட இறுவெட்டுக்களிலும் பாடகராகவும், வாத்தியக் கலைஞராகவும் பணிபுரிந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர் நடனகலாமணி ம.கைலாயபிள்ளை**

**பிறந்த திகதி : 04.02.1911**

**துறை : நடனம்**

மட்டக்களப்பில் நடனக் கலையின் தொடக்கப் புள்ளியாக விளங்கும் அமரர்.ம.கைலாயபிள்ளை அவர்கள், யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வாழ்விடமாகவும் கொண்டவராவார். மட்டக்களப்பில் நடனக் கலையை ஆரம்பித்து வைத்து இங்கு தற்போது பெரும் நர்த்ததிகளாகத் திகழும் எத்தனையோ நடன ஆசிரியர்களை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். இளமையிலேயே இத்துறையில் ஆர்வம் கொண்டிருந்த இவர் ஆசிரிய தொழிலில் ஈடுபட்டிருந்த வேளையிலே இவரது நண்பர்களின் ஆலோசனையைக் கேட்டு இந்தியா சென்று சிதம்பரம் சபாபதிப்பிள்ளை என்பவரிடம் நடனமும், சென்னை கலைக்கொண்டல் S.கணேசபிள்ளை என்பவரிடம் பரதமும் 2 வருடம் பயின்று வந்தார். மட்டக்களப்பில் ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையிலும் மட்/ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பகுதிநேர விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். தனது நாட்டியப் பள்ளிக்கு "கிழக்கிலங்கை கலைக்கோயில்" எனப் பெயரிட்டார். அங்கு சங்கீதம், நடனம் போன்ற பாடங்களைப் போதித்தார். அக்காலத்தில் பாமரமக்களும் கலையை ரசிக்கும் வண்ணம் ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகளைத் தயாரித்தார். மயில் நடனம், பாம்பு நடனம், தாண்டவம், வேடன் நடனம், குறத்தி நடனம் ஆகியவற்றுடன் தரமான பரதநாட்டிய உருப்படிகளையும், வள்ளி திருமணம், நரகாசூரன் வதம் போன்ற நாட்டிய நாடகங்களையும் இன்றும் நினைவு கூரும் வகையில் தந்தவர் இவரே. இவர் தனது நடனத்திற்கு தானே பாடல் எழுதி, தேவையான கிரீடம் முதலியவற்றைத் தானே செய்வார். சித்திரம் வரைதல், சிலைகள் செய்தல், கவிதை வடிப்பது முதலிய கலைகளிலும் ஆர்வமிக்கவர். இங்குள்ள அக்காலக் கலைஞர்கள் பலரும் இவருக்குப் பக்க துணை வழங்கினார்கள். அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் 'நடன கலாமணி' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது. 1955ம் ஆண்டு நாட்டிய நூல் எனும் புத்தகத்தை இவர் எழுதியிருந்தாலும் இனக் கலவரத்தில் அது சிதைந்துவிட்டது துரதிஷ்டவசமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.கமலாதேவி ஞானதாஸ்

பிறந்த திகதி : 09.09.1944

துறை : நடனம்

**தி**ருமதி.கமலாதேவி ஞானதாஸ் எனும் நாட்டிய விரிவுரையாளர் சென்னை பரதசூடாமணி நிறுவனத்தினால் பரதநாட்டிய டிப்ளோமா வைப் பெற்றுக் கொண்டவர். சிறுவயது முதலே நடனக் கலையில் ஆர்வம் கொண்ட இவர், திரு.ம.கைலாயபிள்ளை, திரு.அடையார், K.லஷ்மன் (சென்னை பரதசூடாமணி நிறுவனம்) என்போரைக் குரு வாகக் கொண்டார். இவருக்கு "கலாரத்னா" விருது கொழும்பு சுருதி, லய, அபிநய கலாலயத்தினரால் 2000ம் ஆண்டு அளிக்கப்பட்டது. *(Arts Council of Srilanka)* 2007ம் ஆண்டு "கலாபூஷணம்" கௌரவ விருது கொழும்பு கலாசார அமைச்சினால் "நர்த்தன கலா .......ரந்தரி" எனும் பட்டம் வழங்கப்பட்டது. அத்தோடு மட்/மண்முனை வடக்கு பிர தேசச் செயலக கலாசார பேரவையினாலும் கௌரவிக்கப்பட்டார். மேலும் F.M. நடாத்திய மார்கழித் துளிகள் இசை சங்கமம் நிகழ்வில் "சாதனைச் சிகரம்" என கௌரவிக்கப்பட்டார். இவர் தன் படைப்புக்களாக குமுதினி ராஜரட்ணம் (1978). வத்ஸலா சிவானந்தம் (நாவலப்பிட்டி 1980), புஸ்பலா தம்பிராஜா (1981), வஸந்த வேணி சீனித்தம்பி (1982) ஆகிய பல நாட்டிய நாடகங்களைப் படைத்து அரங்கேற்றினார். "பரத கலாப்பனா" எனும் நாட்டிய நிலையத்தை (1972) அமைத்து பல மாணவர்களை இத்துறையில் பயிற்றுவித்து பல நடன அரங்கேற்றங்கள், பல நிகழ்ச்சிகள் நடாத்தி யமையும் பல நடனப் போட்டிகளிலும், நடனப் பரீட்சைகளிலிலும் ஈடு படுத்தியுமுள்ளார். மட்/விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் சிரேஷ்ட நடன விரிவுரையாளராகக் கடமை மேற்கொண்ட காலத்தில் பல மாணவி கள் இத்துறையில் நடன ஆசிரியைகளான உருவாக்கியமை இவர் புரிந்த சாதனைகளில் ஒன்றாகும். (1982-2002 வரை). 2004ம் ஆண்டு நோர்வே நாட்டில் நடைபெற்ற இவரது மாணவி நாட்டியக் கலைமாமணி திருமதி. மாலதி யோகேந்திரனின் நடன நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கியதும், 2006ம் ஆண்டு சுவிஸ் நாட்டில் நடைபெற்ற "நாட்டிய மயில்" போட்டிக்கு நடு வராகச் சென் றதும், 2007ம் ஆண்டு சுவிஸ் நாட்டில் நடைபெறும் நாட்டி யப் பரீட்சைக் குப் பரீட்சகராகச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திருமதி.உஷாதேவி கனகசுந்தரம்**

**பிறந்த திகதி : 20.04.1949**

**துறை : நடனம்**

மட்டக்களப்பு புளியந்தீவில் வசித்துவரும் இவர், நடன ஆசிரியராகத் திகழ்ந்து ஓய்வுபெற்றுள்ள போதிலும் **இன்றும் கூட பாடசாலையில் கடமையாற்றிக்கொண்டு** தனது வீட்டில் "நாட்டிய ஷேத்ரா" எனும் நடனப் பள்ளியையும் நடத்திக் கொண்டிருக்கிறார். பரதநாட்டிய டிப்ளோமாவைப் பெற்ற இவர் "கலாஷேத்ரா" எனும் பட்டத்தைச் சென்னையில் பெற்றார். சிறுவயது முதலே நாட்டியத் துறையில் ஈடுபாடு கொண்ட உஷா அவர்கள் திருமதி.ருக்மணி அண்டேல், திரு.கைலாயப்பிள்ளை என் போரைத் தனது மானசீகக் குருவாக ஏற்றுக் கொண்டார். இவர் வீணை வாசிப்பதிலும், வாய்ப்பாட்டுப் பாடுவதிலும், நடனம் ஆடுவதிலும் தனது திறமையைக் காட்டுவதில் வல்லவர் என்பது மிகையாகாது. உஷா அவர்கள் நாட்டிய நாடகங்கள், புதிய உருப்படிகள் அமைப்பதிலும் விற்பன்னர். இவர் தனது நடனப் பள்ளியின் 25வது வைர விழாவை "ருண்மனி சமர்ப்பணம்" எனும் நிகழ்வாக நிகழ்த்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பாடசாலை மட்டத்தில் நடத்தும் சகல நடன நிகழ்வுகளும் ஒவ்வொரு வருடமும் இவரது நடனப் பள்ளிக் கூடத்திலேயே (நாட்டிய சேத்ராவினால்) இடம்பெறுகின்றன. உஷா அவர்கள் பரத கலாலயாவினாலும், கலாசார பேரவையினா லும், நாட்டிய வித்யாவினாலும் கௌரவிக்கப்பட்டார். இவரது நடனப் பள்ளியினால் நடத்தப்பட்ட வைர விழாவில் பாடசாலை அதிபர், ஆசிரியர்களால் "கலாநர்தகி" எனும் பட்டமும் வழங்கப்பட்டது. தமிழ்த் தினப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றமையும், தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றமையும், 1ம், 2ம், 3ம் தர வகுப்புக்குரியதும் தரம் 6 லிருந்து 11 வரையான பாடத்திட்டமும், சங்கீத சபைக்குரிய குறிப்புக்களும் 4 பதிப்புக்களாக "நாட்டிய தர்ப்பணம்" எனும் நூல் மூலமாக தொகுத்து வெளியிட்டமை இவர் புரிந்த சாதனைகளாகும். இவரிடம் பயின்ற மாணவர்கள் பாடசாலைகளிலும், பலர் வெளிநாடுகளிலும் நடனத்தைக் கற்பிக்கின்றனர். பலர் பல்கலைக்கழகத்திலும் தேசியக் கல்வியற் கல்லூரியிலும் கற்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திருமதி. கமலேஸ்வரி தவராஜரெட்ணம்**

**பிறந்த திகதி : 16.08.1954**

**துறை : நடனம்**

**அ**ட்டப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மட்டக்களப்பு தாமரைக் கேணி, குறுக்குத்தெரு இல. 11/3 ஐ வசிப்பிடமாகக் கொண்டுள்ளார். தற்போது அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வரும் இவர் மட்டக்களப்பு நடனத்துறைகள் முன்னோடிகளில் ஒரு வராவார். சிறு வயதிலிலேயே நடனத் துறையில் ஈடுபாடு கொண்டிருந் தமையினால் திரு.மா. கைலாயப்பிள்ளை அவர்களிடம் நடனம் பயின்று அவரால் பாடசாலைசாலைகளுக்காகவும், ஆலயங்களுக்காகவும் தயா ரிக்கப்பட்ட பல்வேறு நடன நிகழ்வுகளில் பங்குகொண்டிருந்தார். பின் னர் 1977 இல் யாழ் இராமநாதன் கல்லூரியில் சாந்தா பொன்னுத்துரை, திருமதி.ரவீந்திரன் ஆகியோரிடம் நடனம் பயின்று மட்டக்களப்பில் முதலாவது நடன டிப் ளோமா பட்டம் பெற்றவராக வெளியேறினார். பின்னர் நடன ஆசிரிய ராகக் கடமையேற்று கல்லடி விவேகானந்தா மகளிர் பாடசாலையில் தனது நடன பணியை ஆரம்பித்தார். பாட சாலை மட்டத்தில் நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்து கொண்டு மாணவர்கள் பதக்கங்கள் பெற வகை செய்தார். தேசிய இளை ஞர் சேவைகள் மன்ற நடன போட்டிக்காக மாணவர்களை தயார் செய்து ஜனாதிபதி விருது பெறச் செய்தார். இவ்வாறு மாணவர்களில் நடன வளர்ச்சிக்குப் பங்காற்றிய பின்னர் 1991 இல் ஆசிரிய ஆலோ சகராக பதவியேற்று 1999 வரை சேவை புரிந்து பின்பு 1999 இன் பின்பு உதவிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி வருகின்றார். இவர் தமது பாடசாலை சார்ந்த நடனச் செயற்பாடுகளை செவ்வனவே செய்வதோடு ஒரு நடனாலயம் எனும் நடன அமைப்பையும் உரு வாக்கி பல மாணவர்களைப் பயிற்று வித்து அரங்கேற்றம் செய்துள் ளார். இவற்றைவிட இவர் தேசிய கல்வி நிறுவனத்தில் நடன ஆசிரியர் கைநூல் தயாரிக்கும் குழுவில் ஒருவரா கச் செயற்பட்டதுடன் ஆசிரிய சேவை முன்பயிற்சி வளவாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : பரத சூடாமணி திருமதி. சுபித்ரா கிருபாகரன்**

**பிறந்த திகதி : 30.10.1956**

**துறை : நடனம்**

நாட்டிய கலையை வளர்ப்பதற்காக அருஞ் சேவையாற்றியவர்களுள் சுபத்ரா கிருபாகரனும் ஒருவராவார். இவர் அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு திசவீரசிங்கம் சதுக்கத்தை வதிவிடமாகவும் கொண்டவர். இவர் தற்போது நடன ஆசிரியையாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

இவர் இத்துறையில் ஈடுபட்டு பிரகாசிக்கக் காரணமாக அமைந்தது அவரது சுயவிருப்பு, பெற்றோரின் ஆர்வம், கணவரின் ஊக்குவிப்பு என்பனவாகும். திருமதி.சுபித்ரா அவர்கள் நடன கலாமணி ம.கைலாயப்பிளை, கீதாஞ்சலி கே.நல்லையா, உடையார் கே.லக்ஷ்மனன், பிரம்ம ஸ்ரீ N.வீரமணி ஐயா ஆகியோரைக் குருவாகக் கொண்டு இக் கலையைப் பயின்றுள்ளார்.

நாட்டியத் துறையில் வல்லவரான இவருக்கு பரத சூடாமணி, நாட்டியக் கலாமணி, நர்த்தன வித்தகி, நிருத்தியவாணி, நிருத்தியப் பேரொளி போன்ற பட்டங்கள் கிடைக்கப்பெற்றன. இவரால் நடாத்தப்படும் பரதகலாலயா நாட்டியக் கூடம் தற்போது 400க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இதன் மூலம் சிறந்த ஆசான்களையும், மாணவர்களையும் உருவாக்கியுள்ளார்.

இத்துறையில் இவருடைய சவால்களாக நான்கு அரங்கேற்றங்கள் 25 ஆண்டு நிறைவு விழா, நாட்டிய ஆசிரியர்களை உருவாக்கியமை. வெளிநாட்டிலும் இவரது மாணவிகள் கலாலயத்தின் கிளைகளை உருவாக்கி செயற்படுகின்றமை ஆகியவற்றைக் கூறலாம். இவர் எப்பொழுதும் நாட்டியக் கலைக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழும் ஒரு கலைஞராகத் திகழ்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **நந்தினி ஜெயரட்ணம்**

**பிறந்த திகதி** : **13.10.1958**

**துறை** : **நடனம்**

**நா**ட்டியத்துறை வளர்ச்சியில் பங்காற்றியவர்களுள் திருமதி. நந்தினி ஜெயரட்ணமும் ஒருவராவார். இவர் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்டவர். உயர்கல்வி தகைமையாக பரதநாட்டிய பட்ட மேற்படிப்பை கலாஷேத்திரா பல்கலைக்கழகம், சென்னை, இந்தியாவில் மேற்கொண்டவர். தற்போதைய தொழில் (அமைப்பாளர், ஆசிரியர், நாட்டிய பிருந்தா நடனக் கலாசாலை, அவுஸ்திரேலியா) பணிபுரிகின்றார்.

இவர் சிற்பசாஸ்திரம், பரதநாட்டியம் வளர்த்தல், நாட்டிய ஆடல் ஆக்கங்கள் அமைத்தல், இசையமைத்தல், மேடையலங்கார சீரமைப்பு விஸ்தீரணம், உடையலங்காரம், நாடகம் அமைத்தல் போன்ற பல துறையில் ஈடுபட்டுள்ளார். இவர் இத்துறையில் ஈடுபடக் காரணம் இவரது தந்தை சிறந்த ஓவியக் கலைஞராகவும், நாடக அமைப்பாளராக இருந்தமையாலும் அவரது வழிகாட்டலும் இவரை இந்நிலைக்கு உருவாக்கக் காரணிகளாக இருந்தன.

இவர் இத்துறையில் புரிந்துள்ள சாதனைகளாக தமிழ் நாட்டில் நாட்டிய விரிவுரையாளராகக் கலைக்காவிரி பல்கலைக்கழகத்தில் கடமையாற்றியமை, அகில இலங்கை நாவலர் கேடயம் பெற்றமை, தமிழ் நாடு இசைச் சங்கத்தில் தங்கப்பதக்கம் பெற்றமை, முதல் முதல் 7 வயது சிறார்களுக்கு அரங்கேற்றம் செய்தமை, நாட்டியம் கற்கும், ஆடும் முறையை ஆரம்பத்திலிருந்து இறுதி வரையும் பதிவுசெய்து மாணவர்களுக்காக ஒழுங்கு செய்தமை, நாட்டிய நுணுக்கங்களை மேம்படுத்த சிற்பசாஸ்திரங்கள் கற்று தெளிந்தமை, கலைக்காவிரியில் யேசுகாவிய நாட்டிய நாடகம் தயாரித்த போது யேசுநாதருக்கு நாட்டிய சாஸ்திரத்தில் முத்திரை இல்லாததால் அவரால் உருவாக்கப்பட்ட முத்திரை நாட்டிய உலகில் எல்லோராலும் கையாளப்பட்டு வருகிறது. சிலப்பதிகாரத்தில் உள்ள ஆச்சியர் குரவையை 11 மகளீரைக் கொண்டு கற்கடக முறையில் நாட்டிய நாடகம் தயாரித்து வழங்கிப் பாராட்டுப் பெற்றமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திருமதி.கிறிஸ்ரீனா வசந்தி நேரு**

**பிறந்த திகதி** : **19.11.1961**

**துறை** : **நடனம்**

**நா**ட்டியத்துறை வளர்ச்சியில் பணியாற்றுவர்களுள் இவரும் ஒருவர். மட்டக்களப்பைப் பிறப்பிறமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இவர். தரம் 4 இல் இருந்து பரதம் கற்கத் தொடங்கினார். க.பொ.த.சாதாண தரம், உயர்தரம் இரண்டிலும் விசேட தேர்ச்சி பெற்றவர். திருமதி.கமலா ஞானதாஸைக் குருவாகக் கொண்டவர். 1982ல் நடன ஆசிரியராக நியமனம் பெற்றவர். கலைப் பட்டத்தைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கல்வி டிப்ளோமாவைத் திறந்த பல்கலைக்கழகத்திலும் முடித்தவர். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பரதநாட்டிய விசேட பயிற்சியினை பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவிடம் பெற்றவர். நடன டிப்ளோமாவையும், நுண்கலை முதுமானிப் பட்டத்தினையும் (M.F.A. 1st Class திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். உளவளத் துறை டிப்ளோமாப் பட்டத்தை ஒலுவில் பல்கலைக்கழகத்தில் பெற்றவர்.

"நிருத்திய கலாலயம்" எனும் கலைக்கூடத்தைப் நடாத்தி வருகின்றார். இங்கு 100க்கு மேற்பட்ட மாணவர்கள் நடனம் பயில்கின்றனர். இங்கு பயின்றோர் ஆசிரியர்களாகவும், அழகியல் துறைப் பொறுப்பாளர்களாகவும் கடமை புரிகின்றனர். இவரது மாணவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்குபெறுகிறார்கள். தேசிய கல்வி நிறுவகத்தில் க.பொ.த.சாதாரணதர, உயர்தர பாடநூல் எழுத்தாளராகவுள்ளார்.

8 வருடங்கள் மட்/கல்வி வலயத்தில் சேவைக்கால ஆலோசகராக இருந்தவர். "க.பொ.த.சாதாரணதர வினாவிடை", "க.பொ.த.உயர்தர பாடக்குறிப்பு" நூல்களையும் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : நாட்டிய கலைமாமணி திருமதி.மாலதி யோகேந்திரன்**

**பிறந்த திகதி : 05.07.1963**

**துறை : நடனம்**

திருமதி.மாலதி யோகேந்திரன் நொச்சிமுனை மட்டக்களப்பில் பிறந்தார். தனது 07வது வயதிலேயே நடனத்தை திருமதி ராஜீ மோகனதாஸ், உஷா சரவணமுத்து, கமலாதேவி ஞானதாஸ் ஆகியோரிடம் பயின்றார். கர்நாடக சங்கீதத்தை செல்வி.சிவாந்தி குமாரசாமியிடம் கற்றார். "வட இலங்கை சங்கீத சபை" நடாத்திய பரீட்சைகளில் திறமைச் சித்தியெய்தினார். மட்டக்களப்பில் சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் "நாட்டியக் கலைமாமணி" என்ற பட்டத்தைப் பெற்ற இவர் அக்கல்லூரியிலேயே ஐந்து வருடங்கள் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். 1992ம் ஆண்டு இந்து கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட சாகித்திய விழாவில் "மட்டக்களப்புப் பாரம்பரியம்" என்னும் நாட்டிய நடனத்தை வழங்கிப் பாராட்டைப் பெற்றார். இந்த நிகழ்வு பல தடவைகள் "மீன்பாடும் பண்பாடு" என்ற தலைப்பில் ரூபவாஹினியில் ஒலிபரப்பப்பட்டது. மாலதி அவர்கள் 1993ல் நோர்வே நாட்டிற்கு இடம்பெயர்ந்த போது "சிவாஞ்சலி நர்த்தனாலயா" நடனப் பள்ளியை இரு மாணவர்களுடன் ஆரம்பித்தார். இன்று 106 மாணவர்கள் பயில்கின்றனர். இவர் இன்றுவரை 12 மாணவர்களை அரங்கேற்றியுள்ளார். *Oriantal Fine Arts Academy of London* (OFAAL), *Oriantal Examination Board of London* ஐரோப்பிய ரீதியில் வருடந்தோறும் நடாத்திய பரீட்சையில் இவரின் மாணவர்கள் 51 பேர். டிப்ளோமா பரீட்சையிலும் 39 பேர். *Post* டிப்ளோமா பரீட்சையிலும் சித்தியடைந்ததுடன் "நாட்டிய கலாயோதி", "கலாரத்தினா", "வித்தியா பூஷன்" பட்டங்களையும் பெற்றுள்ளார். சென்ற ஆண்டு *West London. Tamil School*, OFAAL நடாத்திய ஆண்டு விழாவில் ஐரோப்பிய ரீதியில் அதிகூடிய டிப்ளோமாப் பட்டத்தை மாலதியின் மாணவர்கள் பெற்றதனால் இவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். 15 வருடங்களாக மாலதி நோர்வேயில் நடாத்திய ஆண்டு விழா அரங்கேற்றவர்களுக்கு நமது நாட்டிலிருந்து பிரதம அதிதிகளாக கமலாதேவி, பேராசிரியர் சி.இரவிந்திர நாத் (முன்னாள் துணை வேந்தர், கி.ப.கழகம்), திரு.பாலசுகுமார் (முன்னாள் பீடாதிபதி, கி.ப.கழகம்) ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர். மாலதி பல நாடுகளில் நடைபெறும் பரீட்சைகளுக்குப் பரீட்சகராகவும், அரங்கேற்றங்களுக்கு பிரதம விருந்தினராகவும் சென்று வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திருமதி.சிவாஜினி பகீரதன்**

**பிறந்த திகதி** : **01.10.1968**

**துறை** : **நடனம்**

**யா**ழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட இவர், கடந்த 20 வருடங்களாக நடன ஆசிரியராக சேவை புரிகின்றார். க.பொ.த.உயர்தரம் வட இலங்கை சங்கீத சபை 4ம் தரம் என்ப வற்றைக் கல்வித் தகைமையாகவும் விசேட பயிற்றப்பட்ட நடன ஆசிரியர் தொழிற்தகைமையாகவும் கொண்டவர். வழுவூர் இராமையாபிள்ளையின் "வழுவூரார் பாணியை" பின்பற்றும் இவர் தனது ஆரம்ப குருவாக திருமதி. திரிபுரசுந்தரி யோகானந் தத்தைக் கொண்டவர். தற்போது நடன ஆசிரியராகக் கடமைபுரிகின்றார். 2009ம் ஆண்டு தமிழ்தினப் போட்டியில் குழு நடன நிகழ்ச்சியில் கோட்டமட்டத்தில் 1ம் இடத்தையும் வலய மட்டத்தில் 2ம் இடத்தையும் பெற மாணவருக்குப் பயிற்றி அளித்தவர். "World Vision" நிறுவன அனுசரணையுடன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றினைத் தயாரித்து வழங்கியுள்ளார். ஒவ்வொரு வருடமும் பாடசாலைக் கலைவிழா, வாணி விழா, ஒளி விழா நிகழ்வுகளுக்காக நடன நிகழ்ச்சிகளையும் தயாரித்து மேடையேற்றியுள்ளார்.



**பெயர்** : **திருமதி.அனுசியா சிவனேசராஜா**

**பிறந்த திகதி** : **30.03.1970**

**துறை** : **நடனம்**

**ம**ட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்ப குருவாக திருமதி உஷா கனகசுந்தரத்தை கொண்டவர் நடனத்துறையிலே இருபது வருட ஆசிரிய சேவையை பூர்த்தி செய்து கொண்ட இவர் விஷேட பயிற்றப்பட்ட நடன ஆசிரியராவார். தனது சேவைக்காலத்திலே பத்து வருடத்தை கற்குடாக் கல்வி வலய மாணவர்களுக்கு அர்ப்பணித்து பல நடன நிகழ்வுகளையும் நாட்டிய நாடகங்களையும் அரங்கேற்றிப் பெருமை சேர்த்தவர் இவரிடம் நடனம் கற்ற மாணவர்கள் பலர் உள்ளூரிலும் வெளியூரிலும் நடனக்கலைக்கு சேவையாற்றி வருகின்றனர்.1993ம் ஆண்டு தனி நடனம் மாகாண மட்டம் 3ம் இடத்தையும் 2001,2003 2006ம் ஆண்டிலே மாவட்ட மட்டத்தில் குழு நடனம் 1ம் இடத்தையும் பெறச்செய்தவர் மேலும் 2005ம் ஆண்டிலே ஆழிப் பேரலை சம்மந்தமாக நடத்தப்பட்ட நடனப்போட்டியில் மாவட்டமட்டத்தில் மாணவர்களை 1ம் இடம் பெறச்செய்தவர் மட்டக்களப்பு கலாசாரப்பேரவை நடத்திய நடனப்போட்டியில் மாணவர்களை பங்கு பெறச்செய்து பரசில்களைப் பெறச்செய்துள்ளார். இவர் ஆறு வருடங்கள் மட்/ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பகுதி நேர விரிவுரையாளராகக் கடமையாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.மலர்விழி சிவஞானசோதி குரு

பிறந்த திகதி : 01.02.1970

துறை : நடனம்

நாட்டியத்துறை வளர்ச்சியில் அரும்பணியாற்றுபவர்களுள் திருமதி.மலர்விழி சிவஞானசோதி குரு அவர்களும் ஒருவராவார். இவர் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவர். நடனம், இசை, நாடகம், கூத்து போன்ற துறைகளில் ஈடுபாடுள்ளவர். இதற்குக் காரணம் பெற்றோரின் ஆர்வமும், ஊக்கமுமாகும். ஆசிரிய சேவையில் 20 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இவர் தற்போது நடன ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். பதினொரு வருடங்கள் மட்/தேசிய கல்விக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளர் அனுபவம் பெற்றவர். கடந்த ஒரு வருடமாக மட்/அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். இவரது கல்வி தொழிற் தகைமைகளாவன, விசேட பயிற்றப்பட்ட நடன ஆசிரியை, கலைப் பட்டதாரி (பேராதனைப் பல்கலைக்கழகம்), பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா (திறந்த பல்கலைக்கழகம்), பரத நாட்டியம் - ஆசிரியர் தரம் (வட இலங்கை சங்கீதம்), நடன டிப்ளோமா (பாரதிதாசன் பல்கலைக்கழகம் - இந்தியா), நடன முதுகலைமாணி (M.F.A.1st Class), என்பனவாகும். மேலும் இவர் 1992ம் ஆண்டு தொடக்கம் "நாட்டிய வித்யா" எனும் நடனப் பள்ளியை நடாத்தி வருகிறார். இதன் மூலம் பல நடன நிகழ்வுகளை நடாத்தியுள்ளார். 14.02.2009 அன்று "பரதநாட்டியக் கலை" எனும் நூலை வெளியிட்டுள்ளார். இவர் மண்முனை வடக்கு கலாசாரப் பேரவை, மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம் என்பவற்றின் உறுப்பினராவார். இவர் திருமதி.ரஜி, திருமதி.சிவசக்தி, திருமதி. நந்தினி, திருமதி.S.கிருபாகரன் ஆகியோரை குருவாகக் கொண்டவர். இவரிடம் பயின்ற மாணவிகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கலைத் துறையில் மிளிர்கின்றனர். இவரது மாணவர்களின் நடன நிகழ்வுகள் சக்தி TV, ரூபவாஹினி, நேத்ரா போன்றவற்றில் ஒளிபரப்பப்பட்டன. இவரால் மேடையேற்றப்பட்ட நாட்டிய நாடகங்களாக அகதிகளாகிப் படும் அவலம், சிலம்பு சிரித்தது, பஞ்சபூதங்களும் மனித வாழ்க்கையும், கண்ணப்பரின் பக்தி, இராமகிருஷ்ண உபதேசம், கிழக்கின் உதயம், திருக்குற்றாலக் குறவஞ்சி என்பவற்றைக் குறிப்பிடலாம். இவரால் வெளியிடப்பட்ட நடன கட்டுரைகள் மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையின் தேனக மலரிலும், பரத கலாலயத்தின் கலாலய சாகரத்திலும், மட்/ஆரையம்பதி ம.வித்தியாலய பொன்விழா மலரிலும் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி. சசிகலாராணி ஜெயராம் (சசி)

பிறந்த திகதி : 20.02.1973

துறை : நடனம்

நடனக்கலையை வளர்ப்பதில் ஈடுபட்டுவரும் இவர் மட்டக்களப்பு கல்லடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டுள்ளார். சுவாமி விபுலானந்தா இசை நடனக்கல்லூரியில் நடனக்கலை மாமணிப் பட்டமும். வட இந்திய சங்கீத சபையினால் "கலாவித்தகர்" பட்டமும் பெற்ற இவர் தற்போது நடன ஆசிரியையாகக் கடமையாற்றி வருகின்றார். தனது தாய் தந்தையரின் ஊக்குவிப்பாலும் தனக்கிருந்த ஆர்வத்தாலும் இத்துறையில் ஈடுபட்ட இவர் திருமதி.கமலா ஞானதாஸ் அவர்களின் மாணவியாவார். இவரை தனது குருவாகவும் வழிகாட்டியாகவும் குறிப்பிடும் இவர் விபுலானந்தா இசைநடனக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் காத்தவராயன் நாட்டிய நாடகத்தை முதன் முதலில் தயாரித்து அரங்கேற்றினார். தொடர்ந்து பாடசாலையில் தனது நடன செயற்பாட்டை மேற்கொள்ளும் இவர் பாடசாலை நிகழ்வுகளில் வெற்றியீட்டியும் கிராமியப் பாடசாலை மாணவர்களை மாகான மட்டம் வரை வெற்றியீட்டவும் வகை செய்திருக்கின்றார். புனித சிசிலியா பெண்கள் பாடசாலையில் இவரது மாணவி தமிழ்த்தினபோட்டியில் நடன நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் 2001 இல் தங்கப்பதக்கம் வென்றதை சாதனையாகக் குறிப்பிடலாம். தற்போது கலாப்பணா எனும் நாட்டிய நிலையத்தை உருவாக்கி அதன் ஊடாக பல நடன மாணவர்களையும் உருவாக்கி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திருமதி.பிறேமநந்தினி விஜயசேகரன்**

**பிறந்த திகதி** : **01.11.1974**

**துறை** : **நடனம்**

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மட்டக்களப்பு செல்வநாயகம் வீதி, இல 21ஐ தனது வசிப்பிடமாகக் கொண்டுள்ளார். மட்டக்களப்பில் நடனத்துறை வளர்ச்சிக்குப் பங்காற்றிவரும் இவர் தற்போது நடன ஆசிரியையாகப் பணியாற்றுகின்றார்.

சிறுவயதிலிருந்தே நடனத்துறையில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தமையால் பாடசாலை கலை நிகழ்வுகளிலும் போட்டிகளிலும் பங்கு பற்றியிருந்தார். ஆரம்பக் குருவாக செல்வி.செ.கோகிலா அவர்களிடம் நடனம் பயின்ற இவர் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையில் சித்திபெற்று கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்த அழகியற் கல்வி நிறுவனத்தில் நடனம் பயின்றார். அங்கு திருமதி.கமலா ஞானதாஸ், திருமதி.சர்மிளா ரஞ்சிதகுமார், திருமதி.தட்சாயினி பிரபாகர் போன்றோரின் வழிகாட்டலில் நடன டிப்ளோமாப் பட்டம் பெற்ற பின்பு மேலும் கற்று நுண்கலைமாணிப் பட்டமும் பெற்றுக்கொண்டார். இதன்பின்னர் 2007ல் ஆசிரிய சேவையில் இணைந்து கொண்ட இவர், பாடசாலையில் தனது நடனப் பணியைத் தொடர்ந்துகொண்டடிருக்கின்றார். பாடசாலையில் கலை நிகழ்வுகளிலும், போட்டி நிகழ்வுகளிலும் நடனத்தைத் தயாரித்து வழங்கிவரும் இவர், பாடசாலைக்கு வெளியேயும் 'விஷ்வ பரத கலாலயா' எனும் நடனப் பள்ளியை ஆரம்பித்து நடாத்தி வருகின்றார். தனது நிறுவனத்தின் ஊடாக பல நடன மாணவர்களை உருவாக்கிவரும் இவர், ஆலயங்கள், மன்றங்கள் போன்றவற்றுக்காகவும் பல நடன நிகழ்ச்சிகளைத் தயாரித்து நடனக் கலையை வளர்த்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பெயர் : திருமதி. ஷர்மிலதா பிரபாகரன்**
**பிறந்த திகதி : 26.10.1976**
**துறை : நடனம்**

மட்டக்களப்பில் நாட்டியத் துறையில் பிரகாசிப்பவர்களில் திருமதி. ஷர்மிலதா பிரபாகரனும் ஒருவராவார். இவர் மட்டக்களப்பை பிறப்பிடாகவும், பார்வதி, முகத்துவாரத்தை வதிவிடமாகவும் கொண்டவர். இவர் இத்துறையில் ஈடுபட நடனத்துறையில் அவருக்கிருந்த விருப்பும், பெற்றோரின் ஊக்குவிப்பும் மற்றும் இறைபதமடைந்த அவரது தந்தையின் விருப்பமும் காரணமாகும். திருமதி.ஷர்மிலதா அவர்கள் மாவட்ட கலை இலக்கிய விழாவில் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப் பட்டதுடன், திருமதி.சுபத்திரா மற்றும் திருமதி.கமலேஸ்வரி ஆகியோராலும் கௌரவிக்கப்பட்டுள்ளார். மற்றும் அதிபர் திரு.S.சிறிதரன், கோட்டக்கல்வி அதிகாரி திரு.A.சுகுமாரன் அவர்களாலும் கௌரவிக்கப்பட்டுள்ளார். நாட்டியத் துறையில் ஒளிரும் இவர், கிராமப்புற மாணவர்களையும் நடனத்துறையில் ஈடுபடுத்தி அவர்களாலும் இத்துறையில் மிளிர முடியும் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். இவரால் நடாத்தப்படும் "நர்த்தனபவனம்" நாட்டியப் பாடசாலையில் சுமார் 50 மாணவர்கள் நடனம் பயில்கின்றனர்.

இவர் தேசிய இளைஞர் சேவை மன்றம், கலாசார மத்திய நிலையங்களால் நடாத்தப்பட்ட போட்டிகளில் 1ம் இடங்களைப் பெற்றுள்ளார். அத்துடன் இவர் தனது மாணவர்களை பிரதேச செயலகம், பிரதேச சபை, இந்துமாமன்றம் போன்றவற்றால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபெறச் செய்து வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளார். இவரது மாணவிகள் வட இலங்கை சங்கீத சபை நடத்தும் நடனப் பரீட்சையிலும் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற வழிகாட்டியாக உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.முரளிதரன் சதீஸ்குமார்**

**பிறந்த திகதி : 02.12.1976**

**துறை** : **நடனம்**

**நா**ட்டியத்துறை வளர்ச்சியில் பங்காற்றியவர்களுள் திரு.முரளிதரன் சதீஸ்குமார் என்பவரும் ஒருவராவார். இவர் மட்டக்களப்பைப் பிறப்பிமாகக் கொண்டவர். இவர் பெற்றுள்ள உயர்கல்வித் தகைமை MA (பரதநாட்டியம்), உயர்கல்வி பெற்ற பல்கலைக்கழகம் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சி, இந்தியா. இவர் பரதநாட்டியத் துறையில் ஈடுபடக் காரணம், பெற்றோருக்கும் இத்துறையில் இருந்த ஈடுபாடும், சிறுவயதில் அவருக்கு இத்துறையில் இருந்த ஆர்வமுமாகும்.

இவரின் குரு பரதசூடாமணி திருமதி.சுபித்ரா கிருபாகரனாவார். இவரது படைப்புக்களாக பரதக்கலையைக் கற்கும் மாணவர்களுக்காக க.பொ.த. சாதாரண தரத்திற்கான பரதநாட்டிய செயன்முறை அடங்கிய இறுவட்டும், நூலும் இவரால் வெளியிடப்பட்டது. இத்துறையில் இவர் பெற்ற விருதுகள் "நவரச நர்த்தன தம்பதிகள்" விருது, "கலாவித்தகர்" விருது என்பனவாகும். இவரது சாதனைகளாக அகில இலங்கைத் தமிழ்மொழித்தினப் போட்டியில் தனிநடனத்தில் முதலாமிடம் பெற்று இரு தடவை தங்கப்பதக்கம் பெற்றமை. தேசிய இளைஞர் சேவை மன்றம் போட்டியில் முதலாமிடம் (அகில இலங்கை), சக்தி TV நடனப் போட்டி 2ம் இடம் (அகில இலங்கை) என்பனவாகும்.

இவரது தற்போதைய கலை ஈடுபாடுகளான "கலைக்கோகிலம்" எனும் நடனப் பள்ளியை நிறுவி கலைப்பணி புரியப்படுகிறது. மாணவர்களை நடனப் போட்டிகளுக்கு தயார்படுத்தி ஈடுபடுத்தல், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தி ஈடுபடுத்தல் போன்றனவாகும். மேலும் இவர் மட்டக்களப்பு பரத கலாலயாவின் அங்கத்தவராயும், மட்டக்களப்பு எழுத்தாளர் பேரவையில் பரதநாட்டிய இணைப்பாளராகவும் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திருமதி.தாக்ஷாயினி பிரபாகர்

பிறந்த திகதி : 22.08.1980

துறை : நடனம்

நாட்டியத் துறையில் பிரகாசிப்பவர்களுள் திருமதி தாக்ஷாயினி பிரபாகரும் ஒருவராவார். மட்டக்களப்பு, எல்லைவீதியை வதிவிடமாகக் கொண்ட இவர் தற்போது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார். பத்து வயது முதல் நடனத்துறையில் ஈடுபடத் தொடங்கிய இவர், திருமதி.சுபித்திரா கிருபா கரனின் மாணவியாவார். இவர் பல கலை வெளிப்பாடுகளில் இந்தியா வில் ஈடுபட்டு பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுள்ளார். திருச்சி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியின் பரதநாட்டிய முது கலைமாணிப் பட்டதாரி யான இவர், இங்கு தனியாக ஒரு நிறுவனத்தை நடனத்துறையைச் சார்ந்து இயக்கிக் கொண்டிருக்கிறார். கவிஞர் வெல்லவூர் கோபாலின் மகளான இவர் மோகினி ஆட்டத்தை மூன்று வருடம் இந்தியாவில் பயின்று அரங்கேற் றங்கள் செய்தவர். எழுத்துத் துறையிலும் ஈடுபாடுகொண்டவர். இவரது படைப் புக்கள் நூல்களாக வெளிவந்துள்ளன. மற்றும் வீரகேசரி பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ளது. இவர் ஆய்வுத் துறையில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வெற்றி கண்டுள் ளார். இவர் மோகினியாட்டம், இந்திய மரபுவழி ஆடற்கலைகள், முக்கூத்து, தம்பாட்டம் ஆகியவை பற்றி நூல்கள் வெளியிட் டுள்ளார்.



பெயர் : திருமதி.ஷர்மிளா ரஞ்சித்குமார்

பிறந்த திகதி : 23.06.1973

துறை : நடனம்

மட்டக்களப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இவர் தனது ஆரம்ப குருவாக திரு. கமலா ஞானதாஸைக் கொண்டவர். நடண முதுநுண்கலை மானியை இந்தியாவில் கலைக்காவிரியில் முடித்து கொண்ட இவர் தற்போது கிழக்குப் பல்கலைக் கழகம் சுவாமி விபுலானந்தா இசை நடனம் கல்லூாயில் நடன விரிவுரையாள ராகக் கடமையாற்றுகின்றார். இவர் வட இலங்கையில் சங்கீத சபையில் "கலா வித்தகர்" பட்டம் பெற்றவர். மட்டக்களப்பிலே பல நடன நிகழ்வுகளையும் அரங்கேற்றங்களையும் நிகழ்த்தியுள்ளார். சிலுவையே சிகரம், கல்வாரிப் பூக்கள், யேசுனிலா கிறிஸ்துவின் இரவு போன்ற நாடகங்களில் வந்த நடனங் களுக்கு நடன அமைப்பினை செய்துள்ளார். இவரால் சிலப்பதிகாரத்தில் ஆடல் செய்திகள் நாட்டிய சஸ்திரமும் பரதக்கலையும் எனும் நூல்கள் வெளி யிடப்பட்டுள்ளன. இவர் தனிப்பட்ட முறையில் "பரத க்ஷேத்திரா" எனும் நாட்டிய பள்ளியை நடத்தி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : செல்வி. துரைசிங்கம் உஷாந்தி
பிறந்த திகதி : 01.09.1980
துறை : நடனம்

**நா**ட்டியக் கலையை வளர்ப்பதற்காக சேவையாற்றிக் கொண்டிருப்பவர்களில் இளந்தலைமுறைக் கலைஞர்களுள் ஒருவராக செல்வி. துரைசிங்கம் உஷாந்தி அவர்கள் மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவர். உயர் கல்வியைப் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இந்தியாவிலும் கற்றார். தற்போது இவர் நடன விரிவுரையாளராகக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கிறார். இவர் பரத நாட்டியம், மோகினியாட்டம், குச்சுப்பிடி, கிராமிய நடனங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளார். இவர் நாட்டியத் துறையில் ஈடுபட்டு இவ் வளர்ச்சியை அடைவதற்கு நடனத்துறையில் அவர் கொண்டுள்ள விருப்பும், பெற்றோர் மற்றும் சகோதரர்களின் ஊக்குவிப்பும் ஆகும். செல்வி. உஷாந்தி அவர்கள் திருமதி.மலர்விழி சிவஞானசோதி குரு அவர்களைக் குருவாகக் கொண்டு இக்கலையைப் பயின்றுள்ளார்.

நாட்டியத் துறையில் வளர்ந்துவரும் இவருக்கு பாரதி யுவகேந்திராவினால் வழங்கப்படும் “சுவாமி விவேகானந்தர்” விருது கிடைக்கப்பட்டுள்ளது. இவர் தனியாக நாட்டியப்பள்ளி நடாத்திவருவதுடன் மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகவும் சேவையைத் தொடர்கிறார்.

உஷாந்தி துரைசிங்கம் அவர்கள் இந்தியாவிலும் இலங்கையில் மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களிலும் தனது கலை வெளிப்பாட்டினை மேற்கொண்டுள்ளார். மற்றும் இவரது படைப்புக்கள் வீரகேசரி வார வெளியீட்டிலும், சக்தி TV மற்றும் ரூபவாஹினி ஆகிய ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **எம்.எஸ்.ஏ.அஸீஸ்**

**துறை** : **ஓவியம்**

மட்டக்களப்பைச் சேர்ந்த அல்ஹாஜ் எம்.எஸ்.ஏ.அஸீஸ் அவர்கள் ஓவியக் கலையில் சிறந்து விளங்கினார். 1958ல் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் கலைத்துறை விரிவுரையாளராக 10 வருடங்களும், மட்டக் களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 20 வருடங்களும் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், மாணவனாகப் பயின்று கொண்டிருந்த வேளையிலே இவரது பல ஓவியங்கள் இலங்கையின் பிரபல பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்தன. பின்னர் கொழும்பு கவின்கலைக் கல்லூரியில் ஓவியக் கலையை முறையாகப் பயின்ற பின்னர் தனது ஓவியத் திறனை வெளிப்படுத்த ஒரு பிரசுராலயத்தில் முழுநேர ஓவியராகச் சேர்ந்து கொண்டு பணியாற்றினார். 50களில் இவரது ஓவியங்கள் பத்திரிகைகளில் நாளாந்தம் வெளிவந்தன.

பத்திரிகைகளுக்கு இவர் வரைந்த ஓவியங்கள் தவிர இவரால் வரைந்து கையளிக்கப்பட்ட பல அரசியல் தலைவர்களின் படங்களும் ஒரு பட்டியலா கும். 1960ல் இவரால் வரையப்பட்ட மஹாத்மாகாந்தியின் படம் கொண்ட நாட்காட்டி தமிழ்நாட்டில் மிகுந்த செல்வாக்கினைப் பெற்றிருந்தது. பாலும்பழ மும், பாகப்பிரிவினை ஆகிய திரைப்படங்களில் இக்கலண்டர் இடம்பிடித் துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஓவிய ஆசிரியராகயிருந்து இவர் நாட்டில் பல நூற்றுக்கணக்கான தமிழ்-இஸ்லாமிய ஆசிரியர்களை உருவாக்கிய பெரு மைக்குரியவர். இவர் சில்க்ஸ் கிறீன் அச்சுக்கலையினைப் பயின்றவர்களில் முன்னோடியாவார். 1959ல் தமிழ் நாட்டில் இவ்வச்சுக்கலையை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமையும் இவரைச் சாரும்.

ஓவியத்துறை மட்டுமன்றி, எழுத்துலகிலும் இவர் பங்களிப்புச் செய்துள் ளார். முன்னாள் அமைச்சர் செ.இராசதுரை அவர்களுடன் சேர்ந்து 'லங்காமுரசு' என்ற பத்திரிகையையும், பின்னர் 'யுவன்' என்ற பத்திரிகையையும் வெளியிட் டுள்ளார். ஓவியத்துறை தொடர்பான வானொலி உரைகளை ஆற்றியுள்ளதுடன் சஞ்சிகைகள், செய்தித்தாள்களிலும் இவை பற்றிய கட்டுரைகளை வெளியிட் டுள்ளார். பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சின் மதியுரைக் குழுவிலும் இலங்கை ஓவியப் பேரவையிலும் உறுப்பினராக இருந்து பணி யாற்றியுள்ளார். இவருக்கு கலாசார அமைச்சு கலாபூஷண விருதும் பொன் முடிப்பும் வழங்கிக் கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.கனகசிங்கம் திருச்செல்வம்**

**பிறந்த திகதி : 09.11.1942**

**துறை : ஓவியம்**

மட்டக்களப்பு சேற்றுக்குடாவைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டிருந்த இவர் மட்டக்களப்பு மாநகர சபையில் ஓவியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவராவார். 'ஓவியர் செல்வம்' எனும் புனைப்பெயரில் எல்லாராலும் அறியப்பட்டிருந்த இவர் ஆலயங்களுக்குத் திரைச்சீலை வரைவதிலும், உருவச்சிலைகளை வடிவமைப்பதிலும் நாட்டம் கொண்டிருந்தார். சிறுவயதிலிருந்தே கலைநயம்மிக்கவராகவும், ரசணை உணர்வு கொண்டவராகவும் இருந்ததினால் இவர் தனது ஓய்வு நேரங்களில் ஓவியங்களை வரைந்து தானாகவே அதன் நுணுக்கங்களைக் கற்றுத்தேறினார். பலராலும் பாராட்டுப் பெறும் ஓவியங்களை வரைந்த இவர் பிற்காலத்தில் ஆலயங்களுக்கு தெய்வ உருவங்களை வரைந்து கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

திருப்பெருந்துறை முருகன் ஆலயத்தில் வரைந்த ஓவியங்கள் இவரை சிறந்த ஓவியராக வெளியுலகிற்கு எடுத்துக் காட்டியது எனலாம். தொடர்ந்து கல்லடி திருச்செந்தூர் முருகன் கோயில், ஈச்சந்தீவு கண்ணகி கோயில், கரவெட்டி காளிகோயில், புகையிரத நிலைய வைரவர் கோயில், நாவற்காடு பிள்ளையார் கோவில், வலையிறவு பிள்ளையார் கோவில் என இங்குள்ள அநேகமான ஆலயங்களுக்கு தெய்வ உருவங்களை அழகுடனும் நேர்த்தியுடனும் வரைந்துகொடுத்து அனைவராலும் பாராட்டுப் பெற்றார்.

சிறந்த ஓவியர் எனும் அடிப்படையில் இவரை ஈச்சந்தீவு காளி கோயில் நிர்வாகம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் தொடர்ந்தும் பல ஆலயங்கள் இவரின் ஓவியத் திறனைப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.இராசமுத்தையா ஜெயபாலன்

பிறந்த திகதி : 23.06.1948

துறை : ஓவியம்

மட்டக்களப்பு புதுநகரைச் சேர்ந்த இராசமுத்தையா ஜெயபாலன் அவர்கள், சிறுவயது முதலே ஓவியத் துறையில் ஈடுபாடுள்ளவர். இவர் சிறிது காலம் ஓவியர் மா.வி.குமார் அவர்களிடம் ஓவியப் பயிற்சி பெற்று, பின்னர் தானாகவே ஓவியங்களை வரையத் தொடங்கினார். இவர் மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத்தினால் அகில இலங்கை ரீதியில் (1969) நடாத்தப்பட்ட "இராம நாடகம்", "அனுவுருத்திர நாடகம்" ஆகிய இரு நாட்டுக்கூத்து நூல்களுக்கான அட்டைப்பட ஓவியப் போட்டியில் கலந்துகொண்டு சிறந்த அட்டைப்பட ஓவியத்திற்கான பரிசினைப் பெற்றார். அவ்விரு ஓவியங்களும் அட்டைப்படமாக வெளிவந்தன.

மண்முனை வடக்கு கலாசார பேரவையினால் 1986ம் ஆண்டு நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியிலும் இவரது ஓவியம் சிறந்ததாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசினை வென்றார். தவிர சினிமா படங்களுக்கான கட்டவுட் ஓவியங்கள் பலவற்றையும், இலச்சினைகள், புத்தகங்களுக்கான அட்டைப் பட ஓவியங்களையும், ஆலயங்களுக்கான திரை ஓவியங்கள் பலவற்றையும் வரைந்து கொடுத்துள்ளார். இன்றுவரை இவரது ஓவியப்பணி தொடர்கிறது.

இவைதவிர நாடகக் கலையிலும் மிகுந்த ஈடுபாடுடையவர். நடிப்பு, ஒப்பனை, உடையலங்காரம், காட்சியமைப்புக்கள் என்பவற்றில் சிறந்து விளங்குபவர். தேனமுத இலக்கிய மன்றத்தின் "நிறைந்தது நெஞ்சம்" என்னும் நாடகத்தில் வரும் அந்தப்புரக்காட்சி, ஆரையூர் இளவலின் "நீறுபூத்த நெருப்பு" என்னும் நாடகத்தில் வரும் பாற்கடலில் பரந்தாமன் பள்ளி கொள்ளும் காட்சி, குருநாதனின் "கறுப்பு ராஜா சிவப்பு ரோஜா" என்னும் நாடகத்தில் வரும் அரண்மனைக் காட்சி என்பன இவரால் வரையப்பட்டு பலராலும் பாராட்டப்பெற்ற ஒன்றாகும். இவர் இவைகளுக்கான பாராட்டுப் பத்திரங்கள் பலவற்றைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.சிவலிங்கம் கந்தசாமி
பிறந்த திகதி : 25.07.1945
துறை : ஓவியம்

மட்டக்களப்பு கல்லடியில் வசிக்கும் இவர், பிரபல ஓவியரும் நாட்டுக்கூத்து, நாடகம் என்பவற்றின் ஒப்பனைக் கலைஞருமான சிவலிங்கம் அவர்களது புதல்வராவார். தந்தையின் வழியில் தன்னையும் ஈடுபடுத்திய இவர், மட்டக்களப்பில் பிரபல்ய ஓவியர்களில் ஒருவராக இனங்காணப்படுகின்றார். விவசாயத் திணைக்களத்தில் ஆங்கிலத் தட்டெழுத்தாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ள இவர், தற்போது முழுநேர ஓவியராகத் தனது பணியைத் தொடர்கின்றார். ஓவியர் 'குகன்' என்ற புனைப்பெயரில் எல்லோராலும் அறியப்பட்ட இவர், மட்டக்களப்பிலுள்ள இந்து ஆலயங்கள் பலவற்றுக்கு தமது கைவண்ணத்தில் திரைச் சீலைகளையும் இறைவனதும், இறையடியாரதும் உருவப் படங்களையும் வரைந்து உயிர்பெறச் செய்தவராவார்.

மட்/கல்லடி உப்போடை பேச்சியம்மன் ஆலய திரைச்சீலை, ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய நாயன்மார்களது சுவர் ஓவியம், கல்லடி ஸ்ரீ முருகன் ஆலய மற்றும் சித்தி விநாயகர் ஆலய திரைச் சீலைகள், கல்லடி ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷனிலுமுள்ள இவரது ஆக்கங்கள் போன்றவற்றை இவரது திறமைக்கு எடுத்துக்காட்டுக்களாகக் கூறலாம்.

இவரது ஓவியத் திறனைப் பாராட்டி கல்லடி சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையினர் 1995ல் ஆலய கும்பாபிஷேக நாளில் பொன்னாடை போர்த்தி 'ஓவிய மாமணி குகன்' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவித்தனர். அதே வருடம் மண்முனை வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவையும் இவரைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி தேனகக் கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவித்தது. தென்றல் பத்திரிகை நடாத்திய 'கலைஞர் கௌரவம் - 2008ல்' சிந்தனைச் சிற்பி என்ற விருதும் பட்டமும் வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.மு.சோமசுந்தரம்

பிறந்த திகதி : 30.05.1949

துறை : ஓவியம்

ஓவியக் கலைஞரான திரு.மு.சோமசுந்தரம் அவர்கள் திமிலைதீவு, மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவராவார். சிறுவயதிலிருந்தே பாடசாலை நாட்களில் ஓவியம் வரைவதில் மிகவும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். இவரின் ஆரம்பக் கல்வியை ஆனைப் பந்தி ஆண்கள் பாடசாலையில் கற்றார். குடும்பத்தினரின் பங்களிப்போ தனக்கென ஒரு குருவோ இல்லாத நிலையில் தன் ஆர்வம் காரணமாக ஓவியப் பயிற்சியை மேற்கொண்டு வந்தார். தனது பதினெட்டாவது வயதில் முதல் விளம்பர ஓவியத்தை வரைந்து பலரின் பாராட்டுக்களைப் பெற்றார். தனது குடும்ப வறுமை நிலை காரணமாக ஓவியத்துறையையே தனது தொழிலாக மாற்றி ஓவியங்கள் வரைவதுடன், விளம்பர நிறுவனங்களுக்கான விளம்பரப் பலகைகளை எழுதும் ஆற்றலை வளர்த்துக் கொண்டார். மட்டக்களப்பு நகரின் பல தொழில் ஸ்தாபனங்கள் இவரது கைவண்ணத்தில் எழுதப்பட்ட விளம்பர பலகைகளுடனே காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிறு கைத்தொழில் திணைக்களம் நடாத்திய சிறு உற்பத்தி முயற்சியாளர்களுக்கான கண்காட்சியில் இவரது ஓவியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான விலையில் விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். தற்போது டிஜிட்டல் முறையிலான விளம்பர ஓவியங்களையும் மேற்கொண்டு வருகின்றார். மண்முனை வடக்கு கலாசாரப் பேரவையால் தேனக கலைச்சுடர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். வடகிழக்கு மாகாண சபையால் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சியில் இவரது ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இயற்கைக் காட்சியில் மிகவும் மன உணர்வுடன் கூடிய ஈடுபாடு கொண்ட ஓவியர் சோமு ரசனையுள்ள பல ஓவியங்களை வரைந்து பலரின் பாராட்டைப் பெற்றுள்ளார். நம் நாட்டில் மட்டுமன்றி லண்டன், குவைத் போன்ற நாடுகளிலும் இவரது ஓவியத் திறமையை வெளிப்படுத்தியுள்ளார். லண்டனில் வரையப்பட்ட மோனலிசா ஓவியம் பலரினால் பாராட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : டாக்டர் சின்னையா வேலாயுதம்பிள்ளை**

**பிறந்த திகதி : 20.02.1950**

**துறை : ஓவியம்**

**தீ**மிலைதீவு கிராமத்தைப் பிறப்பிடமாகவும், கல்லடியை வசிப்பிட மாகவும் கொண்ட இவர், ஒரு வைத்தியக் கலாநிதியாகவுள்ளார். ஓவியத்துறையில் சிறுவயது முதல் ஈடுபாடுள்ள இவராலே கிரான் கிறிஸ்தவ ஆச்சிரமத்தில் உள்ள இயேசுநாதரின் இராப்போசன நிகழ்வு சுவர்ச்சித்திரமாக வரையப்பட்டுள்ளது. 1992ல் 'லியோ கிளப்' நடாத்திய ஓவியக் கண்காட்சியில் இவரது ஏராளமான ஓவியங்கள் காட்சிப்படுத் தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். மண்முனை வடக்குப் பிரதேச செயலக கலாசார பேரவைக்கான சின்னமும் இவரால் வரையப்பட்டதாகும்.

பண்டைய தமிழ்க் கிராமிய அரங்கம் 1992ல் பிரித்தானியாவில் நடை பெற்றபோது தவத்திரு விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டு பாமலரின் வெளியீட்டுக்கென சுவாமி விபுலானந்தரின் படத்தினை முதன் முதலாக வரைந்து கொடுத்த பெருமை இவரையேசாரும்.

1994ல் எமது கலாசார பேரவையால் ஓவியத்துக்காகக் கௌர விக்கப்பட்டு தேனகக் கலைச்சுடர் விருது வழங்கப்பட்டது. இவர் நாடகத் துறையிலும் ஈடுபாடு காட்டிவந்துள்ளார். நளின கலாமன்றம், தேனமுத இலக்கிய மன்றம் ஆகியவற்றில் அங் கத்துவராக இருந்து பல மேடை நாடகங்களில் நடித்ததோடு, 1975ல் வானொலி நடிகராக வும் இருந்து பல சான்றிதழ்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள் ளார். நடிப்பு மட்டுமன்றி ஒப்பனை, உடையலங்காரம், மேடையலங் காரம் முதலிய துறைகளிலும் திறமைபெற்றவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.சோமசுந்தரம் ஸ்ரீகமலச்சந்திரன்**

**பிறந்த திகதி : 10.06.1950**

**துறை : ஓவியம்**

கல்முனையைப் பிறப்பிடமாகவும், சின்ன உப்போடை மட்டக்களப்பை வாழ்விடமாகவும் கொண்ட இவர், சித்திர ஆசிரிய ஆலோசகராகவிருந்து தற்போது ஓய்வுபெற்றுள்ளார். சிறுவயதில் தனது மாமனார் சி.யோகராசா அவர்களிடமும், பாடசாலையில் ம.கைலாசபதி ஓவிய ஆசிரியரிடமும், அரசினர் ஓவிய சிற்பக் கல்லூரியில் விரிவுரையாளர்களிடமும், ஓவியக் கலையை முறையாகவும் பாடத்திட்டவிதானத்துடனும் கற்றுத் தேறிய இவர் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றி மாவட்ட ஓவிய மாணவர்களது ஓவியக் கலை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார்.

இவர் மாணவர்களுக்காக தனிப்படவும், கூட்டாகவும் 1981, 1991, 1998ம் ஆண்டு காலப்பகுதிகளில் ஓவியக் கண்காட்சிகளை நடாத்தி புகழ்பெற்றார். மேலும் சித்திரம் ஆண்டு 6-11 வர்ணப்பயிற்சி, சித்திரக் கலை க.பொ.த.(சா/த) ஆகிய பாட நூல்களையும் எழுதியதுடன் மாவட்டப் பாடசாலைகளுக்காக சித்திரக்கலை பாடத்திட்டத்தையும் உருவாக்கி மாணவர்களும் ஆசிரியர்களும் பயனடைய வகை செய்தார். இவரது மாணவர்கள் மாவட்ட ரீதியிலும் அனைத்திலங்கை சர்வதேச ரீதியிலும் பாராட்டுக்களையும் தங்கப்பதக்கங்களையும் பெற்றுக்கொடுத்து இவருக்குப் புகழ் சேர்த்துள்ளனர்.

மேலும் இவர் பிரத்தியேகமாக திரைச்சீலை வரைதல், ஊர்திகள் விளம்பர ஓவியங்கள் சலுசல நிறுவனத்திற்கும், காத்தான்குடி சீத்தை அச்சிடும் நிறுவனத்துக்கும் சீத்தைச் சேலை அலங்காரங்கள் நூற்றுக்கணக்கில் வடிவமைத்துக் கொடுத்தமை போன்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டவர். ஓவியக் கலை மட்டுமன்றி, மட்/இந்துக் கல்லூரியின் முருகன் சிலை அமைத்துக் கொடுத்து அவரது சிற்ப வடிவமைப்புத் திறனையும் வெளிப்படுத்தினார்.

ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றியதுடன் தற்காலத்தில் கல்வி அலுவலகம், ஆசிரிய கலாசாலை, கல்விக்கல்லூரி, கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம் ஆகியவற்றுக்கும் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகின்றார். இவரது திறனைப் பாராட்டி கௌரவங்களும், விருதுகளும், தங்கப்பதக்கமும், பணப் பரிசுகளும் பல்வேறு அமைப்புக்களும், பாடசாலைகளும் வழங்கி கௌரவித்துள்ளன. வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் 'கலாவித்தகர்' விருதும் இவருக்குக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு. ஈஸ்வரராஜா குலராஜ்**
**பிறந்த திகதி : 28.08.1951**
**துறை : ஓவியம்**


மட்டக்களப்பில் பயனியர் வீதியில் வாழ்ந்துவரும் இவர், ரேகை ஓவியத்தில் மிகவும் கைதேர்ந்தவர். தமிழ் நாடு கலாசேத்திராவில் ஓவியம் பயின்று டிப்ளோமாப் பட்டம் பெற்ற இவர் ஓவியரான ஸ்ரீநிவா லுவின் படைப்புக்களால் ஆகர்ஷிக்கப்பட்டவர். பாரம்பரிய நடை முறைகள் பற்றிய கூரிய அவதானிப்புடைய இவர் தஞ்சாவூர் ஓவியம், துணி ஓவியம், பத்திக் ஓவியம், கலங்கணி என்பவற்றில் சிறப்புத் தேர்ச்சியுடையவர். ஓவியப் பயில்வின் பின்பு தொழில்முறை ரீதியாகத் தன்னை வளர்த்துக்கொண்ட குலராஜ், (மோகன் டெக்ஸ்டைல்ஸ்) சென்னை யில் பகுதிநேர பத்திக் ஓவியராகவும், தூரதர்சனில் தற்காலிக பகுதிநேர ஓவியராகவும், தேவி வார இதழ், வீரகேசரி சினிமாப்பகுதி என்பவற் றில் பிரதம ஓவியராகவும் பக்க வடிவமைப்பாளராகவும் கடமையாற்றி யுள்ளார்.

கிழக்கு சார்ந்த புராணங்கள், ஐதிகங்கள், கட்டுக்கதைகளைப் பாரம்பரிய முறையிலான பார்வையுடனேயே வரைந்து வருகிறார். கொக் கட்டிச்சோலை, ஆடகசவுந்தரி, நாககட்டு எனத் தொடரும் குலராஜ் பாடசாலை மாணவர்களுக்கான அலங்கார ஓவியம் என்னும் பயிற்சி நூலினை வெளியிட்டுள்ளதோடு, ஆசிரியர், மாணவர்களுக்கு ஓவியப் பயிற்சி வகுப்புக்களை நடாத்தி ஓவியம் பற்றிய சிந்தனையை வளர்த்து வருகிறார்.

இதுவரை இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஓர் ஓவியக் கண்காட்சியை நடத்தியுள்ளார். அத்துடன் மட்டக்களப்பின் வளரும் ஓவியர்களைக் கொண்டு வாழ்த்து அட்டைகள், சிவராத்திரி ஓவியக் கண்காட்சி என்பவற்றை நடாத்தியுள்ளதோடு வடகிழக்கு மாகாண சபை ஓவியக் கண்காட்சிகளிலும் ஓவியங்கள் காட்சிப்படுத்தியுள்ளதோடு இன்றுவரை ஓவியப்பணியாற்றி வருபவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.கந்தசாமி சரவணபவன்

பிறந்த திகதி : 06.10.1958

துறை : ஓவியம்

கல்லடி புது முகத்துவாரத்தைப் பிறப்பிடமாகவும் அமிர்தகழியை வாழ்விடமாகவும் கொண்ட இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார். பிரபல அண்ணாவியார் கந்தசாமி அவர்களின் மகனான இவர் தந்தையின் வழிகாட்டலாலும் ஊக்குவிப்பாலும் ஓவியத் துறையில் சிறு வயதிலிருந்தே ஈடுபட்டு பல்வேறு ஓவியப் போட்டிகளில் கலந்து பரிசில்கள் பெற்றதோடு பிற்காலத்தில் 'K.S.பவான்' என்ற புனைப்பெயரில் ஓவியத் துறையில் பிரகாசிக்கலானார்.

தனது திறமையை வளர்த்துக்கொள்ள தமிழகம் சென்று முறையாக ஓவியப் பயிற்சி பெற்ற இவர் இந்தியாவில் வெளிவந்த நாளிதழ்கள், வார, மாத சஞ்சிகைகள், ஹிந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, மாலைமுரசு, தினத்தந்தி, குமுதம், ஆனந்தவிகடன், மலையாள மனோரமா போன்றவற்றிற்கு விளம்பர ஓவியங்கள் வரைந்து பிரபல்யம் பெற்றிருந்தார்.

மட்டக்களப்பில் கிராமசேவை உத்தியோகத்தராகப் பணிபுரிந்த இவர், இங்கு வெளிவந்த பல நாவல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றிற்கு அட்டைப்படம் வரைந்திருக்கின்றார். இவரது ஓவியப் பணிக்காக புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவு பணிமன்றம் 'ஓவியச் செல்வன்' என்ற பட்டத்தையும் பாராட்டையும் வழங்கிக் கௌரவித்திருக்கின்றது.

ஓவியத்துறை மட்டுமன்றி சரவணபவன் அவர்கள் பாடலாக்கம், கவிதை, புகைப்படம் போன்ற துறைகளிலும் பிரகாசித்தவராவார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு கவிதை, கட்டுரை, சிறுகதை, மெல்லிசைப் பாடல்கள் பலவற்றை எழுதி வந்தவர். சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரி கீதமும் இவரால் எழுதப்பட்டதாகும். ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய 'தீர்த்தக்கரையினிலே' எனும் பாடல் தொகுப்பில் இரு பாடல்கள் இவரால் எழுதப்பட்டவையாகும். தற்போது கனடாவிலுள்ள இவர் அங்கும் இக்கலைப்பணியை ஆற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.சின்னத்தம்பி ரவீந்திரன்**

**பிறந்த திகதி** : **17.06.1959**

**துறை** : **ஓவியம்**

மட்டக்களப்பின் தென்பகுதியில் அமைந்துள்ள சித்தாண்டிக் கிராமத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி ரவீந்திரன் அவர்கள், துள்ளித் திரிந்த பள்ளிப்பருவக் காலங்களிலேயே வரைதலில் தன்னைக் கரைத்துக்கொண்ட இவரிற்கு இத்துறை சார்ந்த வகிபாக ஊக்கியாக இருந்தவர் இவரின் தாய் மாமனாரான "ஓவியர் குமார்" எனப் பலராலும் அழைக்கப்பட்ட கந்தையா ஆவார். ஓவியர் குமார் அவர்கள் முறைசார்ந்த ஓவியப் பயிற்சியை இந்தியாவில் பயின்றவர். ஆரம்பகாலச் சிங்களத் திரைப்படங்களில் கலை இயக்குனராகப் பணியாற்றியவர். இவரது கலை ஆளுமை வெளிப்பாட்டின்கீழ் ஓவியத் துறையைப் பயின்ற திரு.ரவீந்திரன் அவர்கள் சித்திரக் கலையில் உயர் தேரச்சிபெற்று, பயிற்றப்பட்ட சித்திர ஆசிரியராகப் பணியாற்றி தற்பொழுது மட்டக்களப்பு கல்வி வலயத்தில் சித்திரப் பாடத்துறைக்கான சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி வருவதோடு, மட்டக்களப்பு கல்விக் கல்லூரியில் சித்திரக் கலைத்துறை பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான பகுதிநேர விரிவுரையாளராகவும் சேவையாற்றுகின்றார். ஓவியச் செயற்பாட்டில் "கலாபாரதி" விருதுபெற்ற இவரது ஓவியங்கள் பல கண்காட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வோவியங்களை ஒன்றுசேர்த்து தனிநபர் கண்காட்சியை நடாத்துவதற்கான திட்டமிடலில் தற்போது ஈடுபட்டுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட சஞ்சிகை அட்டைப்பட வடிவமைப்புக்களையும், பிரதிமை ஓவியங்களையும், தலைவிரித்தாடும் மரங்கள் அடர்ந்த தரைக் காட்சிகளையும் வரைந்து தன்னை வெளிப்படுத்தியுள்ள ரவி அவர்கள் நவீன ஓவியப் பிரக்ஞையுடன் சாமான்ய மானுட வாழ்வியலையும் பதிவு செய்துள்ளார்.

இவரிடம் க.பொ.த. உயர்தரத்தில் சித்திரப் பாடத்தைக் கற்றுத் தேறிய பல மாணவர்கள் தற்பொழுது ஓவியக் கலை சார்ந்த பல்கலைக் கழகப் பட்டதாரிகளாக வெளியேறியுள்ளனர். இன்னும் பலர் சித்திரத் துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்கின்றனர். ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறியில் இவரின்கீழ் ஓவியப் பயிற்சிபெற்ற பல ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட சித்திர ஆசிரியர்களாக உருவாகியுள்ளனர். கீழ்த்திசைமண் ஈன்றெடுத்த வைதிகக் கலப்பற்ற மரபுசார்ந்த சடங்குகளிலும், நம்பிக்கைகளிலும், அதனால் உருவான கலை, பண்பாட்டு வாழ்வியல் கோலங்களிலும் தீவிர பற்றுக் கொண்ட இவரது ஓவியப் படைப்புக்களில் கிழக்கின் தனித்துவமான மானுட விழுமியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| பெயர் | : திரு.இராசலிங்கம் ருசாந்தன் |
| பிறந்த திகதி | : 30.12.1972 |
| துறை | : ஓவியம் |

மட்டக்களப்பு திருமலை வீதியை, இல.501/6A, ஐ வசிப்பிடமாகக் கொண்டுள்ள இவர், நவீன ஓவியத்துறையில் மிகவும் பிரகாசித்து வருபவராவார். 'கிக்கோ' எனும் புனைப்பெயரில் எல்லோராலும் அறியப்பட்ட இவ் ஓவியர் கால்நடை வைத்தியத்துறைப் பட்டதாரி என்பதுடன் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையிலும் சித்திபெற்று தற்போது மட்டுமாவட்ட சமநல அபிவிருத்தி உதவி ஆணையாளராகவும் பணி புரிந்து வருகின்றார். இளமையிலிருந்தே ஓவியம் வரைவதில் ஈடுபட்ட இவர் பாடசாலைக் காலத்தில் ஓவியப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசில்கள் பெற்றிருக்கின்றார். அதனைத் தொடர்ந்து தனது ஓய்வு காலங்களில் ஓவியம் வரைவதில் நாட்டமுடன் ஈடுபட்டு வந்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்தில் ஓவியப் போட்டிகளில் முதலிடம் பெற்றுவந்த இவர் அங்கு நவீன ஓவியம் சார்பான தேடலில் ஈடுபட்டு வந்தார். அங்குள்ள நூலகத்தில் ஓவியத்துறை சார்ந்த நூல்களைக் கற்றுத் தேறியதோடு நவீன ஓவியத்துறை ஏன், எதற்காக, எப்படி உருவானது போன்ற விடயங்களையும் கற்றறிந்து கொண்டார். பின்னர் நவீன ஓவியங்களில் தனக்கென ஒரு பாணியை உருவாக்கி வரைதலில் ஈடுபட்டுவந்த இவர் இலங்கையில் பல இடங்களில் தமது ஓவியக் கண்காட்சிகளை நடாத்தியுள்ளார். நாடறிந்த நவீன ஓவியராக விளங்கும் இவர், ஓவியத் துறைக்காக கலாசூரி விருதையும் பெற்றுள்ளார். அத்துடன் தாம் எழுதிய நாடகங்க ளின் தொகுப்பு நூல் ஒன்றிற்காக அரச சாகித்திய விருதையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு. தம்பிமுத்து பிலிப் பிலிப்லியோ**

**பிறந்த திகதி : 26.11.1933**

**துறை : சிற்பக்கலை**

மட்டக்களப்பு கிளாரிலேன், இல.45 இல் தற்போது வசித்துவரும் இவர் ஓர் சிற்பக் கலைஞராவார். மட்டக்களப்பு புகையிரத நிலைய முன்றலில் அமைந்துள்ள அழகிய மீன் கன்னி சிற்பத்தை வடிவமைத்தவர் இவரேயாவார். மேலும் இவர் பொதுச்சந்தைக்கு அருகில் உள்ள கடல்கோள் அனர்த்தம் சுனாமியால் தாயும் சேயும் கடலில் தத்தளிப்பது போன்ற சிற்பத்தையும் வடிவமைத்துள்ளார். புகையிரத நிலைய கட்டடப்பகுதியில் தச்சுத் தொழிலாளியாக கடமைபுரிந்து ஓய்வு பெற்றுள்ள இவர் தனது பாடசாலைக் காலத்தில் தச்சு வேலைகள் தொடர்பாகக் கற்பிக்கும் ஆசிரியரான திரு.எஸ்.சொலமன் ஆவர்களிடம் சிற்ப நுணுக்கங்களைக் கற்றபின் இக்கலையில் ஈடுபட்டு வருகின்றார். இவர் மட்டக்களப்பில் 1997 இல் நடைபெற்ற கைத்தறிப் புடவைக் கைப்பணிப் பொருட்கள் கண்காட்சியில் சமாதானத்தை வெளிப்படுத்தும் இரு சிற்பங்களை வடிவமைத்து அதற்குப் பரிசும் விருதும் பெற்றுள்ளார். மட்டக்களப்பு நகரிலுள்ள பிரதான மணிக்கூட்டுக் கோபுரத்திலுள்ள மீன் வடிவங்களும் இவரால் வடிவமைக்கப்பட்டதேயாகும். இவர் ரத்மலானையில் பணிபுரிந்த காலத்தில் அங்கு மொறட்டுவ தளபாடங்கள் செய்யப்படும் இடத்திற்குச் சென்று அதன் நுணுக்கங்களையும் அறிந்துகொண்டு தற்பொழுது மரவேலைச் சிற்பங்கள் வடிவமைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றார். மட்டக்களப்பிலுள்ள இந்து ஆலயங்கள், தேவாலயங்கள், வீடுகள் என சகலவற்றுக்கும் மரச் சிற்ப வேலைப்பாடுடைய கதவுகள் யன்னல்கள் முதலியனவற்றையும் வடிவமைத்துக் கொடுக்கும் தொழிலில் தற்போது ஈடுபட்டுள்ளார். மேலும் கறுப்பு கண்ணாடியில் அலங்காரங்கள் வடிவமைப்பதிலும் இவர் கைதேர்ந்தவராக உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : இளையதம்பி அல்போன்ஸ் தெய்வேந்திரன்**

**பிறந்த திகதி : 20.11.1936**


**துறை : சிற்பக்கலை**

மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் வீதி, இல. 27 ஐ தற்போது வசிப்பிடமாகக் கொண்டுள்ள இவர், சிற்ப வேலைகளுக்கும் தகரத்தால் சிற்பங்கள் வடிவமைப்பதிலும் கைதேர்ந்தவராக உள்ளார். தனது குரு பிரான்சிஸ் மாஸ்டர் எனக் குறிப்பிடும் இவர் ஆலயங்களில் பல தெய்வ உருவங்களை சிற்பங்களாக வடிவமைத்துள்ளார். ஊறணி பேச்சியம்மன் ஆலயத்திலுள்ள பிள்ளையார் சிலை, ஊறணி அரசமர நிழலிலுள்ள வெள்ளிமலைப் பிள்ளையார் சிலை, கன்னங்குடா கண்ணகி அம்மன் ஆலயத்திலுள்ள அம்மன் சிலை, கச்சேரியில் முன்பிருந்த பிள்ளையார் சிலை, கல்லடி வைரவர் ஆயலத்திலுள்ள பெரிய பிள்ளையார் சிலை. பற்றிமா மாதா சிலை போன்ற பல சிற்பங்களை இங்கு வடிவமைத்தது மட்டுமன்றி திருகோணமலையிலும் அதிகளவான சிற்பங்களை வடிவமைத்துக் கொடுத்துள்ளார். திருகோணமலை நகர தண்ணீர் தாங்கிக்கு அருகிலுள்ள இராமர், சீதை, இலட்சுமணன், அனுமார் போன்ற உருவங்களையும், உப்புவெளியில் 5 தலை பெரிய நாகம்., இரு வைரவர் சிலைகள் முதலியவை குறிப்பிடத்தக்கவையாகும். மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள புத்த விகாரையில் இரு யானை வடிவங்களையும் இவர் உருவாக்கியுள்ளார்.

மேலும் இவர் தகரத்தால் பல உருவங்களையும் வடிவமைப்பதில் பெருமை பெற்றுள்ளார். திருப்பெருந்துறையில் உள்ள முருகன் ஆலயத்தில் மயில்வாகனம் தகரத்தால் செய்து மயில்வாகனம் புகழ் தெய்வேந்திரன் என முன்னால் அமைச்சர் செ.இராசதுரையால் புகழப்பட்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.ஏரம்பமூர்த்தி சபாரெத்தினம்**

**பிறந்த திகதி** : **30.03.1936**

**துறை** : **சிற்பக்கலை**

மட்டக்களப்பில் புன்னச்சோலை கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட இவர் சிறுவயதிலிருந்தே கலை ஆர்வம் கொண்டவர். இவர் அமைத்த நாகதம்பிரான் சிலை அமிர்தகழி வேம்புப் பிள்ளையார் ஆலயத்திலும், பிள்ளையார், முருகன் சிலைகள் ஊறணி முருகன் ஆலயத்திலும், பிள்ளையார் சிலை கல்லடி பிள்ளையார் ஆலயத்திலும், நவக்கிரக சிற்பங்கள், பிள்ளையார் சிலைகள், கோபுரங்கள் திருப்பெருந்துறை முருகன் ஆலயத்திலும், பிள்ளையார் சிலை களுதாவளை ஆலயத்திலும், அம்மன் சிலை கொத்துக்குளத்து மாரியம்மன் ஆலயத்திலும் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவைதவிர கடற்கன்னிகள் சிலைகள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள சுற்றுக் வட்டத்தில் அமைக்கப்பட்டிருப்பதையும், தாமரைப் பூ மட்டக்களப்பு கள்ளியன்காடு இந்து மயானத்திலும், கல்வாரி சிலைகள் புளியடிக்குடா புதிய செபஸ்தியார் ஆலயத்திலும், பல்வேறு சிற்பங்கள் மட்டக்களப்பு புதிய செலான்வங்கி முன்னுள்ள ஈஸ்வரன் பூங்கா விற்பனை நிலையத்திலும் வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இவரினால் தீட்டப்பட்ட சித்திரங்கள் மட்டக்களப்பு சிறுவர் வாசிகசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றி ஓய்வூதியம் பெறும் இவர் தொடர்ந்து சிற்பங்கள் அமைப்பதில் ஈடுபட்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : **டாக்டர் மாசிலாமணி கந்தசாமி**

பிறந்த திகதி : **03.03.1945**

துறை : **சிற்பக்கலை**

**Dr.**கந்தசாமி ஆரம்பக் கல்வியை ஊறணி சி.சி.தமிழ் பாடசாலையிலும் மேற்கல்வியை மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் பயின்றார். க.பொ.த.(சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்ததைத் தொடர்ந்து உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். சில வருடங்களின் பின்னர் ஹோமியோபதி மருத்துவம் கற்று, தனிப்பட்ட வைத்திய சேவையை ஆரம்பித்து தொடர்ந்து வைத்தியராகவும், சிற்பக் கலைஞராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவரால் செதுக்கப் பட்ட மகாத்மா காந்தி, மகாகவி பாரதியார் கல்விமான் வி.நல்லையா, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை ஆகியோரின் சிலைகள் இவருக்கு பெரும் புகழ்ஈட்டிக் கொடுத்துள்ளன. இவரின் சிற்பக்கலையின் சிறப்பினைப் பார்த்து மகிழ்ந்த முன்னாள் இந்து கலாசார அமைச்சர் திரு.செ.இராசதுரை அவர்கள் "கிழக்கின் இளஞ்சிற்பச் சுடர்" என்ற பட்டத்தினை வழங்கி சிறப்புச் செய்தார்.

15.12.2008ல் நடைபெற்ற கலாபூஷணம் விருது வழங்கும் வைபவத்தில் டாக்டர் கந்தசாமி அவர்களுக்கு அவரது சிற்பக் கலையினைப் போற்றும் வகையில் 'கலாபூஷண' விருது வழங்கப்பட்டது.

சர்வோதய அவை உறுப்பினராகவும், தொழிற்சங்க சம்மேளனச் செயலாளராகவும் பணியாற்றுகின்றார்.

எழுத்துத்துறையிலும் ஆர்வம் கொண்ட இவர், 'கர்ணனின் கடைசி ஆசை', 'பாஞ்சாலி சபதம்', 'குந்தி கேட்ட வரம்', 'இலங்கேஸ்வரன்', பண்டார வன்னியன் 'வாழ்க்கைப் புயல்', 'இதுவா நீதி', 'துரோகியே தூரப்போ' ஆகிய நாடகங்களை எழுதியும், நடித்தும் இயக்கியுமுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.கனகரெத்தினம் தில்லைநாதன்

பிறந்த திகதி : 02.08.1949

துறை : சிற்பக்கலை

இவர் வண்ணார்பண்ணையில் 1949ல் பிறந்தார். "தில்லை ஆசாரி" என்றழைக்கப்படுகின்ற இவர் தனது ஆரம்பக் கல்வியை வண்ணா பண்ணை தமிழ் கலவன் பாடசாலையில் கற்றார். 1970ம் ஆண்டு தங்கவேல் ஆச்சாரியிடம் சிற்ப நுணுக்கங்களைப் பயின்ற பின்னர் தனித்து இயங் கத் தொடங்கினார்.

1981ல் வாழைச்சேனை ஸ்ரீ கைலாசப்பிள்ளையார் ஆலயம், 1983ல் கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயம், 1984ல் ஊறணி மாவடிப் பிள் ளையார் ஆலயம், 1987ல் ஆரையம்பதி காளிகோயில், 1989 ஆரையம் பதி பிள்ளையார் கோயில், 1993 பெரிய ஊறணி பத்திரகாளி அம்பாள் ஆலயம், கல்லடி பத்திரகாளி அம்பாள் ஆலயம், 1995 சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயம், 1996 கொக்குவில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம், மன்னம்பிட்டி கண்ணகி அம்மன் ஆலயம், 1997 பெரிய நீலாவணை சித்தி விநாயகர் ஆலயம், 1998ல் ஏறாவூர் ஸ்ரீ மதுமலாக்கா வீரபத்திர சுவாமி கோயில், மகிழூர்முனை விஷ்ணு ஆலயம், களுவாஞ்சிகுடி வீரபத்திரர் ஆலயம், 2000ம் ஆண்டு குறுமன்வெளி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், 2002ல் அரசடி ஸ்ரீ தக்கயாகேஸ் வரர் ஆலயம், 2003 பசறை முருகன் ஆலயம், பசறை கதிரேசன் ஆல யம், கல்லடி உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், 2004ல் பசறை சுப்பிரமணியம் ஆலயம், பெரிய ஊறணி சந்திப்பிள்ளையார் ஆகிய ஆலயங்களில் வர்ணம் தீட்டியும் பொம்மைகள் செய்தும் புணருத்தானம் செய்ய உதவியுள்ளார். அத்தோடு பல ஆலயங்களின் பரிவாரக் கோயில் கள், வசந்த மண்டபங்கள், மணிக்கோபுரம் செப்பமிட்டுமுள்ளார்.

2வது உலக இந்து மகாநாட்டு விழாவிற்காக மட்டக்களப்பு சார்பாக அலங்கார ஊர்தியைச் சிறப்புற அமைத்தமைக்காக 2003ம் ஆண்டு ஞாபகார்த்த சின்னமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டார்.2005.07.13 சர்வதேச இந்துமத குருபீடம் இவருக்கு "எழில் அரசு" என்ற பட்டம் வழங்கிக் கௌரவப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.ஞானமுத்து ஆனந்தராஜா**

**பிறந்த திகதி** : **15.08.1956**

**துறை** : **சிற்பக்கலை**

**பெ**ரியகல்லாற்றைப் பிறப்பிடமாகவும் கல்லடி வேலூரை வாழ்விடமாகவும் கொண்ட ஞானமுத்து ஆனந்தராஜா பொன்னம்பலம் முத்துலிங்கம் ஆச்சாரியார் அவரிடம் சிற்ப வேலையை முறையாகப் பயின்றார். 40 ஆண்டு காலமாக ஆலயங்களில் சிற்பங்கள் வடிவமைத்து புனருத்தாரணம் செய்துள்ளார். கல்லடி வேலூர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், நாவற்காடு ஸ்ரீ சித்தி விநாயக ஆலயத்தில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள மணிக்கோபுரம், மகாமண்டபம், நவக்கிரக சிலைகள் முதலியவற்றை ஆக்கம் செய்துள்ளார். கல்லடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய தோற்றமும், அமைப்பும் இவரது கலைப்பணிக்கு ஒரு சான்றாகும். வலையிறவு ஸ்ரீ மடத்துப் பிள்ளையார் ஆலயத்தில் ஆகம விதி முறைப்படி பரிவார மூர்த்திகளான நவக்கிரகம், வைரவர், நாகதம்பிரான் ஆலயங்களை மிகவும் அழகாக அமைத்துள்ளார். மங்கிக்கட்டு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளை அழகாகச் செய்து முடித்துள்ளார். கல்லடி இராமகிருஷ்ணபுர ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தை இந்துசமய ஆகம விதி முறையோடு அழகாக அமைத்துள்ளார். கல்லடியில் அமைந்துள்ள ஸ்ரீ வேலாயுத சுவாமி ஆலயத்தை முழுமையாகப் பொறுப்பேற்று ஆகம விதிப்படி மிக அழகாகக் கட்டி முடித்து கடந்த 22.03.2009 அன்று கும்பாபிஷேகம் செய்ய உதவியுள்ளார். இக் கும்பாபிஷேகம் தொடர்பில் 09.05.2009ல் சங்காபிசேக தினத்தில் பொன்னாடை போர்த்தி "ஆகம கட்டிட சிரோன்மணி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவிக்கப்பட்டார். புதுநகர் திரௌபதி அம்மன் ஆலயத்தை முழுமையாகப் பொறுப்பேற்று மூலஸ்தானம் (கற்பக்கிரகம்) தொடக்கம் பரிபாலன மூர்த்திகள் வரை ஆகம விதிப்படியும், முறைப்படியும் மிகவும் அழகாக கட்டிமுடித்து 23.08.2004ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்ய உதவியுள்ளார். தமது கலை அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் இக்கலை ஆர்வமுள்ள இளைஞர்களைப் பயிற்றுவித்து அவர்களைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு "ஆனந்தராஜா குழுவினர்" என்ற பெயரில் மட்டக்களப்பு, அம்பாரை மாவட்டங்களிலுள்ள பல இந்து ஆலயங்களில் கட்டுமானப் பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : கந்தையா உதயசூரியன்**
**பிறந்த திகதி : 09.07.1964**
**துறை : சிற்பக்கலை**


இவர் சங்காணையில் நவாலையில் பிறந்தார். தற்போது மட்டக்களப்பு கல்லடி, 4ம் குறுக்கில் வசித்துவரும் இவர் ஆரம்ப முதல் கல்வியை நவாலி அ.மி.த.க. பாடசாலையில் கற்று, க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியெய்தினார். பதினைந்து ஆண்டுகளாக சிற்பக் கலா ரெத்தினம், சிற்ப சிரோன்மணி சின்னத்தம்பி அமரசிங்கம் அவர் களிடம் குரு-சிஷ்ய மரபு முறையில் மரபுச் சிற்பக் கலையைப் பயின்றார்.

1996ம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பில் இருபதுக்கு மேற் பட்ட ஆலயங்களுக்காக எலி, எருது, யானை, மயில், சிங்கம், குதிரை, சூரன் போன்ற சிற்பங்களை செதுக்கிக் கொடுத்துள்ளார்.

அத்தோடு கோட்டைமுனை மாரியம்மன் ஆலய சித்திரத் தேரை யும் கல்லடி - உப்போடை, நொச்சிமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆல யத்தின் சித்திரத் தேரையும் கண்ணைக் கவரும் வண்ணம் சிற்பம் செதுக்கப்பட்ட தேரையும் செய்துள்ளார். இத்தேரை அழகுற அமைத் துக் கொடுத்தமைக்காக ஆலய பரிபாலன சபையின் பொன்னாடை. போர்த்தி பொற்கிழி கொடுத்தும், "சிற்பக் கலாநிதி" என்ற கௌரவத் தையும் பெற்றார். இவைதவிர காயத்திரி, புன்னைச்சோலை, ஆனைப் பந்தி ஆகிய ஆலயங்களில் சிற்ப வேலைகளையும் செய்துள்ளார். தற்போது ஆரையம்பதி முருகன் ஆலயத்தின் தேர் வேலையையும் செய்துகொண்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.பரமசிவம் முரளிதரன்

பிறந்த திகதி : 16.12.1975

துறை : சிற்பக்கலை

கல்லடி உப்போடையை வசிப்பிடமாகக் கொண்ட முரளிதரன் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரி ஆவார். இவர் தற்போது 'நிகழ்ச்சித்திட்ட முகாமையாளராகக்' (அரச சார்பற்ற நிறுவனம்) கடமைபுரிகின்றார்.

இவரது முதல் படைப்பு மட்டக்களப்பு பிரதான மணிக்கூட்டுக் கோபுரத்தின் அருகாமையில் காணப்படும் ஓர் சாரணச் சிறுவனின் உருவச்சிலை. இவரது இரண்டாவது சிற்பம், வண.வில்லியம் ஓல்ட் அடிகளாரின் சிற்பம் மட்டக்களப்பு பொது வாசிகசாலை அருகில் நிறுவப்பட்டுள்ளது. மற்றுமொரு சிற்பமான "நைட்டிங்கேல்" அம்மையாரின் சிற்பம் மட்டக்களப்பு தாதியர் கல்லூரியில் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிசனின் வேண்டுகோளிற்கிணங்க சுவாமி விவேகானந்தர் சிற்பவேலை பங்குனி 13ந் திகதி ஆரம்பிக்கப் பட்டது. கல்லடி இந்து கலாசார மண்டபப் பகுதியில் நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கும் இச் சிற்ப வேலைகள் தற்போது முடியும் தறுவாயில் உள்ளது.

சிற்பக்கலையில் ஆர்வமுள்ள இவர் ஓவியம், கவிதை, கணனி வடிவ மைப்பிலும் ஆர்வமுள்ளவராகச் செயற்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் : அமரர் எஸ்.டி.எஸ்.சிவநாயகம்
துறை : ஊடகத்துறை

இலங்கையிலே தமிழ்ப் பத்திரிகை உலகில் தனக்கென ஒரு தனியான இடத்தை உருவாக்கிக் கொண்டு பத்திரிகை ஜாம்பவானாக விளங்கியவர் எஸ்.டி.எஸ்.சிவநாயகம். மட்டக்களப்பு தாமரைக்கேணியைச் சேர்ந்த இவர், 'சுதந்திரன்' பத்திரிகையின் ஆசிரியராகவும் பின் வீரகேசரிப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும் 1965ன் பின் தனது இறுதிக் காலம்வரை தினபதி - சிந்தாமணிப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகவும் இருந்தார். தமது வாழ்நாளில் சுமார் 50 வருடகாலத்தை பத்திரிகைத் துறை வளர்ச்சிக்காக அர்ப்பணித்த எஸ்.டி.எஸ்.சிந்தாமணியின் பிற்பாடு வெளிவந்த சூடாமணி பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். இலங்கைப் பத்திரிகை வரலாற்றில் பல எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கும் புதிய எழுத்தாளர்களின் தோற்றத்திற்கும் காரணமான எஸ்.டி.எஸ். இன் புகழ் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.



பெயர் : பிறின்ஸ் காசிநாதர்
துறை : ஊடகத்துறை

மட்டக்களப்பைச் சேர்ந்த சிறந்த கல்விமானும் ஆங்கிலப் புலமைகொண்ட ஆங்கில வாத்தியாருமாவார். பகுதிநேர ஊடகத்துறை உறுப்பினராகக் கடமைபுரிந்த இவர் மட்டக்களப்பு பெருமைகளைப் பற்றி ஆங்கில மொழியில் பல பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார். மட்டக்களப்பு பிரஜைகள் குழு செயலாளராகவும் மனித உரிமைகளுக்கு குரல் கொடுத்த இவர் 1989-1994ம் ஆண்டு வரை மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : அமரர் வீ.சு.கதிர்காமத்தம்பி

துறை : ஊடகத்துறை

இவர் கதிரவெளியைப் பிறப்பிடமாகக் கொண்டு வசிப்பிடத்தை கல்லடியில் உரிமையாக்கிக் கொண்டார். மட்/இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற இவர். பள்ளிப் பருவத்தி லிருந்தே நல்ல பேச்சாளனாகவும், எழுத்தாளனாகவும், கவிஞனாகவும் விளங்கினார்.

1964ல் "வீரகேசரி" நாளிதழின் வாழைச்சேனை நிருபராகப் பத்திரிகைத் துறையில் காலடி எடுத்துவைத்தார். 1966ல் அப்பத்திரிகையின் துணை ஆசிரியரானார். முழுநேரப் பத்திரிகையாளரான இவர் மட்டக்களப்பு அலுவலக நிருபராகவும், கிழக்குப் பிராந்திய "சுற்று" நிருபராகவும் (Roving Correspondent) பத்திரிகைத் துறையில் பல்வேறு பணிகளில் பரிச்சயம் பெற்றார். இலங்கையில் "சுற்று நிருபர்" பதவி வகித்த முதல் பத்திரிகையாளர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டித மரபு, பல்கலைக்கழக மரபுகளிலிருந்து விடுபட்டு தனக்கென்று தனிநடை வகுத்து ஆணித்தரமாகவும், சுவைபடவும் எழுதி பிரபலம் பெற்று விளங்கினார். இவர் பல்வேறு துறைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளையும், ஆசிரிய தலையங்கங்களையும் எழுதி தனக்கென வாசகர்களை உருவாக்கியமை பெருமைக்குரிய விடயமாகும். இவர் 'சுழல் சுடர்' ஆசிரியர் குழு உறுப்பினராகவும் 'தினக்கதிர்' தினசரியின் பிரதம ஆசிரியராகவும் மட்டக்கப்பில் வெளியான 'விடிவானம்' பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியராகவும், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் காப்பாளராகவும் பணியாற்றினார். 1995ல் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : அமரர் செழியன் பேரின்பநாயகம்**

**பிறந்த திகதி : 19.08.1936**

**துறை : ஊடகத்துறை**

மண்டூரைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு நகரை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இவர் மட்டக்களப்பு மாநகர முதல்வராகப் பணியாற்றி சகலராலும் அறியப்பட்டவராவார். இளமையிலேயே எழுதுவதிலும் பேசுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டிய இவர் பிறின்ஸ் காசிநாதரின் தூண்டுதலால் தினகரனுக்குச் செய்தி அனுப்பியதைத் தொடர்ந்து சிறந்த ஊடகவியலாளராக மிளிரத் தொடங்கினார். செய்திகளை நன்கு ஆராய்ந்து வழு இல்லாது வெளியிட்ட இவரது திறமையை உணர்ந்த தினகரன் பொறுப்புவாய்ந்த பத்திரிகைப் பணியில் அவரை இணைத்துக் கொண்டது. இதன் பிரதிபலிப்பாக இந்தியா சென்று அங்குள்ள அறிஞர்கள், அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களைக் கட்டுரைகளாக தினகரனில் வெளியிட்டார். மேலும் இந்தியாவிலுள்ள எழில்மிகு கோயில்களைப்பற்றி அவற்றின் படங்களுடன் விரிவான கட்டுரைகள் எழுதினார். இக்கட்டுரைகள் இந்தியக் கோயில்களின் வியக்கத்தக்க பெருமைகளை இலங்கை மக்கள் அறிய உதவின.

மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் செயலாளராகவும் சமாதான குழுவின் செயலாளராகவும் துணிவுடன் செயலாற்றி மக்களின் துயர் துடைப்பதற்கு உதவிய இவர், மட்டக்களப்பில் பெரிய அனர்த்தங்களை ஏற்படுத்திய சூறாவளி பற்றி 'சீறிவந்த சூறாவளி' 1978 எனும் சிறந்த நூலை வெளியிட்டார். எளிமையின் சின்னமாக எல்லோருக்கும் நண்பனாக விளங்கிய இவர் மட்டக்களப்பு மாநகர மாண்புமிகு முதல்வராக ஐந்து வருடங்கள் பணியாற்றி மக்களின் வாழ்த்துக்களைப் பெற்று, கிழக்கிலங்கை தமிழ் அறிஞர்களுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் மட்டுநகரில் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, மகாவித்துவான் பண்டிதர் வீ.சி.கந்தையா ஆகியோருக்கு நினைவுச் சின்னங்களை அமைத்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெயர்** : **ஞானசெல்வம் மகாதேவன்**

**பிறந்த திகதி** : **06.08.1940**

**துறை** : **ஊடகத்துறை**

மட்டக்களப்பு சிங்களவடியைச் சேர்ந்த இவர் 1951ம் ஆண்டு தனது சிறிய தந்தையாரான வித்துவான் வி.சீ கந்தையா குடும்பத்துடன் வாழ்ந்த போதே தனக்கு எழுத்துத் துறையில் ஆர்வம் ஏற்பட்டதாக கூறுகின்றார். யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் வெளியான "ஈழகேசரி" வாரப் பத்திரிகைக்கு 1956ம் ஆண்டு மாணவர் பருவத்தில் எழுதியன் மூலம் எழுத்துத் துறைக்குள் பிரவேசித்த இவர் அதனைத் தொடர்ந்து "வீரகேசரி", "தினகரன்" மற்றும் மட்டக்களப்பில் முன்னாள் அமைச்சர் செல்லையா இராசதுரையை ஆசிரியராகக் கொண்டு வெளியான "தமிழகம்" வாரப் பத்திரிகை மூலமும் தனது எழுத்தாற்றலை வெளிப் படுத்தி வந்துள்ளார்.

1961ம் ஆண்டு தனது 21வது வயதில் யாழ்ப்பாணம் சென்று "ஈழநாடு" தினசரியில் பத்திரிகையாளராக தன்னை இனைத்து கொண்ட இவர் பின்னர் 1967 தொடக்கம் 10 வருடங்கள் அப்போது கண்டியி லிருந்து வெளியான "செய்தி" வாரப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் மீண்டும் திரும்பி "ஈழநாடு" தினசரியில் செய்தி ஆசிரியராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

தனது பத்திரிகைத் துறை அனுபவங்களை தமிழில் நினைவ லைகள் என்றும் ஆங்கிலத்தில் "REMINI SCENCES" என்ற தலைப்பு களிலும் நூல் வடிவமாக வெளியிட்ட அவர் "ஈழநாடு" தினசரியில் தனது பத்தி எழுத்துக்களின் கோவையாக "கதையல்ல நிஜம்" மற்றும் பத்திரிகை நேர்காணல்களை "தர்மத்தின் குரல்கள்" என்ற தலைப்பி லும் நூல்களாக வெளியிட்டுள்ளார். தற்போது 20 வருடங்களுக்கு மேலாக தமிழ் நாட்டில் வசித்து வழும் இவர் "தினக்குரல்" பத்திரிகை யின் இந்தியா தொடர்பான செய்திகளை கட்டுரையாக தொடர்ந்தும் எழுதி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : கலாபூஷணம் இ.பாக்கியராசா**

**பிறந்த திகதி : 10.12.1946**

**துறை : ஊடகத்துறை**

கல்வி கற்கும் பொழுதிலேயே 1964ம் ஆண்டில் மண்டூர் வீரகேசரி நிருபராக இணைந்து இன்றுவரையும் அப்பணியை மேற்கொண்டு வருகின்றார். வெண்ணிலா என்ற கையெழுத்து சஞ்சிகையினையும் சில காலம் வெளியிட்ட இவர் சமய, சமூக, இலக்கிய துறையில் மிகுந்த ஈடு:பாடு கொண்டவருமாவார். கிராமோதய சபைத் தலைவர் பதவி வரை இவருடைய சமூகப் பணி சென்றது. அவ்வாறே சமய இலக்கிய அமைப்புக்களிலும் பங்குகொண்டுள்ளார். இவரின் சமய, சமூக, இலக்கியக் கட்டுரைகள் வீரகேசரி, தினகரன், தினக்குரல் முதலிய பத்திரிகைகளில் வெளிவருகின்றன. 1972ம் ஆண்டில் பொலிஸ் திணைக்களத்தில் எழுதுவினைஞராக அரச பணியில் நுழைந்த இவர் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் நீர்ப்பாசனத் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஆகியவற்றில் பணியாற்றி 2009ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஓய்வுபெற்றார்.

1990 கலவரங்களை அடுத்து மண்டூரிலிருந்து மட்டக்களப்புக்கு இடம்பெயர்ந்து கல்லடியில் நிரந்தரமாக வசித்துவரும் இவரை மண்முனை வடக்கு கலாசார பேரவை கலைஞர் கௌரவமும், மாவட்ட இந்து இளைஞர் மன்றப் பேரவை அறப்பணி விருதும் வழங்கி பாராட்டியுள்ளன. கலாபூஷணம் விருதும் சமாதான நீதவான் பதவியும் பெற்றார். ஆன்மீகத் துறையில் மிகுந்த ஈடுபாடும் நாட்டமுமிக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : பெரியதம்பி ஹரிச்சந்திரன்
பிறந்த திகதி : 31.07.1956
துறை : ஊடகத்துறை

மட்டக்களப்பு சிங்களவாடியை சொந்த இடமாகக் கொண்ட திரு.பெரிய தம்பி ஹரிச்சந்திரன் அவர்கள் இலங்கையில் ஊடகத்துறையில் ஈடுபட்டுள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர் செனட்டர் மாணிக்கம் அவர்களால் சுதந்திரன் பத்தி ரிகைக்கு கிழக்குச் செய்தியாளராக அறிமுகப்படுத்தப்பட்டு 37 வருடங்களாக ஊடகம் சார்ந்த பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி செய்தியாளராக பணியாற்றியிருக்கின்றார். இலங்கை வானொலி தேசிய சேவையில் ஒலிக்கும் "புதிய உலகம்" கத்தோலிக்க நிகழ்ச்சி மற்றும் கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி களில் வானொலி நாடக நடிகராக கடந்த 25 வருடங்களாக பங்குபற்றி வருகின்றார்.

சூரியன் FM வானொலியின் கிழக்குப் பிராந்திய செய்தித் தொடர்பாள ராக கடந்த 8 வருடங்களாக பணியாற்றி வரும் இவர், சிங்கள வானொலி சேவைகளான கிரு FM, நெத் FM, லக் FM வானொலிகளுக்கும் கிழக்குப் பிராந்திய செய்தியாளராகப் பணியாற்றி வருகின்றார். செய்தி அறிக்கைகளின் போது தமிழ் மற்றும் சிங்களத்தில் நேரடியாக குரல் கொடுத்திருக்கின்றார்.

இலங்கையின் புகழ்பூத்த இசைக்கலைஞர்கள் பங்குபற்றிய பல இசை நிகழ்ச்சிகளுக்கு மேடை அறிவிப்பாளராக செயற்பட்டிருக்கின்றார். மேடை நாடகங்களுக்கும் குரல் கொடுத்திருக்கின்றார். சர்வதேச இணைய செய்தி நிறுவனங்களுக்குச் செய்தியாளராகப் பணியாற்றியவர். உலகமெங்கும் ஒலிக் கும் இணைய வானொலி நிகழ்ச்சிகளைத் தயாரித்து குரல் கொடுத்திருக் கின்றார். ஊடகத்துறை மட்டுமன்றி இவர் சிறந்த நடிகராகவும், புகைப்பட வீடியோத் துறையிலும் ஈடுபாடுடையவராக விளங்குகின்றார்.

திரு.விமல்ராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்ட 'கிச்சான்' குறுந்திரைப் படத்தில் சிற்றூண்டிச்சாலை முதலாளியாக நடித்து நம்நாட்டிலும் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் தொலைக்காட்சிகளில் ஒலிபரப்பப்பட்டு இவரது நடிப்புத் திறமைக்கு புகழ் கிடைத்திருக்கின்றது.

புகைப்படத்துறை, மற்றும் வீடியோ படப்பிடிப்பு, நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு போன்றவற்றில் ஈடுபட்டு பலவிதமான நிகழ்ச்சிகளைத் தயாரித்திருக்கின்றார். இவர் தயாரித்த ஆலய உற்சவம், தேரோட்டம், கலை-கலாசார நிகழ்வுகள் இலங்கை தொலைக்காட்சிகளில் ஒலிபரப்பாகி இவருக்குப் புகழ் சேர்த்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **இராசநாயகம் உதயகுமார்**

**பிறந்த திகதி** : **28.04.1957**

**துறை** : **ஊடகத்துறை**

**ம**ட்டக்களப்பு சிங்களவாடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், பாடசாலை மாணவப் பருவத்தில் அவரிடம் காணப்பட்ட எழுத்தாற்றல் காரணமாக பத்திரிகைத் துறைக்குள் பிரவேசித்த இவர், 1977ம் ஆண்டு தன்னை ஒரு ஊடகவியலாளராக மாற்றிக்கொண்டார். யாழ்ப்பாணத்தில் வெளியான 'ஈழநாடு' தினசரி பத்திரிகையின் மட்டக்களப்பு பிராந்திய செய்தி யாளராக 1977ம் ஆண்டு இணைந்து கொண்ட இவர், அதனைத் தொடர்ந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அச்சு, இலத்திரனியல் மற்றும் இணையம் 15ற்கும் மேற்பட்ட ஊடகங்களில் பணியாற்றியுள்ளார். தற்போது கடந்த 15 வருடங்களாகப் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (பி.பி.சி) உலக சேவையின் செய்தியாளராக தனது ஊடகப் பணியைத் தொடரும் இவர் மக்கள் பட்ட கஸ்டங்களையும், துயரங்களையும் சர்வதேச சமூகத்தின் பார்வைக்குக் கொண்டு வந்துள்ளார். தமிழ் பத்திரிகை 'ஜாம்பான்' என பலராலும் பேசப்படும் மறைந்த தினபதி, சிந்தாமணி ஆசிரியர் அமரர் எஸ்.டி.சிவநாயகத்தின் பாசறையில் வளர்ந்த ஊடகவியலாளர்களில் ஒரு வர். உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஊடகத்துறை மற்றும் மனித உரிமை கள் தொடர்பான பல்வேறு பயிற்சிப் பட்டறைகளிலும், கருத்தரங்குக ளிலும் கலந்துகொண்டுள்ள இவர், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர் மட்டுமல்ல, தற்போது அச்சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் உள்ளார். கிழக்கு மாகாணத்தில் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தத்தினால் 2004-2007 காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக் கான மனிதநேயப் பணிகளிலும் துயர் துடைப்புப் பணிகளிலும் சமாதானத் திற்கான பல் சமய ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட்டுள்ளார். ஊட கத்துறையில் இரா.உதயகுமார் என்ற தனது சொந்தப் பெயரில் அறிமுகம் பெற்றுள்ள இவர் 1990ற்கு முற்பட்ட காலத்தில் 'உதயசாரதி' என்ற பெய ரில் பத்திரிகைகளில் கட்டுரைகள், நகைச்சுவைக் கதைகள், பேட்டிகள் என தனது எழுத்தாற்றலையும் வெளிப்படுத்தியவர். நீதி அமைச்சினால் சமாதான நீதவான் நியமனம் பெற்றுள்ளார். 2003ம் ஆண்டு இலங்கை தமிழ் பத்திரிகையாளர் ஒன்றியம் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **அமரர். தர்மரெத்தினம் சிவராம்**

**பிறந்த திகதி** : **11.08.1959**

**துறை** : **ஊடகத்துறை**

மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் ஸ்தாபவரான இவர், மட்டக்களப்பில் காத்திரமான இலக்கிய முயற்சிகளுக்கும், வளர்ச்சிக்குமென ஒரு இயங்கியலை 80களில் உருவாக்கியவர். அத்தோடு மட்டக்களப்பு வரலாறு சம்பந்தமான பல ஆய்வுகளையும், 'பாடம் பாடபேதம்' எனும் நூலையும் அமரர் F.X.நடராசாவுடன் சேர்ந்து வெளியிட்டுள்ளார்.

1989ம் ஆண்டிலிருந்து Sunday Island, Sunday Times, Daily Mirror, Tamil Times (லண்டன்) ஆகிய பத்திரிகைகளில் அரசியல் இரா ணுவ ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வந்துள்ளார். "Northeast herald" என்ற ஆங்கில மாதாந்தச் சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளதோடு, இலங்கையில் முக்கியமான இணையத்தளமாக இன்று கருதப்படும் தமிழ்நெற் தளத்தை 1997ம் ஆண்டு தொடங்கியதன் மூலம் வடகிழக்கிலுளள்ள செய்தியாளர்கள் பலரை கணினி உலகத்திற்கு அறிமுகப்படுத்தினார். Lanka guardian பத்திரிகையில் Origins and Disperson of Tamil Militarism in South India and Sri Lanka என்ற ஆய்வுத் தொடரையும் சரிநிகரில் தமிழ்த்தேசியம் பற்றிய வரலாற்று ஆய்வுகளையும், தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையையும் இந்தியாவும் என்ற தொடர் ஆய்வையும் மேற்கொண்டதோடு "Eluding Peace" கட்டுரைத் தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளார்.

கொலராடோ (Colarado), சவுத்கரோலைனா (South Carolina) ஆகிய அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிலும் நோர்வே ஒஸ்லோ பல்கலைக்கழகத்திலும் நியூசிலாந்திலுள்ள பாமஸ்டன் பல்கலைக்கழகத்திலும் சிறப்பு விரிவுரைகள் அற்றியதோடு, கனடிய வெளிநாட்டு அமைச்சு, அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு, பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சு, நோர்வே வெளிநாட்டு அமைச்சு என்பவற்றின் அழைப்பின் பேரில் அந்நாடுகளுக்கும் சென்று இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசியுள்ளார். தமிழைப் போலவே ஆங்கிலத்திலும் சரிசமமான புலமை கொண்ட த.சிவராம் தமிழ் பத்திரிகையாளர்களுள் சிறப்பானவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.க.கிருபாகரன்
பிறந்த திகதி : 16.05.1971
துறை : ஊடகத்துறை

**1998**ம் ஆண்டு காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட ஊடகவியலா ளர்களுக்கான 3 மாத கற்கைநெறியில் கலந்துகொண்டதோடு இவரது ஊடகப் பயணம் ஆரம்பமானது. இதனை நிறைவு செய்த பின்னர் மட்டக்களப்பிலிருந்து தினசரிப் பத்திரிகையாக வெளிவந்த 'தினக்கதிர்'இன் செய்தியாளராக தனது குரு வீ.சு.கதிர்காமத்தம்பியால் இணைக்கப் பட்டதோடு இப்பத்திரிகையின் மாணவர் பகுதியான 'இளஞ்சிட்டுக் கள்' பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இவ்வேளையிலேயே இவரது மனதில் ஒரு இலக்கிய இதழ் ஆரம்பிக்கும் எண்ணம் உதய மானது. இதன் பயனாகவே 'தென்றல்' காலாண்டு இதழ் மட்டக்களப்பி லிருந்து காலாண்டு இதழாக வெளியிடத் தொடங்கினார். அத்தோடு ஆசிரியராக தற்போது கடமைபுரியும் இவர் தேசிய ரீதியான பத்திரிகை ஒன்றிலே நிருபராகப் பணிபுரிய வேண்டும் என்ற எண்ணத்துடன் தனது குருவின் வழிப்படுத்தலில் 1998 காலப்பகுதியில் 'சுடர்ஒளி' நாளிதழின் நிருபராக தன்னை அறிமுகப்படுத்தி தொடர்ந்தும் ஊடகத் துறைக்காகப் பணியாற்றி வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.சண்முகராஜா வரதராஜன்

பிறந்த திகதி : 21.04.1972

துறை : ஊடகத்துறை

கடந்த 2000ம் ஆண்டு ஊடகத்துறையில் பிரவேசித்த இவர், ஆரம்பத்தில் அரச, செய்தி ஊடகமான இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தில் மாவட்ட நிருபராகவும் அதன் பின்னர் தனியார் ஊடகமான சக்தி தொலைக்காட்சியில் மாவட்டச் செய்தியாளராகப் பணி புரிந்தார். அப்போது அக்காலத்திலிருந்த அசாதாரண சூழ்நிலைகளின் போதும் மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் சென்று பணிபுரிந்ததுடன் மாவட்டத்தின் கல்வி சம்பந்தமான சக்தியின் தேடல் தரவுகளையும் வெளிக்கொணர்ந்தார். பின்பு சுனாமி அனர்த்தத்தின் போது மாவட்டத்தின் அனர்த்த நிலைமைகளை வெளிக்கொணர்ந்ததுடன் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வா தாரப் பிரச்சினைகளையும் செய்தியாக இலத்திரனியல் ஊடகங்களில் வெளிக்கொணர்ந்தார். அத்துடன் ஊடகத்துறையில் சர்வ தேச தரத்தில் நவீன தொழில்நுட்ப செய்திப் பரிமாற்றங்களை அறிந்து கொள்வதற்காக Reuters, BBC ஆகிய சர்வதேச ஊடக நிறுவனங்களால் நடாத்தப்பட்ட மேலதிக பயிற்சிநெறிகளிலும் கலந்துகொண்டு செய்தித்துறை சம்பந்தமாகவும், ஒளிப்பதிவு ஆவணக் காட்சிப் பதிவு சம்பந்தமான பயிற்சி நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.

பின்பு ஊடகத்துறையில் ஏற்பட்ட அசாதாரண நிகழ்வுகளைத் தொடர்ந்து கடந்த 5 வருடங்களாக அரச, இலத்திரனியல் ஊடகங்களான (நேத்திரா ரீ.வி) ITN, வசந்தம், சுதந்திர ஊடக நிறுவனங்களிலும் பணி புரிந்து வருகின்றார். இதேவேளை நேத்ரா அலைவரிசையில் சைவ நெறி நிகழ்ச்சிகள் மட்டத்திலுள்ள ஆலயங்களின் கும்பாபிஷேக வருடாந்த உற்சவங்களை ஒளிப்பதிவு செய்து தொலைக்காட்சியில் ஒளி பரப்புச் செய்வதற்குத் தனது பங்களிப்பை செய்து வருகின்றார். அத்துடன் மாவட்ட ஊடக இல்லத்தில் செயற்குழு அங்கத்தினராகவும் பணி புரிந்ததுடன் மற்றும் மாவட்டத்தின் முக்கிய நிகழ்வுகளை ஆவணக் காட்சிப்படுத்துவதிலும் தனது பங்களிப்புச் செய்து வருவதுடன் கடந்த 10 வருடங்களாக ஊடகத்துறையை முழுநேரத் தொழிலாகக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர்** : **திரு.மாணிக்கப்போடி சசிகுமார் (J.P.)**

**பிறந்த திகதி** : **31.12.1974**

**துறை** : **ஊடகத்துறை**

**க**ன்னன்குடாவைப் பிறப்பிடமாகவும் 114/1, ஜெயந்தி வீதி, ஜெயந்திபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.மாணிக்கப்போடி சசிக்குமார் இளம் பத்திரிகையாளர்களில் ஒருவர். தனது சிறுவயது முதல் எழுத்துத் துறையில் ஆர்வம் காட்டி வந்த இவர், 2000 ஆண்டு முதல் பத்திரிகைகளுக்கு தனது ஆக்கங்களை எழுதியதுடன் சிறுவயது முதல் சமூக சேவையில் இருந்த ஈடுபாடு காரணமாக சமூகத்தில் காணப்பட்ட குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் வெளிக்கொணர வேண்டும் என்ற ஆதங்கத்தினால் 2003ம் ஆண்டு முதல் தினக்குரல் பத்திரிகையில் மட்டக்களப்பு நிருபராக ஊடகத்துறைக்குள் தன்னை ஈடுபடுத்தியதுடன் தொடர்ந்து வீரகேசரி வார இதழ், மெட்றோ நியூஸ், இணையத்தளங்கள் மூலம் செய்தி அறிக்கையிடுவதுடன் சமூகத்தில் உள்ள குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் தனது எழுத்தின் வசீகரத்தினால் பல புனைப்பெயர்களில் வெளிக்கொணர்ந்து தினக்குரல் ஆசிரியர் பீடத்தின் இதழ் பிரதம ஆசிரியர் தேவராஜன் மூத்த ஊடகவியலாளர் த.உதயகுமார் ஆகியோரின் வழிகாட்டலுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். கிழக்கில் இறுதிக்கட்ட யுத்தம் உக்கிரமடைந்து மக்கள் இடம்பெயர்ந்து முகாம்களில் அல்லல்பட்டபோதும் மீள்குடியேற்றப்பட்டபோதும் எதிர்நோக்கிய பிரச்சினைகளை ஆராய்ந்து எழுதிய பல கட்டுரைகள் அல்லலுற்ற மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கப் பேருதவியளித்துள் ளது. படுவான்கரை கல்வி வளர்ச்சிக்கு தனிக் கல்வி வலயம் அமையவேண்டிய தன் அவசியம் பற்றி இவரால் எழுதப்பட்ட பல ஆய்வுக் கட்டுரைகள் அனைவராலும் வரவேற்கப்பட்டதுடன் படுவான்கரைக்கான மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் அமைய ஊன்றுதலாகவும் அமைந்தமையும் குறிப்பிடத்தக்கது. 1990ஆம் ஆண்டு முதல் இளைஞர் கழகம் ஊடாக சமூக சேவையில் பிரவேசித்த இவர், பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவர், மாவட்ட சம்மேளனத் தலைவர், தேசிய சம்மேளனப் பிரதிநிதி, இலங்கை செஞ்சிலுவைச் சங்க மண்முனை மேற்கு கிளை தவிசாளர் என பல்வேறு பிரதேச, மாவட்ட மட்ட அமைப்புக்களில் பல்வேறுபட்ட பதவிகளை வகித்து சமூக சேவையாற்றி வந்த இவர் நீதி அமைச்சினால் 2005ம் ஆண்டு சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டார். சமயத்தில் மிகுந்த ஈடுபாடுகொண்ட இவர் கன்னன்குடா கண்ணகி அம்மன் ஆலய கணக்குப் பரிசோதகராகவும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பெத்தான்குடி பெருமக்கள் திருப்பணிச் சபைச் செயலாளராகவும் இருந்து சமயப்பணி ஆற்றி வருவதுடன் மட்டக்களப்பு மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றிய உப தலைவராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லையா நாகராஜா (ஊடகத்துறை)

மட்/கல்லடியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லையா நாகராஜா தொழில் ரீதியாக ஒரு சட்டத்தரணியாவார். இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆரம்பிக்கப் பட்டபோது அதன் ஸ்தாபக செயலாளராகக் கடமை புரிந்துள்ளார்.



## அமரர்.ஜோசப் பரராசசிங்கம் (ஊடகத்துறை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்க ளப்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஜோசப் பரராஜ சிங்கம் ஆங்கில ஆசிரியராக கடமைபுரிந்தார். இவர் தினபதி- சிந்தாமணி நிருபராகவும் பணிபுரிந்துள்ளார். கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஸ்தாபக தலைவ ராகத் தெரிவு செய்யப்பட்டார். 1979ம் ஆண்டு அரசியலில் நுழைந்த இவர் நான்கு முறை மட்டக்களப்பிலிருந்து பராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். நத்தார் தினமன்று கத்தோலிக்க தேவாலயத்தில் திருப்பலியில் கலந்து கொண்டவேளை சுடப்பட்டு அகால மரணமானார்.

## அமரர் ஐயாத்துரை நடேசன் – (ஊடகத்துறை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்க ளப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நடேசன் தனது தொழில் காரணமாக தனது மனைவியின் பெயரை இணைத்துக் கொண்டு ஜி.நடேசன் என எழுதி வந்தார். வீரகேசரிப் பத்திரிகையின் மட்டக்களப்பு பிராந்திய செய்தியாளராக கடமைபுரிந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறை பட்டதாரியா வார். 'நெல்லை நடேஸ்' என்ற பெயரில் பல கட்டுரைகளை எழுதிவந்த இவர் 1990ம் ஆண்டளவில் வீரகேசரியில் இணைந்ததன் மூலம் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், மனித உரிமைகள் தொடர் பாகவும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழ் தேசியம் தொடர் பான 'இன முரண்பாடுகள்' என்ற நூலையும் வெளியிட்டுள்ள இவர் இறுதிக் காலம்வரை இறைவரித் திணைக்கத்தில் கடமைபுரிந்தார். இவர் 2005ம் ஆண்டு அகால மரணமானார். இவரின் இழப்பு மட்டக்களப்பு மண்ணுக்கு ஒரு பேரிழப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : சித்த வைத்திய கலாநிதி, பண்டிதர் வை.க.விநாயகமூர்த்தி**

**பிறந்த திகதி : 10.08.1919**

**துறை : சித்த வைத்தியம்**

**வை**த்தியர் கந்தப்பன் விநாயகமூர்த்தி 1919ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பத்தாந் திகதி மட்டக்களப்பு நாவற்குடாவில் சித்த வைத்தியப் பரம்பரையில் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகானந்தா பாடசாலையில் கற்றார். தமிழில் மிகவும் ஆர்வங்கொண்ட இவர், "ஆரிய பாஷா" அபிவிருத்திச் சங்கம் நடாத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தார். 1946ம் ஆண்டில் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அதன் முதலாவது அணி மாணவனாகச் சேர்ந்து 1948ல் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து ஆசிரியர் சேவையில் இணைந்தார். 1951ல் நொத்தாரிஸ் பரீட்சையில் சித்திபெற்று இன்றுவரை பிரசித்த நொத்தாரிசாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார். சித்த வைத்திய பரம்பரையில் பிறந்த இவர் தந்தை வழியில் ஐந்தாவது தலைமுறையையும், தாய்வழியில் மூன்றாவது தலைமுறை யையும் சேர்ந் தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பரம்பரை பரம்பரையாக கேள்வி நடைமுறையில் வந்த பாடல்களையும், வைத்திய ஏடுகளையும் கற்று தந்தையிடம் வைத்தியத்தை முறையுடன் பயின்று சிறந்த சித்த வைத்தியராகத் திகழ்கின்ற இவர், 1956ம் ஆண்டு ஆகஸ்டில் சித்த மருத்துவப் பரீட்சையில் சித்தியடைந்து பதிவுசெய்யப்பட்ட சித்த வைத்தியராகவும், கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கத்தின் ஆயுட்காலத் தலைவராகவும் செயற்படும் இவருக்கு "வைத்தியத் திலகம்" என்னும் சிறப்புப் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். 1999ம் ஆண்டு மண்முனை வடக்கு கலாசார பேரவையினால் கௌரவிக்கப்பட்டு பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பல வைத்திய ஏடுகளை தன்னகத்தே கொண்டு அவற்றை முறையாக வாசித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் இவரிடமிருந்தமையினால் நாடிபிடித்து நோயியல்பறிந்து குணப்படுத்தும் ஆற்றல் பெற்றவராகத் திகழ்கிறார். பல வைத்திய ஏடுகளையும் கற்றுக் கொண்டதனால் நானூறு பாட்டுக்களைக் கொண்ட "அங்காதிபாதம்" என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூல் இவருக்கு பெருமைசேர்த்துக் கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.பாலுமகேந்திரா


துறை : சினிமா

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இயக்குனர் பாலு மகேந்திரா அவர்கள் தென்னிந்தியாவிலே மிகச் சிறந்த இயக்குனர்களில் ஒருவராக விளங்குகின்றார். மட்டக்களப்பில் வாழும் காலத்தில் கமரா புகைப்பிடிப்புத்துறையில் தேர்ச்சி பெற்று விளங்கிய இவர் தென்னிந்தியா சென்று மிகச் சிறந்த திரைப்படங்களை உருவாக்கி புகழ்பெற்றார்.

இவரது முதல் திரைப்படம் 'அழியாத கோலங்கள்' ஆகும். இப்படத்தை இயக்கியதன் மூலம் தன்னை சிறந்த இயக்குனராக அடையாளப்படுத்திய இவர், தொடர்ந்து 'மூடுபனி'யையும், 1983ல் 'மூன்றாம் பிறை'யையும் இயக்கினார். இது அக்காலகட்டத்தில் சிறந்த திரைப்படமாகத் தேசிய விருதையும் பெற்றது. சாதாரண திரைப்படங்களிலிருந்து வித்தியாசமானதாக மனிதர்களின் இயல்பான கவர்ச்சி உணர்வை மிகப் பக்குவமாகவும், சிறப்பாகவும் எடுத்துக் காட்டிய இவரது ஆரம்பகாலத் திரைப்படங்கள் இவரைச் சிறந்ததொரு இயக்குனராகத் தெரியப்படுத்தியதுடன் பார்வையாளரின் ரசனையிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தின. தொடர்ந்து 'வீடு', 'நீங்கள் கேட்டவை', 'ஜூலி கணபதி', 'அது ஒரு கனாக்காலம்' போன்ற திரைப் படங்களையும் இயக்கினார். இவரது திரைப்படங்கள் பல விருதுகளைப் பெற்றுள்ளன. மலையாளத்திலும் பிரபல்யமான பல திரைப்படங்களை இவர் இயக்கியுள்ளார். கலா ரசனையுள்ள படங்களை இயக்கி வந்த பாலுமகேந்திரா, விமர்சகர்களின் விமர்சனங்களுக்கு பதில் சொல்லும் வகையில் 'நீங்கள் கேட்டவை' எனும் மசாலா திரைப்படத்தையும் கலையார்வத்துடன் எடுத்து வெற்றி கண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பெயர் : திரு.செபஸ்தியான் மைக்கல்**

**பிறந்த திகதி : 05.03.1938**

**துறை : ஏனையவை**

மட்டுநகர் 'மைக்கல்', 'காசியப்பன்' என்னும் புனைப்பெயர்களால் அழைக்கப்படும் செபஸ்தியான் மைக்கல் அவர்கள், மட்டக்களப்பின் புதுநகரைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டவர். சிறுவயதிலிருந்தே சாதனைபுரிய வேண்டும் என்ற ஆர்வமும், தாய்மாமன் சாண்டோ மைக்கல் அவர்களின் ஊக்குவிப்பும் சிலம்பம், நாடகம், சினிமா போன்ற துறைகளில் இவர் ஈடுபடக் காரணமாய் அமைந்தன.

1955ல் இத்துறைக்குள் புகுந்துகொண்ட இவர், சிலம்பக் கலையில் இருந்த ஈடுபாட்டின் காரணமாக தமிழ்நாடு சென்று பரமக்குடியைச் சேர்ந்த இராமநாதன் என்பவரிடம் சிலம்பக் கலையைக் கற்று குருவின் பாராட்டைப் பெற்று நாடு திரும்பினார். இங்கு, சாண்டோ சங்கரதாஸ் அவர்களின் மாணவனாகச் சேர்ந்து வர்மக் கலைப் பயிற்சிகளையும் பெற்றார். 1964ம் ஆண்டு தொடக்கம் சிலம்பக் கலையைப் பயிற்றுவித்தும் வருகிறார். 2009 இல் மட்டக்களப்பு கலாசார பேரவையினால் சிலம்பாட்டத்திற்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

சிலம்பாட்டத்துடன் நின்றுவிடாது, நாடகம், சினிமா போன்ற துறைகளிலும் ஈடுபாடுடையவர். 'மீனவப்பெண்', 'சுமதி எங்கே?', 'நான் உங்கள் தோழன்' போன்ற சினிமாப் படங்களிலும், கவிஞர் திமிலைத் துமிலன், கவிஞர் திமிலை மகாலிங்கம் ஆகியோரின் 'பாஞ்சாலி சபதம்', 'முல்லைக்குமரி', 'இராவணேஸ்வரன்', 'ஒருதுளி இரத்தம்' ஆகிய நாடகங்களிலும் நடித்து தனது நடிப்பாற்றலை வெளிக்காட்டியுள்ளார்.

தற்போது 'மைக்கல் சிலம்பாட்டக்கழகம்' எனும் கழகத்தின் மூலம் இளைஞர்களுக்கு சிலம்பாட்டம் பயிற்றுவித்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| | |
|---|---|
| **பெயர்** | **: திரு.செல்லையா துரையப்பா** |
| **பிறந்த திகதி** | **: 02.11.1940** |
| **துறை** | **: யோகா கலை** |

பிரபல யோகா சிகிச்சை நிபுணரான செல்லையா துரையப்பா அவர்கள், மட்டக்களப்பு முதலியார் தெருவை வாழ்விடமாகக் கொண் டவர். யோகா சிகிச்சை கலையில் அதீத ஈடுபாடு கொண்ட இவர், இச் சிகிச்சை மூலம் பலதரப்பட்ட நோய்களைக் குணப்படுத்தியுள்ளார். கடந்த பதினாறு வருடங்களாக இத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள இவர், 'யோகா ஆரோக்கிய இளைஞர் கழகம்' எனும் அமைப்பின் ஸ்தாபகத் தலைவராகச் செயற்பட்டு யோகா சிகிச்சைப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகிறார். வெளியூர் நோயாளிகளுக்கும் யோகா சிகிச்சை ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்.

சுனாமியால் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினூடாக சிகிச்சையளித்து பலரைக் குணமாக்கியுள்ளார். யோகா சிகிச்சை கற்கைநெறியை "சுகவாழ்வு" என்றும் ஆரோக்கிய சஞ்சிகையில் கடந்த இரண்டு வருடங்களாக எழுதி வருகிறார். அத்துடன் தேசிய தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளிலும் யோகா பற்றிய இவரது ஆக்கங்கள் கடந்த பத்து வருடங்களாக வெளிவருகிறது. இவரது யோகா சிகிச்சை பற்றிய நேரடிப் பேட்டியும் செய்முறையும் 'ரூப வாஹினி உதயதரிசனம்' எனும் நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகியது. அமெரிக்கா விலுள்ள சச்சிதானந்த ஆச்சிரமத்தில் நடத்தப்பட்ட யோகா சிகிச்சை மூலம் இருதய வியாதிகளைக் குணப்படுத்தும் விசேட பயிற்சியிலும் பங்குபற்றி பயிற்சி பெற்றார்.

தற்போது "ஆரோக்கியம் பேணும் யோகா" எனும் நூல் வெளி யிடும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். அத்துடன் மட்டக்க ளப்பு மத்திய கலாசார நிலையத்திலும், நாவற்குடா இந்து கலாசார நிலையத்திலும் யோகா விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.தம்பிராசா சாம்பசிவம்

பிறந்த திகதி : 07.02.1952

துறை : கதாப்பிரசங்கம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், மட்டக்களப்பி லேயே தமது பெரும்பகுதி வாழ்க்கையைத் தொடர்ந்துள்ளார். சிறு வயது முதல் ஆன்மீகப் பக்கம் கவரப்பட்டு இன்றும் இந்துமத மேம்பாட்டிற்காக அயராது உழைக்கும் ஒருவராக விளங்கும் கதாப் பிரசங்கக் கலைஞராவார். முதன் முதல் தனது 11வது வயதிலேயே கதாப் பிரசங்கத்தைத் தான் கற்ற கல்லூரியான கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடாத்தினார். சிவயோக சமாஜத்தின் ஸ்தாபகராகிய ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீ மகராஜ் அவர்களின் அன்பு வளர்ப்புக் குழந்தையாய் வளர்ந்த இவர், தனது கதாப்பிரசங்க ஞானத் தினைப் பண்டிதர் இ.வடிவேல் அவர்களிடம் பெற்றதுடன் இசைக்கலையை இசைமணி வே.சங்கரலிங்கம் அவர்களிடம் பெற்றுக்கொண்டார். அதுமட்டு மன்றி இவர் சிறந்த வில்லிசைக் கலைஞராகவும் திகழ்கின்றார். இவரது வில்லிசை ஆசான் மதுரை பிச்சிமுத்து என்பவராவார். தாம் பெற்றுள்ள வில்லிசை ஞானம், கதாப்பிரசங்க ஞானம் என்பவற்றின் மூலம் சமய உண்மை கள், புராண இதிகாசங்களை மக்கள் மத்தியில் வழங்கி, ஆன்மீகத் துறையை வளர்த்துக்கொண்டிருக்கின்றார். இவரது இக்கலைத் திறமையைப் பாராட்டிப் புகழாதவர் யாருமேயில்லை எனலாம். சிவ கதாபூஷணம், பிரசங்க பூஷணம், உபன்யாசமணி, கதாகாலாட்சேப திலகம், சரஸ்வதி கடாட்சர், முத்தரசு, சிவத்தமிழ்ச் செல்வன், வில்லி சைத் திலகம் - இவையெல்லாம் இவருக்குக் கிடைத்த பட்டங்களாகும். இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளிலும் கூட தமது கதாப் பிரசங்கங்களை நடாத்திப் புகழ்பெற் றுள்ளார். இதுமட்டுமன்றி வானொலியில் இஸ்லாமிய கீதம் பாடிய தமிழன் என்ற பெருமையையும் கொண்டவர். தமக்கிருந்த இசைஞானம், தமிழ் ஞானத் தின் மூலம் பல திருக்கோயில்கள் மீது பொன்னூஞ்சல் பாடல்களைப் பாடி யுள்ளார். இதில் சிறப்பாக பெரிய கல்லாறு ஸ்ரீசிவ சுப்பிரமணியர் ஆலயம், மட்டுநகர் திருப்பெருந்துறை முருகன் ஆலயம், வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலயம், ஊறணி பாலமுருகன் ஆலயம் என்பவற்றைக் குறிப் பிட்டுக் கூறலாம். அண்மையில் மட்டுநகர் மாமாங்கேஸ்வரர் வரலாறு எழுதப் பட்டு மாமாங்கேஸ்வரர் அன்னதான சபையினரால் வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தனைக்கும் மேலாக இவர் ஒரு வர்த்தகப் பட்டதா ரியாவார். ஆசிரியப் பணியில் ஈடுபட்டிருந்த இவர் ஆன்மீகத் துறை மீது கொண்ட நாட்டம் காரணமாக யாவற்றையும் துறந்து இறைபணிக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர் : திரு.இளையதம்பி இராஜரெட்ணம்

பிறந்த திகதி : 30.11.1963

துறை : ஏனையவை

மட்டக்களப்பு தந்த ஆன்சிங்கம், அனைவரும் வியக்கும் அன்பு நெஞ்சம், இராஜரெட்ணம் என்னும் இளைஞன், ஈடிணையிலா பெருவீரன், வளர்ந்துவரும் எமது பரம்பரையில் மட்டக்களப்பின் 'இரும்புத் திலகம்' என்ற பட்டத்தினை சிவானந்தியன் விளையாட்டுக் கழகத்தினால் சூட்டி கௌரவிக்கப்பட்ட இளையதம்பி - இராஜரெட்ணம் அவர்கள் ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது குரு 'இரும்பு வீரன்' சாண்டோ சிவானந்தராஜா அவர்களே ஆகும். சிறு வயதில் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கிய இவர் இலங்கை ரீதியில் நடைபெற்ற குண்டெறிதல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். அத்துடன் வெளிநாடு சென்ற வேளையில் எகிப்து நாட்டில் 'கராத்தே சலஞ்' பட்டியையும் தனதாக்கிக் கொண்டார். ஜிம் உடற்பயிற்சியையும், ரெஸ்லின் முறைகளையும் முறையாகக் கற்று பல வெற்றிகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். இதன் காரணமாக இவருக்குச் 'செயல் வீரன்' என்ற பட்டமும் கிடைத்தது. இவர் வெளிநாட்டில் இருக்கும் போது சுவர்ப்பக்கம் உடம்பின் பக்கத்தைச் சாய்த்துக் கொண்டு கால்களால் 'பிக்கப்' வாகனத்தை நிறுத்தியுள்ளார். மேலும் 6600 லீற்றர் கொள்ளளவு கொண்ட பெற்றோலிய பவுசரை இழுத்து நிறுத்தியது. லொறியை இழுத்து நிறுத்தியது, பத்து உழவு இயந்திரங்களை மார்பில் ஏற்றியமை, ஜன்னல் கம்பியை தலை, மூக்கு, வாய் போன்றவற்றில் வைத்து வளைத்தமை, இரும்புப் பட்டத்தை தலையில் அடித்து வளைத்தமை போன்ற 15 விளையாட்டுக்களை மட்டக்களப்பு சிவானந்தா மைதானத்தில் செய்து காணபித்திருக்கிறார். இச் சாதனைகளில் மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டுக் கழகம் 'மட்டக்களப்பின் இரும்புத் திலகம்' என்ற பட்டத்தினையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி.தங்கேஸ்வரி அவர்கள் 'இரும்பு இளவரசன்' என்ற விருதையும், மறைந்த சுவாமி ஜீவானந்த ஜீ அவர்கள் 'சிவானந்தியன்' என்ற பட்டத்தினையும் வழங்கிக் கௌரவித்துள்ளனர். இவர் சாண்டோ கலையில் மட்டுமன்றி பக்திப் பாடல்கள் இயற்று வதிலும், சமூக நாடகங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டு பல படைப்புக்களைத் தந்துள்ளார். அத்துடன் செல்வா நகர் ஸ்ரீ பத்திர காளியம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவராகவும், சிவானந்த விளையாட்டுக் கழகத்தின் மூத்த உறுப்பினராகவும், சக்தி விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும், இந்து சமூக சேவைகளையும் புரிந்து வந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண் அச்சகம் - 065-2222597